எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்

சிடாமணி ஜீவா



மயன்கையக்கூடு



எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்

(AN AUTOBIOGRAPHY)

டொமனிக் ஜீவா



மலைமகைப்பந்தல்

201-1/1, ஸ்ரீகதிரேசன் வீதி,
கொழும்பு - 13.
தொலைபேசி: 320721
E-Mail: panthal@sltnet.lk

பவளவிழா ஆண்டு ஞாபகார்த்தமாக
திருத்திய இரண்டாம் பதிப்பு

Ezuthappadaatha Kavithaikku Varayappadaatha Chithiram

AN AUTOBIOGRAPY BY:		DOMINIC JEEVA
First Edition	:	June 1999.
Second Edition	:	27th June 2001
Copy Right	:	D. Dhileepan
Pages	:	201 - xxiii
Price	:	Rs. 250/-
Cover Design By	:	Maruthu
Illustration	:	Srithar Pitchayappa
Laser Typeset By	:	S. Chitrangani
Printed By	:	U. K. Printers 98 A, Viveganantha Hill, colombo - 13. Tel: 074-614153
ISBN	:	955 - 8250 - 00 - 7
Published By	:	Mallikai Pandal 201-1/1, Sri Kathiresan Street, Colombo - 13. Tel: 320721 E-Mail: panthal@sltnet.lk

கட்டியகாரன்

ஒரு பனிக் காலக் குளிர் இரவு.

குளிருக்கு அடக்கமாக ஒரு போர்வையைச் சிக்காராகப் போர்த்திக் கொண்டு அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த எனக்குத் திடீரென விழிப்புத் தட்டியது.

படுத்தவுடன் தூங்கி விடுவேன். இது எனக்கொரு வரம். இடையில் விழிப்புத் தட்டுவதில்லை. நன்றாக விடிந்த பின்னர் தான் படுக்கையை விட்டு எழுந்திருப்பது வழக்கம். இது நீண்ட காலப் பழக்கம்.

வழக்கத்திற்கு மாறாக நட்ட நடுச் சாமத்தில் விழித்துக் கொண்டேன். எழுந்து படுக்கையில் தூக்கக் கலக்கத்துடன் உட்கார்ந்து கொண்டேன்.

ஏதோ கனவொன்று கண்டிருக்க வேண்டும்.

நினைத்து நினைத்துப் பார்த்தேன். இரவு கண்ட சொர்ப்பனம் ஞாபகத்திற்கு வரவில்லை. யோசித்து யோசித்துப் பார்த்தும் கனவின் ஓர் இழை கூட, ஞாபகத்தில் தட்டுப் படவில்லை. ஏதோ ஒரு கனவு. மெல்லிய திரைச் சேலை போல, மனக் காற்றில் அசைந்து ஆடியபடி இருந்தது.

திரும்பவும் தூங்க முயன்றேன்.

என்னதான் முயன்றும், திரும்பவும் தூங்க இயலவில்லை. சற்று நேரம் படுக்கையில் சாய்ந்திருந்தேன்.

பின்னர் எழுந்து வெளியே வந்தேன். வெளியே பார்த்தால் பால் நிலவு. பனிப்படலத்திற் கூடாக மெல்லிய வலை விரிப்புப் பின்னணியில், வாட்டர் கலர் ஓவியம் வரைந்து கொண்டிருந்தது.

மெல்லிய குளிர் காற்று உடலைத் தழுவியது. உடல் சிலிர்த்தது. இயல்பாக நடுங்கியது.

அந்தக் கணம் தான்..... அந்த க்ஷணம் என்றுதான் நினைக்கின்றேன். எனது மூளையில் எனது சுயசரிதத்திற்கான தலைப்புத் தட்டுப் பட்டது. அர்த்தமுள்ள தலைப்பாகவும் அது அமைந்திவிட்டது. 'எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்'. இந்தத்

தலைப்பு மனசில் பட்ட மாத்திரமே, இந்தத் தலைப்பை அந்த நடுநிசி இரவில் எனது டயரியில் எழுத்தில் எழுதிப் பதிந்து வைத்துக் கொண்டேன்.

சிலசமயங்களில் சும்மா குறுட்டாம் போக்கில் சிந்திக்கும் வேளைகளில் நல்ல கதைக் கருவோ, அல்லது முழுமையான வசன அடுக்கோ, இல்லாது போனாலும் கூட, தரமான தலைப்போ மனசில் தட்டுப்படும். பின்னர் பார்போம், என ஞாபகத்தில் வைத்துப் பொத்திப் பொத்திப் பாதுகாத்திருந்தால் வந்த அந்த அருமையான சிந்தனை வடிவங்கள் காணாமலே போய்விடும்.

இது எனது இலக்கிய வாழ்க்கையில் இடையிடையே ஏற்பட்டுவிடும் திடீர் விபத்துகளில் ஒன்று.

இந்த அநுபவத்திலிருந்து கற்ற பாடம்தான் தரமான சிந்தனைத் துணுக்குகள் மனசில் வேர் கொண்ட மாத்திரத்தே, அதை எழுத்தில் பதிய வைத்துவிடும் பழக்கம் என்னிடம் சமீப காலமாக நிலவி வந்துள்ளது.

அதன் அடிப்படையிலேயே இந்தத் தலைப்பைத் தேர்ந்தெடுத்து, எழுத்தில் எழுதி வைத்து பதிவு செய்து கொண்டேன்.

இதற்கு முன்னரும் இதற்கான தலைப்பு என் மனசில் தட்டுப்படாமல் போகவில்லை. 'பாமரன் ஒருவனின் பரிணாம வளர்ச்சி' என்றொரு தலைப்பையும், எனது சுய வரலாறு நூலுக்குத் தலைப்பாக வைத்துக் கொள்ள நான் யோசித்ததுண்டு. இந்த யோசனை பின்னர் பின் வாங்கி விட்டது.

இந்தத் தலைப்பு மனசில் தோன்றிச் செழுமையுற்றதன் பின்னர் நான் வேறு தலைப்புக்கள் தேடி மினக்கெடவில்லை. எனது நூலுக்கு இந்தத் தலைப்பையே கடைசியாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டேன்.

1987ம் ஆண்டு ஜூன் மாசம் என்னுடைய மணிவிழா பல ஊர்களில் கொண்டாடப் பெற்றது. யாழ்ப்பாணத்தில் மிகக் கோலாகலமாக இவ்விழாவைக் கொண்டாடி முடித்தார்கள், இலக்கிய நண்பர்கள்.

'மல்லிகை ஜீவா'என்ற பெயரில் தொகுப்பு நூல் ஒன்றையும் வெளியிட்டு என்னைக் கனம் பண்ணிக் கௌரவித்திருந்தனர், அதே நண்பர்கள்.

அதேபோல், கொழும்பிலுள்ள பல இலக்கிய நண்பர்கள் ஒருங்கு சேர்ந்து மணிவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடிக் களித்தனர். அதன் ஞாபகார்த்தமாக ஒரு கையடக்க நூலையும் – டொமினிக் ஜீவா கருத்துக் கோவை – என்ற நூலை வெளியிட்டு வைத்து என்னைச் சிறப்பித்தனர்.

அந்தக் காலகட்டத்தில் சென்னைக்குச் சென்றிருந்தேன். 'நர்மதா' புத்தக வெளியீட்டு நிறுவன அதிபர் திரு. ராமலிங்கம் அவர்கள் தனது நிறுவனத்திலேயே எனக்கொரு சிறப்பான பாராட்டு விழாவை ஒழுங்கு செய்திருந்தார். தமிழகத்திலுள்ள தரமான எழுத்தாளர் பலர் அவ்விழாவில் கலந்து கொண்டு, என்னை மகிழ்வித்தனர். கௌரவித்துச் சிறப்புச் செய்தனர்.

இதே காலகட்டத்தில் சோவியத் யூனியனுக்குப் போய் வரக் கூடிய அழைப்பொன்று கிட்டியது. அந்தக் கௌரவ அழைப்பையேற்று நான் அந்த நாட்டுக்குச் சென்றிருந்தேன்.

மாஸ்கோவிலுள்ள சர்வதேசப் புகழ்மிக்க லுமும்பா பல்கலைக் கழக மாணவர்கள் எனது மணிவிழாவை ரொம்பக் கோலாகலமாகக் கொண்டாடிக் களித்தனர். என்னைக் கௌரவித்தனர். ஒரு தடவைக்கு இரண்டு தடவைகள் கொண்டாடினர்.

நான் நினைக்கிறேன், அப்பொழுதுதான் இதன் ஆரம்ப விதை என் மனசில் தூவப்பட்டதென்று.அந்த விதை முளைத்து, வளர்ந்து, இன்று மரமாகியுள்ளது.

இந்த மணிவிழா மேடைகளில்தான் பலர் எனது சுய வரலாறு எழுத்தில் வரவேண்டும் என என்னிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர். வற்புறுத்திக் கேட்டனர்.

இந்தக் கோரிக்கையைக் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டேனே தவிர, திட்டவட்டமாக உடனடியாக ஒப்புக் கொண்டு விடவில்லை. வேலைப் பளு ஒரு காரணம். மனப் பயம் பிறிதோர் காரணம், இன்னும் கொஞ்சக் காலம் செல்லட்டுமே என்ற மனப்பான்மை மற்றொரு காரணம்.

அதனால் சற்றுச் சாவகாசமாக இருந்துவிட்டேன்.

அந்த நடுச்சாம வேளையில், பனிக்குளிரில் தூக்கம் வராமல் எழுந்து வெளியே வந்து நின்றதும் எனக்குச் 'சட்' டென்று இந்த யோசனைதான் மனசில் தட்டுப்பட்டது.

'எனது சுய வரலாறை எழுத்தில் ஆவணப்படுத்தி விட வேண்டும்!' எனத் திடமாக மனசில் முடிவெடுத்துக் கொண்டேன்.

தலைப்புக் கூடக் கிடைத்துவிட்டது.

இந்த யோசனை மனசில் பிறந்த அந்த கூணம், வெளிக் குளிர் எனக்கு உறைக்கவில்லை, எழுதுவது எனக்கு அப்படியொரு கஷ்டமான காரியமாக எப்போதுமே தெரிவதில்லை. தொடர்ந்து எழுதுவேன், விடாது எழுத வல்லவன், நான். எழுதிக் கொண்டேயிருப்பேன்.

-எழுதுவது என்பதே அப்படியொரு, சுகம்! அது ஒரு யோகம்!

ஆனால், எழுதிவிட்டு, அல்லது எழுத ஆரம்பிப்பதற்கு முன்னர் அதற்குத் தகுந்தாற் போலத் தலைப்பிடுவது என்பதுதான் பெரிய பிரச்சனை. மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டு சிந்திப்பேன். சிரமமான பெரிய வேலையிது. இந்த வேலைக்குப் பல மணி நேரங்களைச் செலவழித்ததுமுண்டு.

பரம்பரையாக வந்த குலத்தொழிலை -சவரத் தொழிலை- வாழ்வுத் தொழிலாகத் தொடர்ந்து செய்து வருவதுதான், எனது மூதாதையரின் வழக்கம். எனது அப்பன், அப்பனுக்கும் அப்பன். அப்பருடைய பாட்டன்..... முப்பாட்டன்.....இப்படியாக பரம்பரைத் தொழிலைச் செய்து வாழ்ந்து, வளர்ந்து மறைந்து போயுள்ளனர், எனது முன்னோர்கள்.

அந்தக் கைத்தொழில் சமூகத்தில் தான் நான் பிறந்தேன். வளர்ந்தேன். வாழ்ந்து வருகிறேன்.

மனிதர்களைப் புதுப்பிக்கும் தனிக்கலை இது. மக்களை இலட்சணப்படுத்தும் தொழில் இது. மனிதனுக்குப் புதுத் தோற்றத்தையும் புதுப்பொலிவையும் செழுமைப்படுத்திடச் செதுக்கிச் செதுக்கி நவீனச் செறிவூட்டும் தொழில் பார்க்கும் ஒரு சமூகக் கூட்டமிது.

மனித நாகரிகத்துடனும், மானுடக் கவர்ச்சியுடனும் தொடர்பு கொண்டுள்ள இந்த மக்கள் கூட்டத்தினர் பற்றி, காலம் காலமாக இதை நம்பியே வாழ்ந்து வந்துள்ள மக்கள் குழுவினரைப் பற்றி, இதுவரை எழுத்து வடிவில் ஒரு கவிதையோ, சிறு காவியமோ அல்லது நாவலோ புனையப்பட்டிருக்கவில்லையே, அது ஏன்? என்ன காரணம்?

-இப்படி இளம் வயசில் என் மண்டையைப் போட்டுக் குடைந்து கொண்டேயிருந்தேன்.

அரச பரம்பரையினரின் அந்தப்புரக் கேளிக்கை விநோதங்களும், போர் மிரட்டல்களும், யுத்த கள வெற்றிகளும், ராணிமார்களின் அங்க இலட்டணங்களின் வர்ணிப்பு வாகடங்களும்தான் சரித்திரப் பதிவுகளா? இலக்கியக் கருப்பொருட்களா? காவிய உள்ளீடுகளா?

சமூகத்தின் நன்மைக்காக, ஆரோக்கியத்திற்காக, அதன் முன்னேற்றத்திற்காகத் தங்களை அர்ப்பணித்து உழைத்துப் பிழைத்து வரும் பாமர மக்களின் ஆசா பாசங்கள், விருப்பு வெறுப்புக்கள், வாழ்க்கை முறைகள், அநுபவங்கள் எல்லாம் சரித்திர, வரலாறு அடைப்புக் குறிகளுக்குள் அடங்க முடியாதவைகளா? - ஏன்?..... என்ன காரணம்?

எனது இளமைக் காலச் சிந்தனைகளின் ஒரு நூலிழை இது. தொடர்ந்து நூலிழைச் சிக்கலைச் சிக்கெடுக்க முற்பட்டேன். முனைந்து சிந்தித்தேன்.

சிகை அலங்கரிப்புத் தொழிலைக் காலம் காலமாகக் குலத் தொழிலாகவும் ஜீவனோபாய வேலையாகவும் கைக்கொண்டு ஒழுகி வரும் இந்த மக்கள் கூட்டத்தினரைப் பற்றி - ஒரேயொருவரைப் பற்றிக் கூட - ஒரு சொற் சித்திரம் புனையப்பட்டிருக்கவில்லையே என்ற மன ஆதங்கம் என் நெஞ்சில் கனன்று கொண்டேயிருந்தது. நெருப்பாக எரிந்தது.

இந்தத் தொழிலைச் செய்பவர்களுக்கும், செய்விப்பவர்களுக்குமிடையே உள்ள உறவு முறை வெறும் தொழில் சார் உறவு மட்டும்தானா? பணம் தானா இதன் பின்னணி?

அப்படியானால் திருமண வீடுகளிலும், சாவீடுகளிலும், நன்மை தீமை நடைபெறும் சமயங்களில் `எங்கை பரியாரி?.....எங்கை பரியாரியைக் காணேல்லை?` எனப் பதைபதைப்பதும் - அங்கலாய்ப்பதும் - கூப்பாடு போடுவதும் - வெறும் நடிப்புக் கலந்த அவலத் தேடுதல்தானா?

நிலமானியச் சமூக அமைப்பில் தங்களது குலங்கோத்திரத்தின் பாரம்பரிய மேன்மைகளை மற்றவர்களுக்கு எடுத்து விளம்பத்தக்க சான்றாதார மனிதச் சாட்சிக் கூட்டங்களா இவர்கள்? தொண்டடிமைச் சொத்துக்களா?

குடிமகன் என்ற பெயரில் அடிமை குடிமைகள் என்ற அந்தஸ்துப் பெருமையை - உயர்குடி அந்தஸ்தை - நிலைநாட்டி நிரூபித்துக் காட்டப் போடுதடிகளாகப் பாவிக்கப்படும் மக்கள் கூட்டத்தின் ஒரு பிரிவைச் சேர்ந்தவர்களா, இவர்கள்? இந்த எனது மக்கள் - எனது இரத்த உருத்தினர்கள்?

- இப்படியே என் சிந்தனை கிளை விட்டுப் படர்ந்தது. மண்டை எரிந்தது.

இதற்கு எதிர்ச் சாட்சி பகர்வதற்காகவே நான் எனது பேனாவை எடுத்துக் கொண்டேன். அதை ஆயுதமாகப் பாவித்தேன்.

இங்கு நான் எனக் குறிப்பிடுவது, நானல்ல! நானென்பது ஒரு குறியீடே தவிர, நானல்ல!

என் மூலம் இந்தச் சமூகக் கட்டமைப்புக்கள் `பஞ்சமர்` என அழைக்கப்பட்ட ஐந்து சாதியினரின் ஒரு பிரிவுக்குட்பட்ட எனது சமூகத்தினர் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மானுட அவலங்களை, கஷ்ட நஷ்டங்களை, கொடூரக் கொடுமைகளை, அவமதிப்புக்களை எடுத்துச் சொல்வதே தலையாய நோக்கமாகவிருந்தது. அதுவே எனது அடிப்படை நோக்கமாகவும் இருந்தது.

ஏனெனில் அவர்களின் புத்திரன், நான். அந்தப் பரம்பரையில் வந்தவன், நான். அவர்களுடைய வாழும் சொத்துக்காரன், நான்

அந்தப் பரம்பரையில் பேனா பிடிக்கக் கற்றுக் கொண்டவன் என்ற காரணத்தால், ஒரு நாடகத்தில் கட்டியகாரன் எந்த வகைப் பாத்திரத்தை வகிப்பானோ, அதே கட்டியகாரன் பாத்திரத்தை இந்த நூலின் ஆரம்பத்தில் நான் வகித்துக் கொண்டேன். இதன் உட்சூத்திரத்தை இளந் தலைமுறையினருக்கு விளங்கப் படுத்துவது எனது எழுத்துக் கடமையாகும். எனவே வாழ்வுச் சரடை, எனது வாழ்க்கையை அதில் இணைத்துப் பிணைத்துள்ளேன்.

ஏனெனில் நானே இந்த நாடகத்தின் நேர் முகச் சாட்சியானவன். இன்றைய மக்களுக்காகவல்ல, எதிர்காலத் தலைமுறையினரை மனசில் கொண்டே, இந்தத் தகவல்களை ஓர் ஆவணமாக எழுத்தில் பதிய வைக்க விரும்பினேன். வரலாறு இதில் தொனிக்கும், அடிப்படை உண்மையைப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

எனது பேனா சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு இதை வரைந்துள்ளது. இதில் எந்த விதமான பொய்யும் இல்லை. கற்பனையும் இல்லை. மருந்துக்குக் கூட, இதில் ஒளிப்பு மறைப்பு இல்லவேயில்லை. பகிரங்கமான என் எழுத்துக்குச் சுதந்திரம் தருகிறேன்.

எனது எழுத்தை ஆழ்ந்து படிப்பவர்கள், இந்த உண்மையை லகுவு துல்லியமாகப் புரிந்து கொள்வார்கள். புரிந்து கொள்ள வேண்டும் என்பதே எனது பெருவிருப்பமுமாகும்.

எனது வாழ்க்கையைச் சொல்லுவது மாத்திரம் எனது நோக்கமல்ல. வரலாற்று நிகழ்வுகளில் இருந்து, நினைவுகளில் இருந்து மறைக்கப்பட்டு - மறக்கப்பட்டு - தொலைந்து போனவர்களின் வாழ்வுச் சுவடுகளின் தொகுப்புத்தான் இந்த நூல். இதை எழுத்தில் வடித்திருக்கின்றேன்.

ஏனெனில் இப்படி வரலாற்றிலிருந்து தொலைந்து போனவர்களின் – காணாமலே போனவர்களின் – சொந்தக்காரன்தான் நான். எனது வளர்ச்சியின் வரலாற்றுப் பின்புலத்தை ஆவணப்படுத்துவது கூட, எனக்குச் சரித்திரத் தேவைகளில் ஒன்று, கடமைகளில் ஒன்று.

உழைப்பாளர் பரம்பரையைப் பற்றி, குறிப்பாக எனது சமூகப் பாரம்பர்யத்தைப் பற்றி, எனக்கு எப்பொழுதுமே மனசு நிறைந்த பெருமிதமுண்டு. மதிப்பார்ந்த கர்வமுண்டு.

இந்தப் பெருமையை, எனது பரம்பரைக்கான குலத்தொழிலைக் கற்றுக் கொண்டதுவரை இளம் பருவத்துக் காலத்திலிருந்தே பேணிப் பாதுகாத்து வந்திருப்பவன், நான். அதையிட்டு மகிழ்ச்சியடைபவனும் நானே.

எனவே எனது சுயசரிதையை எந்தவிதமான ஒளிவு மறைவுமில்லாமல் தெளிவாக எழுதியிருக்கின்றேன். அப்படி அப்படியே கூறியிருக்கிறேன்.

அடி நிலை வாழ்வு மட்டத்தினரான பஞ்சமர்களைத் துச்சமாக மதித்து, அவர்களது மனிதப் பண்புகளைச் சிதைத்து, அவர்களது சந்ததியினரைத் தமது பார்வையால், பாஷையால், நடவடிக்கைகளால் சேதப்படுத்தி வாழும் மனித உருவில் நடமாடும் சாதிமான்களை நான் என்றுமே மதித்தவனல்ல, கௌரவித்தவனல்ல. அவர்களை என்றுமே நேசித்தவனுமல்ல.

மாறாக அவர்களை ஒதுக்கித் தள்ளியவன். அவர்களது நீசச் செயலுக்கு எதிராகக் கட்டம் கட்டமாகப் போராடி, வளர்ந்து வந்திருப்பவன். எனது பேனாவால் இத்தகைய பாத்திரங்களைப் பேனாச் சித்திரமாகச் சித்தரித்துள்ளேன். சிறு கதைகளில் நடமாட வைத்துள்ளேன்.

நான் யாரிடமும் துவேஷம் பாராட்டியவனல்ல. என்னைப் போன்ற பஞ்சம மக்களின் வாழ்வு நிலையைக் கேவலப்படுத்திய, கல்வி முன்னேற்றத்தை நாசப்படுத்திய கூட்டத்தினர் மீது வஞ்சம் தீர்க்க எண்ணியதுமில்லை. என்னை அங்கீகரியுங்கள் என இரந்து நின்றதுமில்லை.

இந்தச் சாதி அகம்பாவ நிலைக்கு ஒரு குறிப்பிட்ட உயர் சாதியினர் மாத்திரமே காரணம் அல்ல என்பது எனக்குத் தெளிவாகவே நன்கு தெரியும்.

இந்த நச்சுச் செடியின் மூலவேர் நிலமானிய சமூக அமைப்பின் ஆதார மண்வளத்தில் கிளை பரப்பி வந்துள்ளதையும் நான் அறிந்து வைத்திருப்பவன்தான். இது எனது பார்வை. தெளிவான நோக்கு.

ஆனால், இது விஞ்ஞான யுகம். உலகமே ஒரு கிராமமாகச் சுருங்கி வந்துள்ளது. தொடர்பு சாதனங்கள், ஓர் அறைக்குள் இந்தப் பிரபஞ்சம் முழுவதையுமே எம் கண்முன்னால் திரையிட்டுக் காட்டுகின்றன. பிரபஞ்ச இரகசியங்கள் விடுபடுகின்றன. புதிர்கள் உடைகின்றன.

இந்த யுகத்தில் பழைய சமூகக் கட்டுமானங்களை இன்னமும் இறுகப் பற்றிப் பிடித்துக் கொண்டு பரம்பரையின் சாதிப் பெருமைகளை நிலைநாட்ட – மக்களில் ஒரு

பகுதியின்ரைக் கீழ்மையாக நடத்த எண்ணுவதைத்தான் நான் முற்றாக வெறுக்கின்றேன் – நிராகரிக்கின்றேன். எதிர்க்கின்றேன்.

நான் தமிழ்ச் சமூகம் முழுவதுக்குமாகவே சிந்திக்கிறேன். செயல்படுகிறேன். இந்தச் சமூகத்தின் சீரழிவுப் போக்கினால், முழுச் சமூகமுமே கடைசியில் கந்தறுந்து போய்விடுமோ என மெய்யாகவே பயப்படுகின்றேன். விசனப்படுகின்றேன்.

எனது நூலில் நான் சொல்லியுள்ள பல தகவல்கள், செய்திகள் பலரின் மனச்சாட்சியைச் சுடும் என்பதும் எனக்குத் தெளிவாகத் தெரியும். சுடவேண்டும் என்பதும் எனது விருப்பம். பெரு விருப்பம்

நான் கூறியுள்ள அனைத்துத் தகவல்களுமே உண்மையானவை. என் வாழ்வில் நடந்தேறியுள்ளவை. எதார்த்தமாக நான் முகம் கொடுத்தவை. நம்பகத் தன்மை கொண்டவை.

இது எனது தனி மனிதப் பிரச்சனையல்ல.

வள்ளுவருக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இந்த மானுடக் கீழ்மைச் சீர்கேடுகள் நடந்தேறி வந்து கொண்டிருக்கின்றன.

இன்றும் கூட, அது தீர்ந்தபாடாய்க் காணவில்லை.

சான்றோர் என்று சொல்லப்படுபவர்கள், இந்த மனித மிலேச்சத்தனத்திற்கு எதிராகக் கடுமையாகக் குரல் கொடாமல், எதிராகக் குரல் கொடுத்த எம்மைப் போன்றவர்களின் படைப்புக்களைப் பார்த்தே `இழிசனர் இலக்கியம்!` என முத்திரை குத்தி ஒதுக்கப் பார்த்தனர்.

இன்னும் சிலரோ ஒப்புக்காக `இதெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகக் காலக்கிரமத்தில் மறைஞ்சு போயிடும்!` எனச் சமரசப் போர்வைக்குள் நுழைந்து கொண்டு, இன்னமும் பழமை பேணிவருகின்றனர். தமது கந்தப்புராணக் கலாசாரத்தின் மகிமையைப் பற்றிக் கதையடிப்பதில் மாத்திரம் காலத்தைக் கடத்தி வருகின்றனர். கவனத்தைச் செலுத்துகின்றனர். இது ஒரு பாசாங்கு. மோசடி.

இது சாதீயக் கட்டுமானத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கான ஒரு வகைத் தந்திரமே.

இந்த நுட்பமான ராஜதந்திரத்தை அதன் உட்செறிவுடன் பூரணமாகத் தெரிந்து வைத்திருப்பவன், நான். அது அநுபவம் எனக்குக் கற்றுத் தந்த பாடம். படிப்பு. இதுவே என் எழுத்துக்குப் பசளையாகப் பயன்பட்டது.

இன்னொரு பக்கம், தமிழர்களின் சகல குறைபாடுகளுக்கெல்லாம் பேரினவாதத்தின் மீது பழி பாரத்தைச் சுமத்தி விட்டுத் தாம் தப்பித்துக் கொள்ள முனையும் முயற்சி.

இந்தப் பஞ்சப்பட்ட பரதேசி மக்களின் வாழ்வின் அவலங்களை யதார்த்த ரீதியில் எழுதி வெளியிட அந்தப் பஞ்சம குலத்திலிருந்தே படைப்பாளிகள் தோன்றி வரக் காலம்

கனிந்து கொண்டது. தலித்துகள் பேனாபிடித்து எழுதத் தொடங்கி விட்டனர். இதை பார்த்துப் பலர் பதறிப் போய் விட்டனர்.

அப்படித் தோன்றிப் பேனா பிடித்து எழுத முற்பட்டவர்களில், நானும் ஒருவன்!

அற்புதமான ஓவியம் ஒன்றை ஒருவன் பேரறிஞர் பெர்னாட் ஷாவிடம் காண்பித்து அதைப் பற்றி அபிப்பிராயம் கேட்டு வைத்தானாம்.

ஒரு மனிதன் சிங்கத்தின் மார்பிலிருந்து அச்சிங்கத்தின் உடலைக் கிழிக்குமாப் போன்ற படமது. மனிதனது வீரத்தைப் பறைசாற்றும் ஓவியமது. மனிதப் பராக்கிரமத்தின் ஓவிய வெளிப்பாட்டுச் சித்திரம் அது.

ஷா அந்தச் சித்திரத்தைக் கூர்ந்து பார்த்துவிட்டுச் சொன்னாராம், 'அருமையான ஓவியம் தான், இது! ஆனால் இதைக் கொஞ்சம் திருப்பிப் பார்க்க வேண்டும்' என்றாராம். தொடர்ந்து, 'இந்த ஓவியத்தைத் தீட்டியவன் மனிதன். இதே ஓவியத்தைச் சிங்கம் வரைந்திருந்தால் எப்படி இருக்கும்? என யோசித்துப் பார்க்கிறேன்!' என்றாராம். எப்போதோ படித்த கருத்து எனக்கு இப்பொழுது ஞாபகத்தில் தட்டுப் படுகின்றது. பஞ்சமர்களைப் பற்றி மற்றவர்கள் தத்தமது அநுபவங்களுக்கு ஏற்ப வரைந்துள்ள சித்திரங்கள் போதும். விரும்பியோ விரும்பாமலோ அவைகளில் பெரும்பான்மையானவை சார்பு நிலை ஓவியங்கள். பக்கச் சார்புச் சித்திரங்கள்.

அந்தச் சித்திரங்களுக்கு மாறான ஓர் ஓவியம்தான் இந்த நூல். இதுவரையும் எழுதப்படாத கவிதையாக இருந்தவர்களின் வரையப்படாத சித்திரங்களை இந்த வகையில் தான் நான் குறியீடாகக் கொண்டு இப்பொழுது எழுத்தில் வடித்து, நூலாக வெளியிட்டிருக்கிறேன்.

இன்றைய இளைய தலைமுறையினர் மீது எனக்கு அபார நம்பிக்கையுண்டு. அவர்களினது செயல்களைக் காலத்திற்குக் காலம் நான் கூர்ந்து அவதானித்து வந்துள்ளேன். அவர்களிடம் சாதி அகம்பாவமோ அதன் அழுக்குத் தனங்களோ, சின்னத்தனங்களோ சிறிது கூடப் படிந்திருக்கவில்லை.

அதே சமயம் பிரச்சினையின் சூட்சுமங்களில் பல அவர்களுக்கு விளங்குவதில்லை.

இப்படியாக, ஒரு பகுதி மக்கள் காலம் காலமாகப் பட்டு வரும் மானுடத் துயரம் பற்றி அவர்களுக்கு விளப்பமில்லை. கடந்த காலங்களில் தமது வாழ் மண்ணில் நடந்த மிலேச்சத் தனத்தின் மிச்ச சொச்சங்களின் பூர்வீக வரலாறு பற்றி அவர்களுக்குச் சொல்லப்பட்டதில்லை, படிப்பிக்கப்பட்டதில்லை.

அவர்களின் சிந்தனைக்காகவே இந்தச் சாதி அகம்பாவ நச்சு மூல ஆணிவேரின் ஆழ அகலத்தை எழுத்தில் வடித்து வைக்கிறேன். அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். தங்களது மண்ணின் அவலத்தை அவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஏனெனில், என் எழுத்து, சத்தியத்தைப் போலத் தூய்மையானது. உண்மையைப் போல, தெளிவானது. நேர்மையைப் போலக் காத்திரமானது. உண்மையைப் போல,

உண்மையானது.

யாருக்கு எதிராகவும் காழ்ப்புணர்ச்சி கொண்டு கொக்கரிப்பதுமல்ல எனது உள் விருப்பம். எந்தவிதமான சோடனைகள், அலங்காரங்கள், மொழிக் கவர்ச்சிப் பந்தாக்களுமற்ற வகையில், மிக மிக எளிமையான நடையிலேயே இந்த நூலை எழுதியுள்ளேன். எளிமையாக எழுதுவது என்பதுதான் எழுதுவதில் மகா கடினமான செயல். இதை எழுதிப் பார்ப்பவர்கள் தான் புரிந்து கொள்வார்கள். அது மிகமிகக் கஷ்டமானது. ரொம்பவும் சிரமமான காரியம்.

இந்த நூலை எழுதிவரும் வேளைகளில் மேற்கோள் காட்ட, அல்லது எடுத்தாளக் கூடியதாகத் தெளிவான ஆவணங்களோ, ஆதாரங்களோ, எழுத்துப் பிரதிகளோ, பத்திரிகை நறுக்குகளோ கூடக் கைவசம் இருக்கவில்லை. எல்லாம் அங்கே. அந்த வெந்த பூமியில். என்னுடைய சொந்த மண்ணில்.

அத்தனையும் யாழ்ப்பாணம் மல்லிகைக் கந்தோரில் விடுபட்டு விட்ட காரணத்தால் அத்தனையும் சிதைந்து சீரழிந்து போய் விட்டன. மறைந்து விட்டன. மழையில் நனைந்து சிதிலமாகிவிட்டன.

என்னைப் பொறுத்தவரை மிகப் பெரிய சோகம், அது. இருந்தும் எனது ஞாபக சக்தி எனக்கு கைகந்து உதவியது. தெளிவான நேர்ச் சிந்தனை எனக்கு வழிகாட்டிச் சென்றது. மூளையைக்கூடக் கசக்கிப் பிழிந்து, ஞாபகச் சுரங்கத்திலிருந்து தகவல்களை, சம்பவங்களை, கருத்துக்களை எடுத்தெடுத்துக் கையாண்டு ஒருவகையாக ஒப்பேற்றி முடித்தேன். எனது ஞாபக சக்தி, எனக்குக் கிடைத்த மிகப் பெரிய கொடைகளில் ஒன்று. அது ஒரு வரம்.

பஞ்சமர் என்ற சொல் யாழ்ப்பாண மாவட்டத்திற்கே உரித்தான தனித்துவமான வட்டாரச் சொல், இந்தப் பஞ்சமர் சாதியில் ஐந்து சாதியினர் அடங்குவர். அம்பட்டர், வண்ணார், பள்ளர், நளவர், பறையர். இந்த ஐந்து சாதிகளுக்குள் அடங்கக் கூடிய ஒரு சாதியைச் சேர்ந்தவன் தான், நான். கொஞ்சம் நாகரிகமாகச் சொன்னால் நாவிதன்!

ஆனால் தமிழகத்தில் – இந்த அடி நிலை மக்கள் – முன்னர் காந்திய காலத்தில் ஹரிஜனர் என அழைக்கப்பட்டனர். காந்தி அடிகள் கூட, இவர்கள் ஞாபகார்த்தமாக `ஹரிஜன்` என ஒரு பத்திரிகையையே நடத்தி வந்தார்.

காந்தி சகாப்தத்திற்குப் பின் இந்தக் கடவுளின் குழந்தைகளை இந்தியத் துணைக் கண்டமே கைவிட்டு விட்டது.

இதன் பின்னர் அம்பேத்கார் குரலாகத் தம்மைப் பிரகடனப் படுத்திக் கொண்டு, அவரது ஒப்புதலின் படி `தலித்` எனத் தம்மை ஒட்டு மொத்தமாக அழைக்கத் தலைப்பட்டனர் இந்தப் பஞ்சப்பட்ட மக்கள்.

தலித் என்ற சொல் ஒடுக்கப்பட்ட, உரிமை மறுக்கப்பட்ட, பஞ்சப்பட்ட, தாழ்த்தப்பட்ட சகல மக்கள் பகுதியினரையும் உள்ளடக்கிய சொல்லாக – இலக்கியம் அங்கீகரித்த சொல்லாக இது புழக்கத்தில் வந்து விட்டது. அகில இந்தியச் சொல்லாகவும் பரிமாணம்

பெற்றுவிட்டது.

இந்தத் தலித் என்ற சொல்லின் விரிவும் வீரியமும் மராட்டியத்திலும் கன்னடத்திலும் ஆந்திரத்திலும் பரவலாகவும் தமிழகத்தில் சிறப்பாகவும் இன்று உணரப்பட்டு வந்துள்ளது. இதன் உள்ளடக்கக் கருத்துப் பலராலும் புரிந்து கொள்ளக் கூடியதாக வியாபித்து நிலைத்துவிட்டது. இந்தச் சொல்லை இனி யாராலும் புறக்கணித்துவிட முடியாது. அலட்சியம் செய்துவிடவும் முடியாது.

அந்தச் சொல்லின் வலிமை என்னையும் ஆட்கொண்ட காரணத்தினாலேயே நான் எனது சுயசரிதையை நூலாக எழுதி வெளியிட முன்வந்தேன்.

'நாங்களும் மனுசங்கடா.....!'

தலித்திய இயக்கம் கற்றுத் தந்த மூலமந்திரம் இது. 'நாங்களும் மனுசங்கடா!'

இந்த நூலைத் தனி மனித வரலாற்று ஆவணமாகத் தயவு செய்து யாருமே கருதிவிடக் கூடாது. இதை எழுத்தில் வடித்தெடுக்க மிகத் தீவிரமாகச் சிந்தித்து உழைக்க வேண்டியிருந்தது. தீவிர உழைப்பு முயற்சியின் போதுதான் சரியான தெளிவு பிறக்கும். சரியான மார்க்கம் புலப்படும். விடுதலைக்குப் பாதை திறக்கும்.

கணக்குப் போட்டுக் காய் நகர்த்துவது அல்ல, வாழ்க்கை. இந்த நூலில் சொல்லப்பட்டுள்ள சகல தகவல்களுக்காகவும் தக்க விலை கொடுத்து வந்துள்ளேன். வெறும் ஞாபகசக்தியை மாத்திரமே மூலப்பிரதியாகக் கொண்டெழுதிய இந்த வாழ்க்கைச் சுய சரிதத்தில் சில தகவல்கள் விடுபட்டும் போயிருக்கலாம். சில பதியப்படாமல் விட்டிருக்கலாம். இருந்தும் எனது ஞாபகத்திற்கு எட்டியவரை கூடுமானளவிற்கு மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் எழுத்தில் பதியவைத்துள்ளேன். பழைய நமது குடா நாட்டைக் குறியீடாகக் கொண்டுள்ளேன்.

பரந்து பட்ட எனது இலக்கிய நண்பர்களைப் பற்றி இதில் நான் சேர்த்துக் குறிப்பிடவில்லை. அதற்குக் காரணம் உண்டு. அதற்கான இலக்கியத் தளமல்ல, இது. இது எனது சுய சரிதமே.

அடுத்து, நான் இரண்டாம் பாகமாக எழுதவுள்ள 'அச்சுத் தாளின் ஊடாக எனது அநுபவப் பயணம்' என்ற நூலில் – மல்லிகை தோன்றி வளர்ந்து இத்தனை ஆண்டுகளாக – அச்சிற்றிதழ் தாக்குப் பிடித்து வந்துள்ளது பற்றியும் – அதற்கு உறுதுணையாக இருந்த நண்பர்கள், கலைஞர்கள், ஆதரவாளர்கள் பற்றியும் விரிவாக எழுத எண்ணியுள்ளேன். எழுதுவேன்.

இந்த நூலின் அத்தியாயங்களை மல்லிகையில் நான் எழுதிவந்த இடைக் காலங்களில் என்னுடன் தொடர்பு கொண்ட உள்நாட்டு, வெளிநாட்டுச் சுவைஞர்கள், அபிமானிகள் நேரிலும் கடிதமூலமும் தொலைபேசி ஊடாகவும் என் எழுத்தின் ஆத்ம சுத்தியைப் பற்றி வியந்து பாராட்டிக் கருத்துத் தெரிவித்திருந்தனர். இதைத் சீக்கிரம் ஒரு நூலாக வெளியிட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர். பலர் வற்புறுத்தினர்.

`இந்தக் கட்டுரைத் தொடரில் உங்களது வாழ்க்கை வரலாறை மாத்திரமல்ல, குடாநாட்டின் பண்டைய சரித்திரத் தகவல்களையும் உயிர்ப்புடனும் உணர்வுடனும் தெரிந்து கொள்ளுகின்றோம்` எனச் சிலர் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

இத்தனை சீக்கிரம் இது நூலாக வெளிவருவதற்கு அவர்கள் காட்டிய பேராதரவும் பெரு மதிப்பீடும் தான் மூல காரணம் என்பதை ஒப்புக் கொள்ளுகின்றேன்.

எழுத்துக்குச் சுவை சேர்க்க எண்ணி நான் ஏதும் கூட்டியோ குறைத்தோ எழுதவில்லை. கற்பனைப் பசுவை மேய விடவில்லை. எனது வாழ்க்கையில் ஏற்பட்ட சுவையான, அவலமான நகைச்சுவை நிரம்பிய சம்பவங்களைத் தொகுத்து பல ஆண்டுகளுக்கு முன்னரே, ``அநுபவ முத்திரைகள`` என்ற தலைப்பில் தகவல் திரட்டு நூலொன்றை வெளியிட்டிருந்தேன்.

இந்தச் சுய வரலாறை மல்லிகை தோன்றும் வரைக்குமான காலகட்டப் பகுதியாக மாத்திரமே பதிவுக்குட்படுத்தியுள்ளேன். இது எனது போராட்டத்தின் தனிமனித வரலாறு. ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகவும் இது மிளிர்கின்றது.

1966ம் ஆண்டு ஆகஸ்ட் 15ந் திகதி தான் மல்லிகையின் முதல் இதழ் வெளிவந்தது.

மல்லிகையின் ஊடாக எனக்குக் கிடைத்த அநுபவங்கள் பெரும்பாலும் இலக்கிய அநுபவங்களேயாகும். அந்தத் தகவல்கள், செய்திகள் பெரும்பாலும் சுய வரலாறைவிட, ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றுடன் தொடர்பு கொண்டவையாகவே அமையும். அதுதான் உண்மையும் கூட.

அரை நூற்றாண்டுக்குக் காலத்திற்கு மேலாக நான் எழுத்து உலகிலும் சஞ்சிகை, புத்தக வெளியீட்டுத் துறைகளிலும் ஈழத்தில் காலடி பதித்து வந்துள்ளேன்.

எனது சாஹித்திய மண்டலப் பரிசு பெற்ற சிறுகதைத் தொகுதியான `தண்ணீரும் கண்ணீரும்` தொகுப்புப் பல ஆண்டுகளுக்கு முன்னரே, மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் எம். ஏக்கு உப பாடநூலாக வைக்கப்பட்டுவிட்டது.

இன்றுவரை எனக்கொரு ஆதங்கம் கலந்த ஆச்சரியம் இந்த மண்ணில் உள்ள எந்தப் பல்கலைக்கழகமுமே என்னை அழைத்து, எனது இலக்கிய அநுபவங்களைப் பற்றியோ, சஞ்சிகை வெளியீடு சம்பந்தமாகவோ, எழுத்து விவகாரங்கள் பற்றியோ தமது மாணவர்களுடன் கருத்துப் பரிமாறல் செய்ய இதுவரை அழைப்பு விடுத்ததில்லை. அது சம்பந்தமாக ஆரம்பப முயற்சிகளைக் கூடச் செய்ததுமில்லை. தொடர்பு கொண்டதுமில்லை.

இத்தனைக்கும் இந்தப் பல்கலைக் கழகங்களில் பணிபுரியும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் அவர்களது மாணவப் பருவ காலங்களில் இருந்தே என்னுடைய நண்பர்கள். இலக்கியக் கூட்டாளிகள். எமது போராட்ட இணைப்பில் வளர்ந்தவர்கள். மல்லிகையில் தொடர்ந்து எழுதி வந்தவர்கள்.

இதுதான் என்னவென்று எனக்கு இதுவரை விளங்கவில்லை. பெரிய ஆச்சரியம்!

யாராவது தெரிந்தவர்கள் இருந்தால் எனக்கு அதை விளங்கப்படுத்தலாம்.

சாதனையாளர்களை நீண்ட காலத்திற்கு யாராலுமே புறக்கணித்துவிட முடியாது. இதற்கு விதிவிலக்காக, ஒன்றை இங்கு குறிப்பிட வேண்டும். இன்றைய போராசிரியரும் எனது நண்பருமான இரா. சிவச்சந்திரன் சில ஆண்டுகளுக்கு முன்னர் என்னை அழைத்துத் தனது வழிகாட்டலின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற 'புறநிலைப் படிப்புகள் அலகு' என்ற தொடர் ஆய்வரங்கில் என்னைக் கலந்து கொள்ள வைத்தார்.

மற்றும்படி எனக்கும் மேலே குறிப்பிட்ட பல்கலைக் கழகங்களுக்கும் எந்தவிதமான தொடுப்போ, தொடர்போ இதுவரை இருந்ததில்லை. யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவி தேவகௌரியும், பேராதனைப் பல்கலைக்கழக மாணவி விஜய ரேணுகாவும் தமது உயர் பட்டப் படிப்புக்காகச் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரைகளில் ``80 களில் மல்லிகை விமரிசனங்கள்'' என்ற தலைப்பிலும், ``டொமினிக் ஜீவாவின் எழுத்தும் வாழ்வும்'' என்ற தலைப்பிலும் எனது உழைப்பில் மலர்ந்த மல்லிகை பற்றியும், எனது போராட்ட எழுத்துலகம் பற்றியும் குறிப்பிட்டுத் தமது ஆய்வை நிறைவு செய்துள்ளனர்.

எனது இலக்கிய உழைப்பையும் எழுத்தையும் வாழ்க்கையையும் அங்கீகரித்துப் பட்டமளித்து மாணவியரை அங்கீகரித்த இதே பல்கலைக் கழகங்கள், இதே மாணவியரைச் சந்தித்துக் கலந்துரையாடக் கூட, அங்கு என்னை அழைக்கவில்லையே! எனபதுதான் எனக்கு இதுவரை கூடப் புரியாத புதிராக இருந்து வந்துள்ளது. ஒரு வேளை இதுதான் பல்கலைக் கழகப் பாரம்பரியமோ, என்னவோ!

'மழைக்குக் கூட, நான் பள்ளிக்கூடத் தாவாரப் பக்கம் ஒதுங்காதவன்!' எனச் சொல்லும் கரிசல் காட்டுப் பெரும் படைப்பாளி திரு. கி. ராஜநாராயணனை அழைத்துப் புதுச்சேரிப் பல்கலைக் கழகம் தனது மாணவர்களுக்கு 'நாட்டார் இலக்கியம்' பற்றிப் போதிக்க ஏற்பாடு செய்திருந்தது.

அதே சமயம் நமது பல்கலைக் கழகங்கள் - படைப்பாளிகளைத் தமது ஆளுகைக்கு உட்பட்ட பல்கலைக் கழகப் படிக்கட்டுகளில் கூடக் காலடி வைக்கவே அனுமதிப்பதில்லை. உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் தரமான படைப்பாளிகளுக்கும் எந்த விதமான தொடர்புமில்லை. பரஸ்பர இலக்கிய உறவு கூட இல்லை.

நம்மிடையே இடை நடுவே குறுக்கிட்டு நந்தி போலத் தடுத்து நிற்பவர் யார்? - எவர்? என்றே தெரியவில்லை. இது தெளிவு படுத்தப்பட வேண்டும்.

நம்மைப் போன்றவர்களுக்குத் தகைமை இல்லையென்றால் நிராகரிக்கட்டும்! ஆற்றல் இல்லையென்றால் புறக்கணிக்கட்டும்! படைப்புத் திறன் பாராட்டத் தக்கபடி இல்லையென்றால் ஒதுக்கித் தள்ளட்டும்!

இது நியாயம்.

வாழ்க்கை எனும் பல்கலைக் கழகத்தில் நீண்ட நெடுங்காலம் கல்வி பயின்று வந்தவர்கள்,

நாங்கள். அதற்கான வுலையும் கொடுத்துள்ளோம். பல இடையூறுகளையும் கடந்து, நிமிர்ந்து, எழும்பி, இந்த நாட்டவர்கள் பலரால் மேன்மையுடன் வியந்து பேசப்படுகின்றோம். பாராட்டப் படுகின்றோம்.

ஆனால், உயர்கல்வி நிறுவனங்களில் கடமை புரியும் ஒரு சிலர் தான் அலட்சியம் காட்டுகின்றனர். இந்தக் கல்விமான்கள் எங்களைப் போன்றவர்களைக் கண்டு கொண்டதாகவே காட்டிக் கொள்வதில்லை. ஒருவேளை அவர்களது கல்விப் புலமைக்கு இது இழுக்காகக் கூட, இருக்கலாம்.

இதையிட்டு எதிர்காலத்தில் சிந்திக்கத் தெரிந்த இளைய தலைமுறையினருக்கு என்ன பதில் சொல்லப் போகின்றனர்.? வரலாற்றுக்கு என்ன பதிலளிக்கப் போகின்றனர்?

மற்றும் யார் எவர் எனக் கேட்பதையும் விட, இந்த எனது சுய வரலாறை ஆழமாகக் கற்றுச் சிந்திக்கும் நமது எதிர்காலப் பரம்பரையினர் நிச்சயம் இது பற்றிக் கேட்கவே செய்வார்கள்!

இப்படி அவர்கள் இந்த ஓரவஞ்சக அலட்சியத்தைப் பற்றிச் சுட்டிக் காட்டிக் கேட்கும் போது, நான் உயிருடன் இருக்க மாட்டேன். ஆனால், இந்த நிறுவனங்கள் உயிருடன் இருக்கும். அப்பொழுது இந்தக் கல்விமான்கள் என்ன சொல்லப் போகின்றனர்? என்ன விடை பகரப் போகின்றனர்?

இதை நினைக்கும் போது, மனசுக்குள் சிரித்துக் கொள்வேன். ஆத்திரமோ, அதைரியமோ படுவதில்லை. எந்தத் தனி மனிதர்கள் மீதும் நான் குற்றஞ் சாட்டவில்லை. படித்தவர்கள் கல்விமான்கள் மீதும் எனக்கு எந்த விதமான பகையுமில்லை. வெறுப்புமில்லை, எரிச்சலுமில்லை. காழ்ப்புணர்ச்சியுமில்லை.

இந்தச் சமூக அமைப்பு அப்படி. இதை மாற்றியமைக்கப் போனாவால் முடியாது. நிச்சயம் நாளை ஒரு நாள் மாற்றியமைக்கப்படும் என்ற எதிர்கால உயர் நம்பிக்கை எனக்கு உண்டு. கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக அந்தத் தத்துவம் தந்த வெளிச்சப் பாதையூடாகத்தான் நான் நடைபோட்டு வந்திருக்கிறேன். பல வெற்றிகளைக் கண்டதுண்டு. சில சறுக்கல்களும் நிகழ்ந்ததுண்டு. சில தோல்விகளும் ஏற்பட்டதுண்டு. ஆனால், தடம் புரளவில்லை.

பஞ்சமர் சமூகத்தில் பிறந்து, தமது அயராத உழைப்பாலும் கல்வித் தகைமையாலும் ஒழுக்க நடத்தைகளாலும் உயர்ந்து, நிமிர்ந்து, வளர்ந்து வந்துள்ள பலரை எனக்குத் தெரியும். அதே சமயம் உயர்குடிப் பிறப்பில்லாமலும் அடிமட்டத்துச் சமூகத்தைச் சேராதவர்களுமில்லாத இரண்டும் கெட்டான் சமூகத்தைச் சேர்ந்த பல ஆற்றல் படைத்தவர்களையும் எனக்குத் தெரியும்.

இவர்களில் அநேகர் அபார திறமைகள் வாய்க்கப் பெற்றவர்கள். படைப்பாற்றல் மிக்கவர்கள். சாதிக்க வேண்டும் என்ற பேரவாக் கொண்டவர்கள். மூளைப் பலம் மிக்கவர்கள்.

இதில் துரதிர்ஷ்டம் என்றால், இவர்களில் அநேகர் தாழ்வுச் சிக்கலுக்குள் ஆட்பட்டு,

மன உழைச்சலுக்கு உட்பட்டு அவஸ்தைப்படுபவர்கள். குமைந்து குறுகிப் போய்த் துவண்டு சோம்பிக் கிடப்பவர்கள். நெஞ்சில் ஓர்மம் இல்லாதவர்கள். மன உறுதியற்றவர்கள்.

'ஏன் தான் இந்தச் சாதியில் வந்து பிறந்து தொலைந்தோமோ?' என எண்ணியெண்ணி மனசு குமைந்து வருந்துபவர்கள், துயருறுபவர்கள்.

'தமது சாதியின் அடிப்படைத் தகவல்கள் மற்றவர்களுக்குத் தெரிந்து போய் விடுமோ?' என மனப் பீதியடைந்தவர்கள். அதனால், நடிக்கத் தெரிந்தவர்கள். மனச் சுத்தமற்றவர்கள்.

இவர்கள் யார்டம் தமது சாதியின் மூல வேர்களை மறைத்து, நாடகமாடி, நடிக்க முற்படுகின்றார்களோ, அந்த அவர்களுக்கு – இவர்களைப் பற்றிய சகல உண்மைகளும் தெரியும். அவர்களுக்குத் தங்களைப் பற்றிய முழுத் தகவல்களும் தெரியும் என்பது பற்றி இவர்களுக்குத் தெரியாது – புரியாது. இதுதான் விசித்திரம்!

இரண்டு பக்கமுமே நடிப்பால், ஒருவரை ஒருவர் வெற்றி கொள்வர்.

இது தான் வேடிக்கை!

யாருமே விரும்பியோ, விரும்பாமலோ ஒரு குறிப்பிட்ட சாதியில் ஜனனமெடுத்து விட இயலாது. அது இயற்கையின் பொது விதி. இதனை நாம் புரிந்து கொண்டு, அதற்கமைய வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

அதற்கமைய, நம்மை நாம் மறைத்து நடிக்கக் கூடாது. ஒளித்து மறைக்கக் கூடாது. பாவலா பண்ணக் கூடாது.

அது நம்மைப் பெற்ற தாயையே பொது இடத்தில் வேலைக்காரி எனச் சொன்ன சொல்லுக்கும் செயலுக்கும் ஒப்பானதாகும்.

நமது நாட்டில் மாத்திரம் இந்த மறைப்பு நாடகம் நடைபெறவில்லை. இப்பூப்பந்தில் பல ஐரோப்பிய நகரங்களில் இங்கிருந்து புலம் பெயர்ந்து அகதிகளாகப் பதிவு செய்து நிலை கொண்டு வாழும் நம்மவர்களிடம் இந்த ஒளித்து விளையாடும் கண்ணாமூச்சி விளையாட்டு வெகு தாராளமாக நடந்தேறி வருகிறதாம். அவுஸ்திரேலியாவும், கனடாவும்கூட இதற்கு விதிவிலக்கில்லை.

இதை நிரூபிக்குமாப் போல, பல கடிதத் தகவல்கள் எனக்குக் கிட்டியுள்ளன. நம்பிக்கையான வட்டாரங்கள் இக் கூற்றை மெய்ப்பிக்கின்றன.

ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலைக்காகத் தன்னை முழுமையாக ஒப்புக் கொடுத்தவரான தோழர் எம். சி. என அழைக்கப்பட்ட சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் சுப்பிரமணியம் அவர்கள் மறைந்த பத்தாவது ஆண்டு விழாவையொட்டி ஞாபக மலரொன்று கனடாவில் இருந்து சமீபத்தில் வெளிவந்திருந்தது. காத்திரமான மலரது.

மலர் எனக்கும் கிடைத்தது.

அம் மலரிலும் சில தகவல்கள் இதை நிரூபிக்கின்றன. இப்படியானவர்களை மனசில்

எண்ணிக் கொண்டுதான் இந்தச் சுய வரலாறை எழுதி வெளியிட்டுள்ளேன்.

இந்தப் பரம்பரை உயர் சாதிக் கொம்பன்களையும் விட, எந்த வகையிலும் நாம் மாற்றுக் குறைந்தவர்களல்ல. தரம் தாழ்ந்தவர்களுமல்ல. இந்த மன ஓர்மமும், தெளிந்த விசாலமான பார்வையும் நமது இளந் தலைமுறையினருக்கு அத்தியாவசியம் தேவை. இதை நமது எழுத்திலும் பேச்சிலும் தினசரி நடைமுறை வாழ்க்கையிலும் நாம் கடைப்பிடித்து ஒழுக வேண்டும்.

இதுவே இந்த நூலின் அடக்கச் செய்தியாகும். வெளியிடும் தகவலாகும்.

எம்மை மதிக்காத, பிறப்பினால் ஒதுக்கி, ஓரங்கட்ட நினைப்பவர்களிடம் நாம் ஏன் கொண்டாட்டம் வைத்திருக்க வேண்டும்? அந்த உறவு, நட்பு நமக்கேன் தேவை?

இதை, இந்த நிமிர்ந்த நேர்மையை வெளிப்படுத்தவே எனது எழுத்தால் என்னுடைய வாழ்க்கையைப் பேனாச் சித்திரமாக வரைந்து வைத்துள்ளேன்.

இந்த விவகாரத்தில் எந்தக் கொம்பாதி கொம்பன்களுடனும் நான் சமரசம் கொண்டாடியதில்லை. பணிந்து போய்ப் பேரம் பேசியதுமில்லை. விட்டுக் கொடுத்ததுமில்லை.

எதிர்கால வரலாற்றில் பேசப்படப் போகின்றவன், நான்! இந்த உறுதியான மனக்கணிப்பு என்னைப் பற்றி எனக்கு எப்போதுமே உண்டு. என் உழைப்பு அப்படி. என் அர்ப்பணிப்பு உணர்வு அப்படி. என்னுடைய தீர்க்கதரிசனப் பார்வை அப்படி. எழுத்து அப்படி. எல்லாமே அப்படி..... அப்படி.....

'ஏன் எங்களிடையேயுள்ள இந்த சீத்துவக் கேட்டையெல்லாம் இந்த நேரத்திலை வெளியிலை அள்ளிக் கொட்டப் பார்க்கிறியள்?' என்றொரு குரல் உரத்துக் கேட்கப்படுகிறது.

டானியல் எழுத்துக்களுக்குக் கூட அன்றைக்கு இதுவே விமரிசனமாக வைக்கப்பட்டது.

டானியல் அந்தக் காலகட்டத்துக்குரிய, சரியெனத் தெரிந்த பதில்களைச் சொல்லியிருந்தார். அதனால்தான் டானியல் இன்றும் வாழுகின்றார். அவருடைய எழுத்தும் வாழுகின்றது.

எனக்கும் சொல்லப்பட்டதுண்டு. இன்றும் அது தொடர்கிறது. ஏனெனில் இன்றுவரை நான் எழுதிக் கொண்டிருப்பவன். உயிரோடு இருப்பவன். செயல்படுபவன். போராடுபவன். மல்லிகை என்ற சிற்றேட்டில் ஆசிரியராகத் தினசரி இயங்கி வருபவன்.

இந்தச் சமூக அட்டூழியங்கள், அக்கிரமங்கள் சம்பந்தமான எனது பார்வை வேறு, டானியலின் அணுகுமுறை வேறு. இருவரும் வேறுபட்ட கண்ணோட்டம் கொண்டவர்கள். இருவரும் வேறுபட்ட முறையில் அணுகுபவர்கள்.

ஆனால், நம்மிருவரது அடிப்படை நோக்கங்களுமே ஒன்றேதான். அதில் மாற்றுக்

கருத்துக்கு இடமேயில்லை. ஏனெனில் நாமிருவரும் அடித்தட்டு மக்கள் குழாமிலிருந்து முகிழ்ந்து எழும்பியவர்கள். எழுத்துலகில் கால் பதித்தவர்கள். ஒன்றாகப் பேசப்பட்டவர்கள். விமரிசிக்கப்பட்டவர்கள். ஒன்றாக வளர்ந்தவர்கள். ஒரே இயக்கத்தில் இருந்தவர்கள.

டானியல் நாவல் எழுதியவர். தன் வரலாறு எழுதியவரல்ல. நான் சிறுகதை எழுத்தாளன். அத்துடன் அவரை விட, அதிக காலம் உயிர் வாழ்ந்து வருபவன். தொடர்ந்து எழுதிக் கொண்டிருப்பவன். சுய வரலாறு எழுதி நூலுருவில் வெளியிடுபவன். யதார்த்தம் என்ற மாசிகையைப் பல்லாண்டு காலம் நடத்தி வருபவன். 'மல்லிகைப் பந்தல்' வெளியீட்டாளன்.

பெரும்பாலும் தனது அநுபவங்களை நாவல் வடிவில் படைத்துவிட்டு, அவர் மறைந்து விட்டார். அது இன்று வரையும் பேசப் படுகிறது. பேசப்படும்.

நான் என்னுடைய வரலாறை எழுத்து வடிவில் எழுதி அதன் முதற் பாகத்தை நூல் வடிவில் வெளியிடுகின்றேன். இது எதிர்காலத்தில் பேசப்படும்.

எங்களது பரம்பரையின் ஆன்மாவில் விஷ ஆணி அறைந்த தழும்புகள் இன்னமும் மறையாமல் இருப்பதை எதிர்காலத்தவர்கள் தெரிந்து கொள்வதற்காகவே எனது பேனாவை இந்தத் துறையில் பேச வைத்துள்ளேன். இங்கு எனக்குப் பதிலாக எனது பேனா பேசுகின்றது.

இந்தச் சமூகத்தின் மீது சேறு பூசுவது அல்ல, எனது நோக்கம். எந்தச் சமூகத்தை எழுத்தில் இவ்வளவு மூர்க்கமாக எதிர்த்து எழுதி வருகின்றோமோ, அதே சமூக அமைப்புத்தான் என்னையும் சகோதரர் டானியலையும் இலக்கிய உலகிற்கு உருவாக்கித் தந்துள்ளது என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் கூர்மையாகப் பார்க்க மறுக்கின்றனர். வேண்டுமென்றே அலட்சியப்படுத்துகின்றனர்.

பார்க்க மறுத்ததின் காரணமாக எழுந்ததுதான் 'இழிசனர் இலக்கியம்' என்ற பண்டிதத் தனக் குற்றச்சாட்டு. உயர் சாதி அகம்பாவத்தின் வெளிப்பாடு.

இந்தக் குற்றச் சாட்டு முனை மழுங்கி எம்மைத் தாக்க இயலாமல், இடை நடுவே தொய்ந்து போய்ச் சாய்ந்து விட்டது. அவை பண்டிதத்தையே திருப்பித் தாக்கின. அடித்தன. பண்டிதம் நிலைகுலைந்தது.

நல்லோர் நம்மை அங்கீகரித்து ஆட்கொண்டனர். விரும்பியிருந்தால் நாமும் உயர்குலச் செம்மல்களின் புத்திர பாக்கியங்களைப் போல, பம்மாத்துப் பண்ணியிருக்கலாம்.

நாம் அப்படி வேஷம் போடவில்லை, நடித்து ஊரை ஏமாற்றவில்லை. அப்படி வேஷங்கட்டி ஆடி, நம்மை நாமே மறைத்து வாழப் பழகியிருந்தால், நாம் நாமாக இருந்திருக்க மாட்டோம். இத்தனை சமூக அங்கீகாரமும் நமக்கு கிடைத்திருக்காது. நமக்கென்ற தனித்துவமும் இருந்திருக்காது. நமது போர்குணம் இதற்கு இடம் தந்திராது.

மனசில் எந்தவிதமான பகை உணர்ச்சிகளுக்கும் இடம் தராமல், பாசாங்கு காட்டாமல், நெஞ்சை நேர் நிலைப்படுத்திக் கொண்டு இந்த நூலை எழுதி முடித்துள்ளேன்.

இதில் எனது சொந்தக் குடும்ப வாழ்க்கையை – அது பற்றிய தகவல்களை –

கூடியவரை தவிர்த்துள்ளேன்.

பொதுப் பிரச்சனைகளில் எனது போராட்ட அனுபவங்கள், ஓர் எழுத்தாளனாக முகிழ்ந்து வருவதற்கு நான் கொடுத்து வந்துள்ள பெறுமதி மிக்க பாரிய விலைகள், அதே சமயம் ஒடுக்கப்பட்ட மக்களின் புத்திரனாக இந்த மண்ணில் ஜெனித்ததன் காரணமாக, இந்தச் சமுதாயத்துடன் சமரசமற்ற ரீதியில் போராடியதன் காரணமாக ஏற்பட்ட தழும்புகள் அத்தனையும் ஒழிக்காமல் மறைக்காமல் இதில் பதிவு செய்துள்ளேன். மிகையான வரி ஒன்று கூட இல்லை.

இந்த அழுக்குத் தனங்களற்ற ஒரு புதிய சமுதாயம் நிச்சயம் ஒரு நாள் மலரும், தோன்றவே செய்யும், என்ற அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவன், நான். உறுதியான நம்பிக்கை எனக்குண்டு.

எனது தலைக்குப் பின்னால் ஓர் ஒளி வட்டத்தைச் சூடிக் கொள்ளும் எந்தவிதமான அறிவகந்தைத் தனமும் என் எழுத்துக்கு இல்லை. மிகச் சாதாரணன், நான். அந்தப் பாமரனின் நிலையில் இருந்து கொண்டே நினைத்து, சிரித்து, ஞாபகப்படுத்திக் கொண்டு எழுத்தை வரைந்துள்ளேன். நூலாக வெளியிட்டு வைக்கிறேன்.

– என்றுமே நான் நானாக இருப்பதையே நான் விரும்புகிறேன்.

இந்தக் கட்டுரைத் தொடர் தொடர்ந்து மல்லிகையில் வெளிவந்து கொண்டிருந்த கட்டங்களில் எல்லாம் என்னை உற்சாகப் படுத்தி நேரிலும், கடித மூலமும், தொலைபேசி ஊடாகவும் உற்சாகமூட்டிய நெஞ்சுக்கு நெருக்கமானவர்களுக்கும், இந்தத் தொடரைக் கூடிய சீக்கிரம் நூலுருவில் வெளியிட வேண்டும் என என்னைத் துரிதப்படுத்திய ஆத்மார்த்தமான நண்பர்களுக்கும், அட்டையை இத்தனை அழகாக வரைந்து தந்துதவிய ஓவியர் புஹாரி அவர்களுக்கும், உள்ளே இணைப்புச் சித்திரங்களை வரைந்து உதவிய நண்பர் ஸ்ரீதர் பிச்சையப்பா அவர்களுக்கும், ஒப்பு நோக்கிப் படி திருத்துவதில் உதவிய நண்பர் எம். பாலசிங்கம் அவர்களுக்கும், தனது கணினிக் கலைமூலம் இந்த நூலை ஒழுங்குபடுத்தித் தந்த திரு. இ. ஆத்மானந்தன் அவர்களுக்கும் அச்சக ஊழியர்களுக்கும், எனது இதயம் கலந்த நன்றிகள் உரித்தாகட்டும்.



3-4-1999
கொழும்பு-13

சந்தோஷ மத்தாப்பு

என்னுடைய 73 – வது பிறந்த தினத்தன்று இந்த நூலின் முதற் பதிப்பைச் சென்னையில் நடந்த வெளியீட்டு விழாவில் வைத்து வெளியிட்டு வைத்தேன்.

நண்பர்கள் நர்மதா ராமலிங்கம் அவர்கள் 27 – 06 – 1999 அன்று தனது 'புக்லாண்ட்' புத்தக நிறுவனத்தின் ஆதரவில், அங்கேயே வெளியிட்டு வைக்க ஆவன செய்து உதவினார்.

இலங்கையில் தயாரிக்கப் பெற்ற ஒரு புத்தம் ஒன்றுக்குச் சென்னையில் வெளியீட்டு விழா நடைபெற்றது என்பது நானறிந்தவரை, இது தான் முதற் தடவையாக இருக்கும் என நம்புகின்றேன்.

இந்த இரண்டாம் பதிப்பை, எனது பவள விழா ஆண்டின் தொடக்க நாளில் வெளியிட்டு வைக்கின்றேன். சென்னையில் இதன் முதற் பதிப்பு வெளியீட்டு விழாவுக்கு தலைமை தாங்கியவர், எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி அவர்கள், எழுத்தாளர்கள் அசோகமித்திரன், சா. கந்தசாமி போன்றோர் பேச்சாளர்களாகக் கலந்து சிறப்பித்தனர். இதில் மறக்க முடியாத சந்தோஷமான நிகழ்ச்சி என்ன வென்றால், நண்பர் ஜெயகாந்தன் இந்த வெளியீட்டு விழாவில் கலந்து, கொண்டு என்னை வாழ்த்தி உரை நிகழ்த்தியதுதான்.

சென்னையிலுள்ள பல எழுத்தாளர்கள் இந்த வெளியீட்டு விழாவிற்கு வந்திருந்து சிறப்பித்தனர். நேர்ச் சம்பாஷணையில் என்னைப் பாராட்டினர்.

அதன் பின்னர் இந்த நூலின் அறிமுக விழா கொழும்பில் நடை பெற்றது.

இந்த அறிமுக விழாவிலிலும் நமது எழுத்தாளர்கள் பெரும்பாலானவர்கள் வந்திருந்து என்னை வாழ்த்திச் சென்றனர். இதுவரையும் சரஸ்வதி, தமிழ்ப் புத்தகாலயம், நியூ செஞ்சரி புக் ஹவுஸ், குமரன் பப்ளிஷர்ஸ், நர்மதா போன்ற சென்னைப் புத்தக வெளியீட்டு நிறுவனங்கள் எனது நூல்களை 1960 – ம் ஆண்டிலிருந்தே வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தி வந்துள்ளன. வெளியிட்டிருந்தன.

'மல்லிகைப் பந்தல்' நிறுவனத்தின் மூலமும் எனது படைப்புக்களை வெளியிட்டு வந்துள்ளேன்.

ஆனால், இந்த எனது சுய வரலாற்று நூலான 'எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத

சித்திரம்' நூல் தந்த பிரபலத்தையும், பரபரப்பையும், விற்பனை எழுச்சியையும் நான் வேறெந்தப் புத்தகத்தின் வெளிமீடுகளிலும் பெற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை.

அத்தனை பெயரையும், பிரபலத்தையும், கீர்த்தியையும் இந்த நூல் எனக்குப் பெற்றுத் தந்துள்ளது.

சமீபத்தில் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றிருந்தேன். பாரிஸ், பெர்லின், லண்டன் போன்ற நான் போயிருந்த பிரபல நகரங்களில் எல்லாம், இலக்கியக் கூட்டங்களும் எழுத்தாளர் சந்திப்புகளும் கலந்துரையாடல்களும் பரவலாக இடம் பெற்றன.

நான் போயிருந்த நகரங்களில் நடந்த இலக்கியக் கூட்டங்களிலெல்லாம் பெரும்பாலானவர்கள், எனது சுய சரிதை நூலைத்தான் ரொம்பவும் விரும்பிக் கேட்டு வாங்கினர்.

எனக்கே அது ஆச்சர்யமாக இந்தது.

விமானப் பயணம் செய்பவர்களுக்கு ஒன்று தெரியும். பயணிகள் ஒரு குறிப்பிட்ட அளவு நிறைக்குட்பட்டுத்தான் தங்களது பொதிகளை கொண்டு செல்ல முடியும்.

நான் பாரிஸிற்குப் புறப்படுவதற்கு முன்னரே அங்கிருந்து தகவல் வந்து விட்டது. 'உங்களது புத்தகங்களில் கனிசமானவற்றைக் கொண்டு வாருங்கள். அதிலும் உங்களது சுய வரலாற்று நூல் எங்களுக்கு மிக மிகத் தேவை! என்ற தகவலை முன்னரே எனக்கு தந்து வைத்தனர்.

நான் கொண்டு சென்ற புத்தகங்களை மூன்று பங்காகப் பிரித்துக் கொண்டேன். ஒரு பெரிய பங்கு பாரிஸ் இலக்கியச் சந்திப்புக்கு வரும், சுவைஞர்களுக்கு. இன்னொரு பங்கு பெர்லினில் சந்திக்க இருக்கும் இலக்கிய நண்பர்களுக்கு, மற்றொரு பங்கு லண்டன் மா நகரில் என்னைக் கௌரவிக்க இருக்கும் தோழர்களுக்கு.

இப்படியாக மூன்றாகப் புத்தகங்களைப் பிரித்துக் கொண்டு தான், நான் எனது ஐரோப்பியப் பிரயாணத்ததைத் தொடங்கினேன்.

இதில் சங்கடம் என்னவென்றால், பாரிஸ் மாநகரில் நடைபபெற்ற 27-வது இலக்கியச் சந்திப்புக்கு ஐரோப்பாக் கண்டனத்திலிருந்து அநேகர் பேராளர்களாக வந்து குழுமி விட்டனர்.

சந்திப்பில் குறிப்பிடத் தக்க என்னுடைய உரையைக் கேட்டதன் பின்னர், ஏராளமான சுவைஞர்கள் என் கைப்பட, எனது கையெழுத்தைப் பெற்றுக் கொண்டு, நூல்களை வாங்கினர். அப்படி வாங்கிய நூல்களில் எனது சுயவரலாறு புத்தகங்களே அதிகமாகும்.

அந்த இலக்கியச் சந்திப்பிலேயே நான் இங்கிருந்து கொண்டு சென்ற நூல்கள் செலவாகியிருக்கும். நான் விழித்துக் கொண்டு விட்டேன்.

கொண்டு சென்ற எல்லா நூல்களையும் பாரிஸ் இலக்கியச் சந்திப்பில் கொடுத்துத் தீர்த்து விட்டால், அப்புறம் பெர்லினில் நடைபறும் இலக்கிய விழாவிற்கும் லண்டனில்

நடைபெறவுள்ள இலக்கியச் சந்திப்புக்கும் சும்மா வெறுங் கையுடனா, நான் போய் நிற்பது? என எனக்குத் திகைப்பு வந்து விட்டது.

எனவே நூல்களை விநியோகிப்பதை அங்கு கட்டுப் படுத்திக் கொண்டேன்.

பல ஆர்வலர்கள் இதற்காக என்னுடன் கோபித்துக் கொண்டது கூட, உண்டு.

'மறுபடியும் உங்களிடமிருந்து எப்படிப் புத்தகங்களைப் பெற்றுக் கொள்ள இயலும்?' எனக் குறைபட்டுக் கொண்டார்கள். ''ஐரோப்பாவின் தொலை நகரங்களில் இருந்தெல்லாம் வந்திருக்கிறோம். எனவே, எங்களுக்குத் தருவதும், ஐரோப்பியப் புலம் பெயர்ந்த நம்மவர்களுக்குத் தருவதும் ஒன்று தான்!'' என என்னுடன் விவாதித்தார்கள்.

லண்டனிலுள்ள பழைய இலக்கிய நண்பர்கள் நான் பாரிஸிற்குப் புறப்படுவதற்கு முன்னரேயே, கொழும்பிலிருந்த என்னிடம் வற்புறுத்திச் சொல்லியிருந்தார்கள். வரும்போது கணிசமான புத்தகங்களை, குறிப்பாகச் சுயவரலாறு நூல்களைத் தமக்குக் கொண்டு வரவேண்டுமெனத் தொலைபேசியில் வாக்குறுதி பெற்றுக் கொண்டிருந்தனர்.

எனக்கோ தர்ம சங்கடமான நிலை. என்னை எதிர்பார்த்திருப்பவர்கள், என்னைச் சந்திப்பதுடன், நான் கைவசம் கொண்டு வரும் புத்தகங்களுக்காகவும் ஆவலுடன் காத்திருந்தனர். எனவே, இலக்கிய ஆர்வ அழுத்தங்களையும் ஒருவகையில் சமாளித்துக் கொண்டு, கைவசம் மிஞ்சியுள்ள புத்தகங்களுடன் புறப்பட்டுச் சென்றேன்.

எனது புலம் பெயர்ந்த ஐரோப்பியச் சகோதரர்களுக்கு வாக்கு கொடுத்தபடி, எனது சுய வரலாறு நூலின் இரண்டாம் பதிப்பை வெகு சீக்கிரமாக வெளியிட்டு வைக்கின்றேன்.

முதற் பதிப்பில் இடம் பெறாத பல தகவல்களை, சம்பவங்களை இதில் எழுதி இணைத்துள்ளேன். அத்துடன் இந்தப் பதிப்பை வெகு கவனத்துடனும் பொறுப் புணர்ச்சியுடனும் வெளியிட்டு வைப்பதில் மிகுந்த கவனமும் சிரத்தையுமெடுத்து உழைத்துள்ளேன்.

இந்த நூலுக்கு அட்டைப் படம் வரைந்து உதவிய நண்பர் 'மருது' அவர்களுக்கு என் நன்றி. இவ்வளவு அழகாக கணினி அச்சமைப்புச் செய்து உதவிய செல்வி சி. சித்தியாங்கனிக்கும், அச்சியற்றித் தந்துதவிய யு. கே. அச்சகத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரியவை.

டொமினிக் ஜீவா

10-06-2001
கொழும்பு-13.

தோழர் மு. கார்த்திகேசன்
அவர்களது ஞாபகத்திற்கு.....

1

1939 ஆம் ஆண்டு தைத் திங்கள் தைப்பூசத் தினம். அன்று நல்ல நாள். மங்களகரமான தினம். புதியதைத் தொடங்க - ஒப்பேற்றி நடத்த - சிறப்பானதை ஆரம்பிக்க நல்லதொரு நாள் என்பது நம்மில் பலரது ஐதீக நம்பிக்கைகளில் ஒன்று. அம்மாவுக்கும் அதில் அதே நம்பிக்கை.

அன்று விடிகாலை பக்கத்தேயுள்ள அடைக்கல மாதா கோயிலுக்கு என்னை அழைத்துச் சென்றார், அம்மா. அங்கே காலைப் பூசையை முடித்துக் கொண்டு என்னை என் எதிர்கால வாழ்க்கைக்குத் தயார்படுத்தும் முகமாக வேட்டித் துண்டொன்றை எடுத்துத் தந்து, இடுப்பிலிருந்து நழுவாமல் எப்படிக் கட்டுவது என முதலில் பயிற்சி தந்து முடித்தார் அவர்.

இதுவரை காலமும் கட்டைக் காற்சட்டை போட்டு, அது அரையிலிருந்து வழுகாமல் காப்பாற்றிக் கொள்ள, சணல் கயிறால் வரிந்து கட்டுப் போட்டு வந்தேன். இதுவரை கட்டைக் காற்சட்டை மூலம் எனது மானத்தைக் காப்பாற்றிக் கொண்டு வந்த எனக்கு, இது புதுப் பழக்கமாக இருந்தது. கூச்சமாகவும் இருந்தது. புதுமையாகவும் இருந்தது.

கழற்றிப்போட்ட நீல நிறக் காற்சட்டையைத் திரும்பிப் பார்த்தேன். மூலையில் கிடந்தது அது. எனக்கு அழுகை வந்தது.

அரையில் தரித்திருந்த வேட்டி என்னைப் பார்த்துச் சிரிப்பது போலவும் இருந்தது. இனிமேல் இதுதான் நிரந்தர ஆடை என்பது போல, அம்மா என்னை ஒரு பார்வை பார்த்துவிட்டு, சீப்பு எடுத்து என் தலையை வாரிவிட்டார். முகத்தை அழுத்தித் துடைத்துவிட்டார்.

'சரி..... சரி.....நேரம் போயிட்டுது. இண்டையில இருந்து நீ விளையாட்டுப் புள்ளையில்லை. நல்லாத் தொழில் பழக வேணும். நாலு காசு சம்பாரிச்சு உழைக்க வேணும்.' என்றார் தொடர்ந்து. ''கடையிலை இருந்து ஆள் வந்திருக்குது. இப்ப நல்ல நேரம். கெதியா வெளிக்கிட்டுப் போ!'' என அவசரப்படுத்தினார். தலையைக் கோதிவிட்டார்.

எனக்கென்றால் ஒரு பக்கம் மகிழ்ச்சியாக இருந்தது. இன்னொரு பக்கம் தயக்கமாகவும் இருந்தது. துக்கமாகவும் இருந்தது.

எனது சுதந்திரம் மட்டுப்படுத்தப் படுகிறதோ என்பது தயக்கத்திற்கான காரணம். புதிய புதிய முகங்களோடு பழக்கம் பண்ணலாம் என்பது மகிழ்ச்சிக்கான பின்னணி. இனி ஊர் சுற்றித்திரிய முடியாதே என்பது துக்கத்திற்குக் காரணம்.

யாழ்ப்பாணம் பெரியகடைப் பிரதேசத்திலுள்ள செம்மா தெரு என அன்று அழைக்கப் பெற்ற இன்றைய கஸ்தூரியார் வீதியிலுள்ள அறுபதாம் எண்ணில் இயங்கிக் கொண்டிருந்த ஏ. யோசப் சலூனில் - பாமர யாழ்ப்பாணத்தான் பாஷையில் சொல்லப் போனால் சவரக் கடையில் - பரம்பரைத் தொழிலை முறையாகவும் - ஜீவனோபாயத்திற்கு வருமானம் தேடக்கூடிய உழைப்பாகவும் கற்றுக் கொள்ளக் காலடி எடுத்து வைத்தேன்.

வலது காலைத்தான் முதன் முதலில் வைத்து உள் நுழைந்தேனா, அல்லது இடது காலை வைத்து உட்புகுந்தேனா என்பதை இப்போது நான் அறுதியிட்டுக் கூறக்கூடிய நிலையில் இல்லை. சலூனுக்குள் உள் நுழைந்தேன்.

முதன் முதலில் எந்தத் காலை வைத்து உள்நுழைவது என்பதை முன்னரே ஒருவரும் சொல்லித் தந்த ஞாபகம் இல்லை.

அன்று திங்கட்கிழமை. காலை நேரம். வயசோ பன்னிரண்டு. படிப்போ ஐந்தாம் வகுப்பு..... அவ்வளவு விவரம் தெரியாத சின்னப் பெடியன்.

பயம் என்னவென்று அறியாமல் வளர்ந்த பெடியன் நான். துடுக்கு மிக்கவன். படிப்பில் சுழியன். சென் மேரீஸ் பாடசாலையில் நான் கல்வி கற்றுக் கொண்டிருந்த வேளையில் ஒரு சம்பவம் நடந்தது. அது எனது இளம் ஆத்மாவைக் காயப்படுத்தி விட்டது. அதன் தழும்புகள் இன்றும் கூட எனது நெஞ்சின் அடிமட்டத்தில் ஆழமாகப் பதிந்து போயுள்ளன. என்னுடைய கெட்டிக்காரத் தனத்தை நிரூபிக்கப்போய் ஆசிரியரின் கடுப்பை நேர் கொண்டவன். அவர் கூட ஒரு கிறிஸ்தவர்தான். யார் சொன்னது கிறிஸ்தவர்களிடம் சாதித் திமிர் இல்லையென்று? -குப்பென்று முகம் வியர்க்க, என்னை ஒரு சத்துராதியைப் போலப் பார்த்து உரக்கக் கத்தினார் அவர். 'ஏன்ரா எங்களின்ரை உயிரை வாங்குறீங்க? போய்ச் சிரையுங்கோவன்ரா!'

எனக்குச் சோறு தருகின்ற தொழிலை அவமதித்ததுதான் எனக்கு எரிச்சல். சாதியைப் பற்றி அன்றும் இன்றும் கூட - நான் என்றுமே அலட்டிக்

கொண்டவனில்லை. ஆனால் எனது குடும்பத்துக்குச் சோறு போடும் தொழிலை அவமதித்ததை என்னால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. அன்றே மனசில் சபதமெடுத்தேன். `எதைக் கேவலப்படுத்தினாரோ அதன் மூலம் சாதனை படைப்பேன்!' அன்றே திடமாக முடிவெடுத்துக் கெண்டேன்.

அது வெறும் சவரக் கடையல்ல. அதுதான் என்னை உருவாக்கிச் செழுமைப்படுத்திய சர்வகலாசாலை என்ற பெருமை எனக்குண்டு.

இந்தக் கருத்தைப் பின்னால் பல பேட்டிகளில் பகிரங்கமாகச் சொல்லியும் இருக்கிறேன்.

யோசப் சலூன் எனப் பெரிய விளம்பரப் பலகை மாட்டப்பட்டிருந்த போதிலும் கூட, ``வண்ணான் குளத்தடிச் சலூன்'' என்பதுதான் அன்றைய பிரசித்தம். யாழ்ப்பாண நகர் அன்று அரை நகர். பட்டினமும் அல்லாத கிராமமும் அல்லாத திரிசங்கு நகர். வளர்ந்து வரும் புது நகர்.

இந்தச் சலூனுக்கு ஒரு வரலாற்றுப் பின்னணி உண்டு. இந்த சவரக் கடைதான், யாழ்ப்பாண வரலாற்றில் முதன் முதலில் சலூனாக கட்டுக் கோப்புடன் அமைக்கப்பட்ட சவரக்கடை. நாகரிகம் முதிர்ந்து வரும் ஆரம்ப காலகட்டத்தில் சுற்றுப் பிரதேச கல்லூரி ஆசிரியர்கள்., மாணவர்கள் எல்லாரும் சனி, ஞாயிறு நாட்களில் இங்கு குழுமுவது வழக்கம். முன் அறையில் நான்கு நாற்காலிகளும் நவீனப்படுத்தப்பட்ட பின் அறையில் நான்கு நாற்காலிகளும் போடப்பட்டு, சலூனாக விளங்கியது யோசப் சலூன், என்ற அந்தச் சவரக் கடை.

அதன் உரிமையாளர் எனது தந்தையார். தன்னுடைய பெயரைப் பெரிய விளம்பரப் பலகையில் எழுதி, நாமம் சூட்டி, தெருவால் போவோர் வருவோரை மனசுக்குள் உச்சரிக்க வைத்த பெருமை அவருக்குரியது. அது மாத்திரமல்ல, தனி நபர் பெயரை விளம்பரத்தில் - அதிலும் ஒரு சலூனுக்குச் சூட்டிய பெருமை - அவருடையதாகும். அதுவும் - அந்தக் காலத்தில்!

என்னைவிடப் பத்து வயசு மூத்தது இந்தச் சலூன். நான் பிறந்த பின்னர்தான் தனக்கு அதிர்ஷ்டம் பிறந்தது என்பது எனது அப்பாவின் அபார நம்பிக்கை. நான் பிறந்து, சிறிது காலத்திலேயே பஸ் சொந்தக்காரராகவும் எனது அப்பா திகழ்ந்தார். Z 2002 சவுர்லெட் பஸ் ஒன்றைச் சொந்தமாக்கிக் கொண்ட இவர், கீரிமலை - யாழ்ப்பாணம் ரூட்டில் பஸ்விட அனுமதியும் பெற்றுக் கொண்டார். டிரைவரின் பெயர் நாகலிங்கம் என்பது எனது நினைவு. கண்டக்டராக பூனை என்பவரின் பட்டப்பெயர் பிரசித்தம். சாடையாக எனக்கிது ஞாபகமும் கூட.

இது தவிர, எனது தகப்பனாரின் துணிச்சலுக்கு இன்னொரு சம்பவத்தையும் சுட்டிக்காட்ட வேண்டும். அந்தக் காலத்தில் ஊர்குடி பார்ப்பது என்பது எங்களது பரம்பரைத் தொழிலுக்கான பெயராக இருந்தது. அதற்கு அர்த்தம்

சலவை. சவரத் தொழிலாளிகள் தங்கள் தங்கள் ஊர்களைப் பகுதி பிரித்து 'அந்த உடையார் பக்கப் பகுதி உனக்கு. இந்த விதானையார் பகுதி எனக்கு' என்றபடி எழுதாச் சட்டமூலம் ஊரைப் பங்கு பிரித்துத் தொழில் செய்து வந்தனர். ஒருவர் பகுதிக்குள் நன்மை தீமை பிரச்சனைகளில் கூட, மற்றவர்கள் புகுந்து கொள்வதில்லை. தினசரி தொழில் ஆட்சி இயல்பாகவே நடந்து வந்தது. உடன் காசு கிடையாது.

என்னுடைய தகப்பானாரின் தகப்பன் பெயர் அவுறாம்பிள்ளை. தாயார் பெயர் அன்னப்பிள்ளை. யாழ்ப்பாணம் ரெயில்வே ஸ்டேசனுக்கு முன்னால் இருந்த வளவில் குடியிருந்தனர். சொந்தக் காணி, சொந்த வீடுவளவு, ஏதோ வாழ்ந்து வந்தனர். சுய சம்பாத்தியத்தில் ஆறு பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்தனர். எமது மூதாதையர் பரம்பரைப் பட்டினத்தவர்கள் அல்ல. எனது அப்பாவின் தகப்பனாரின் ஊர் பெரியவிளான். தாயாரின் கிராமம் சரவணை. எனது தாயாரின் தகப்பனார் ஊர் சரவணை. தாயாரின் ஊர் நயினாதீவு. அந்த நாகம்மாளின் மீது கொண்ட விசேஷி அபிமானத்தின் காரணமாகவே சிறுவயசில் நேர்த்திக் கடன் துடக்குக் கழிவு காலங்களில் எமக்கெல்லாம் முடியிறக்கி மொட்டை போட்டது அந்த நாகபூஷணி அம்மன் சந்நிதியில் தான். எனக்கும் அங்கு மொட்டையடிக்கப்பட்டிருக்கிறது.

நானொரு கிறிஸ்தவன். கத்தோலிக்கன். பெயரும் கிறிஸ்தவப் பெயர். என்னுடைய இந்த பெயருக்குப் பின்னாலும் ஒரு வரலாறு உண்டு. வீட்டார் பலமுறை சொல்லக் கேட்டிருக்கிறேன். சின்ன வயசில் கேள்விப்பட்டிருக்கிறேன்.

அந்தக் காலத்தில் ரெயில்வே ஸ்டேசன் மாஸ்டர்கள் அனேகமாக வெளிநாட்டவர்களாகத்தான் இருப்பார்களாம்!

அப்படி யாழ்ப்பாணப் புகையிரத நிலைய ஸ்டேசன் மாஸ்டராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தவர். பெயரைத்தானாம் எனக்குச் சூட்டி மகிழ்ந்தனர். எனது குடும்பத்தினர். அத்தனை நல்ல மனிதராம் அவர். புகையிரத நிலைய அயலிலுள்ள சாதாரண மக்களுடன் வெகு அந்நியோன்னியமாகப் பழகிப் புழங்குவாராம். அந்த மேலை நாட்டவர். அந்த நல்ல மனிதன் விடுப்புப் பெற்ற காலத்தில் தான் நான் பிறந்தேனாம்.

அவரது ஞாபகமாகவே எனக்கு அவரது நாமம் சூட்டப்பட்டது. அவர் ஒரு வெள்ளைக்காரர். எனது மூதாதையர் இந்துக்களாகத்தான் இருந்துள்ளனர். அவர்களைப் பற்றிப் பழைய கதைகளைக் கேள்விப்பட்டபோது, அவர்களில் சிலர் தனிச் சிறப்புக் குணங்கள் அமைந்தவர்களாகவே இருந்துள்ளனர். அன்றைய வாழ்வின் அழுத்தம் காரணமாக அவர்கள் மதம் மாறியிருக்கலாம் என நம்புகிறேன்.

எனக்குப் பொதுவாக அறிவு தெரிந்த காலத்திலிருந்தே ஆழமான மத நம்பிக்கைகள் கிடையாது. ஏதோ ஒப்புக்கு அனுஷ்டானங்களில் கலந்து கொள்வேன். மாதா கோயில்களுக்குப் போய் வழிபடுவது கூட, ஏதாவது

ஒரு கடன் திருநாட்களில் மட்டும்தான்.

நான் படிப்பில் வெகு சுழியன் என ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளேன். அசாதாரணமான ஞாபக சக்தி கொண்டவன். படிப்பது எனக்கு ஒரு பொழுது போக்குக் கலை. ஆசிரியர் கரும்பலகையில் கணக்கொன்றைப் போட்டு அதன் விடையையும் எழுதி, மாணவர்களாகிய எங்களுக்கு வெகு அக்கறையாக விளங்கப்படுத்திக் கொண்டிருந்தார். நானும் வெகு சுவாரஸ்யமாகக் கவனத்துடன் கையிலுள்ள கொப்பித் தாளில் அந்தக் கணக்கைப் போட்டு என் வரைக்கும் விடை தேடித் தவித்துக் கொண்டிருந்தேன்.

ஒரே குழப்பமாக இருந்தது. ஆசிரியருடைய கரும்பலகை விடையும் எனது கைக் கொப்பி விடையும் முரண்படுகின்றன!

மீண்டும் மீண்டும் மண்டையைக் கசக்கி விடை தேடி அலைந்தேன்.

எனது கொப்பி விடை கரும்பலகை ஆசிரியர் விடையுடன் முரண்பட்டு மோதிக் கொண்டது.

இருக்கையை விட்டு மெதுவாக எழுந்து நின்றேன்.

''என்னடா? என்ன சங்கதி?'' என்றார் ஆசிரியர்.

''உங்கட கரும்பலகை விடை பிழையாத் தெரியுது, எனக்கு'' ஆசிரியர் ஒரு கணம் அதிர்ந்து விட்டார்.

'இவன் என்ன சொல்ல வாறான்?' என்பதைப் போல, என்னை ஊடுருவிப் பார்த்தார்.

அவரது நெற்றி வியர்த்துக் கிடந்தது.

எனக்கும் உள்ளுக்குள்ளேயே பய உதறல். 'படித்தவர் அதிலும் எங்கட சட்டம்பியார். அவர் பிழைவிட மாட்டார்' என்ற நம்பிக்கை மனசைக் குடைந்தது.

'ஆனால், இரண்டு விடைகளில் எது சரி? எது பிழை?'

மாணவர் குழாம் என்னையே உற்றுப் பார்த்தது.

''சரி..... சரி..... இங்கை வா! உன்ரை கணக்கை இதிலை ஒருக்காச் செய்து காட்டு!'' எனக் கரும்பலகையைச் சுட்டிக்காட்டி, கையிலுள்ள வெண்கட்டியை அலட்சியமாக என்னை நோக்கி நீட்டினார்.

அப்பொழுது எனக்குள் ஒரு வகை மன ஓர்மம்.

'சரி, ஒருக்கா, சரி, பிழையைப் பாத்திடுவோமே?'

கரும்பலகையில் எனக்குத் தெரிந்த வகையில் கணக்கைச் செய்து காட்டினேன்.

கரும்பலகையையும் என் எழுத்துக்களையும் வைத்த கண் வாங்காமல்

பார்த்த ஆசிரியர், நிலைக் குத்திய பார்வையுடன் அலக்க மலக்க நின்ற காட்சி இப்பொழுதும் என் நினைவில் நிழலாடுகின்றது.

மாணவர்கள் சொல்லி வைத்தாற் போலச் சிரித்து வைத்தனர். அப்பொழுது தான் அந்த நச்சரவ வார்த்தை அந்தக் கிறிஸ்தவ வேளாளப் பொறுப்பாசிரியரிடமிருந்து வேக்காட்டோடு வெடித்துக் கிளம்பி வந்து என் இளவயசு இதயத்தைத் தாக்கி என்னை நிலை குலைய வைத்தது.

''ஏன்ரா இங்கை வந்து எங்கடை உயிரை வாங்குறீங்க?..... போய்ச் சிரையுங்கோவன்ரா!''

அன்றைக்கு எடுத்த சபதம்.

என் வாழ்க்கைப் பாதையையே திசைமாற்றி விட்டது.



2

1927 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27ந் திகதி திங்கட்கிழமை காலை 8.35 மணியளவில் நான் பிறந்தேன். அல்லது ஜனனமானேன். இடப ராசி, ரோஹினி நட்சத்திரம். சாதகக் கணிப்பு இப்படிக் கூறுகிறது. நான் பிறந்த வேளையில் தேவர்கள் பூமாரி பொழிந்ததாகவோ, துந்துமி முழங்கியதாகவோ பிற்காலத்தில் தகவல் எதுவும் எனது காதுகளுக்கு எட்டவில்லை. எனவே இலட்சக்கணக்கான குழந்தைகளைப் போலத்தான் நானும் அன்று சாதாரணமாகவே பிறந்தேன். அவதரிக்கவில்லை.

இப்பொழுது வாழ்ந்து வரும் இல்லத்தில்தான் எனது புதுப் பிறவி நிகழ்ந்தது. யாழ்ப்பாணம் ரெயில்வே ஸ்டேசன் மேடையில் நின்று தெற்குப் பக்கமாகப் பார்த்தால், இரும்புக் கிறாதிகளுக்கு மேலாகத் தெரியும் வீடுதான், நான் பிறந்த இல்லமாகும். பிரதான வீட்டிற்குக் கிழக்குப் பக்கமாக ஒரு சிறிய தலைவாசல் குடில் இருந்தது. அந்தக் குடிசையில்தான் எங்களது பரம்பரையே பிறப்பெடுத்து முதல் குரல் கொடுத்து அழுது, இந்த உலகத்திற்குத் தனது வருகையை அறிவித்தது. எனது தகப்பனார் பிறந்தது இந்தக் குடிலில்தான். நான் இரண்டாவது குழந்தை. எனது அண்ணனும் இரண்டு சகோதரர்களும், ஒரு சகோதரியும் உட்பட சகலரும் ஜனனமெடுத்தது இந்தக் குடிசையில் தான். எனக்கு மூன்று குழந்தைகள் - இருவர் பெண்கள். ஒருவர் ஆண். இவர்கள் பிறந்ததும் கூட. இந்தக் குடிசையில் தான். கூப்பிடு தூரத்தில் யாழ்ப்பாணம் ஜெனரல் ஆஸ்பத்திரி இருந்தபோதிலும் கூட, யாரையுமே ஆஸ்பத்திரியில் பெற்றெடுக்கவில்லை. எமது கூட்டுக் குடும்பத்தினர். இந்தக் குடில் ராசி ஆகி வந்த ஒன்று என்பது பரம்பரை நம்பிக்கை. எவ்விதமான விக்நமுமின்றிக் குழந்தைப் பிரசவம் இந்தக்

குடிலில் தான் நடைபெற்று வந்தது. இன்று இந்தக் குடிசை மறைந்து விட்டாலும், தினசரி அது இருந்த இடத்தைத் தரிசித்து வருபவன் நான். நான் பிறந்த இடமல்லவா!

என்னுடைய சிறுவயசு வாழ்க்கை அப்படியொன்றும் சொகுசானதல்ல. பல தடவைகள் பந்தாடப்பட்டிருக்கின்றேன். சொந்த வழ்க்கையில் மிகப் பெரிய அவலங்களைச் சந்தித்திருக்கிறேன். அவமானங்களைக் கண்டு கண்டு, சீரணித்தவன் நான். அவமானங்கள் என்றால் எப்படிப்பட்ட அவமானங்கள், அவை!

என் இளவயசில் வாழ்க்கையைக் கனவுகளோடு ஆரம்பித்தேன்.

ஆரம்ப காலங்களில் எனது தகப்பனார் துணிச்சல் மிக்க உழைப்பாளியாக இருந்தார். சிங்கள நாட்டில் - பாணந்துறையில் - தொழில் பழகி அங்கேயே சலூன் போட்டு உழைத்து வந்தார். பின்னர் ஊரில் தொழில் செய்ய வேண்டுமென்ற ஆர்வத்தினால் யாழ்ப்பாணம் வந்து சுயதொழில் தொடங்கினார். அது தான் ஏ. ஜோசப் சலூன். எனது பாட்டனார் ஊர் குடி என்ற முறையில் வீட்டுக்கு வீடு சென்று தொழில் செய்து விட்டு மதியம் ஓர் உமலில் மீன், காய்கறிகள் வாங்கி வந்து வாழ்வை நடத்தியவர். பாட்டி ரெயில்வே ஸ்டேசன் ஓரமாக, ஒரு சிறிய வெற்றிலைக் கடையை நடத்தி வந்தார். பிள்ளைகள் தலை நிமிர, தாத்தா ஊர் குடி வேலையை இயல்பாகவே விட்டு விட்டார்.

எனது தகப்பனார் ஓரளவு சுதந்திரப் போக்குக் கொண்டவர். சிங்கள நாட்டில் தொழில் பழகிய காரணத்தினாலும் அங்கு, சுயமாகத் தொழில் நடத்திய காரணத்தாலும் பெரிய கடைப் பகுதியில், செம்மாதெருவில் - கஸ்தூரியார் வீதியில் கடை திறந்தார்.

அந்தக் காலத்தில் இது ஒரு புரட்சி! ஒரு திருப்பு முனை!

அடிமை, குடிமை என நடத்தப்பட்டவர்கள் உயர் குடியின் சேவகர்கள். கூப்பிட்ட குரலுக்கு ஓடிப்போய்த் தொண்டு செய்யப் பழக்கப்பட்டவர்கள். நிலமானியச் சமூக அமைப்பின் வலுவான கண்ணிக்குள் சிக்குப்பட்டவர்கள். `இத்தனை நாட்களும் தங்களைத் தேடி வந்து தொழில் செய்துவிட்டு வருடத்தில் அதற்கான கூலியைப் பெற்றுக் கொண்டு வயிறு வளர்த்த கூட்டம், இன்று சலூன் என்ற பெயரில் தங்களைத் தேடி எங்களை வரச் சொல்லுவதுடன் உடனுக்குடன் கையில் காசையுமல்லவா கேட்கின்றனர்! அதுவும் கண்ட சாதி நிண்ட சாதியளும் வந்து போகும் இடமாகவும் அல்லவா மாறிவிடும்?' என அந்தக் காலத்தில் சலூனுக்கு எதிராக ஒரு வலுவான குரலொன்றும் எழத்தான் செய்தது. உயர் குலச் சாதியமைப்புத் தகர்ந்து போய் விடுமாம்!

மகா துணிச்சல்காரர் எனது அப்பா. அந்தத் துணிச்சல் காரணமாகத்தான் நான் பிறந்திருந்த சமயம் பஸ் வைத்து ஓட்ட, மன ஓர்மத்தை அவர்

பெற்றுக் கொண்டார்.

நான் இன்று ஆழமாகச் சிந்திக்கும் சந்தர்ப்பங்களில் 'எனது தகப்பனாரின் துணிச்சலிலும் முன்னோடித்தனத்திலும் ஒரு பகுதி தான் என்னிலும் இன்று ஒட்டிக் கொண்டுள்ளதோ!' என யோசிப்பதுண்டு. அது உண்மையாகவும் இருக்கக் கூடும். அந்த மரபு அணு என் இரத்தத்திலும் உண்டு.

இத்தகைய முன்னோடியும் - ஆற்றலும் - சிந்தித்துச் செயல்படும் திறமையும் மிக்கவரான அவர், பிற்காலத்தில் குடி வெறிக்கு அடிமையானார். பெரிய மனிசர்களின் நட்புக் கிடைத்தது. பவளக்கால் நடராஜா, பிறண்டி வேலுப்பிள்ளை, பூனைக்கண் சோமு, கொழும்பு ரெஸ்ரூறன்ற் ராசையா, பாட்ஸ் கடை தருமு, புடவைக்கடை சுலைமான் தையூப், ஆதம்பாய் கடை முதலாளி, பாய்மார், குல்முகம்மது, தெய்வேந்திரம், அரசரத்தினம், மானிப்பாய் சிவஞானம் இப்படியாக இவரது நட்புப் பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

பெரிய மனிதர்களின் நட்புக் கிடைத்துப் பொது வாழ்க்கையில் ஈடுபட்ட இவர், எப்படியோ நித்தக் குடியனாக மாறிவிட்டார். வீட்டிலும் மெல்ல மெல்ல வறுமை தலைகாட்டியது. நான் பிறந்த வேளைதான் தனக்கு அதிர்ஷ்டம் அடித்தது என மெய்யாகவே நம்பிய அவர், என்னிடம் விசேஷ பிரீதி கொண்டிருந்தார். அன்பு பாராட்டினார். அது கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து என்மீதும் வெறுப்படைந்தார். கோபம் கொண்டார். கண்ட நிண்ட நேரமெல்லாம் என்னைத் திட்டினார். தண்டித்தார். எனக்கும் அவர் மீதல்ல, அவரது குடியின் மீது சொல்லொணாத வெறுப்பு ஏற்பட்டது. எனவே அவரையும் சேர்த்து அலட்சியம் பண்ணினேன். அந்தச் சின்னஞ் சிறு வயசிலேயே மனசிற்குள் ஓர் ஆழ்ந்த சபதமெடுத்தேன். 'எக்காரணத்தைக் கொண்டும் எந்தச் சந்தர்ப்பத்திலும் குடிவகைகளை மனசாலும் தீண்ட மாட்டேன்!' என உறுதி பூண்டேன்.

நாடகத்துறையில் அபார ஈடுபாடு கொண்டவர் அதையே நோக்கமாகக் கொண்டவர், எனது தகப்பனார். நாடகம் என்றால் ஒரே விசர். அதைப் பற்றியே பேச்சு, மூச்சு எல்லாம். அந்தக் காலத்தில் தமிழ் நாட்டிலிருந்து பிரசித்தி பெற்ற நாடக நடிகர்களையெல்லாம் தருவிப்பார்கள், நாடகம் நடத்துபவர்கள். தகரக்கொட்டகை துரைராஜா, கொட்டடி சீனிவாசகத்தார், புத்துவாட்டி சோமு என்பவர்கள் இதன் அமைப்பாளர்கள். அழைப்பாளர்கள். வண்ணாங்குளத்தடிச் சலூனுக்கு நூறு யார் தூரத்தில்தான் இருந்தது அந்த நாளைய கொட்டகை. எனவே கொட்டகையுடன் தொடர்பு இவருக்கு இறுக்கமாகியது. தொடர்பு வளர்ந்தது. வலுத்தது.

ஒரு தடவை தமிழகத்திலிருந்து மிகப் பிரபலமான ராஜபார்ட் எஸ். எஸ் விஸ்வநாததாஸ் நாடகம் நடிப்பதற்காக யாழ்ப்பாணம் கொட்டகைக்கு வந்திருந்தார். இவர் நாவித சமூகத்தைச் சேர்ந்தவர். புராண நாடகங்களில் கூட, சுதந்திர, தேசிய பாடல்களைப் பாடி, மக்கள் மத்தியில் இந்திய

சுதந்திர எழுச்சியை ஏற்படுத்திய கலைஞர். பிற்காலத்தில் வேலனாக, வள்ளி திருமணத்தில் நடித்துக் கொண்டிருந்த வேளையில், மயங்கி விழுந்து நாடக மேடையிலேயே உயிர் துறந்தவர். மங்காப் புகழுக்குரியவர். சமூக உணர்வு காரணமாகவும் நாடக ரஸனையின் உற்சாகம் நிமித்தமாகவும் அவருக்கு மேடையில் வைத்தே பாராட்டு விழா நடத்தி ஐந்து பவுண் இரட்டைப்பட்டுச் சங்கிலியும், வைர மோதிரமும் அன்புடன் அணிவித்து சிறப்புச் செய்த நிகழ்ச்சிக்கு முன் நின்று உழைத்தவர் எனது தந்தையார். பொது வேலைகளைச் செய்வதென்றால் அந்தக் காலத்திலேயே 'எங்கே யோசேப்பு?..... எங்கே யோசேப்பு?' எனத் தேடிக் கண்டு கொள்ள வேண்டிய அளவிற்கு அர்ப்பணிப்பு உணர்வுடன் செயலாற்றியவர். இவரின் நிரந்தரக் குடிப் பழக்கம் எல்லாவற்றையுமே தலை கீழாகப் புரட்டி விட்டது. மாற்றி விட்டது.

ஒடுக்கப்பட்ட சமூகங்களிலிருந்து தலை தூக்கி நிமிர்ந்து வருபவர்கள் மிக மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நில உடமைச் சமூக அமைப்பு இன்னமும் முற்றுப் பெறாத இந்தச் சூழ்நிலையில், அசுர வல்லமை பொருந்திய உயர் சமூகம் இப்படியானவர்களை விலைக்கு வாங்கிவிடும். அல்லது கூடாத பழக்க வழக்கங்களுக்கு உட்படுத்தி அவர்களது ஆளுமையைச் சிதைத்தொழித்து விடும். அவர்களது பொருளாதாரத்தைத் தாழ்த்தி விடும். இந்த வெகுசன மதிப்புக்கள் வெறும் மாயவலை. இவர்களை அங்கீகரிப்பது போலப் பாவலாக்காட்டும். இவர்கள் முன்வைத்து கால் பதித்த கருத்துக்களைத் துச்சமாக உதாசீனம் செய்து கவிழ்த்துவிடும். பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து வரும் சொந்தச் சமூகங்களிலிருந்து தனிமைப்படுத்தி, திரிசங்கு நிலைக்குத் தள்ளிவிடும். இதைப் பலர் புரிந்து கொள்வதில்லை. புரிந்து கொள்ளும் சமயம் அந்த விலங்கிலிருந்து விடுபட இவர்களால் முடிவதில்லை. சூழ்நிலைக் கைதியாகிவிடுவர்.

எனது தகப்பனாரும் இந்தச் சமூக நியதிக்கு விதிவிலக்கானவரல்ல. பிற்காலத்தில் அதீத குடியினால் மனநோய் கண்டு அங்கொடை ஆஸ்பத்திரியில் இறந்து போனார். இவரது ஆப்த நண்பர்கள் என்று நம்பிக்கை தந்த பலர், இவரது இறுதிச் சடங்குகளில் கூடக் கலந்து கொள்ளவில்லை. இதிலிருந்து நான் பல பாடங்களைக் கற்றுக்கொண்டேன். எனது நட்பு வட்டத்தை வலிந்து பெருப்பித்துக் கொள்ளத் தயங்குகின்றேன். ஏனெனில் யாழ்ப்பாணத்துப் படிநிலைச் சமூக அமைப்பு என்பது கண்ணுக்குத் தெரியாத இரும்பு இழைகளால் பின்னப்பட்ட ஒன்று. இது ஏற்கனவே எனக்குத் தெரியும். நீறு பூத்த நெருப்பாக உள்ளே இந்த அமைப்பின் சின்னத் தனங்கள் எல்லாம் கனன்று கொண்டிருப்பதும் எனக்கு விளங்கும். நிலப் பிரப்புத்துவச் சமூக அமைப்பின் மிச்ச சொச்சங்களை இன்னமும் வென்று விடவில்லை இந்தச் சமூகம். எனவே எனது தகப்பனாரின் வாழ்க்கை முறையிலிருந்த தவறுகளை நீக்கி வாழ, நான் கற்றுக் கொள்வதற்கு எனது தத்துவ ஆசான்கள் வழி சொல்லித் தந்துள்ளார்கள். எனவே வெகு

எச்சரிக்கையாகவே எனது வாழ்வைத் தொடர்ந்தேன். தொடர்ந்து வருகின்றேன். மிகக் கவனமாகச் செயல் படுகின்றேன்.

எனது குழந்தைப் பருவத்து நாட்கள் அப்படியொன்றும் சுவையானதல்ல. சிறு வயசிலிருந்தே எனக்கென்றே சொந்தமான - தெளிவற்ற கனவுகள் கண்டு வந்துள்ளேன். சண்டைக்கோழி. யாருக்கும் கிறுங்கமாட்டேன். மூன்று அல்லது நாலு வயசிருக்கும். துடுக்கான நாட்கள் அவை. ஒழுங்கையில் வளையம் உருட்டுவது தான் எனது பிரதான விளையாட்டு. அல்லது ரெயிலுக்குப் போகும், வரும் சனங்களை வேடிக்கை பார்ப்பது. மூக்கால் சளி ஒழுகும். சீறித் துடைக்கமாட்டேன். சின்னஞ் சிறிய காற்சட்டையைக் கழற்றி மூக்கைத் துடைத்துவிட்டு அக் காற்சட்டையை அணியாமல் தோளில் போட்டுக் கொண்டு திரிபவன். அம்மாவுக்கும் சொல்லிச் சொல்லி அலுத்துவிட்டது. நான் உரிஞ்சான் குண்டியுடன் திரியும் சுதந்திரத்தை இழக்கத் தயாராகவில்லை. அதில் தனிக் குஷி. மூன்றாம் வீட்டில் ஒருவர் இருந்தார். பார்க்கப் பயங்கர மீசை. உருவம். பீலிமான் என்பது அவரது பெயர். சொந்தக்காரர். ''அம்மான் இஞ்சை ஒருக்கா வாங்கோ! இவனைப் பாருங்க!'' என அம்மா குரல் கொடுத்ததும் உடுத்திக் கொள்வேன். படுபயங்கரம். எனக்கு அவரது நாமம். அடிக்க மாட்டார். அடித்ததாகவும் ஞாபகமில்லை. ஆனால் பேய்ப் பயம். சிறிய வயசில் யாருக்காவது அடங்கி ஒடுங்கிக் கட்டுப்பட்டேனென்றால் இந்தப் பீலிமான் கிழவனுக்குத்தான். அவருக்கு வேறு பெயர். ஆனால் பீலிமான் என்றே அழைப்பார்கள். எங்கள் அயல் என்னையொத்த குழந்தைகளுக்கு எல்லாம் அவர் ஒரு வில்லன்! அந்த வில்லனை நாங்கள் கூட்டாக வெறுத்தோம். சாபமிட்டோம்.

திடகாத்திரமாக இருந்த அவர் ஒருநாள் இறந்துவிட்டார். அவரது இறப்பை என்னால் நம்ப முடியவில்லை. இப்படியானவர்கள் இறப்பார்கள், மறைவார்கள் என நம்பமுடியாத வயசு. அது. கிட்டப் போய்த் திரும்பத் திரும்பச் சவத்தைத் தொட்டுப் பார்த்தேன். நான் அவரைத் தொட்டுப் பார்த்ததே அவரது பிரேதத்தைத் தான். அவர் எழும்பவில்லை. கண்களை உருட்டிப் பார்க்கவில்லை. மீசையை முறுக்கிச் சத்தம் போடவில்லை. எனவே அவர் செத்துப் போய்விட்டதாகவே உண்மையில் நம்பினேன். பிரேதம் போனபொழுது அவர்கள் வீட்டுப் படலையடியில் நின்று கதிகாலைக் கையால் பிடித்தவண்ணம் விம்மி விம்மி அழுதது இன்று கூட, ஞாபகம் இருக்கிறது. `ஏன் அழுதேன்?' எனக்கு இன்றுவரை இதற்கு விடை கிடைத்த பாடாய்க் காணவில்லை. ஒருவேளை அடி மனசில் அவரை நேசித்ததுதான் காரணமோ தெரியவில்லை. அப்படியுமிருக்கலாம். இது ஒருவகை மனத் தத்துவம்.

அடுத்ததும் இதே வயசுக் கால கட்டத்தில்தான் நடந்தது. எங்கள் வீட்டுக்கு அணித்தாக ஒரு பிள்ளையார் கோவில் உண்டு. திருவிழாக்களுக்கு நாங்கள் போவதுண்டு. அம்மாவுக்கு அவர் மீது அபார நம்பிக்கை. ''ராவு நடுச்சாமம் தாண்டி இருக்கும். நாயள் குலைக்குது. நான் முழிச்சிட்டன்.

மெதுவாகக் காதைக் குடுத்துக் கேட்டன். மெல்லிசா சலங்கைச் சத்தம் கேட்குது. குதிரையின் குளம்படி ஓசையும்விட்டு விட்டுக் கேட்குது. என்ர தேகம் புல்லரிச்சுப் போச்சுது! புள்ளையார் எங்கட ஒழுங்கையாலை குதிரையிலை போனார்.'' அம்மா தனது நம்பிக்கைக்கு வார்த்தை வடிவம் தந்து, கதை கதையாக இரவில் சொல்லி வைப்பார். எனக்கும் பல நாட்களாக ஆசை. வாகனத்தின் குளம்படி ஓசையையும் சலங்கை ஒலியையும் ஒரு தடவையாவது கேட்டுவிட வேண்டும் என்ற பேரவா என் இளம் மனசைக் குடைந்தெடுத்தது. பல வெள்ளிக்கிழமைகளில் இரவில் கண் விழித்திருந்தும் நடுச் சாமமாகும் நேரத்தில் நான் தூங்கிப் போய்விடுவேன். ஒருநாளும் நான் பிள்ளையார் பவனி குதிரையில் வரும் ஓசையைக் கேட்க முடியவில்லை. குதிரையின் குளம்படிச் சத்தத்தையும் கேட்கவில்லை. ஒரு வேளை அம்மாவுக்கு அது உண்மைமையாக இருந்திருக்கலாம்.

என்னுடைய வாழ்க்கையை நெறிப்படுத்தியதில் என்னுடைய தாயாருக்கும் பெரும் பங்கு உண்டு. அதிகம் படிக்காதவர். ஆனால் கேள்வி ஞானம் நிரம்பப் பெற்றவர். நியாய, அநியாயங்களின் தராதரம் அறியத்தக்கதான நுண்மையான இயல்பு அறிவு பெற்றவர். 'பொடியா..... பொடியா.....!' என என்மீது அபாரமான வாஞ்சை கொண்டவர். இளந்தாரிக் காலத்தில் நான் கூட்டங்களுக்கு இரவிரவாகச் சென்று விட்டு வீடு திரும்பிய சமயங்களில் பனிக்குளிருக்குள் கூனிக் குறாவிக் கொண்டு, அரிக்கன் லாம்மை வெளிச்சம் குறைத்து வைத்துக் கொண்டு, இரவுச் சாப்பாட்டை மூடி வைத்துவிட்டு நான் வரும்வரை காவலிருந்தவர். 'ஏனணை நீ முளிச்சுக் கொண்டிருக்கிறாய்? சாப்பாட்டை வைச்சுப் போட்டு நீ படுக்கலாம் தானே?' எனக் கேட்டால், ''மனசு கேட்கேல்லைப் பொடியா, ரா இருட்டியிலை நீ வந்து சேரேக்கை குடிக்கத் தண்ணிகிண்ணிக்குக் கஷ்டப்படுவாய். பறவாயில்லை. நீ கையைக் கழுவிப்போட்டு வந்து சாப்பிட்டிட்டுப் படு!'' எனத் தாய்மைப் பரிவுடன் அவர் சொல்லும் போது, நெஞ்சு அப்படியே உருகும். அவரது மரணம் எனக்கொரு பெரிய அதிர்ச்சி. அவரது பிரிவைப் பற்றி மல்லிகை இதழிலும் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். பலர் அதைப் படித்து விட்டுத் துக்கம் விசாரித்தனர். அப்படிப்பட்ட பாசம் உள்ளவர். தாய்மை என்பதே அற்புதம்தான்!

இந்தக் கட்டத்தில் உண்மை ஒன்றைச் சொல்ல வேண்டும். அம்மாவின் இழப்பு மாபெரிய துன்பம் எனக்கு. அம்மாவின் உடலை இடுகாட்டில் புதைத்துவிட்டு வந்த அன்று, பின்னேரம் குளித்து முழுகிவிட்டு ஆறுதலாகச் சைக்கிள் எடுத்து மிதித்துக் கொண்டு, யாழ்ப்பாணம் புல்லுக்குளத்தடியில் உள்ள றீகல் தியேட்டருக்குச் சென்று எனது அபிமான ஹாலிவூட் நடிகர் கிரகரி பெக் நடித்த ஆங்கிலப் படமொன்றை வெகு ஆறுதலாகப் பார்த்துவிட்டு, வீடு திரும்பினேன். எந்தவிதமான உணர்வுமற்றுப் படுக்கையில் சாய்ந்தேன்.

உண்மை தெரிந்த பலர் என்னை வியப்புடன் பார்த்தனர். சிலர் விசாரிக்கவும் செய்தனர். அவர்களுக்கு நான் சொன்ன பதில் 'இதுதான் நான்' எத்தனை சோகமயமான முரண்பாடு. இந்த முரண்பாட்டுக்குள்ளேயே ஒரு பாரிய சோகமுண்டு.

அம்மா இரவிலே ரொம்பச் சோக்கான கதைகள் சொல்வார். சிலதை இட்டுக் கட்டியும் சொல்வார். கேட்கக் கேட்க அந்த வயசுக்கு பெரிய ரஸனையாயிருக்கும். அனேகமாக நீதி போதனைக் கதைகள் தான் அதிகம். நம்பும்படியாகவும் கதைகள் இருக்கும். அவர் அன்று விதைத்த விதைதான் பிற்காலத்தில் என்னை எழுத்தாளனாக்கியதோ என, யோசிக்கும் வேளைகளில், நான் நினைத்துப் பார்ப்பதுமுண்டு. என்னைக் கொஞ்சம் கொஞ்சமாகச் செதுக்கிச் செப்பனிட்டு வைத்தவர், அவர்.

அம்மாவுக்குப் பிறந்த ஊரான சரவணையில் நெல் வயல்கள் இருந்தன. பக்கத்தே சின்ன மடுமாதா கோயிலும் இருந்தது. சீதன வயல்கள். விதைப்பு, அறுவடைக் காலங்களில் அம்மா போய் வருவார். அவருடன் நானும் சென்றிருக்கின்றேன். அருவி வெட்டுப் பார்த்திருக்கிறேன். அம்மாவும் அருவி வெட்டுவார். நல்ல உழைப்பாளி. அருவி வெட்ட வயலுக்குள் இறங்கிவிட்டால், ஒரே குதூகலமாக இருக்கும். எனக்குப் பாட்டுக் கேட்பதில் ஆசை. வரம்பில் குந்தி இருந்துகொண்டு நடப்பவை அனைத்தையும் ரஸனையுடன் அவதானித்துக் கொண்டிருப்பேன். அனேகமாக அந்த ஊர்ப் பெண்கள்தான் வயலில் அறுவடை செய்வார்கள். ``தொடுத்த மாலையும் தோள்மேலே தொங்கலும், படுத்த பாயிலே பாலனும் நானுமாய்.....'' என அம்மா பாடிய அருவி வெட்டுப் பாடலில் இரண்டு அடிகள் இன்னமும் எனக்கு ஞாபகம். ஒரே கொண்டாட்டமாக இருக்கும். அந்த வயல்கள் இன்று எமக்குச் சொந்தமில்லை. அப்பாவின் வீண் ஆடம்பரச் செலவுகளாலும் 'எடுப்புச் சாய்ப்பு' களாலும் அந்தக் காலத்திலேயே விலை போய்விட்டன. அம்மாவின் நினைவுக்கென ஒரு காணி நிலம் கூட, அங்கு இல்லை. இது எனது மனசை இன்றுங்கூட வருத்துவதுண்டு. சரவணை என்ற பெயரை நான் மறந்துவிடும் சமயங்களில் சின்ன மடுமாதா கோயில் பெருநாள் என்ற தகவல், அந்த ஊர்ப் பெயரை என் மனசில் தங்க வைத்துவிடும். அல்லது தில்லைச்சிவனை வழித் தெருக்களில் பார்க்கும்போது சரவணைக் கிராமத்தின் பெயர் ஞாபகத்திற்கு வரும். குணரத்தினம் என்பவரைக் கண்டாலும் ஞாபகத்திற்கு வரும்.

இன்றும் கூட, நான் பட்டணத்தான் எனச் சொல்லிக் கொள்வதில்லை. 'தீவானும் நாட்டானும் சேர்ந்த கலவை ஊரான் நான்!' என்றே என்னை நான் கூறிக் கொள்வதுண்டு. இதில் விசித்திரம் என்னவென்றால் நானறிய யாழ்ப்பாணத்திற்கு வந்து குடியேறிய தீவுப் பகுதியைச் சேர்ந்தவர்கள் புதிதாக வந்து குடியேறிய தீவுப் பகுதி மக்களைப் பார்த்து 'அவன் தீவான்!'என நையாண்டி செய்யும்போது நான் எனக்குள் சிரித்துக் கொள்வதுண்டு. ஒரு பழமொழியும் உண்டு. 'முந்தி வந்த தீவான், பிந்தி

வந்த தீவானைத் தீவான் எண்டு சொல்லுகிறான்!' தீவகப் பகுதியைச் சேர்ந்த பல நண்பர்கள் தீவான் என்ற முறையில் என்னை அரவணைக்கும் போது, எனக்குப் பெருமிதம் ஏற்படுவதுண்டு. இன்னொரு பழமொழியும் உண்டு! 'நாட்டானை நம்பி நடுவீட்டுக்குள்ளை விட்டாலும், தீவானை நம்பித் திண்ணையிலும் விடக் கூடாது.'

கிடாய் விழுந்தான் ஒழுங்கை பிள்ளையார் கோவிலுக்குப் பக்கத்தே இருக்கும் ஒழுங்கை. அந்த ஒழுங்கையில் ஒரு வீட்டில் கிழவர் ஒருவர் குடியிருந்தார். வீடும் வளவும் பெரிசு. மாமரங்கள் அடர்த்தி. கொய்யாவும் உண்டு. 'சொத்திக் கைக் கந்தையர்' என்பது நாங்கள் வைத்த பட்டப் பெயர். வலு பொல்லாத கிழடன். என்னைவிடச் சற்று வயசான பொடியன்கள் ஒழுங்கை மூட்டில் நின்று, மாமரத்துக்குக் கல்லடித்து மாங்காய் பொறுக்குவார்கள். கிழவன் அசுமாத்தம் கேட்டு நீண்ட தடியுடன் கண்ட பாட்டுக்குப் பேசிக் கொண்டு அவர்களைத் துரத்தும். பொடியன்கள் பட்டத்தை உரக்கச் சொல்லிக் கொண்டே சட்டென்று மறைந்துவிடுவார்கள். ஒளிந்து கொள்வார்கள். பின்னர் கிழவனாரது தலை மறைந்ததும் கல்லெறிகள் தொடரும். இது தொடர் நடவடிக்கை

இப்படி நடந்த ஒரு சமயம். ஒருநாள் நான் கிட்டிப்புள் விளையாடிய பொடியன்களைப் பராக்குப் பார்த்துவிட்டு ஒழுங்கையால் வீட்டிற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தேன். இப்பொழுது நான் உரிஞ்சாங் குண்டியல்ல. கொஞ்சம் வளர்ந்தவன். மூக்கிலும் சளி ஒழுகுவதில்லை. காற்சட்டைக்குச் சணல் கயிறு போட்டு இடுப்பில் இறுகக் கட்டியிருப்பேன். தூஷண வார்த்தைகளைச் சொரிந்த வண்ணம் கைத்தடியுடன் ஓடிவந்த கிழடன் என்னைச் சிக்காராகப் பிடித்துக் கொண்டது. நான் மாட்டிக் கொண்டேன். திமிறினேன். விடுபட முடியவில்லை. 'கொற கொற' வென்று இழுத்துக் கொண்டு போய் வளவிலுள்ள மாமரமொன்றில் கட்டிவிட்டது. கட்டிப்போட்டு என்னைப் பார்த்து ஓங்காரமாகச் சிரித்துவைத்தது.

''மரத்துக்குக் கல்லெறிஞ்சது நானில்லை!'' என்று இரண்டு மூன்று தரம் உரக்கச் சொல்லிப் பார்த்தேன். கிழவன் நம்புகின்ற பாடாய்க் காணவில்லை. வருவது வரட்டும் என அந்தச் சின்ன மனசு தன்னைத் தயார்படுத்திக் கொண்டது. ஆனால், மனசுக்குள் என்னவோ பெரிய வெப்பிசாரம். அதே சமயம் அழ முடியாத மன வைராக்கியம். நான் தவறு செய்யவில்லை என்ற திட உணர்வு என்னை நிமிர்ந்து நிற்க வைத்தது. நேர்மை எனக்குக் கைகொடுத்து உதவியது.

நேரம் போய்க் கொண்டேயிருந்தது. பக்கத்தே ஒரு உரலில் கிழவன் காவலிருந்தது. நானும் வேர்த்தொழுக, உடல் மீது எறும்புகள் ஊர, நின்று கொண்டிருந்தேன். செய்தி கேள்விப்பட்டு வீட்டிலிருந்து யாராவது வருவார்கள் எனக் கிழவன் எதிர்பார்த்திருக்கக் கூடும். யாருமே வருவதாகத் தெரியவில்லை. எந்த அசுமாத்தமும் கிடையாது. பொறுமை இழந்த கிழவன்

என்னிடம் வந்து மிக மெதுவாகச் சொன்னது: ``மாமரத்துக்குக் கல்லெறிஞ்சது பிழை எண்டு இப்ப சொல்லு, அவிட்டு விட்டிடுறன்!''

நான் தலையாட்டி மிக வன்மையாக மறுத்தேன். `ஏன் செய்யாத குற்றத்திற்காக மன்னிப்புக் கேட்க வேண்டும்?' என்ற மன ஓர்மம் என்னை விம்ம வைத்தது. ``ஏலாது! நான் எறியேல்லை!'' எனத் திரும்பத் திரும்பச் சொன்னேன். சாடையாக விம்மல் அழுகையாக மாறத் தொடங்கியது. அழுதேன்.

``அப்ப இப்படியே கிட! உங்கட வீட்டார் வரட்டும்!'' எனச் சொல்லிக் கொண்டு தடியைத் தூக்கிய வண்ணம் வீட்டுக்குப் போவது போலப் பாவலாக் காட்டியது, கிழவன். எனக்கு இது விளங்கிவிட்டது.

நேரம் ஊர்ந்தது. போவது போலச் சற்றுத் தூரம் சென்ற கிழவன், திரும்பி வந்து ``சரி போனது போகட்டும், இனிமேலை மாமரத்துக்குக் கல்லெறியக் கூடாது! சரிதானே?'' என்று சொல்லியபடி கைக் கட்டை அவிழ்த்தது. கட்டிலிருந்து விடுபட்ட நான் அவசரப்படவில்லை. நின்று நிதானமாகச் சொன்னேன். `நான் கல்லெறியேல்லை! அப்படி எறிஞ்சிருந்தா பிடிபட்ட உடனேயே உண்மையைச் சொல்லியிருப்பன்.'' கிழவன் என்னை ஒரு கணம் ஊன்றிப் பார்த்தது. ஏதோ சொல்ல விரும்பியது போலும். சொல்லவில்லை. ஆனால் முகத்தில் முந்திய கடுமையில்லை. ஆக்ரோஷமுமில்லை. வெறுப்பில்லை

அந்தச் சின்ன வயசிலேயே திடமாக எனது மனதில் ஒரு சின்னப் பதிவு ஏற்பட்டது. `தார்மீக வலுவற்ற வல்லமைக்கு எக்காலத்திலுமே பணிந்து போகக் கூடாது! பணிந்து போகிறவன் மனுஷனாக வளரவே மாட்டான்'.

வீட்டிற்குத் திரும்பினேன். மனசில் ஒரே பயமாக இருந்தது. வெளியே சொல்ல முடியாத வெப்பியாரம், நெஞ்சை அழுத்தி வருத்தியது. ``எங்கை பொடியா போனனீ, இவ்வளவு நேரமாய்? சோறு தின்காமல் எங்கை ஊர் சுத்திப்போட்டு வாறாய்? - வா, வந்து சாப்பிடு'' என்றார் அம்மா.

`ஓம்!.' எனத் தலையை ஆட்டிவிட்டு கிணற்றடிக்குப் போனேன். மன அழுத்தம் தீரவில்லை. கிணற்றங் கட்டில் குந்தி இருந்த போதுதான் அழுகை வெடித்தது. விம்மி விம்மி அழுதேன். இனம் புரியாத ஆவேசம் என் மனசில் நிறைந்திருந்தது. அழுது ஓய்ந்தேன். எழும்பிக் குளித்து முடித்தேன்.

திரும்பி வரும்போது, அந்தத் துயர அநுபவத்திற்கு ஆட்பட்டவன் நானில்லை என்பது போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது.

அந்தச் சம்பவத்திற்குப் பின்னர் என்னைக் காணும் வேளைகளில் மாம்பழம், கொய்யாப்பழங்களைத் தந்து என் மீது ஒரு வகையான பாசம் காட்டினார், அந்தக் கிழவன். என்னைச் சினேகம் பிடித்துக் கொண்டார். சில காலத்துள் அவர் இறந்து விட்டார். அவரது மரணச் சடங்கிற்கும் நான் போய் நின்றேன்.

உடையார் விதானையார், முதலி பரம்பரையைச் சேர்ந்தவனல்ல, நான். உழைக்கும் குலத்தைச் சேர்ந்தவன். கைத்தொழில் பரம்பரையாளன். இதைத் தவிர, வேறு புகழேதும் இல்லை. இதைச் சுயசரிதையாக என வைத்துக் கொள்ளலாமா? வைத்துக் கொள்ளலாம். சமீபத்தில் நான் படித்த சுயசரிதை என்ற நூலில் சம்பந்தப்பட்டவரைத் தரிசிக்கவில்லை. யாழ்ப்பாணத்து ஜமீன் குடிப் பிறப்பாளர்களின் மிச்ச சொச்ச வாழ்வைத்தான் படித்தறிந்தேன். அத்தனையும் கற்பனைக் கலப்பு, புத்திசாலித்தனமான புழுகு! எனது எழுத்திலே சத்தியம் நிலவும். உலகை பளிச்சிடும். உலகை எவ்வளவு அழகானது. தூய்மையானது. அது தான் நிலைக்கும் 'மண்புழுவிலிருந்து மனிதனானவன் நான்!' என அடிக்கடி நான் சொல்வது வழக்கம். இது நிரூபிக்கப்பட்டாலே எனக்கு வெற்றி, 'சும்மா கதை விடுகிறான்' என யாராவது கருதினால், - எழுதினால் இது சத்திய எழுத்தல்ல. ஆத்மபூர்வமான வெளியீடுமல்ல.

'ஜப்பானைப் பார். அமெரிக்காவைப் பார். இங்கிலாந்தைப் பார்!' என சொல்லிச் சொல்லியே எமது தலைமுறையின் அறிவு மழுங்கடிக்கப்பட்டு விட்டது. 'இந்த மண்ணைப் பார். கொஞ்சம் தோண்டிப்பார்! எத்தகைய கனி வளங்கள் கிடைக்கும்!' என்பதை நிரூபிப்பதற்காகவே இதை எழுத்தில் வடிக்கின்றேன். மனக் காயங்கள், வேதனைகள், துயரங்கள், அவமானங்கள், அவதூறுகளைத் தாங்கி, இந்த ஆலம் விதை, இந்த மண்ணில் வேர் ஊன்றியது என்பதன் சுருக்கமே இந்த ஆவணப் பதிவாகும். எழுத்து வடிவமாகும். சுய வரலாறாகும்.



3

ஆறு வயசில் நான் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டேன். வீட்டிற்கு அண்மையில் உள்ள பள்ளி அது. அடைக்கலமாதா கோவில் பள்ளிக்கூடம் என அழைக்கப்பட்ட சென் மேரீஸ் கலவன் பாடசாலை. பள்ளிக்கூடத்தில் என்னைச் சேர்க்கப் போகிறார்கள் என்பதைக் கேட்ட நாட்களிலிருந்தே என்னுள்ளத்தில் கொள்ளை மகிழ்ச்சி. ஒரே கொண்டாட்டம், குதூகலம்! 'நான் படிக்கப் போகின்றேன்டா!' என நண்பர்களிடம் சொல்லிச் சொல்லிச் சந்தோஷப்பட்டேன்.

அம்மாதான் முதல் முதலில் பள்ளிக்கூடத்துக்கு என்னை அழைத்துச் சென்று டாப்பில் பேர் பதிய வைத்தவர். போகும்போது புதுச்சட்டை போட்டு, சும்மா மாப்பிள்ளை கணக்காகத்தான் போனேன். மூன்று கொத்துக் குத்தரிசி, தேங்காய், கதலி வாழைப்பழச் சீப்பு, வெற்றிலை பாக்கு அடங்கிய கைக்கடக்கமான சிறு சாக்கையும் சுமந்து கொண்டு சென்றேன். இவைகள் எனது குருதட்சணைப் பொருள்கள். பள்ளிகூடத்துக்குள் நுழைந்து, அரிவரி வகுப்புக்குள் போய்ச் சேர்ந்த சமயம், எங்களைச் சிரிப்புடன் வரவேற்றவர்தான் தங்கம் அக்கா. அவர் தான் எனக்கு முதன் முதலில் 'அ' னாச் சொல்லித் தந்தவர். அரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் ''ரீச்சர்'' என்ற சொல் வழக்கத்திலில்லை. எமக்குக் கல்வி கற்றுத் தருபவர் ஆணாக இருந்தால் 'மாஸ்டர்' என்போம். பெண்ணாக இருந்தால் 'அக்கா' என்போம். இதுதான் அன்றைய வழக்கம்.

தங்கம் அக்கா தக்காளிப் பழத்தைப் போன்ற சதைப்பிடிப்பான சிவப்பு. நல்ல வடிவு. தாய்மை மிளிரும் கண்கள். எந்த நேரமும் சிரித்துக் கொண்டிருக்கும் முகம். ஓரளவு குட்டை என்றாலும் எடுப்பான உருவம்.

முதல் பார்வையிலேயே என் மனசுக்குப் பிடித்துப் போய்விட்டது. அவரது சிரிப்பை இன்னம் நான் மறக்கவில்லை. அந்த உருவம் என் நெஞ்சில் பதிந்து போயுள்ளது. எனக்குச் சிறுவயசில் கிடைத்த கொடைகளில் ஒன்று தங்கம் அக்கா.

அக்காவுக்கு குழந்தைகள் இல்லை. தன்னிடம் ஒப்படைக்கப்படும் சின்னஞ் சிறு சிறார்களையெல்லாம் தான் பெற்ற மக்களைப்போலப் பாவித்து அன்பு செலுத்தும் தாய்மைக் குணம் அவரிடம் நிரம்பியிருந்தது. எனக்கு அந்த ஆதரவுக் குணம் பல நன்மைகளைத் தந்தது. பல தன்னம்பிக்கைகளை ஊட்டியது.

வகுப்பில் சேர்க்கப்பட்ட அன்று வாங்கில் குந்தியிருந்த வண்ணம் டெஸ்க்கில் தலை வைத்துத் தூங்கிப் போய்விட்டேன். போட்டிருந்த காற்கட்டை நனைந்து விட்ட போதுதான் விழிப்புத் தட்டியது. கண்ணைத் துடைத்துக் கொண்டு அங்கு மிங்கும் மிரள மிரளப் பார்த்தேன். சூழ்நிலை கொஞ்சம் கொஞ்சமாக நினைவுப் பொறியில் தட்டியது. நிலைமையை அவதானித்த தங்கமக்கா என்னைப் பதட்டமடைய விட்டுவிடாமல், அருகணைத்து, மெல்ல முதுகில் தட்டிக் கொடுத்து, ஆறுதல் கூறினார். இரண்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த அண்ணாவை அழைப்பித்து வீட்டுக்குப் பத்திரமாகக் கொண்டுபோய் விடும்படி கேட்டுக் கொண்டார். இந்தச் சம்பவம் சிறியதென்றாலும் என் மனசில் ஆழமாகப் பதிந்து போய்விட்டது. என்னே தாய்மைப் பரிவு.

1960-ஆம் ஆண்டுக்கான சாஹித்திய மண்டலப் பரிசைப் பெற்றுக் கொண்டு யாழ்ப்பாணம் திரும்பியிருந்த சமயம், அது. தங்கமக்கா பேப்பரில் இந்தச் செய்தியைப் படித்திருக்க வேண்டும். எனது தங்கைச்சி ஞாயிற்றுக்கிழமை மாதா கோயில் பூசைக்குப் போயிருந்த சமயம், ''இவன் பொடியனை - அதுதான் உன்ர கொண்ணனை - ஒருக்கா வந்து என்னைப் பார்க்கச் சொல்லு! ஊரெல்லாம் அவனைக் கொண்டாடுது, நானும் ஒருக்காப் பார்க்க ஆசை எண்டு சொல்லு!" எனத் தகவல் சொல்லி அனுப்பினா, ஒரு நாள். தங்கமக்கா.

உண்மையைச் சொல்லுகிறேன் எனக்கு மனசுக்குள் உள்ளூரப் பயம். என்னதான் வானத்தை வில்லாக வளைத்தாலும் எனக்கு முதன் முதலில் எண்ணும் எழுத்தும் கற்பித்துத் தந்த ஆசிரியையை நேரில் சென்று காணத் தயக்கம், கூச்சம். உண்மையாகவே அவவை நேரில் பார்க்கப் பயந்து செத்தேன்.

அடுத்த கிழமையும் சொல்லிவிட்டா, கட்டாயம் சந்திக்கட்டாம்!

அப்பொழுது அவ மடத்தடி வீதியில் ஒரு ஒழுங்கைக்குள் உள்ள வீட்டில் குடியிருந்தா. நான் போனபொழுது வீட்டு முன் விறாந்தையில் சாய்மனைக் கதிரையில் சாய்ந்து கிடந்தா. கிட்ட நெருங்கிச் சற்றுச் செருமிக்

காட்டினேன்.

என்னை அவவுக்கு அடையாளம் தெரியவில்லை. இருக்கையில் இருந்தபடி நிமிர்ந்தெழும்பி, ''ஆரது வந்திருக்கிறது?, சொல்லுங்கோ ஆரெண்டு?" எனச் சொல்லிக் கொண்டே மூக்குக் கண்ணாடியைப் போட்டுக் கொண்டே கூர்ந்து பார்த்தா. ''ஆரெண்டு தெரியவில்லையே?"

என்னை அடையாளம் தெரியவில்லை.

பழைய வடிவு மங்கிவிட்டது, வயோதிபப் பொலிவு களைகட்டி நின்றது. தலை நரைத்துக் கிடந்தது. குரலில் பழைய கம்பீரமே ஒலித்தது. ''ஆரது சொல்லுங்கோ?" எழுந்த படியே குரலை உயர்த்திக் கேட்டார்.

பெயரைச் சொன்னேன், நான்.

''எட பொடியா! வா வா, இரு. என்ன நல்லா வயக்கெட்டுப் போயிட்டாய்? ஊரிலை இப்ப உன்ர பேர்தானே அடிபடுகுது. எனக்குத் தலைபோகிற புளுகம் என்னட்டைப் படிச்ச பொடி, இப்பிடி வாறதெண்டால் சந்தோசமாகத்தானே இருக்கும்! இருடா பொடி" எனச் சொல்லிக் கொண்டே நடந்து வந்தா. பக்கத்தே கதிரையைக் காட்டி இருக்கச் சொன்னா. நான் நாற்காலியில் கூச்சத்தோடு குந்தி இருந்தேன். இன்னமும் பயமும் கூச்சமும் தெளியவில்லை.

கிட்டே நெருங்கி வந்த தங்கமக்கா என்னைக் குழந்தையைப் போலப் பாவித்துத் தலையைத் தடவி விட்டா. ''சொல்லு! முன்னமே உன்னைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தனான். இப்பத்தான் பேப்பரிலை பார்த்தன், படிச்சுப் பார்த்தன். எனக்கெண்டால் சரியான சந்தோஷம். பேந்து சொல்லு, உன்ர இப்போதய புது விளையாட்டுக்களையெல்லாம் ஒளிக்காமல் சொல்லு!" என்றா. எனது வலக்கையைப் பிடித்துத் தனது இரு கரங்களுக்கிடையே பொத்திக் கொண்டு கேட்டார்." ம்....ம்..... சொல்லடாப்பா, சொல்லுடா....."

முதன் முதலில் பள்ளியில் சேர்ந்த அன்று அறியாப் பிரகாரம் சலம் விட்டு உடையை நனைத்ததை நேரில் கண்டும், அசூசைப் படாமல் என்னை அரவணைத்து ஆறுதல் கூறி, மனப் பயத்தைப் போக்கி, வீட்டிற்கு அனுப்பிவைத்த அந்தக் கல்வித் தாயின் உணர்வு, இந்தச் சம்பவத்தினால் என் நெஞ்சில் மீண்டும் நிழலாடியது. கண்கள் பனித்தன. நெஞ்சு விம்மியது.

தங்கம் அக்கா என்னை விசாரிக்க விசாரிக்க கூச்சம் ஓரளவு தெளிந்தது. பள்ளிக்கூடம் விட்ட பின்னர், நான் எழுதத் தொடங்கின கதையை இங்கொன்றும் அங்கொன்றுமாகத் தொடர்பற்றுச் சொல்லி வைத்தேன். என்னத்தைப் பேசுவதென்றே தெரியவில்லை. வாய் குழறியது.

தேநீர் தந்தா, பருகினேன். தன் கதையையும் சொன்னா. பென்ஷன் எடுத்ததன் பின், இதே வீட்டில் இருப்பதாகவும், சகோதரனின் மகளின் வீடுதான் இதுவென்றும், ஐந்து வருஷங்களுக்கு முன்னர் அவர் தவறிப்போய்

விட்டதாகவும் எந்தவித உணர்ச்சியுமில்லாமல் சொல்லி முடித்தா.

விடை பெற்றுக் கொண்டு திரும்பும் நேரம், நான் சைக்கிள் கரியலில் கட்டி வந்திருந்த குட்டிச் சாக்கை அவிழ்த்து, முதன் முதலில் குருதட்சணையாக எந்தெந்தப் பொருட்களை அம்மா தரக் கொடுத்தேனோ அதே பொருட்களை - அவவுக்குக் கொடுத்தேன். நூறு ரூபாயையும் சேர்த்துத் தந்தேன்.

முதலில் அவ வாங்க மறுத்து விட்டா. ``குரு தட்சணை கொடுக்காது போனால், அந்தக் கற்ற வித்தை தற்செய்யாதாம்!'' என்றொரு திடீர்க் குண்டைப் போட்டு வைத்தேன். இதைக் கேட்டதும் வாய்விட்டுச் சிரித்தா.

கொடுத்ததைப் பெற்றக் கொண்டா.

எனக்கு ஆத்ம திருப்தி, இப்போது.

ஆரம்ப வகுப்புக்களில் எனது ஆசிரியைகளாக இருந்த பரிமளம் அக்கா, பேளி அக்கா ஆகியோரை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைத்துப் பார்க்கின்றேன் நெஞ்சுக்குள் வணங்குகின்றேன். என்னை எப்படியெல்லாம் செதுக்கினார்கள்.

எந்த வகுப்புக்களிலும் நானே முதல் மாணவன். ஒரு வகுப்பில் ரவி அன்ரன் போட்டியிட்டான். அவனை இரண்டாவது மாணவன் ஆக்கினேன். அடுத்து இம்மானுவேல் என்பவன்.. அதையடுத்து ரொலன்ரினோ நீக்கிலஸ், இதற்கு அடுத்ததாக நாகேஸ்வரி என்ற மாணவி. இவர்களை எல்லாம் முந்திக் கொண்டு நானே முதல் மாணவனாகத் திகழ்ந்தேன். குட்டிக் குட்டி நாடகங்கள் பழக்குவார்கள். எனக்குத்தான் 'கரெக்டர் ரோல்'. ஒரு நாளும் ஒழுங்காகப் புத்தகமெடுத்து வீட்டில் படிக்கமாட்டேன். ஆனால் பாடங்களை வகுப்பில் கருத்தூன்றிக் கற்பேன். முதல் மாணவனாகத் திகழ்ந்து விடுவேன். ஒரே குஷி தான்! ஒரே ஆட்ட பாட்டம்தான்.

இரண்டாவது மாணவன் என்ற சொல்லுக்கே இடமில்லாமல் உணர்வுடன் கற்பேன். அசாதாரணமான ஞாபக சக்தி எனக்குண்டு. எனவே மீள ஆதாரங்களைக் கிரகித்து விடுவேன். சனி, ஞாயிறு விடுமுறையை நான் ஆரம்பத்திலிருந்தே விரும்பியதில்லை. 'ஏன் ஒரு நாள் - ஞாயிற்றுக்கிழமை - லீவு விட்டால் போதாதா?,' என அந்தக் காலத்திலேயே விவாதித்ததுண்டு. வீட்டில் இருப்பது எனக்குச் சிரமம், பள்ளிக்கூடத்தை நான் விரும்பினேன். நேசித்தேன். பலரும் சூழ, மாணவர் மத்தியில் நான் நடுநாயகமாக விளங்கவே விரும்பி நின்றேன். முயன்றேன். அதற்காகவே உழைத்தேன். படித்தேன்.

மாணவப் பருவம் - கற்பனைகள் சிறகடித்துப் பறக்கும் பருவமாகும். மாணவ, மாணவிகள் தத்தமக்குள் பட்டப் பெயர் வைப்பதில் வெகு சமர்த்தர்கள். சகலருக்கும் ஒரு பட்டப் பெயரைச் சூட்டி விடுவார்கள். எனக்கும் ஒரு பட்டம். வழங்கினார்கள். 'பூச்சி' என்பதே எனது பட்டம். எந்த நேரமும் படிக்கிறேனாம். எனவே புத்தகப் பூச்சி மருவி பூச்சி நாமம்

நிலை பெற்றது. ஆனால் நான் எந்த மாணவ, மாணவியருக்கும் பட்டப் பெயர் வைத்ததாக ஞாபகம் இல்லை. காரணம் அம்மாவின் ஆளுமை என்னை வழி நடத்தி வந்ததுதான். 'சின்னச் சின்ன ஆசைகளில் மனம் இடறி விழக்கூடாது. நினைக்கிறதைப் பெரிசாக நினைக்கப் பழகிக் கொள்ள வேணும். சின்னத்தனமான யோசினைகளை விட்டுவிட வேணும். நீ பெரியவனாக வாறதெண்டா, மற்றவையளைப் போல நடக்கக் கூடாது. கொஞ்சம் தள்ளி நிண்டு பாக்க வேணும். கூட்டத்தோடை கூட்டமாகச் சேராதை. அப்பதான் மற்றவை உன்னைக் கவனிச்சுப் பாப்பினம். உன்னை ஆரெண்டாலும் கேவலமாகப் பேசினாக் கூட, அவையளை நீ பேசாதை. அவையளைப்போல நடந்தா, அவையளுக்கும் உனக்கும் என்ன வித்தியாசம் இருக்கும்?' இப்படியான உபதேசங்களை உபதேசம் என்ற போர்வை போர்க்காமல், அம்மா அடிக்கடி எனக்குச் சொல்லுவது வழக்கம். அம்மாவின் உபதேச வாசகங்கள் இதே வார்த்தைகளில் இல்லை என்பது உண்மைதான். ஆனால் இதே சாரப்பட இருந்தன என்பதுதான் முக்கியம். இதில் ஆச்சரியம் என்னவென்றால் அண்ணனுக்கோ தம்பிக்கோ அம்மா இப்படிச் சொல்லி நான் கேட்டதில்லை. என்னில் ஏதோ அருட்டுணர்வை அந்தக் காலத்திலேயே அம்மா கண்டு கொண்டாவோ என்னவோ! ஒரு வேளை அம்மாவைச் சும்மா இருக்கவிடாமல் கேள்வி மேல் கேள்வி கேட்டுத் துளைப்பதை உணர்ந்து, எனது அறிவுப் பசியைப் புரிந்து கொண்டதினால் என்னை எனது சிறு வயதிலேயே ஒழுங்கு படுத்திவிட்டாரோ என இன்று நினைத்துப் பார்க்கின்றேன்.

சின்னஞ் சிறு வயசில் அம்மாவின் போதனையை நான் விளையாட்டாகவே எடுத்துக் கொண்டு மறந்துவிடுவேன். ஆனால் அந்தத் தாயின் ஆழ்ந்த மன விருப்பங்கள் என் அடிமனசிலும் வேரோடி நின்றதைப் பின்னால் எனனால் அறியக்கூடியதாக இருந்தது. பல சம்பவங்கள் அதற்கு உதாரணம்.

யாருக்குமே நானாகப் பட்டப் பெயர் வைத்ததுமில்லை, பட்டப்பெயர் சொல்லி அழைத்ததுமில்லை. அன்றிலிருந்து இன்றுவரை மனசுக்குத் தெரியக்கூடியதாக மற்றவர்களை அவதூறு செய்வதோ தூற்றித் திரிவதோ இல்லை. ஒருவரை எனக்குப் பிடிக்காமல் போய்விட்டால் சிமிக்கிடாமல் அவரது உறவைக் கத்தரித்துக் கொண்டு விடுவேனே தவிர, அவரைப் பற்றிக் கோள் குண்டனி சொல்லித் திரியமாட்டேன். இது எனக்கு வழக்கமுமில்லை. கூடியவரை இன்றுவரை அதைக் காப்பாற்றி வருகிறேன். இது எனது பழக்கங்களில் ஒன்று.

அன்று எனது தாயார் கற்றுத் தந்த பாடம், இன்னமும் என்னை வழிநடத்திக் கொண்டிருக்கிறது. அதன் பலாபலன்களை இன்று நான் உணருகின்றேன்.

தங்களுக்குள் பட்டப் பெயர் வைத்து மகிழும் மாணவ மாணவிகள் ஆசிரிய, ஆசிரியைகளையும் விட்டுவிடுவதில்லை.

தங்கம் அக்காவுக்கு ஒரு பட்டம். பரிமளம் அக்காவுக்கு இன்னொரு பட்டம். பேளி அக்காவுக்கு வேறொரு பட்டம். மாணவர்கள் தமக்குப் பட்டப் பெயர் வைத்து இரகசியமாகப் பரிமாறிக் கொள்ளுகின்றனர் என்பது அந்தந்த ஆசிரியைகளுக்குத் தெரியும். தெரியாத மாதிரிப் பாவனை பண்ணிக் கொண்டு, சிலர் சொண்டுக்குள் சிரித்த வண்ணம் வகுப்பறையில் நடமாடுவர்.

இரண்டாம் வகுப்பு என நினைக்கின்றேன். ரவி அன்ரன் என்றொரு மாணவன், வெகு குறும்பன். ஆனால் நல்லவன். ஒரு கணமும் சும்மா இருக்கமாட்டான். ஏதாவது வம்புத்தனம் செய்து கொண்டே இருப்பான். அவனொரு முஸ்பாத்திக்காரன். தமாஷ் பேர்வழி.

ஒரு நாள், இடைநேர லீவில் வகுப்பு மாணவர்கள் கலைந்து போனதன் பின்னர் கரும்பலகையில் ஒரு கோணங்கிப் படம் வரைந்து விட்டான். படம் எப்படி இருக்கும் என விளங்கும் தானே? அதில் எலிவால் பின்னல் துருத்திக் கொண்டிருந்தது. கீழே ஆசிரியை பட்டப் பெயரையும் பெரிதாக எழுதி, கோணல் மாணலாக ஏதோ கீறி வைத்தான். கேலிச் சித்திரமாம்!

வெளியில் விளையாடிக் கொண்டிருந்த நான், திடுகூறாக வகுப்பறைக்கு வந்த சமயம், கீறியது முடியும் தறுவாயில் இருந்தது. என்னைக் கண்டதும் ஒரு கணம் திகைத்துப் போய்விட்ட அவன், அவசர அவசரமாக அறையை விட்டு வெளியே போய்விட்டான். நான் ஒன்றுமே பேசவில்லை.

இடைநேரம் முடிந்தது. மாணவர்கள் வந்து குவிந்த போது, எல்லாரது கண்களும் கரும்பலகையிலையே இரகசியமாக நோட்டமிட்டுக் கொண்டிருந்தன. நான் அன்ரனைப் பார்த்தேன். அப்பொழுது தான் வகுப்புக்கு வந்த மாதிரி பாவலாப் பண்ணிக் கொண்டு, எல்லாரிடமும் சிரித்துப் பேசிச் சமாளித்தான். என் கண்களைக் கண்கள் சந்திப்பதைக் கூடியளவு தவிர்த்துக் கொண்டான். எனக்கோ தர்ம சங்கடம். இயல்பாக இருக்க என்னால் இயலவில்லை, முடியவில்லை.

ஆசிரியை வகுப்புக்குள் நுழைந்ததும், கரும்பலகை ஓவியம் தான் அவரது கண்களில் சட்டென்று பட்டது. நான் ஆசிரியையையே பார்த்துக் கொண்டிருந்தேன். அமைதியாக ஆசனத்தில் அமர்ந்து கொண்ட அவர், தன்னைச் சற்றுச் சுதாகரித்துக் கொண்டு எழுந்து கரும்பலகையை அண்மித்து ஆற அமர நின்று அந்தச் சித்திரத்தைப் பார்த்தார். ஒரு கணம் தலை ஆடியது. திரும்பிய வேகத்திலேயே மாணவ மாணவிகளை ஒவ்வொருவராக உற்றுப் பார்த்தார். ``உண்மையைச் சொல்லுங்கோ! ஆர் இப்படிச் செய்தது.? சொல்லுங்கோ?'' ஒவ்வொருவராகக் கேட்டுக் கொண்டே வந்தார். ஒருவரும் பதில் சொல்லவில்லை. தமக்குத் தெரியாது என்பதாகத் தலையை ஆட்டி மறுத்தனர். நான் நெஞ்சு படபடக்க அவதானித்துக் கொண்டிருந்தேன். அன்ரனும் தலையாட்டி மறுத்து விட்டான். தொடர்ந்து மறுப்புகளுக்குப் பின்னர், என்னிடம் கேள்வி வந்து நின்றது. நான் பார்வையைச் சுழல விட்டேன். அன்ரன் என்னைக் கெஞ்சுவது போலப் பார்வையால் இரக்கம்

கேட்டான். ''சொல்லு பிள்ளை, ஆர் இதைச் செய்ததெண்டு சொல்லு?'' எனக்குக் கிட்டே நெருங்கி, ஆசிரியை குரலை மெதுவாக்கி நட்புணர்வுடன் கேட்டார்.

''எனக்குத் தெரியும்!'' - இது நான்.

''சொல்லு, சொல்லு! ஆரது?'' உண்மைக் குற்றவாளியைக் கையும் களவுமாகப் பிடித்துவிட்ட உற்சாகத்தில் ஆசிரியை கேட்டார். உண்மையைக் கண்டு பிடித்துவிட்ட ஆர்வம், அவர் குரலில், முகத்தில்.

நான் திடமாக முடிவெடுத்துவிட்டேன். ''ஆரெண்டு எனக்கு நல்லா.....த் தெரியும்! ஆனா..... ஆரெண்டு சொல்லமாட்டன்.!'' நெஞ்சில் சற்று அச்சம்தான். ஆனால், துணிந்துதான் இதைச் சொன்னேன். அதன் பெறுபேறுகளையும் ஏற்றுக் கொள்ளச் சித்தமானேன். 'என்ன வந்தாலும் 'சரி.'

ஆசிரியை ஒரு கணம் அப்படியே அதிர்ந்து போய்விட்டார். என்னையே ஒரு கணம் வெறிக்கப் பார்த்துக் கொண்டேயிருந்தார், அவர். ஒங்கிய குரலில் கேட்டார்: ''சொல்லு, சொல்லு..... ஆரெண்டு இப்ப சொல்லு! சொல்லப் போறியா, இல்லையா?'' என என்னை மிரட்டிய வண்ணம் விழித்துப் பார்த்தார். திரும்பி மேசைமீது கிடந்த பிரம்பை எடுத்துக் கொண்டு கிட்டே நெருங்கி ''ம்...இப்ப சொல்லு, ஆர் இதைக் கீறியது? சொல்லு.....!'' என்றார் கோபத்துடன்.

நான் மௌனத்தையே மறுமொழியாக்கி நின்றேன். காற்றில் பிரம்பு வீச்சின் ஒலி கேட்டது. மறுகணம் என் தோளில் வலிப்பதை உணர்ந்தேன். இப்படியே கைகால்கள், தோள் மூட்டு எங்கும் ஓங்கி ஓங்கிப் பிரம்பு விளையாடியது. நான் மன ஓர்மத்துடனும், ஒருவித பிடிவாதத்துடனும் அத்தனை அடிகளையும் தாங்கிக் கொண்டு சாய்ந்து சாய்ந்து நின்று கொண்டிருந்தேன். அடித்து ஓய்ந்த ஆசிரியை கடைசியாகக் குரலைத் தாழ்த்தி, அதில் ஒருவித கெஞ்சலை ஏற்படுத்திக் கொண்டு ''சொல்லு பிள்ளை, ஆரிதைக் கீறினது?'' என்றார். என் தோளைத் தொட்டுக் கேட்டார்.

நான் மீண்டும் மீண்டும் மௌனம் சாதித்தேன்.

தனது ஆளுமைக்கே சவால் விடும் இந்தக் குட்டிப் பொடியனின் மௌனத்திற்கு முன்னால், அவரது தண்டனைப் பயமுறுத்தல் வலுவிழந்து போய்விட்டதை அவர் நன்றாகவே உணர்ந்து விட்டார். பிரம்பு தாறுமாறாகக் கிழிந்து போய்க் காட்சி தந்தது. அதை ஒரு பக்கம் வீசி எறிந்துவிட்டு, என்னை ஒருபக்கம் இறுகத் தள்ளி விட்டு இருக்கையில் போய் அமர்ந்தார். தலையை மேசைமீது சாய்த்துக் கவிழ்த்துக் கொண்டார். அவரது முதுகு அடிக்கடி குலுங்குவதை நான் பார்த்தேன். எனக்குப் பாவமாக இருந்தது. 'சொல்லி விடுவோமோ?' என ஒரு கணம் யோசித்தேன். மனசு இடம் தரவில்லை. 'காட்டிக் கொடுப்பது கேவலம்' என எனது சின்ன நெஞ்சு

சொல்லியது. எனவே பல்லை இறுகக் கடித்துக் கொண்டு, பேசாமல் இருந்தேன். தேகம் வலித்தது.

வகுப்பில் பேரமைதி நிலவியது. பக்கத்து வகுப்புக்களிலிருந்து சில ஆசிரியைகள் எட்டி எட்டிப் பார்த்துவிட்டு அகன்றனர்.

சற்று நேரத்திற்குப் பின்னர், முகத்தை இறுகக் கைலேஞ்சியால் துடைத்தவண்ணம் நிமிர்ந்த ஆசிரியை, லாச்சிக்குள் இருந்த டஸ்ரரை எடுத்து என் முன்னால் வீசி எறிந்து, கரும்பலகையில் கீறியிருந்த சித்திரத்தை அழித்து விடும்படி சைகையால் கட்டளையிட்டார். நான் வாய் பேசாமல் குனிந்தெடுத்துப் போய் அதை அழித்துவிட்டு வந்து வாங்கில் அமர்ந்து கொண்டேன். தேகமெல்லாம் விண் விண்ணென்று ஒரே வலி. எரிந்தது. கடைசி வரிசையில் இருந்த ஒரு மாணவனின் கண்கள் பரிதாபமாக என்னை அவதானித்துக் கொண்டிருந்ததையும் கலங்கியதையும் நான் காணத் தவறவில்லை. என் மன ஓர்மம் எனக்கே ஆச்சரியமாக இருந்தது. வியப்பாகவும் தெரிந்தது.

இரவில் படுக்கப் போகும் போது பாய் விரித்தேன். தேக நோவினால் 'அம்மா' என்று குரல் கொடுத்தேன். இதைக் கேட்டு விட்ட அம்மா கிட்ட வந்து என்னைத் தடவிப் பார்த்தார். முதுகில், கைகளில், துடையில் அடித் தழும்பு கன்றிப் போய் தெரிந்தது. ``என்ன நடந்தது?`` எனக் கேட்டார். நான் பள்ளிக்கூடத்தில் ``அக்கா அடிச்சவ`` என்று மாத்திரம் சொன்னேன்.

``அடி பாதகத்தி பச்சை மண்ணை இப்படிப் போட்டு வதைச்சிருக்கிறாளே! அடிக்கிறதுதான் - இப்பிடியா மாட்டுக்கு அடிப்பதுபோல பிஞ்சுக் குழந்தையைப் போட்டு அடிப்பது? நான் நாளைக்கு வாறன். ரெண்டிலொண்டு பாத்திடுவம். இப்ப படு`` எனச் சொல்லிவிட்டு சூடு பண்ணிய நல்லெண்ணெய் மஞ்சள் மாவை உடம்பு பூராகத் தேய்த்து விட்டார். ஒத்தடம் கொடுத்தார்.

அம்மா பள்ளிக்கூடத்துக்கு வருவதையோ, வந்து அக்காவுடன் வாய்த் தர்க்கம் செய்வதையோ நான் மனசார விரும்பவில்லை. அக்கா எனக்கு இப்படியாக நீதி கேடாக அடித்ததையும் அவரது மன ஆதங்கத்தையும் என்னால் விளங்கிக் கொள்ள முடிந்தது. ``நீங்க நாளைக்கு பள்ளிக்கூடத்துக்கு வாறதெண்டால், நாளைக்கு பள்ளிக்குப் போகமாட்டன்.`` என மறுதலித்தேன். உறுதியாகச் சொன்னேன். எனது மன ஓர்மம் அம்மாவுக்குப் புரியும்.

என்னைப் புரிந்து கொள்ள முடியாமல் ஒருகணம் திகைத்துவிட்ட அம்மா, சுதாகரித்துக் கொண்டு ``சரி..... சரி... படு படு`` எனச் சொல்லிய வண்ணம் போர்வையை எடுத்துப் போர்த்திவிட்டு, அகன்றார். எனக்கு இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை. உடம்பு முழுவதுமே வலித்தது.

அடுத்த நாள் பள்ளிக்கூடம் சென்ற என்னை வரவேற்றவன், அதே மாணவன் அன்ரன் தான். முதல் நாள் முகத்தைக் காட்டாமலே ஓடி

மறைந்த அவன், காலையில் என் வரவுக்காகக் காத்திருந்து, என்னைச் சந்தித்தான். சொக்கலேட் பெட்டி நிறைய விலிம்பிலக்காய் கொண்டு வந்திருந்தான். எனக்கும் தந்தான். பகிர்ந்துண்டு களித்தோம். என் மனசில் குரோதமில்லை. வெறுப்பில்லை.

பல நீண்ட வருடங்களுக்குப் பின்னர் நீர்கொழும்பில் இவனைச் சந்தித்தேன். முருகபூபதியைப் பார்க்க அங்கு போயிருந்த சமயம், பஸ் நிலையத்தில் அவன் என்னை அடையாளம் கண்டு மகிழ்ந்தான். கட்டுநாயக்க விமான நிலையத்தில் வேலை பார்த்ததாகச் சொன்னான். பழைய இந்தச் சம்பவத்தை அவன் இன்னமும் மறக்கவில்லை. அவன் பேச்சில் அந்த நேசம் தொனித்தது. அன்பு தலை காட்டியது.

விஜய பாஸ்கரன் நடத்திய 'சரஸ்வதி' சஞ்சிகையில் 'கரும்பலகை' என்றொரு சிறுகதை எழுதியிருந்தேன். இதே கருவை வைத்துத்தான் கையாண்டிருந்தேன். இக்கதையை நண்பர் ஏ. ஜே. கனகரட்னா ஆங்கிலத்தில் 'பிளாக் போர்ட்' என்ற தலைப்பில் மொழிபெயர்த்து 'சண்டே ஒப்சேவர்' இல் வெளியிட்டிருந்தார். தொகுதியிலும் இது இடம் பெற்றுள்ளது. நான் நினைக்கின்றேன், நல்ல கதைகளில் இதுவும் ஒன்று.

கிட்டத் தட்ட இந்தக் காலத்தில்தான் இதுவும் நடந்தது. எனக்குப் பொல்லாத நோயொன்று வந்தது. டாக்டர் ஏதோ லத்தீன் பெயரைச் சொல்லி அதிர வைத்தார். உடலை மடக்கேலாது. நிமிர்த்தேலாது, ஒரே படுக்கை. ஒரு நாள் பிற்பகல் என்னருகே இருந்த அப்பாச்சியும், பக்கத்து வீட்டுச் சின்னாச்சிக் கிழவியும் என்னருகே இருந்து கதைத்ததை கூர்மையாக என்செவிகள் மூலம் வாங்கிக் கொண்டேன். உடல் தான் சோர்ந்திருந்ததே தவிர, மூளை வெகு தெளிவாக இருந்தது. சுறுசுறுப்பாகச் செயற்பட்டது. ''டாக்குத்தர் சொல்லிக் கைவிட்டுட்டார். ராத் தங்குவது கூடக் கஷ்டமாம் இப்பவே பாரன் சேடமிழுக்குது. பாவம். ஆமான பொடி!'' என என்னைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தனர், இருவரும். தொடர்ந்து கதைத்தனர். இதே கதைதான். 'இரவு கூட இந்தச் சீவன், ராத் தங்காதாம்!'

'நான் சாகப் போகிறேன்.' என்ற உணர்வு அப்பொழுதுதான் என் மண்டையில் உறைத்தது. ஜன்னலால் வெளியே பார்த்தேன். மழை சாடையாக தூறிக் கொண்டிருந்தது. மனசை ஒருமுகப்படுத்தி 'நான் இப்போதைக்குச் சாகவே மாட்டேன்.!' எனத் திடமாக நெஞ்சுக்குள் சொல்லிக் கொண்டேன். 'நான் சாகவே மாட்டேன்!'

இரவு முழுவதும் தூங்கவில்லை. மனசுக்குள் ஒரே மனனம்தான்!

விடிந்தது. நான் இன்னமும் உயிரோடிருக்கின்றேன் என்ற உணர்வே எனக்குப் புதுப் பலத்தைத் தந்தது. உயிர்த்து விட்டேன் என்ற நினைப்பு உற்சாகமாகவே இருந்தது. 'எதையாவது சாதிக்க வேண்டும் நான்!' என்ற உள்ளுணர்வு என்னை ஆட்கொண்டது. அன்று நான் மரணத்தையே

வென்றுவிட்டேன்! 'சாவைக் கடந்து வந்தவன், நான்!'

நான் அன்று மரணத்தை வென்றதற்கு எனது மன ஓர்மம் தான் காரணம் என இப்போதும் நினைத்துப் பார்ப்பதுண்டு. மனசுக்கு அத்தனை வலிமை உண்டு. மனத்தத்துவம் இன்று ஒத்துக் கொண்ட உண்மை இது.

அந்த மன ஓர்மமும், அசாதாரண தன்னம்பிக்கையும் தான் இதுவரை என்னை வழிநடத்தி வந்துள்ளது என்பதை இப்பொழுது பூரணமாக நம்புகிறேன்.



4

எனது குழந்தைப் பருவத்து நிகழ்ச்சிகள் ஒரு நீண்ட முடிவற்ற, பெரு நாவலைப் போல நீண்டிருந்தன. அன்றைய இளவயசு வாழ்க்கை என்னிடம் எந்த விதமான அனுசரணையையும் எந்த விதமான அன்பையும் காட்டவில்லை. அன்றைக்கு என்னைச் சுற்றியுள்ள பலரும் என்மீது எந்தவிதமான கருசனையும் காட்டி ஆதரிக்கவில்லை. ஒதுக்கியே நடத்தினர். ஒதுக்கப்பட்டிருந்தேன்.

எங்களது அயலின் சூழலே மங்கிப் போன, மிகமிகக் கடினமான ஒன்றாகவே விளங்கியது. படிப்பை அப்படியொன்றும் வாழ்க்கைக்கு அத்தியாவசியத் தேவை என உண்மையாகவே நம்பாத ஒரு சமூகம். ''படிச்சு என்னத்தைக் கிழிச்சிடப் போறான்? போய் இந்த வயசிலை நம்ம தொழிலைப் பழகினாலாவது, நாளைக்கு நாலு காசு சம்பாரிச்சுப் போடுவான்!'' எனப் படிப்பைப் பற்றி வெகு அலட்சியமாகக் கதைக்கும் கைத்தொழிலை நம்பி வாழும் ஒரு தொழில்சார் பரம்பரைச் சமூகத்தில், நான் முழுமூச்சுடன் போராட வேண்டியிருந்தது. 'பரம்பரைத் தொழிலே போதும்.' எனக் கைத்தொழிலை மூலதனமாக நம்பிய அமைப்பில்தான், எனது இளமைப் பருவத்துச் சூழ்நிலை, மெல்ல மெல்லக் கழிந்தது. பொதுவாகக் கைத்தொழிலைக் குலத்தொழிலாகக் கொண்ட சிறு சமூகக் குழுக்களுக்குள் உள்ள பெரிய சாபத்தீடு இது. இதிலிருந்து விடுபடவே இளந் தலைமுறையினர் போராட வேண்டி ஏற்பட்டது. அந்தப் போராட்டத்தையும் நான் நடத்தினேன். விடாப் பிடியாகத் தொடர்ந்து நடத்தி வந்தேன்.

இந்தப் போராட்டத்தில் நான் தோற்றுப் போய்விட்டேன். நான் தோல்வி அடைந்தேன் என்பதைவிட, சமூகத்தின் சாதிக் கொழுப்பு என்னைத் தோல்வி காணச் செய்துவிட்டது, என்பதே பொருந்தும். படித்து உயர்ந்து, நிமிருவதைவிட, பரம்பரைத் தொழிலைச் சிறு வயசிலேயே பழக வைப்பதுதான் எதிர்காலத்தில் பாதுகாப்பானது என்ற மனப்பான்மை

ஊறிப்போய்விட்ட ஒரு சமூகத்தில், எனது உணர்வுகளை, அபிலாஷைகளைப் புரிந்து கொண்டவர்கள் அனேகமாக இல்லை என்றே சொல்லி விடலாம். இது எத்தனை பெரிய துரதிர்ஷ்டம்!

இத்தனை ஆர்வமுள்ள என் மனசைச் சிதைத்து என் இதயத்தில் தனது நாக்குச் சவுக்கு மூலமாக வடுவை ஏற்படுத்திய அந்த ஆசிரியரின் நஞ்சு கலந்த வார்த்தையைக் கூட, நான் என் தாயாருக்குச் சொல்லவில்லை. இதில் சொல்ல என்ன இருக்கிறது? சொன்னால் தான் என்ன நடந்து விடும்?

எனது தாயார் பெயர் மரியம்மா. தகப்பனார் பெயர் யோசப். யேசு நாதருடைய தாய் தந்தையரின் பெயர்தான் எனது பெற்றோருக்கும். சிறுவயசிலேயே இந்தப் பெயர்ப் பொருத்தம் என் நெஞ்சில் பதிந்துவிட்ட ஒன்று. 'யேசு குடும்பம்!'

இந்தப் பூமிப்பந்தில் - பூ மண்டலத்தில் - அந்தச் சின்ன வயசில் என்னை உண்மையாகவே புரிந்து கொண்டு வழி நடத்தியவர் என் அம்மாதான். விளங்கிக் கொண்டவரும் அவர்தான். அதிகம் படித்திராத அவர், கதை சொல்வது போல, பல இரவுகளில் எனக்குப் பல புத்திமதிகளைச் சொல்லி வந்தது ஏதோ ஓர் உள் நோக்கத்துடன் தான் என்பது எனக்கு இப்போது புரிகின்றது. அவர் கேள்வி ஞானத்தில், மனப்பதிவுகளில் இருந்து சொன்ன பல தொன்மக் கதைகள், வளர வளர எனக்குப் புது வெளிச்சத்தைத் தந்துதவின என்றே கூற வேண்டும். இன்று நினைத்தாலும் மெய் சிலிர்க்கிறது. 'எப்பேர்ப்பட்ட கற்பனைக் கதைகள் அவை!'

எங்கள் சுற்றாடலில் பல்வேறு குடும்பங்கள் வசித்து வந்தன. தாம் எல்லாத்திலும் உயர்ந்தவர்கள் என மற்றவர்களை நம்பப் பண்ணிய, அதே சமயம் எந்தவிதமான நற்பண்புகளுமற்ற சில குடும்பங்கள் வசித்து வந்தன. உயர்ந்த பழக்க வழக்கங்களை விட, வறட்டுச் சம்பிரதாயங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் தமது மேட்டுக்குடி அந்தஸ்தை நிலைநாட்டி விடலாம் என நம்பிய திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் இவர்கள். இவர்களின் குழந்தைகள் கூட, எம்மவர்களின் மூத்த பரம்பரையினரை ஏக வசனத்தில் பேர் சொல்லி அழைப்பதை நான் பார்த்திருக்கிறேன். அந்த வயசில் கூட, எனக்கு இதைக் கேட்கும்போது, மன எரிச்சல் ஏற்படுவதுண்டு. வயசில் மூத்தவர்களைப் பேர் சொல்லிக் கூப்பிடுவது மாத்திரமில்ல, அவர்களது முழுப் பெயரையும் சொல்லி அழைத்துவிட்டால் தமது தகுதிக்கே அது பெரிய இழுக்கு என நினைத்து, பெயர்களைத் தமது விருப்பத்துக்கமையக் குறுக்கியே கூப்பிடுவார்கள். எம்மைப் போன்ற சிறுவர்களிடம் கூட அவர்கள் பரிவு காட்டி நடப்பதில்லை. அப்படியொரு மிதப்பு. அப்படியொரு திமிர். அப்படியொரு கொழுப்பு. சாதி அகம்பாவம்.

வீட்டுக்குப் பக்கத்திலேயே பிள்ளையார் கோவில். பின்னேரங்களில்

அங்கு விளையாடப் போவோம். சேர்ந்து கலந்து விளையாடுவோம். திடீரெனப் பெரிய வீட்டுக்கார அம்மா அங்கு வருவா. ''என்னடா கண்ட நிண்டவங்களோடையெல்லாம் விளையாட்டு? போதும் வாங்கடா!'' எனச் சொல்லித் தமது மக்களை எம்முடன் விளையாட விடாமல் தடுத்து, இழுத்துக் கொண்டு போவதை நான் பலமுறை கண்டிருக்கிறேன். நெஞ்சில் பொருமியிருக்கிறேன். எனக்கொன்றும் விளங்கவில்லை. 'இதெல்லாம் என்ன?' என யோசித்துமிருக்கிறேன்.

ஒரு தடவை அந்த அம்மா என் காதுபட இப்படிச் சொன்னா: ''இப்படிச் சேர்ந்து விளையாடி, எழிய பழக்கங்களைப் பழகிப் போடப் போறியளோ?'' இன்றும் எனது காதுகளில் வசனம் ரீங்காரித்துக் கொண்டிருக்கின்றது. எங்களுடைய இன சனத்தவர்களை விட, அப்படியொன்றும் வசதியானவர்களல்ல, இவர்கள். இன்னும் சொல்லப் போனால் நல்ல நாள் - பெருநாள், திருமணம் போன்றவற்றுக்குச் செல்ல, எமது சொந்தக்காரர்களிடம் வந்து சங்கிலி, அட்டியல், காப்பு என இரவல் வாங்கிப் போகின்றவர்களில் இவர்களின் பெண்கள் அடங்குவர். ஆண்கள் சிலர், அவசியம் தேவையெனக் கைமாற்றாகக் கூடக் கடன் வாங்கித் திருப்பிக் கொடுப்பவர்கள். இருந்தாலும் உயர் குலத்தவர்கள் என்ற 'திமிர்' இவர்களது செயல்களில் அடிக்கடி பளிச்சிட்டது. அது ஒன்று தான் கடைசியில் அவர்களிடம் மிஞ்சி இருந்தது. அதைக்காட்டி ஏதோ ஒரு வகையில் நம்மவர்களை 'வெருட்ட' முனைந்து காரியமாற்றி வந்தனர். நம்மில் சிலர் அதற்கு எடுபட்டு விடுவதில்லை. அதில் ஒருவன் தான், நான். நான் தனித்து நின்றேன். நிமிர்ந்து நின்றேன்.

சின்ன வயசிலேயே இந்தப் புறத்திக்கிடமான அலட்சியச் செயல்பாடுகளைக் கண்டு கண்டு இயல்பாகவே ஆத்திரமுற்றிருந்தேன். இந்த வெப்பியாரத்தை நேரங்கிடைக்கும் நேரங்களில் அம்மாவிடம் முறைப்படுவதுண்டு. ''ஏனம்மா இப்படியெல்லாம் இவையள் செய்யினம்? விறாந்தைக்குளை கூட, எங்களை ஏற விடுகினமில்லை. தங்களுடைய பிள்ளைகளை எங்களோடை சேர்ந்து விளையாட விடாமல் மறிக்கினம். அப்படி விளையாட வந்தா, வந்து புறுபுறுத்துப் போட்டுக் கூட்டிக் கொண்டு போயிடுகினம். நாங்க என்ன அப்பிடிக் கூடாத ஆக்களா?'' தார்மீக ஆவேசம் நெஞ்சைத் தகிக்க நான், இப்படிக் கேட்பதுண்டு.

இந்த உஷ்ணமூட்டும் கேள்விகளுக்கு உடன் பதில் சொல்லமாட்டார், அம்மா. எங்கேயோ பார்த்தபடி இருப்பார். யோசிக்கிறார் என அப்போது நினைப்பதுண்டு. ''அதில்லையடா தம்பி, அவங்க வேறை ஆக்கள். நாங்க வேறை ஆக்கள். எங்களோடை சேருறத்துக்கு அவங்களைப் போல ஆக்களெல்லாம் பஞ்சிப்படுவினம். அவையள் எல்லாம் தாங்க பெரிய சாதிமான்கள் எண்ட நினைப்பு, வேறையெந்தக் கச்சவடமும் அவையிட்டை இல்லை. இதொண்டுதான் இப்ப இருக்கு. அதாலைதான் இப்படியெல்லாம் விட்டெறிஞ்சாப்போலை நடக்கினம்.'' என்பார் அம்மா. தொடர்ந்து ''இப்ப

நீ குழந்தைப் பொடியன். போகப் போக எல்லாம் விளங்கும்.'' என்பார்.

இத்தனைக்கும் எங்களது அயலுக்கு, எங்களது பரம்பரையை போலவே அவர்களும் வந்தேறு குடிகள் தான். அப்படியொன்றும் நிரந்தரமானவர்களல்ல. அப்படியிருக்க இப்படியொரு நடிப்புப் பந்தா! - பெரிய மனுஷித்தனம்! சாதி அகம்பாவத் தடித்தனம்!

நான் விடுவதாயில்லை. எனது நெஞ்சுக் கொதிப்பு இந்தப் பதிலைக் கேட்டு திருப்திப்படவில்லை. ''பெரிய சாதிமான்கள் எண்டால் என்னம்மா?'' என்பேன். தொடர்ந்து நச்சரிப்பேன். ''பெரிய சாதிக்காரர் எண்டால் என்ன?''

இதை இந்தச் சின்னப் பயலுக்கு எப்படி விளங்கப் படுத்தப் போகிறேன்' எனத் தவிப்பார் அம்மா. அவர் அநுபவம் செறிந்தவரே தவிர, அதிகம் படிக்காதவர். வார்த்தை வளம் இல்லாதவர். புரிய வைக்கும் நிராணி அற்றவர். எனது கேள்விக்குச் சரியான விடை சொல்லத் திணறிப் போய் விடுவார். இதைக் குழந்தை மொழியில் எப்படிச் சொல்லி விளங்க வைப்பது?' எனத் தெரியாமல் திக்குமுக்காடிப்போய் விடுவார். சொல்லி விளங்க வைக்க முடியாமல் திகைப்பார். நான் தொடர்ந்து கேள்வி கேட்பேன். '' சாதிமான்கள் எண்டால், என்னம்மா?''

''இப்ப இதொண்டும் உனக்குச் சொன்னாலும் விளங்கிற வயசில்லை. விளங்கப்படுத்தினாலும் விளங்காது. கெதியா வளரு. நல்லாப்படி. அப்ப நான் சொல்றது நல்லாத் தெரியும்'' என்பார். பின்னர் என் கண்களை இமை கொட்டாமல் பார்த்தபடி ''ஒண்டை மனசிலை சிக்காரா வைச்சுக் கொள்ளு! எங்களை மதிக்காத எவன்ரை வீட்டுக்கும் எந்தக் காரணத்தோடையும் போய் அவங்கடை திண்ணையோரத்திலே விடுப்புப் பார்த்தபடி நிக்கக் கூடாது! என்ன இப்ப நான் சொல்லுகிறதெல்லாம் நல்லா விளங்குதா?'' என்பார். நானும் சரி என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டி வைப்பேன். இருந்தாலும் மனசுக்குத் திருப்தியில்லை. 'அம்மா ஏன் விளங்கப்படுத்த மறுக்கின்றா?'

அம்மா சொல்லித் தந்த போதனையை நான் இயன்றவரை கெட்டியாகப் பின்பற்றி வருகிறேன். நான் வளர வளர, முதிர முதிர, அம்மாவின் அந்தப் போதனையில் எந்தளவு ஆழ்ந்த அநுபவ முத்திரை இருந்தது என்பதைப் புரிந்து கொண்டேன். வாழ்க்கை அம்மாவின் வார்த்தைகளுக்குப் புதுப்புது அர்த்தங்களைக் கற்பித்துத் தந்தது. புதுப்புது விஷயங்களைச் சொல்லிக் கொடுத்தது.

அந்தச் சின்னஞ் சிறு வயசில் என் அயலிலுள்ள சில சுய பெருமைக்காரர்கள் எனது இளம் இதயத்தின் மீது வீசி எறிந்த கல்லெறியின் பாரிய தழும்புகள், ரத்த ஈரங்கள் என் நெஞ்சில் இன்னமும் இடம் பெற்றுள்ளன. அதே சமயம் வளர வளர, அநுபவங்கள் பெருகப் பெருக, ஊர் உலகத்தை நன்கு உணர உணர, மனிதர்களில் பல விதத்தினர்

உண்டு. எல்லோரிடத்திலும் இந்தச் சின்னத்தனங்கள் குடி கொண்டிருக்கவில்லை. மனிதர்கள் இருக்கிறார்கள். எம்மை மதிக்கத்தக்கவர்கள் இருக்கிறார்கள். நேசிக்கக் கூடியவர்கள், பெரிய மனசு கொண்டவர்கள் இவர்களிடையே நிறைய உண்டு. எனது வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்டவர்கள், எனது சுற்றத்தவர்களைவிட, எனது சாதி சனங்களை விட, இவர்களில் அநேகருண்டு என்ற வாழ்வின் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள எனக்கும் கனகாலம் எடுத்தது.

ஓர் ஆச்சரியத்தையும் இந்த இடத்தில் நான் சொல்லியாக வேண்டும். எம்மையொத்த சிறுவர்கள் எம்முடன் விளையாடுவதைத் தவிர்த்துப் பலவந்தமாக இழுத்துப் போகப்பட்ட அன்றைய சிறுவர்களைப் பின்னர் வயது வந்த பெரியவர்களாகச் சந்தித்தபோது, எனக்கு மனசுக்குப் பெரும் சங்கடமாகவிருந்தது. நித்தக் குடிகாரர்களாகச் சிலர் காட்சி தந்தனர். எந்த விதமான நாகரிகப் பழக்க வழக்கங்களுமற்ற, பரம்பரைப் பெருமையையே நித்தம் நித்தம் சொல்லி, வயிறு வளர்க்கும் தனி நபர்களாகச் சிலர் தெருவில் திரிந்தனர். வேறு சிலர் எங்கேயோ போய்க் கண் மறைந்து விட்டனர். முடிவில் அவர்களின் சந்ததி நமது அயலில் இருந்து மாத்திரமல்ல, வரலாற்று அரங்கிலிருந்தும் மறைந்து போய்விட்டது. சிலர் இதற்கு விதிவிலக்காக இருக்கலாம். எனது ஆய்வுக்கு எட்டியவரை இதுதான் உண்மை நிலை. இது என் அறிவுக்குப் புதிய பரிமாணம்.

ஒரு இருபத்தைந்து முப்பது வருஷங்களுக்கிடையே என் கண் முன்னால் நடந்த நிகழ்ச்சிகள் இவை.

எங்கள் அயலில் எனது வீட்டிற்கு மிக அணித்தாக சிங்களக் குடும்பமொன்று வசித்தது. அவர்கள் குடியிருந்தது எனது தாய் மாமன் வீட்டில்தான். பெரிய வீடென்று சொல்ல முடியாது. எங்களது பெரும்பான்மையான வீடுகளைப் போலவே, அதுவும் தென்னோலைக் கிடுகு வேய்ந்த கூரை வீடுதான். அந்தக் குடும்பம் மாத்தறையைப் பிறப்பிடமாகக் கொண்டது. புருஷன், பெண்சாதி இருவர்தான் குடும்பம். ஜேமிஸ் என்றொரு வேலைக்காரப் பையன் உடனிருந்தான். சின்னப் பொடியன். என்னைவிட மூன்று, நான்கு வயசு கூட இருக்கலாம். அவன் எங்கள் விளையாட்டுத் தோழன். கொச்சை கொச்சையாகத்தான் தமிழ் பேசுவான். நான் முதல் முதலில் சந்தித்த சிங்களத் தோழன் இவன்தான். நானும் இவனுடன் கொச்சையாக சிங்களத்தில் பேசிக் களிப்பேன். நான் சொல்வது அவனுக்குப் புரியாது. அவன் சொல்வது எனக்கு விளங்காது. இருந்தாலும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு பழகினோம்.

ஆரம்பத்தில் இந்தக் குடும்பத்தினர் என் கவனத்தைக் கவரவில்லை. அவர்கள் குடியிருந்த வளவுக்குக் கிழக்குப் பக்கமாக அந்தக் காணிக்குள்ளேயே பெரிய இடமிருந்தது. அந்த வெற்று வளவுக்குள் தகரத்தினால் கொட்டகை போட்டதைப் பின்னர் வேடிக்கை பார்க்கக்

கூடியிருந்தவர்களில் நானும் ஒருவன். அந்தக் குடும்பத் தலைவரின் பெயரோ அல்லது அவரது மனைவியின் பெயரோ எனக்குத் தெரியாது. நெருங்கிப் பழக ஒருவிதக் கூச்சம். அந்நியர் என்பது மற்றொரு காரணம். மொழித் தடங்கல் முக்கிய அம்சம். வெளியூர்க்காரர் என்பதும் மற்றோர் காரணம்.

அந்த அம்மா வண்ணக் கடதாசிகளைக் கொண்டு அழகான பல்வேறு வகைப் பூக்களைச் செய்து தனது வீட்டில் அலங்காரமாக சாடிக்குள் வைத்திருப்பதைச் சில சமயங்களில் கிறாதிப் படலைக் கூடாக பார்த்திருக்கின்றேன். இதைப் பலரும் பார்த்திருக்கிறார்கள். இயல்பாகவே அவரைப் 'பூவம்மா' என்றே பெயர் சூட்டிவிட்டனர். என்னையொத்த வாண்டுகள். அந்த அம்மாவுக்குப் பெயர் பூவம்மா என்றால், அவரது கணவனுக்குப் பெயர் பூவையா என்றுதானே அமைய வேண்டும்! எனவே அவரும் எங்கள் அயலவர்களுக்குக் கடைசி வரையும் பூவையாவாகவே இருந்துவிட்டார். பின்னர் பலகாலம் அவர்கள் எங்கள் மத்தியில் வசித்த போதிலும் கூட, அவர்களது இயற்பெயர் என்னவென்று யாருக்குமே தெரியாது. தெரிந்து கொள்ள நாம் முயற்சித்ததுமில்லை. 'பூவையா, பூவம்மா!'

தங்களது வீட்டுக்குப் பக்கத்தே போட்ட தகரக் கொட்டகையை பூவையா ஒரு 'பஸ் கராஜ்' சாகப் பாவித்தார். அவருடைய தொழில் லொறி, பஸ்களுக்குப் 'பொடி' அடிப்பதும் அவற்றைச் செப்பனிட்டு 'பெயின்ற்' பூசிப் புதுப்பிப்பதுமாகும்.

அவர்களது வீட்டுடன் எனது தொடர்பு ஒரு விசித்திரமான உறவுடன்தான் ஆரம்பித்தது. அந்தப் பையன் ஜேமிஸ் இரண்டு அணில் குட்டிகளை வளர்த்து வந்தான். சோடி அணில்கள். 'ரெமி - ரூமி' என்பது அவற்றின் நாமங்கள். மரம் மட்டைகளெல்லாம் அலைந்து திரியும். பேர் சொல்லிக் கூப்பிட்டால் அவனிடம் ஓடோடி வரும். எனக்கும் பிராணிகளிடமும் ஒருவகைப் பற்றுப் பாசம் உண்டு. அவைகளை நேசிப்பதில் எனக்கொரு பிரியம். அவற்றை நேசிப்பது எனக்கு ஒரு பொழுதுபோக்கு.

பிற்காலத்தில் சோடி மைனாக்களை ஆசையுடன் வளர்த்து வந்திருக்கின்றேன். 'ரோமியோ - ஜூலியட்' எனப் பெயரிட்டு நீண்ட காலமாக வளர்த்து வந்தேன். ஒரு நாளும் பகலில் அடைத்து வைப்பதில்லை. இரவில்தான் பாதுகாப்பு. அவைகளுக்குப் பூனைதான் எமன். எனவே வளவில் எங்கு பூனைகளின் அசுமாத்தம் கண்டாலும் கல்லெறிந்து விரட்டியடிப்பேன். அடிக்கடி அவற்றுடன் செல்லம் கொஞ்சுவது தான் எனது தினசரி வழக்கம். பேச்சுப் பழக்கினேன். இரண்டும் நன்கு பேசப் பழகிக் கொண்டன. வலு புத்திசாலித்தனமான பறவைகள். அவை இரண்டும். எனது பொழுது போக்கே அவைகளைப் பராமரிப்பது தான்.

எங்களது அயலுக்குக் கள்ளுச் சீவ வரும் ஆறுமுகண்ணர் வெகு தமாஷான மனிதர். அடிக்கடி மைனாக்களுடன் கொஞ்சுவார். கோபிப்பார்.

பேசுவார். அவர் தொழில் செய்ய மரத்தில் ஏறினால் இவையிரண்டும் தென்னை மர மட்டையில் போய் வீற்றிருக்கும். இறங்கி வந்து, சிரட்டையில் கள்ளு வைப்பார். அவை குடித்து மகிழும். அவருக்குக் குழந்தைகள் இல்லை. சில மாசங்களுக்குப் பிறகு பார்த்தால், அவை இரண்டும் மழலை கலந்த தமிழில் ஊத்தைப் பேச்செல்லாம் மிழிற்றத் தொடங்கின. எனக்குப் பொல்லாத கோபம். அவரைக் கண்டித்தேன். சிரித்துக் கொண்டே போய்விட்டார். அடுத்த நாள் பார்த்தால், அவர் தொழில் செய்யும் தென்னை மட்டையில் வெகு சிக்காராக வீற்றிருக்கும். அவர் இறங்கிச் சிரட்டை தேடுவார். கள்ளு வைப்பார். அவை இரண்டும் செட்டையைச் சிலிர்த்தபடி கள் அருந்தும். மழலையில் மிழற்றும்.

பின்னர் இளந்தாரி வயசிலே, புறா வளர்க்க ஆரம்பித்தேன். ஆயிரம் புறாக்கள் வரையும் வளர்த்தேன். பின் வளவில் பெரிய வலைக் கூட்டில் வெகு கவனமாகப் பாதுகாப்புடன் வளர்த்து வந்தேன். அந்தக் காலத்தில் எனது பெயர் இதனால் பிரசித்தம். உரும்பிராய், திருநெல்வேலி, நல்லூர், சுன்னாகம், மானிப்பாய், கரையூர், ஆனைக்கோட்டை, கொழும்புத் துறை இப்படியான பிரதேசங்களில் புறா வளர்ப்பவர்கள் தொகை ஏராளம். இப்படியானவர்களுக்குள் ஒரு வகைத் தோழமை உறவு நிலவும். ஒருவரை ஒருவர் தெரிந்து வைத்திருப்பார்கள். கூடுகளைப் பார்க்க ஒருவரை ஒருவர் அழைப்பார்கள். நான் வளர்த்தவை அனைத்துமே உயர்தரப் புறாக்கள். விலை மதிப்புள்ளவை. நன்ஸ், ஹோமர், பான்டெயில், கரணம், தலையாட்டி, பந்தயம் இப்படியான புறாக்களைத் தேடித் தேடி, எனது கூட்டில் சோடி சேர்த்தேன். 'சொக்லெட் நன்ஸ்" என்ற வகைப் புறா யாழ்ப்பாணத்தில் ஒரு கூட்டுக்காராரிடமும் இல்லை என அறிந்து, கொழும்பிற்குப் போய் மருதானையில் தெமட்டகொடையில் உள்ள ஒரு முஸ்லிம் நண்பரிடம் 160 ரூபாவிற்கு ஒரு சோடி வாங்கி வந்தேன். நான் வாங்கி வந்த அபூர்வமான பட்சிகளைப் பார்ப்பதற்கென்றே ஒரு கூட்டம். வீடு தேடி வரத் தொடங்கிவிட்டது. அம்மா கூடப் புறுபுறுக்க ஆரம்பித்து விட்டார். இலக்கியத் தலைவன் வளருவது போல, ஒரு புறாத் தலைவன் உருவாகத் தொடங்கிவிட்டான்.!

புறாக்களைப் பந்தயத்துக்குப் பறக்க விடும் பந்தயம் நமக்குள் நடைபெறும். பல பிரதேசங்களில் நடக்கும். நானும் என்னுடைய விசேஷமான ஹோமர் புறாவுடன் களத்தில் நிற்பேன். சில பந்தயங்களில் எனது ஹோமர் எனக்குப் பெரிய வெற்றிகளைத் தேடித் தந்ததுண்டு. நான் பலரினால் பேசப் பட்டேன். எனது நாமம் பிரபல்யமாகத் தொடங்கியது. புறாவளர்ப்போர் சங்கம் என ஒன்றை நிறுவினால் அதற்கு நானே தலைவனாகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பேன்!

இங்கொரு கேள்வி குறுக்கிடலாம். இத்தனைக்கும் செலவு எப்படி? என்பதே கேள்வி. அப்பொழுது நான் தொழில் செய்து கொண்டிருந்தேன். அத்துடன் புறா வியாபாரம் பெரிய வருமானமுள்ள தொழில். உயர் சாதி

நாய்க்குட்டி விலைபோவது போல, என்னுடைய புறாக் குஞ்சுகளுக்கும் நான் சொன்னதே விலையாக அமையும். சிலர் முற்பணம் கூடத் தந்து வைப்பதுண்டு. புறா வளர்த்துப் பார்த்தவர்களுக்குத் தான் அதன் அருமை பெருமையெல்லாம் விளங்கும்.

புறா என்பது கள்ளங் கபடமற்ற ஒரு மென்மையான பிராணி. யாருக்குமே ஒரு கெடுதலும் செய்யாத சீவன். உலக சமாதானத்தின் பொதுச் சின்னமாக வெள்ளைப் புறா ஒன்றை முதன் முதலில் கற்பனையில் கண்டவன் உலகத்தின் மாபெரும் கலைஞன் என்பதே எனது இப்போதைய கருத்தாகும். அந்த ஓவியன் உலகப் பிரசித்தி பெற்ற பிக்காஸோ எனத் தெரிந்து கொண்டேன். எத்தகைய கலைத்துவ ஓவியம் அது!

இன்று கூட, வழி தெருக்களில் சிலர் கண்டு புன்னகைத்து விட்டுச் செல்வர். வேறு சிலர் கைகாட்டிவிட்டு மறைவர். இவர்களில் பலர் இலக்கியச் சுவைஞர்களோ இலக்கியவாதிகளோ இல்லை. பழைய புறா வளர்ப்பில் தோழமை கொண்டவர்களாகவே இருப்பார்கள். அந்த உறவு இன்னமும் விட்டுப் போகவில்லை. அது என்றுமே விட்டுப் போகாது. விடுபடக் கூடாது. விடுபடாது.

இதை விடுத்து இன்னொரு சம்பவத்தையும் சொல்ல வேண்டும். இது மல்லிகைக் காரியாலயத்தில் நடந்தது. ஒரு நாள் பின்னேரம் காகங்கள் கூச்சலிட்டுத் துரத்தி வர, சின்னஞ்சிறு தவ்வல் அணில்குட்டி ஒன்று ஓடி வந்து காரியாலயத்தின் சுவர் மூலையில் தஞ்சமடைந்தது. பிடித்துப் பார்த்தால், பயத்தால் நடுநடுங்கித் துவண்டது. இளஞ்சூடான பால் வாங்கிச் சீனி கலந்து, சீலைத் துணியால் திரி திரித்து மெல்ல மெல்லப் புகட்டினேன். நக்கி நக்கிக் குடித்தது. இப்படியே பால் குடித்து வளர்ந்த அணில் குட்டி, நாளடைவில் நான் சாப்பிடும் சகல உணவிலும் பங்கு கேட்டது. எழுதும் போது கூட, தோளில் குந்தியிருந்து காதை மெல்லக் கடிக்கும். ஒரே இன்ப உபத்திரவம். கூடு இருந்தும் கூட்டுக்குள்ளே தங்காது. இரவு தான் கூடு தேவைப்படும். பகலில் எங்கெங்கெல்லாம் திரியப் போய்விட்டு வரும். சாயங்காலப் பால் குடிக்க மாத்திரம் தப்பாமல் வந்து சேரும். இளஞ் சூட்டுப் பால் வைத்துப் பழக்குவதிலும் ஒரு சூட்சுமம் உண்டு. இந்த ருசி கண்ட பிராணி, எங்கு போனாலும் அந்த நேரத்துக்குக் கூட்டைத் தேடி வந்துவிடும். அந்த அணில் பெண். இரண்டு தடவைகள் கூட்டிற்குள் குட்டி போட்டுக் குட்டிகளையும் கூடச் சூட்டுப் பாலருந்த வைத்த பெருமை அதற்குண்டு. நான்றிந்தவரை வளர்த்த அணில் கூட்டிற்குள் குட்டி போட்டது. எனது அணில் தான் என்பது ஓர் அதிசயம். இப்படிச் சொல்வதில் எனக்கொரு பெருமை. மானுடத்தை நேசிக்கப் பழக்கப் பட்டவன், வேறு எந்த சீவன்களைத்தான் நேசிக்காமல் விட்டு வைப்பான்?

சில 'விசர்த்தனங்கள்' சமகாலத்தில் பார்ப்பவர்களுக்கு விசித்திரமாகப் படலாம். பின்னொரு காலத்தில் சம்பந்தப்பட்டவர்கள் இவைகளை

அசைபோட்டுப் பார்க்கும் போது சுவாரஸ்யமாக இருக்கும். சுவை நிரம்பிய வாழ்க்கை அநுபவமாகத் திகழும். அதுவே ஒரு பூரிப்புத்தான். சந்தோஷம்தான்.

அந்தப் பூவம்மா வீட்டுப் பையன் வளர்த்த அணிலைப் பார்ப்பதற்கும் அதனுடன் விளையாடுவதற்கும் அடிக்கடி அந்த வீட்டிற்குப் போகத் தொடங்கினேன். அயல் சிறுவர்களும் என்னுடன் வரத் தலைப்பட்டனர். சிறிய வீடுதான். அதை வைத்திருந்த நேர்த்தி மனசில் நின்றது. பாம்ஸ், குரோட்டன்ஸ், பூச்செடிகள் என்ற வகையில் வீட்டின் சூழலை ஒரு நந்தவனமாக்கியிருந்தனர். ரம்மியமான காட்சி. ஜன்னல்களுக்குத் திரைச் சீலை, வேலைப்பாடமைந்த நாற்காலி, முதுகுத் துணிகள், H. M. V. கிராமபோனுக்குப் பின்னாலே மௌனப் புத்தர் வீற்றிருக்கும் அழகிய வர்ணப் படம் என எளிமை கலந்த கவர்ச்சியுடன் விளங்கியது, அந்த இல்லம். இடையிடையே வண்ணப் பூக்கள் தொங்கின. என்னையறியாமலே எங்கள் சொந்தக்காரர்களின் வீடுகளையும் ஒப்பிட்டுப் பார்ப்பேன். வீட்டை எம்மைப் பொறுத்தவரை, எம்மைப் போன்றவர்கள் ஒரு தற்காலிகமாக தங்குமிடமாகப் பாவித்து வருகின்றனரே தவிர, அதை வாழும் இல்லமாகக் கணித்து, கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை. வீட்டைப் பொறுத்தவரை ஒரு சாதாரண சிங்களக் கிராமத்தவன் கூட, எவ்வளவு கலை உயர்வுடன் வடிவாக வடிவமைத்து வாழப் பழகியிருக்கிறான்! என அநுபவம் வளர்ந்த பின்னர் நான் யோசிக்கத் தவறுவதில்லை. இது நாங்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டியது அவசியம். தெரிந்து கடைப்பிடிக்க வேண்டிய பழக்கம். ஏழைகளாக இருந்தாலும் வாழும் வீட்டை வெகு நேர்த்தியாகச் சோபிதமாக வைத்திருப்பார்கள் சிங்கள மக்கள்.

பக்கம் பக்கமாகவுள்ள நம்மவர்கள் வீடுகளைத் தவிர, மற்றவர்களின் இல்லங்களுக்குப் போய் திண்ணை தூங்குவதை வெகு கண்டிப்பாகத் தடுத்து வந்த அம்மா, நான் பூவம்மா வீட்டிற்குப் போவதை ஒரு நாளும் தடுத்ததேயில்லை. மனசில் ஒரு திருப்தி. அங்கு வந்தவிதமான பாரபட்சமும் காட்டுவதில்லை. வேற்றுமை இல்லை. புண்படுத்தும் சொல்லோ, செயலோ கிடையாது. எம்மொத்த சிறுவர்களைப் பூவம்மா மனசார நேசித்தார். அன்பு காட்டினார். அவருக்குப் பெண் குழந்தை பிறந்தது. பிறந்த அன்றே இறந்துவிட்டது. வேறு பிள்ளைகள் இல்லை. எனவே நாங்கள் தான் அவரது பெறாமக்கள். எதற்குமே எங்களைக் கூப்பிடுவார். எங்களிடம் கதைத்துக் கதைத்துத்தான் தமிழே கற்றுக் கொண்டார், அவர். அவரை ஒரு தாயாக நேசித்தேன், நான். இது எனது இளவயசு அநுபவம்.

வெசாக், புதுவருஷம் வந்தால் வலு கொண்டாட்டம், எங்களுக்கு. பலவகைக் கொண்டைப் பணியாரங்கள் எங்களது வீடு தேடி வரும். கிறிஸ்மஸ் வந்தால் அதே போலக் கேக், பலகாரம் வீட்டிலிருந்து நாமே கொண்டு போய்க் கொடுப்போம். வெசாக் தினங்களில் வெளி வீதியிலுள்ள சடைத்த மகோக்கனி மரத்தில் வெளிச்சக் கூடுகள் தொங்கும். இரவு

நேரங்களில் ஒரே கோலாகலமாக இருக்கும். பூவம்மாவும் எங்களுடன் கலந்து குதூகலிப்பார். அந்த நாட்கள் மிக மிகச் சந்தோஷமானவை.

இன்றைய யாழ்ப்பாணத்து இளம் தலைமுறை இதை நம்புவதற்குக் கொஞ்சம் பஞ்சிப்படும். ஆனால், எதார்த்த உண்மை இது. இதுதான் அன்றைய யாழ்ப்பாணக் காட்சிகளில் ஒன்று.

ஒரு நாள் பக்கத்துக் கிடாய் விழுந்தான் ஒழுங்கையூடாக கொடும்பாவி கட்டி இழுத்துக் கொண்டு போனார்கள். மாரிமழை தவறிவிட்டால் 'கொடும்பாவி' என்றொரு உருவத்தைக் களிமண்ணில் செய்து, வாய், மூக்கு, கண்கள் சுண்ணத்தால் இட்டு, ஓர் உருவம் அமைத்து, அதை ஊர்வலமாக இழுத்துச் செல்லும் பொழுது பெண் வேடமிட்ட ஆண்கள் சுற்றிச் சுற்றி வந்து மார்பில் அடித்துப் பிலாக்ணம் பாடி, வீடு வீடாக இழுத்துச் சென்று முடிவில் சுடலையில் எரிப்பதுதான் கொடும்பாவி நிகழ்ச்சி. ''கொடும்பாவி சாகாளோ கோடைமழை பெய்யாதோ.....'' இந்த வரிசையில் பாடல் தொடரும். நாங்கள் எங்கள் ஒழுங்கைக்குள்ளும் வந்து போகக் கெஞ்சிக் கேட்டும், அவர்கள் வரமறுதலித்தார்கள். எங்களுக்கோ ரோசம். அடுத்த நாள் சின்னப் பொடியன்களான நாங்களே கொடும்பாவி செய்து, அயல் முழுக்க வீடு வீடாக இழுத்துச் சென்றோம். மாரடித்து அழுது தீர்த்தோம். பின்னர் ஆரிய குளத்துக்குச் சென்று அக் கொடும்பாவியைக் கரைத்துவிட்டு வந்தோம். மூன்றாம் நாள் வானம் சிறிதாகத் துமித்தது. பின்னர் பலத்துப் பெய்தது. எங்களுக்கோ மகிழ்ச்சி. ஏதோ சாதனை செய்துவிட்ட மனப் பூரிப்பு. இது தற்செயலான நிகழ்ச்சி தான். ஆனால், எங்களது ஆன்மீக உந்துதல் தான். இதற்கான காரணம் என்பது மெய்.

எங்களுக்கு ஒப்பனை செய்து ஊக்குவித்தவரே அந்தப் பூவம்மாதான். பூவம்மாவும் எங்களுடன் சேர்ந்து குதூகலித்தார். ஸ்பெஷல் தேநீர் தந்து உபசரித்தார். அன்று இரவு முழுவதும் 'பைலாப் பாட்டு'ப் பாடிக் களித்தோம்.

அது ஒரு காலம். அது ஒரு காலகட்டம்.



5

மேலை நாட்டில் முன்னொரு காலத்தில் உலகப் பிரக்தியாதி பெற்ற திருடனின் பெயர்தான் ரொபின்ஹுட். இவனுடைய வீர, தீர பராக்கிரமச் செயல்கள் உலகப் பிரசித்தம். இவனைப் பற்றிச் சினிமாப் படங்கள் கூடத் தயாரிக்கப்பட்டிருந்தன. பூலான்தேவி என்ற சம்பல் பள்ளத்தாக்குத் திருடியைப் பற்றியும் சர்வதேசப் பிரபலம் உண்டு. இந்தியாவில் பாராளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டவள், இவள். இன்று புத்த மதத்தில் சேர்ந்துள்ள இவள், வருங்காலங்களில் ஆன்ம ஈடேற்றத்திற்காக உழைக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறாள். ஜம்புலிங்கம் என்றொரு மாபெரும் கள்ளன் தென்னிந்தியாவில் வாழ்ந்து வந்தவன். இவனுடைய பிரபலமும் பலருக்குத் தெரிந்திருக்கும். இவ்வளவு சர்வதேசப் பீடிகை ஏன் போடுகின்றேன் என்றால், இவர்களினது திறமைகளுக்கு எந்த விதமான குறைவுமற்ற ஒரு சர்வதேசத் திருடன் ஒருவன், நம் யாழ்ப்பாணத்திலும் வாழ்ந்து வந்திருக்கிறான் என்பதைச் சுட்டிக் காட்டுவதற்கே என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அந்தத் திருடனைப் பற்றிப் பலர் அறிந்திருக்கக் கூடும். அந்தத் திருடனுக்கும் எனது மாமி வீட்டில் நடந்த திருட்டுக்கும் சம்மந்தமுண்டு. எங்களது வீட்டையும் பாதித்த பிரசித்திபெற்ற திருடன் அவன்.

காராளி முத்தையன் என்ற பெயருடைய இந்தத் திருடன் மகா துணிச்சல்காரன். சாமர்த்தியசாலி. திருடுவதில் கூட, தனது கற்பனைகளைப் பாய்ச்சி, புதிய புதிய உத்தி முறைகளைப் புகுத்தி, கையாண்டு, வீடுகளில் கொள்ளையடிப்பது இவனது வழக்கம். ஒரு காலத்தில் மக்களையெல்லாம் கிலி கொள்ள வைத்து, தனது இரவு ஆதிக்கத்தை நிலை நாட்டி வந்தவன்,

இந்தக் காராளி முத்தையன். யாழ்ப்பாணம், இரவு வந்தாலே நடுங்கியது, அது ஒரு காலம்.

இவனது திருவிளையாடல்களில் மிகச் சிறிய ஒன்று இன்னமும், எனது ஞாபகத்தில் பதிந்து போய் இருக்கின்றது.

மாமி வீட்டுக் கோழிச் சேவலை ஒரு கிழமையாகக் காணவில்லை. நான் உட்பட, மச்சான்மாருடன் சேர்ந்து சேவலைக் கண்டுபிடிக்க வெளிக்கிட்டோம். அயல் முழுக்கத் தேடியும் சேவலைக் கண்டுபிடிக்க முடியவில்லை. கடைசியில் சலிப்படைந்து தேடுவதைக் கைவிட்டு விட்டோம். இந்த நாட்களில் ஒரு நாள், நன்னி வயல் என எங்கள் பகுதியினரால் அழைக்கப்பட்ட, பக்கத்து அயலிலுள்ள, ஒரு வீட்டு நாய்கள் இறகுகளையும், சிறகுகளையும் கௌவிக்கொண்டு ஓடித் திரிவதைக் கண்ட பலர், மாமி வீட்டுக்குத் தகவல் தந்து விட்டனர். போய்ப் பார்த்தால் குழி தோண்டிப் புதைத்த சேவலின் மிச்சம், மீதிகள் வெளிப்பட்டன. சிறகுகளின் அடையாளத்தை வைத்து மாமி வீட்டுச் சேவல் தான் அது எனக் கடைசியில் முடிவாகியது.

துப்புக் கிடைத்து விட்டது.

குழி இருந்த வீட்டில் தனியாக ஒரு பெண் வசித்து வந்தாள். அயல் அட்டம் அவளுடன் எந்தவிதமான உறவுகளையும் வைத்திருக்கப் பிரியப்படவில்லை. தனித்தே வாழ்ந்தாள். ஆனால் அசட்டு ராங்கி மாத்திரம் உச்சியில் நின்றது. யாரையுமே மதிப்பதில்லை. அயலில் அவள் தனக்குத் தானே பட்டம் கட்டிக் கொண்ட மகாராணியைப் போல, வளைய வந்த வண்ணமிருப்பாள்.

அவளது அசாதாரண ராங்கிக்கும் தன்னகங்காரத்திற்கும் ஒரு பின்னணி இருந்தது. இந்தப் பெண் நான் மேலே குறிப்பிட்ட காராளி முத்தையனுடைய அபிமான ஸ்திரி! முத்தையனுக்குக் குடும்பம் உண்டு. யாழ்ப்பாணம் கன்னியர் மடத்திற்கு அணித்தாகவுள்ள தேவரிக்குளம் என்ற பகுதியில் டாம்பீகமான வீடுகட்டி வாழ்ந்து வந்தவன் தான், காராளி. அவனுக்கு இப்படியொரு தொடுப்பு, வைப்பு.

''சாவலைக் களவாப் புடிச்சுத் திண்டுபோட்டுப் பெரிய பவரிலை திரியினம்!'' என்று வக்கணப் பேச்சு மாமியின் வாயிலிருந்து புறப்பட்டதும் காராளி முத்தையனின் வைப்பாடிச்சி சும்மா இருப்பாளா?

ஒரே இறந்த போர் சண்டைதான். பொருளை இழந்தவளுக்கும், பொருளைக் களவெடுத்தவளுக்கும் நடந்த சண்டையில் அயல் அட்டை பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தது. களவெடுத்தவள் அதைச் சாக்காக வைத்து பூமிக்கும் வானத்திற்குமாக துள்ளிக் குதித்தாள். கோழைச் சனங்கள் ஒரு பேர் பெற்ற திருடனின் வைப்பாட்டிக்குப் பயந்து பதுங்கிப் போய்க் கிடந்தனர். அநீதியைத் தட்டிக் கேட்க ஆள்துணை கிடைக்காமல் முடிவில்

ஒய்ந்து போய்விட்டார், மாமி. மாமா ஊரில் இல்லை. கெக்கராவயில் சலூனுக்குத் தொழில் செய்யப் புறப்பட்டுப் போய்விட்டார்.

முடிவாகப் பிள்ளையார் கோவில் ஆலமரத்தடியில், காலை, ஒரு கல்லுக் கும்பியில் உயர்த்தி வைத்துக் கொண்டு உரத்த கீச்சுக் குரலில் அந்த அம்மணி, எங்களது சாதிப் பெயரை நீட்டி முழக்கிய வண்ணம் ``ஒரு கிழமைக்குள்ளை நடக்கிறதைப் பார்க்கத்தான் போறாயடி..... இருந்து பார்..... என்ன நடக்கிறதெண்டு?'' எனச் சவால் விடும் தோரணையில் ஆக்ரோஷமாகச் சொல்லி முடித்தாள்.

எனக்கு அந்த கோழிச் சண்டையைப் பற்றி அதிக அக்கறை இல்லை. ஆனால், ஊரைச் சுருட்டி உலையில் போட்டுக் கஞ்சி வடிக்கும் ஒரு பகிரங்கக் கள்ளனுடைய வைப்பாட்டி, நேர்மையாகவும், கிரமமாகவும் பரம்பரை பரம்பரையாகக் கைத்தொழில் செய்து கௌரவமாகப் பிழைத்து வரும் கைத்தொழில் சமூகத்தைச் சாதி சொல்லி மிக மலினமாகத் தூஷித்ததைத்தான் என்னால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. நேரிய வழியில் வாழ வக்கற்றவள் கூட, கடைசியில், சாதிப்பேர் சொல்லித்தானே திட்டித் தீர்க்கிறாள்!

அந்த இளம் வயசிலேயே என் மனசில் ஒன்றைத் திடமாகப் பதித்துக் கொண்டேன். 'மக்களுக்குத் தொண்டு செய்து அதன் மூலம் தங்களது குடும்பத்தினரின் வாயையும் வயிற்றையும் கழுவி வரும் ஒரு பரந்து பட்ட சமூகத்தை, வாய்க்கு வந்தபடி எந்த யாழ்ப்பாணத்துச் சமூகம் நக்கல் பண்ணிச் சிரித்ததோ, அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவன் நான். என்பதை எந்தக் கட்டத்திலும் மறைக்காமல், ஒளிக்காமல் பகிரங்கமாகச் சொல்லி நான் பிறந்த சமூகத்தையும் தலை நிமிர்ந்து வாழ வைப்பேன்' எனத் திடமாக முடிவெடுத்துக் கொண்டேன். அதை இற்றைவரை காத்து வருகின்றேன். இதற்காக நான் யாருடனும் சமரசத்திற்குப் போக மாட்டேன். இதில் எந்த இடைப்பட்ட சமரசத்திற்கும் இடமேயில்லை.

கோழிக் களவுச் சண்டை நடந்து ஒரு கிழமைக்கு மேலிருக்கும். ஒரு நாள் நடுச்சாமம் நாங்கள் படுத்திருந்த அறைக்குப் பக்கத்தே உள்ள நடு அறையில் யாரோ மெல்ல நடமாடும் காலடிச் சத்தம் கேட்டது. அம்மாவிடம் ஒரு நல்ல அம்சம், ஆழ்ந்த தூக்கத்திலும், சிறு அரவம் கேட்டாலும் துடிக்கப் பதைக்க விழித்து விடுவார்.அடுத்து, ``ஆரது?'' எனக் குரல் கொடுப்பார். நான் முன்னரே குறிப்பிட்டதுபோல, மாமா குடும்பம் கிழக்குப் பக்கத்து வீட்டறைகளிலும், எங்கள் குடும்பம் மேற்குப் பக்கத்து அறைகளிலும் குடியிருந்தோம. அடுப்படி, குசினி, தனித்தனி. நடுப் பக்கத்து அறை எல்லோருக்கும் பொதுவானது. அந்த அறையிலிருந்த கதவுகளினூடாக இரண்டு வீடுகளுக்குள்ளும் பிரவேசிக்கலாம். அலுமாரிகள், தட்டு முட்டுச் சாமான்கள் வைத்துப் பாதுகாக்கும் அறையாக அது பாவிக்கப்பட்டு வந்தது. அது எங்களது புழகத்திலும் இருந்தது. அந்த அறையை நடறை என்போம்.

அந்த அறைக்குள்தான் நடுச் சாமத்தில் மனிதர் நடமாடும் அசுகை தென்பட்டது. வழமைபோலவே அம்மா விழித்துக் கொண்டார். மாமாவுக்கு கெக்கறாவையில் கடை. பெயர் சவரிமுத்து. அவர் பெரும்பாலும் ஊரில் இருப்பதில்லை. குழந்தைகளுடன் மாமி தனித்திருந்தார். இந்த மாமா என்னுடைய அம்மாவின் மூத்த தமையன். மாமியோ அப்பாவினுடைய சொந்தச் சகோதரி. இரண்டு வழிகளிலும் மிக நெருங்கிய இரத்த உருத்தான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். நாங்கள். நாங்கள் பாதுகாப்புக்கு இருக்கிறோம் என்ற தைரியம் மாமாவுக்கு. அந்த நம்பிக்கையைப் பொய்ப்படுத்தாமல் வாழ்ந்து வரும் தைரியசாலிகளில் எனது அம்மாவும் ஒருவர். `குண்டு மாத்துக் கலியாணம்' என யாழ்ப்பாணத்தில் சொல்லப்படும் விதத்தில் மாமாவின் சகோதரியான என் அம்மாவை அப்பாவும், அப்பாவின் சகோதரியை மாமாவும் மணம் முடித்திருந்தனர். பெரும்பாலான குடும்பங்களில் இப்படிக் கலியாணம் நடப்பது வழக்கம். `ஒண்டுக்குள்ளை ஒண்டு கொள்வினை கொடுப்பினை'. இன்றைய விஞ்ஞானம் இந்தப் பரஸ்பர இரத்தக் கலப்புத் திருமணங்களை அங்கீகரிப்பதில்லை. ஏற்றுக் கொள்வதுமில்லை. அது வேறு கதை.

``மச்சாள்! மச்சாள்!'' எனக்குரல் கொடுத்து விட்டுச் சற்று நேரம் பொறுத்துப் பார்த்தார், அம்மா. காலடி ஓசை சற்று நின்றது. மீண்டும் அரவம் ``மச்சாள், மச்சாள் நடறேக்கை ஆரது நிக்கிறது?'' என உரத்துக் குரல் கொடுத்தார்.

தாம்பாளம் ஒன்று படீரென்று விழும் ஓசை கேட்டது.

``ஐயோ..... கள்ளன்'' என்று ஓங்கிக் குரல் கொடுத்தார், அம்மா.

மாமியும் பங்குக்கு ``ஐயோ கள்ளன்! கள்ளன்!'' எனக் குரல் கொடுத்த வண்ணம் சத்தம் போட்டா. நமது வீடு நீண்ட வெளி விறாந்தையைக் கொண்டது. விறாந்தையின் ஒரு மூலையைத் தென்னோலைக் கிடுகினால் மறைப்புக் கட்டிக் கொண்டு, எனக்கு அறிவு தெரிந்த காலம் முதலே வாழ்ந்து வரும் எல்லிப்போலைக் கிழவியும் ``ஐயோ! ஐயோ!'' எனக் உரக்கக் குரல் கொடுத்துக் கத்தத் தொடங்கினா. ``கள்ளன்.... கள்ளன்..... கள்ளனைப் பிடியுங்கோ, கள்ளனைப் பிடியுங்கோ....''

அடுத்த கணம் `திடும், திடும்' என்ற ஓசையுடன் ஒழுங்கையால் ஆட்கள் ஓடும் சத்தம் கேட்டது. முன் வீடு, பின் வீட்டுக்காரர்கள் சத்தம் கேட்டு எழுந்தோடி வந்துவிட்டனர். வீட்டு விறாந்தையில் அயலே வந்து, நிறைந்து விட்டது. கணக்கெடுத்த போது, றங்குப் பெட்டிக்குள் இருந்த சேலைகள் சிலதுதான் திருட்டுப் போனதாக அறிய முடிந்தது. அதுவும் விடியற்காலைப் பூசைக்கு அடைக்கல மாதா கோயிலுக்குப் போனவர்கள், அங்கு கலைந்தெடுத்ததெனக் கொண்டு வந்து ஒப்படைத்தனர். ஓட்டைப் பிரித்து உள்ளே இறங்கிக் கதவைத் திறந்து களவெடுக்க முனைந்தனர் கள்ளர்.

எங்களது அயலுக்குள் முதல் முதலாய் நடந்த திருட்டு இது. இதிலிருந்து ஒன்று தெளிவாகவே புரிந்தது. களவெடுப்பதற்காக இந்தத் திருட்டு நடைபெறவில்லை. ஒரு மிரட்டலுக்காகவே இந்தச் சம்பவம் திட்டமிட்டு நடத்தப்பட்டது, என்பதைப் பலரும் கடைசியில் புரிந்து கொண்டனர். ஏற்கெனவே அம்மாவுக்கு இது தெரிந்திருக்க வேண்டும். ஒன்றுமே பேசவில்லை.

இத்தனைக்கும் இந்தக் காராளி முத்தையன் 6 மணியளவில் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு முன்பாக ஆஜராகிவிடுவான். அவனுக்கென ஒரு நட்புக் கூட்டம் அங்கு குழுமி விடும். தாயம், நாயும் புலியும் அல்லது கடதாசி விளையாட்டு வெகு ஜோராக நடந்து கொண்டிருக்கும். அந்தக் கூட்டத்தில் ஒரு கன்னையில் இடம் பிடித்து விளையாடிக் கொண்டிருப்பான், காராளி. அடிக்கடி சிகரெட் சாம்பலைச்சுண்டித் தட்டிக் கொண்டு, அடுத்திருப்பவர்களின் தொடைகளில் மீண்டும் மீண்டும் தட்டிய வண்ணம், பெரிதாகச் சிரித்தபடி காட்சி தரும் இவனை, பக்காத் திருடன் என்று சொன்னால், யாருமே நம்பமாட்டார்கள். இரவு கொழும்பு செல்லும் மெயில் வண்டி சரியாக ஏழு மணிக்கு ஸ்டேசனை வந்தடையும். ரெயில் வரும்வரை இந்தச் சமா தொடர்ந்து நிகழும். பல தடவை நான் வேடிக்கை பார்த்திருக்கின்றேன். காராளி முத்தையனையும் தரிசித்திருக்கின்றேன்.

எனக்குக் காராளி முத்தையனைக் கூர்ந்து பார்ப்பதில் ஒரு மன ஆசை. கிட்டே நெருங்கியும் போகமாட்டேன். அதே சமயம் எட்டவும் நிற்க மாட்டேன். அவன் சிகரெட் பிடிப்பதில் அப்படி ஒரு கவர்ச்சி அப்பிப் போயிருந்தது. இந்தக் காலத்து ரஜனிகாந்த் போல, அப்படி ஒரு ஸ்டைல்!

ஹிட்லர் மீசை, சலவை செய்த முழுக்கைச் சட்டை, வேட்டி, சேட் கொலருக்குள் மடிக்கப்பட்ட கை லேஞ்சி, சங்கிலி மின்னும் வலது கை மணிக்கட்டு, உயரமும் இல்லாமல் அதே சமயம் குட்டையும் இல்லாத தோற்றப் பொலிவு. எதையுமே அலட்சியமாகவே நோக்கும் பார்வை, சிரிப்பு, மற்றவர்களைவிட தான் ஏதோ அதி சிறப்பு மிக்கவன் என்ற மிதப்பான பந்தா நடை. விளையாட்டில் தோல்வி ஏற்பட இருக்கும் சந்தர்ப்பங்களில் உரக்கக் கத்தி விளையாட்டில் அணாப்பும் குதர்க்கப் புத்தி. இத்தனையையும் அவனிடம் என்னால் அவதானிக்க முடிந்தது. இவைகளை மட்டிட்டுக் கொண்டேன். எங்களைப் பார்க்கும் போதும் ஒரு பந்தாப் பார்வை பார்ப்பான்.

மாமி வீட்டில் திருட்டு நடந்தது என் மனதைப் பெரிதாகப் பாதித்து விடவில்லை. சும்மா முஸ்பாத்தி விளையாட்டு என்றே எடுத்துக் கொண்டேன். அதற்குப் பின்னணியே இந்தக் காராளி முத்தையன் தான் என்பது என் நெஞ்சிலே உறைக்கவில்லை. 'எந்தப் பொருளும் தான் களவு போகவில்லையே. பின்னர் அது எப்படித் திருட்டாகும்?' என்பது எனது சிறுபிள்ளை வாதம்.

அந்த வைப்பாட்டி அம்மாள் போக வர எங்கள் சுற்றத்தாரை மிதப்பான

பார்வை பார்க்கத் தொடங்கி விட்டாள். அலட்சியமாக வாய்க்குள் புறுபுறுக்க ஆரம்பித்து விட்டாள். பயத்தினால் எம்மவர்கள் அப்படியே பம்மிப் போய்க் கிடந்தனர். அவள் வழிக்கே போகப் பயந்து பின்வாங்கிக் கொண்டனர். ஒரு வகை மருட்சியுடன் நடமாடத் தொடங்கினர்.

அநியாயம், அக்கிரமம், அட்டா துட்டித்தனம் ஆரம்பத்தில் வெற்றி அடைவது போலக் கோலம் காட்டும். முடிவில் வெல்லவே வெல்லாது. மனித வரலாற்றில் இதற்குப் பல உதாரணங்கள் காட்டலாம். சத்தியம் தற்காலிகமாக பின்னடையலாம். கண்களை இறுக்கி மூடலாம். ஆனால் அது சாகவே சாகாது. உச்சக் கட்டத்தில் கோலோச்சும். மானுட எதிரித்தனம் விரைவிலேயே இறங்கு முகத்தைக் கண்டுவிடும். இந்த இயற்கையின் சித்து விளையாட்டை, என் சின்ன வயசில் எனது சின்னக் கண்களால் எதார்த்தமாகக் கண்டுகளித்தவன், நான். அதற்கு ஓர் எடுத்துக்காட்டு இந்தக் காராளி முத்தையன் வரலாறு. எனக்குப் புதிய பாடத்தைக் கற்றுத் தந்தது. தப்பிலித்தனம் நீண்ட நாளைக்கு நிலைக்காது.

மாமா வீட்டுத் திருட்டுச் சம்பவம் நடைபெற்றுச் சில மாதங்கள் கடந்திருக்கும். ஓரிரு மாதங்கள் சென்றிருக்கலாம்.

ஒரு நாள் வீரகேசரிப் பத்திரிகையைப் பெரியவர்கள் புரட்டிப் புரட்டி வெகு அக்கறையாக ஏதோவொரு செய்தியைத் திரும்பத் திரும்ப படித்துக் கொண்டிருந்தனர். அயல் பெண்களும் குசுகுசுத்தனர். ரெயில்வே ஸ்டேசனில் கூட, கடதாசி விளையாட்டுச் சமா களைகட்ட மறுத்தது. இது என்ன என்றறிய மனசு அவாக் கொண்டது. பெரியவர்களை அணுகினால், ``போடா பொடியா, உனக்கு இதொண்டுமே விளங்காது!" எனத் தட்டிக் கழித்தனர். கடைசியில் படுக்கப் போகும் போது, அம்மாவிடம், விசாரித்தேன். இளவாலை முக்கொலை வழக்கு என்ற பிரசித்தி பெற்ற வழக்கைப் பற்றிப் பத்திரிகைச் செய்தியைச் சொன்னா. தொடர்ந்து சந்தேக நபர்களைப் போலிசார் தேடுவதாகவும் கூறினார். அம்மா தினசரிப் பேப்பர் படித்து வருபவர். எழுத்துக் கூட்டி வாசிப்பவர்.

ஒரு நாள் வீரகேசரிப் பேப்பர் கொட்டை எழுத்தில், முன்பக்கச் செய்தியாக ஒரு தகவலை வெளியிட்டிருந்தது. இளவாலை முக்கொலை வழக்குச் சம்பந்தமாக இருவர் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டுள்ளனர். ஒருவர் காராளி முத்தையன். மற்றவர் நட்சத்திரம் செல்லையா. இச்செய்தியறிந்து நமது அயலில் ஒரே பரபரப்பு நிலவியது. வாங்கிய பேப்பர் சுற்றுக்கு விடப்பட்டது. அயல் முழுக்கப் படிக்கப்பட்டது, வீரகேசரி.

அந்தக் காலத்தில் வீரகேசரிப் பேப்பரின் விலை ஐந்து சதம். கொழும்பிலிருந்து புறப்படும் இரவு மெயிலில் பேப்பர் விடிகாலையில் யாழ்ப்பாணம் வந்து சேரும். வீரகேசரியின் யாழ்ப்பாண ஏஜெண்ட் தம்பிப்பிள்ளை என்பவர். மெயிலில் வந்த உடனேயே பேப்பர் கட்டுகள் ஸ்டேசன் வெளித் திண்ணைக்கு வந்துவிடும். அந்த விறாந்தையில் வைத்தே

விநியோகம் நடைபெறும். அத்தனை பரபரப்பு. ஏஜண்டு தம்பிப் பிள்ளைக்கு சற்றுத் தொலைவிலுள்ள சந்தியில் விற்பனை நிலையம் உண்டு. மக்களின் அங்காலய்ப்பு அவரைத் துரிதமாகச் செயல்பட வைத்துவிடும். சில்லறை விற்பனவு கூட, நிலைய வளவிலுள்ள பெரிய மகோக்கனி மரத்தடியில் தான் நடைபெறும். மக்களும் ஆத்துப் பறந்து பேப்பரை வாங்கிச் செல்வதில் உற்சாகம் காட்டுவார்கள். இப்படியான செய்திகளைச் சுடச் சுட அறிவதில், பெருவிருப்பம். அவர்களுக்கு, அப்படியொரு பரபரப்பு.

இரவே அப்பா ஐந்து சத நாணயத்தை ஜன்னல் விளிம்பில் வைத்து விடுவார். ரெயில் வரும் சத்தத்தைக் கேட்டதும் அதிகாலையில் எழும்பி ஓடி, வரிசையில் நின்று பேப்பர். வாங்கி வருவது எனது தினசரிக் கடமைகளில் ஒன்று. வரும் வழியில் எழுத்துக் கூட்டி வாசிக்கத்தான் தெரியும். ஆனால் கிரகித்துக் கொள்ள இயலாது. அதே சமயம் பேப்பர் வாங்கி வருவதில் ஒருவித உற்சாகம். மதியம் சமையல் வேலைகள் எல்லாவற்றையும் ஒப்பேற்றி விட்டு அயல் பெண்கள் எமது வீட்டு முன் விறாந்தையில் ஓய்வெடுத்தும், படுத்தும், இருந்தும், கிடந்தும் ரஸிக்க, ஒருவர் ராகம் போட்டு பேப்பர் படிக்க, மற்றவர்கள் வழக்குச் செய்திகளைக் கிரகிப்பார்கள். தமக்குள் விமர்சனம் நடத்துவார்கள்.

யாழ்ப்பாணம் சுருட்டுக் கொட்டில்களில் இது வாலாயம். இளவாலை முக்கொலை வழக்கு அக்காலத்தில் வெகு பிரசித்தம். சுப்ரீம் கோர்ட்டில் இவ்வழக்குப் பல மாதங்கள் நடைபெற்றது. திருடப் போனவர்களுக்குச் சகல துப்புக்களையும் போய்த் தங்கியிருந்து சேகரித்துக் கொடுத்தவரே, நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட கோழிச் சண்டை அம்மணிதான். திருடர்கள் சைக்கிளில் இளவாலை சென்று, சம்பந்தப்பட்ட வீட்டை நடுச் சாமத்தில் அணுகியிருக்கின்றனர். வீட்டு நாய் குரைத்திருக்கிறது. ஒரே வெட்டு. பின்னர் கூரை பிரித்து இறங்கி வீட்டினுள் தூங்கிக் கொண்டிருந்த முதியோரான கணவன், மனைவியையும், பக்கத்தறையில் படுத்திருந்த இன்னொருவரையும் வாளால் வெட்டிக் கொன்றுவிட்டு, நகை நட்டுப் பணம் அனைத்தையும் சேகரித்து மூட்டை கட்டிய பின்னர், வெகு சாவகாசமாகக் கிணற்றில் தண்ணீர் அள்ளி வாளில் படிந்திருந்த இரத்தத்தை எல்லாம் கழுவி முகங்களைச் சுத்திகரித்த பின்பு, அடுப்படிக்குள் புகுந்து, மிஞ்சிப் போன சோறு கறிகளை எடுத்து உண்டு விட்டு, மீண்டும் சைக்கிளேறி வீதிகளில் பாட்டுப் பாடிக் கொண்டே யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர் எனப் பின்னர் வெளிவந்த தகவல்கள் கூறின.

எத்தனை நெஞ்சழுத்தம் வேண்டும் இதைச் செய்வதற்கு? இந்த வழக்கில் எனது சித்தப்பா தம்பிமுத்துவும் ஒரு முக்கிய சாட்சி. யாழ்ப்பாணம் ரெயில் நிலையத்திற்கு முன்பாக சைக்கிள் கடை வைத்திருந்தார், அவர். சைக்கிள்கள் வாடகைக்கு விடும் தொழில் அவருடையது. கொலை நடைபெறுவதற்கு முதல் நாள் பின்னேரம், சந்தேக நபர்கள் இருவரும் தன்னிடம் இரவு வாடகை பேசி இரண்டு சைக்கிள் பெற்றுச் சென்றதாகவும்,

பின்னர் அடுத்த நாள் காலை திரும்ப ஒப்படைத்ததாகவும் குறிப்புப் புத்தகத்தை மேற்கோள் காட்டிச் சாட்சி சொன்னார், சித்தப்பா. குறுக்கு விசாரணையில் தன்னிடம் சைக்கிள்களை வாடகைக்கு எடுத்தவர்கள் குற்றவாளிக் கூட்டில் நிற்கும் இவர்கள் இருவருந்தான் என அடையாளமும் காட்டி வைத்தார், அவர்.

வீரகேசரிப் பேப்பர் யாழ் குடாநாட்டில் விண் கூவி விற்றுக் கொண்டிருந்தது, அந்தக் காலம்.

குடாநாட்டில் வாழ்ந்த சகலரினாலும் பேசப்படும் ஒரு முக்கிய நிகழ்ச்சியான செய்தியாக இந்தக் கொலை வழக்கு அறியப்பட்டிருந்தது. எனவே அதன் முடிவைத் தெரிந்து கொள்ளப் பெரும்பாலான பொது சனங்கள் அதிக ஆர்வம் காட்டியதில் வியப்பேதும் இல்லை. யாழ்குடா நாடு முழுவதுமே பரபரப்பு நிலவியது.

சுப்ரீம் கோர்ட்டில் நடந்த இந்த வழக்கைப் பற்றிய நடவடிக்கைகளை, தகவல்களை, குறுக்கு விசாரணைகளை பேப்பர் நிறுவனம் விசேஷ நிருபர்களை நியமித்து, மிக விரிவாகவும் விளக்கமாகவும் பிரசுரித்தது. வழக்கின் தினசரி நிலைப்பாட்டை மக்கள் அறிந்து கொள்வதற்கு ஏதுவாக செய்திகளை வெளியிட்டு வந்தது.

தீர்ப்புக்கான நாள் அண்மித்து விட்டது. நாளை தீர்ப்பு.

பெரும்பாலான மக்கள் எது விதமான அபிப்பிராய பேதமுமின்றித் தத்தமது மனசில் தமது இறுதித் தீர்ப்பை எழுதி வைத்து விட்டனர். தமது தீர்ப்பையே தீர்ப்பாகவும் எதிர்பார்த்திருந்தனர்.

கடைசியில் சுப்ரீம்கோர்ட் நீதியரசரின் தீர்ப்பும் வெளிவந்து விட்டது. இச்செய்தி பேப்பரில் வெளிவருவதற்கு முன்னரே வாய் மொழி மூலம் செவி வழியாக நகரமெங்கும் பரவிப் படர்ந்து விட்டது. தக்க சாட்சியங்களின் அடிப்படையில் கொலைக் குற்றவாளியாகக் கோர்ட்டில் கணிக்கப்பட்ட காராளி முத்தையனுக்கும், நட்சத்திரம் செல்லையாவுக்கும் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் எனவும், குறிப்பிட்ட ஒரு திகதியில் இத்தூக்குத் தண்டனை கண்டி போகம்பரைச் சிறையில் நடைபெறும் எனவும் நீதியரசர் தமது தீர்ப்பில் இறுதித் தீர்ப்பளித்தார் எனவும் மக்கள் செய்தியை ஒலிபரப்பினர்.

இச்செய்தி ஊர் பூராவும் வெகுவிரைவில் பரவி விட்டது. அதற்காக யாருமே கவலைப்பட்டதாகக் கூடத் தெரியவில்லை. நீண்ட மாதங்களாக மக்களிடையே பரபரப்பையும் ஒருவித ஆர்வத்தையும் ஏற்படுத்தி வந்த இந்தக் கொலை வழக்கு, இத் தீர்ப்புடன் ஒய்ந்து போய் விட்டது. பரபரப்பு மட்டுப் படுத்தப்பட்டது.

தீர்ப்பு வழங்கியதற்கு அடுத்த நாள் சாயங்காலம் எங்களுக்குத் தகவல் கிடைத்தது. வதந்தி ரூபகமாகத்தான் இந்தச் சங்கதி எங்களுக்குக் கிடைத்தது.

என்னைப் போன்ற இள வட்டன்கள் ரெயில்வே நிலையத்தில் கூடி நின்றோம். தூக்குத் தண்டனைக் கைதிகளைக் கொண்டு போவதற்கு, ரெயிலில் அனுப்பக் காவல்காரர்கள், அழைத்துக் கொண்டு வரப் போகிறார்களாம் என்பதே எமக்குக் கிடைத்த அந்தச் செய்தியாகும்.

இது எங்களது ஆர்வத்தைத் தூண்டி விட்டது. மெயில் வண்டி வருவதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னரே மூடிய சிறைச்சாலை வானில் குற்றவாளிகள் எனத் தீர்ப்புக் கூறப்பட்டவர்களை ஆயுதப் பாதுகாப்புடன் அழைத்து வந்தனர். காவல்காரர்கள். நாங்கள் சில பொடிப் பயல்கள் கிறாதிப் பலகைகளின் நீக்கலுக்குள்ளால் வழி சமைத்துக் கொண்டு ஸ்டேசனுக்குள் புகுந்து பொறுப்பான இடத்தில் சிக்காரமாகக் குந்திக் கொண்டிருந்தோம். அடுத்த கட்டத்தையும் எதிர்பார்த்திருந்தோம்.

இருவருக்கும் கைவிலங்கு போடப்பட்ட நிலையில் பக்கம் பக்கமாக இருவர் பாதுகாப்புத் தர, உள்ளே அழைத்து வந்த காவலர்கள் இப்படியானவர்கள் தங்குவதற்காக அமைக்கப்பட்டிருந்த விசேஷ அறைக்குள் அழைத்துச் சென்றனர். ஸ்ரேசனில் பொலிசார், விடுப்புப் பார்க்கத் திரண்டிருந்த சனங்களை ஒரங்கட்டுவதில் முனைந்திருந்தனர். நாங்கள் சிறுவர்கள் என்பதாலும், தகுந்த மறைவிடத்தை முன்னரே தேடிக் கொண்டிருந்தவர்கள் என்ற காரணத்தினாலும் பொலிசாரின் கண்களுக்கு நாங்கள் தட்டுப்படவில்லை. தட்டுப்பட்டிருந்தாலும் நாம் சுழித்திருப்போம். ரெயில்வே ஸ்டேசனுக்கு அண்மையில் பிறந்து வளர்ந்தவர்களல்லவா, நாங்கள்?

கடைசிச் சந்திப்பு நிகழ்ந்தது. மனிதாபிமானமாக, காவலர்கள் விட்டுக் கொடுத்திருந்தனர். கிட்டே நெருங்க முடியாத தூரத்தில் - அதே சமயம் கதைக்கக் கூடிய இடைவெளியில் - காராளி காட்சி தந்தான். நட்சத்திரம் ஒதுங்கி நின்றான். சுற்றத்தவர் அதிகமில்லை. உருத்தானவர்கள் வார்த்தையாடிக் கொண்டிருந்தனர். பெண்கள் சுவரருகே விசும்பும் சத்தம் கேட்டது. கூட்டத்தில் ஒருவர் காவலருடன் இரகசியம் கதைத்துவிட்டு, சிகரெட், நெருப்புப் பெட்டியை நீட்டினார். கைவிலங்கு உரசிக் கொள்ள காராளி அவற்றை அலட்சியத்துடன் பெற்றுக் கொண்டான். தகவல் தெரிந்து பிரயாணிகள் குழுமத் தொடங்கினர். காராளியிடம் அதிக மாற்றமில்லை. இளைத்துக் காணப்பட்டான். அந்த நிலையிலும் ஒருவித கர்வம் கலந்த பாவத்துடனேயே பலரிடமும் பேசினான், சிரித்தான். முகபாவத்தில் அதே இறுமாப்புத் தோரணை. திமிர் கலந்த அலட்சியம்.

திடீரெனப் பரபரப்புத் தோன்றியது. கூடி நின்ற சனங்களை இடித்து விலத்திக் கொண்டு, தலையிலடித்த வண்ணம் கூச்சலிட்டவாறு வந்தாள், அந்த அம்மணி. சூழ்நிலையே அவள் வரவால் மாறிவிட்டது. குழறினாள். 'ஓ' என ஒப்பாரி வைத்தழுதாள். காராளி சைகை காட்டி அவளைக் கதைக்கும் தூரத்திற்கு அழைத்தான். காவலர்கள் சற்றே ஒதுங்கினர். இருவரும் பரஸ்பரம் இரகசியக் குரலில், ஏதோ பேசிக் கொண்டனர்.

ரெயில் வர ஆயத்தமான மணி ஓசை கேட்டது. சற்று நேரத்தில் ரெயில் வந்து நின்றது. சனங்கள் கலைந்தனர். இருவரையும் அழைத்துக் கொண்டு, காவலர்கள் ரயில் பெட்டியை நோக்கிச் சென்றனர். அந்த அம்மணியும் பின் தொடர்ந்தாள். நான் மேற்பாலத்தின் கீழ் படிக்கட்டில் இருந்து எழுந்து கொண்டேன்.

உயர் நீதிமன்றம் அப்பீலை நிராகரித்தது. கருணை மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. பின்னொரு நாளில் இருவரும் தூக்கிலிடப்பட்ட செய்தியை அதே வீரகேசரி பிரசுரித்துப் பிரசித்தப்படுத்தியது.

நாட்கள் சென்றன. அந்த அம்மணியை அயலில் காணவில்லை. மறைத்து வைத்திருந்த நகை நட்டுப் பணத்துடன் வேறொருவனைத் தொடுத்துக் கொண்டு இடம் மாறி மறைந்துவிட்டதாகக் கதை பரவியது.

என் அநுபவத்தில் இது மறக்க முடியாத ஒரு பாடம். மனுக்குல அக்கிரமம், கடைசியில் வீழ்ந்தே தீரும் என்பதை இந்தச் சம்பவம் எனக்கு எடுத்துக் காட்டியது. புத்தி புகட்டியது. வாழ்க்கைக்குப் புதிய அர்த்த பரிமாணத்தைத் தந்தது.



6

எங்கள் வீட்டு நெடிய முன் விறாந்தையின் கிழக்குப் பகுதியில் ஒரு பக்கத்தைத் தென்னங் கிடுகுத் தடுப்புகளால் சுவர் மறைப்புக் கட்டிக் கொண்டு அதற்குள் வாழ்ந்து வந்தவர்தான், எல்லிப் போலை ஆச்சி. வலு தன்மானமுள்ள கிழவி. யாருக்குமே தலை வணங்காத ஒரு பிறவி. வாழ்ந்து கெட்ட தனிக் கட்டை. கொஞ்சம் கலை உணர்ச்சியும் உண்டு. பிறவி நாட்டுக் கூத்து ரஸிகை!

வயசை எடுத்தவுடனே சொல்லமுடியாத தோற்றம். வெள்ளை வேட்டித் துண்டொன்றை அலம்பல் சிலும்பலாகக் கிழித்துப் போட்டு விட்டதைப் போன்ற தலைமயிர். சின்ன உருவம். முன்வாய்ப் பற்கள் இரண்டும்தான், மிஞ்சிப் போய் ஆடிக்கொண்டிருந்தன. அந்தப் பற்கள் மாத்திரம் தெரிய, நட்புணர்வுடன் சிரித்துப் பழகும் தன்மை. எவருக்கும் எந்த வேளையிலும் உதவும் மனப்பான்மை. இவற்றின் மொத்த உருவமாகக் காட்சி தந்தவர்தான், எல்லிப்போலை ஆச்சி. எனக்கு ஆரம்ப காலக் கலைக் குருவாக இருந்தவரும் இவரேதான்.

எங்களுக்குக் கிட்டிய இரத்த உருத்தானவரல்ல, இவர். நெருங்கிய சுற்றத்தவருமல்ல. ஆனைக்கோட்டைப் பகுதியில் இருந்து எப்போவோ வந்து இந்த விறாந்தையில் இடம் பிடித்துக் கொண்டவர் இந்தக் கிழவி, எனப் பேச்சு வாக்கில் கேள்விப்பட்டிருந்தேன். இவரைத்தேடி மாசத்துக்கு ஒரு தடவை குருசுமுத்து என்ற தடியன் ஒருவர் வந்து சண்டை போட்டுக் காசு வாங்கிக் கொண்டு போவதை அடிக்கடி கண்டிருக்கின்றேன். அவர் கிழவியின் மகனாம். காசு வாங்குவதற்காகவும் அதற்காகச் சண்டைபோடுவதற்காகவும் மாசம் ஒரு தடவை வந்து போவார், மகன் குருசுமுத்து.

ஆச்சியோ சின்ன மனுஷி. ஆனால் அவரது மகனோ பெரிய ராட்சதன். கிடா மீசை, பெரிய முடா வண்டி, சிவந்த கண்கள். பீம உருவம்.

அயலில் ஒருவர் இருந்தார். பெரியதம்பி என்று பெயர். பெரிய தண்ணிச்சாமி அவருக்கு இவர் சிநேகிதம். மாசத்தில் ஒரு தடவை குருசுமுத்தர் வந்துவிட்டால், ஒழுங்கை அல்லோல கல்லோலப்படும். ஒரே தூஷணை வார்த்தைப் பிரயோகங்கள் அவரது வாயிலிருந்து சிந்திச் சிதறி நடனமாடும். இத்தனைக்கும் தனக்கும் தனது சிநேகிதனுக்கும் குடிக்கக் காசு கேட்டுத்தான் ஆச்சியுடன் சண்டை பிடிப்பார். வலுக்கட்டாயமாக ஆச்சியை நச்சரிப்பார். வாயில் வந்தபடி தாயை ஏசுவார். எல்லாமே ஊத்தை வார்த்தைகள்.

ஆச்சி காசு கொடுக்க மறுப்பார். உடனே மகனுடைய ஆவேசப் பேச்சுத் தொடரும். இவருக்குப் பக்கப் பாட்டாக 'தண்ணி வண்டி' பெரியதம்பியரும் சேர்ந்து கொள்வார். மனுஷர் மாஞ்சாதி காது கொடுக்க முடியாத வசவுச் சொற்கள் நீந்தி விளையாடும். நல்லவர்கள் காதைப் பொத்திக் கொள்வர்.

'இப்படிப்பட்ட பீமனை ஆச்சி எப்படிப் பெத்தெடுத்தவ?' என்ற சந்தேகம் நெடு நாட்களாகவே எனக்குள் கிடந்து புழுங்கியதுண்டு. 'ஏன் இந்த ராட்சதனுக்கு இப்படிப் பயப்பிடுறா? என்ன காரணமாக இருக்கும்?'

இப்படியான ஒரு நாளில் குருசுமுத்தர் ஒழுங்கையில் நின்று வாய் வல்லமை காட்டிப் பேசிக் கொண்டிருந்தார். நல்ல இருட்டு. தூஷணை வார்த்தைகள் எல்லை கடந்து விட்டன. என் சின்ன நெஞ்சில் ஆத்திரம் பீறிட்டுக் கிளம்பியது. என்ன வழி என்றே தோன்றவில்லை. ஐந்தாறு கற்களைப் பொறுக்கி எடுத்தேன். பக்கத்தேயுள்ள பருத்த வேப்பமரத்து மறைவுக்குள்ளே ஒதுங்கி நின்று, விட்டேன் எறி. முன்னால் தகரப் படலை. ஒரே நேரத்தில் ஐந்தாறு பெரிய கற்கள் படீரெனத் தகரத்தில் மோதிய சத்தம் அந்தச் சந்தடியற்ற இரவில் பலமாகக் கேட்டது. ''ஆரடா அவன்?" என்ற குரல் கேட்டதும் இடது கையில் வைத்திருந்த கற்களை வலது கைக்கு மாற்றி விட்டேன், எறி! தகரப் படலை ஒருகணம் அதிர்ந்தது. சத்தம் 'கப்சிப்!' அதன் பின் பேச்சு மூச்சில்லை.

இந்த 'டெக்னிக்' வெற்றியளித்ததைக் கண்டு, என் மனசுக்குள் சொல்லொணாத மகிழ்ச்சி. அடுத்த முறையும் காத்திருந்தேன். வந்தார். வார்த்தைப் பந்தல் போட்டார். ஆனால் முன்னர் போல, வார்த்தை அலங்காரமில்லாமல் சுருதி சற்றுக் குறைந்திருந்தது. இருந்தாலும் சத்தம் போட்டார். நான் என்னுடைய கல் ஆயுதத்தைப் பிரயோகித்தேன். தோன்றிய வேகத்திலேயே சத்தம் திடீரெனக் குறைந்தது. முடிவில் அடங்கிப் போய்விட்டது.எனக்கு வெற்றி! எனது இந்தக் குறுக்கு வழி நடவடிக்கைக்குத் தற்காலிக வெற்றி!

என் வாழ்க்கையில் ஒரு புதிய பாடத்தைக் கற்றுக் கொண்டேன்.புதிய அநுபவத்தைக் கிரகித்துக் கொண்டேன். இது எனது சின்ன வயசு அநுபவம்.

அந்தத் துடுக்கான நாட்களை இன்றும் நினைத்துப் பார்க்கிறேன். என்னுடைய குண ஆளுமையை இப்படிச் சின்னச் சின்ன சம்பவங்களே உருவாக்கி வந்துள்ளன என்பதை இப்போது உணருகின்றேன். அந்தக் குறும்புத் தனம் என்னுள் புதிய வடிவமெடுத்தது.

ஆச்சிக்கு என்மீது அலாதியான ஓர் அன்புண்டு. அதற்குக் காரணம் இருக்கின்றது. என்னை எப்பொழுதுமே ``மக்கா..... மக்கா.....!"என்றே ஆச்சி அழைப்பார். என்மீது என்றல்ல, என்னோடொத்த வயசுள்ள சிறுவர்கள் எல்லோருமே அவருக்கு 'மக்கா' தான். அவருடைய பிள்ளைகள் தான்.

நான் ஏதாவது குறும்பு செய்துவிட்டால், அல்லது ஏவுகின்ற வேலைகளைத் தட்டிக் கழிக்க முனைந்தால், ``மக்கா, மருத்துவிச்சி பொக்குள் கொடியை வெட்டின கையோட, துடைச்சுக் கழுவி என்ரை கையிலை தான் உன்னை முதல் முதலிலை தூக்கிப் போட்டவ. மண்ணிலை உன்ரை தேகம் படுறத்துக்கு முன்னம், என்ரை கைச்சூடு பட்டு வந்தவன்தான் மக்கா, நீ!" எனக் குற்றம் சாட்டுவதுபோல, அதே சமயம் கோபப்படாமல் சொல்வார், ஆச்சி. இந்தத் தார்மீகத் தாக்குதல் என்னைப் படியவைத்துவிடும். பணியவைத்துவிடும்.

ஆச்சிக்குத் தினசரி பல சோலிகள் உண்டு. முக்கியமாகப் பிள்ளைத் தாச்சிகளுக்குப் பரிகாரம் பார்க்கிறது. பிள்ளை பெற்ற இளந் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் பத்தியம் பார்ப்பதுவரை ஆச்சிக்கு நிறைய வேலைகள் உண்டு. பிள்ளை பெற்ற தாய்மார்களுக்குக் கசாயம் அரைத்துக் கொடுப்பது முதல், சரக்குத் தண்ணி வைத்துப் பத்தியச் சாப்பாடு பண்ணி வைப்பது ஈறாக - அத்துடன் நொச்சி, பாவட்டை, ஆமணக்கு இலை குழைகளைத் தேடியெடுத்து 'ரா அடுப்புத்' தண்ணீர் வைத்து விடிகாலையில் வெந்நீர் வார்ப்பது உட்பட - சகல வேலைகளையும் தனது சொந்த மகளுக்குச் செய்வது போலச் செய்து வருவதுதான் ஆச்சியின் தொண்டு அல்லது சுபாவம். இதனால் ஆச்சி மீது எனக்குத் தனிப் பிரியம். தனிப் பற்று.

இந்த விதிமுறைப்படி தான் நான் பிறந்த சமயத்திலும் எனது தாயாருக்கும் மருத்துவப் பணிவிடைகள் செய்து என்னைத் தேகாரோக்கியத்துடன் இந்தப் பூமிப் பந்தில் நடமாட வைத்தவர், ஆச்சி. இந்த நன்றிக் கடன் எப்போதுமே என் மனசில் நிலை கொண்டிருந்தது. அதற்காக ஆச்சிக்கு நான் கடமைப்பட்டவன் போன்ற உணர்வு என் நெஞ்சில் எப்போதுமே இருந்து வந்துள்ளது.

ஆச்சிக்கு என்னைப் போன்ற சிறுவர்களின் உதவி வெகுவாகத் தேவைப்பட்டது. ஆச்சிக்கு நிறைய வேலைகள் இருந்த காரணத்தால், வெளியே போய் அலுவல்கள் பார்த்துவர இயலவில்லை. எனவே என்னைப் போன்றவர்களின் உதவியை அவர் நாடினார். குறிப்பாக நொச்சி, பாவட்டை, ஆமணக்கு இலை குழைகள் ஒரே ஏரியாவில் கிடைப்பது அரிது. பிள்ளை

பெற்றவர்களுக்கு பேறு கால நோ மாறவும், தேக அலுப்புத் தீரவும் தொடர்ந்து ஆறு ஏழு நாட்கள் வெந்நீர் வார்க்க வேண்டும். மேலே சொன்ன இலை குழைகள் அவித்து, இளஞ்சூட்டுடன் விடிகாலையில் வெந்நீரில் குளிக்க வைப்பது ஆச்சிக்குக் கைவந்த கலை. அதற்கு மூலப் பொருட்களான இலை, குழைகளைத் தேடித் திரிந்து பிடுங்கிக் கொண்டு வந்து சேர்ப்பது நம்மைப் போன்றோர்களின் வேலை. சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் இதுதான் எமக்குப் பிரதான தொழில். ஆரியகுளம், தேவரிக்குளம், வலல்லாவல்குளம், புல்லுக்குளம் என யாழ்ப்பாண நகரத்திலுள்ள பிரதான குளக் கரைகளுக்குப் படையெடுத்து விடுவோம். தோளில் போட்ட சாக்குப் பையுடன் காலையில் புறப்பட்டால் மத்தியானம் கழிந்த பின்னர் தான் வீடு வந்து சேர்வோம். பல சந்தர்ப்பங்களில் மத்தியானச் சாப்பாடே சாப்பிட்டிருக்க மாட்டோம். வீட்டிலோ அம்மாமார் ஆச்சியைத் திட்டுவார்கள். ''இந்த எல்லிப் போலைக் கிழடி பொடியளை நாசமறுத்துப் போட்டுது! அதுக்கென்ன? எல்லாத்தையும் கண்டு கழிச்சு விட்டுது! பாவம், பொடியள்,சோறு தண்ணி இல்லாமல் குளத்தங்கரையெல்லாம். சுத்திப் போட்டு வருகுதுகள்!'' எனத் திட்டுவதுடன், சில தாய்மார்கள் தம் மக்களின் முதுகுகளில் மிருதங்கம் வாசிப்பதையும் பழக்கப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

நாங்களும் சும்மா தொண்டுழியம் செய்யப் புறப்பட்டு விடுவதில்லை. ஆச்சிக்கும் நமக்கும் எழுதாச் சட்டமொன்று உண்டு. கொண்டு வருகிற சாக்கு நல்லா ஊதிப் பருத்திருந்தால் ஆளாளுக்கு ஐந்து சதக் காசு தருவார். அந்தக் காலத்தில் ஐந்து சதம் என்பது மிகப் பெரிய தொகை. ஒரு சதம் கொடுத்தால் கை நிறையக் கச்சான் அள்ளித் தருவா பொன்னாச்சி மனுசி. அடைக்கலமாதா கோயிலுக்குப் பின் பக்க கேற்றடிதான் பொன்னாச்சி மனுஷியின் வியாபார ஸ்தலம். பள்ளிக்கூடம் போகும் போதும் வரும்போதும் அவவிடம் கச்சான் வாங்கிக் கொறிப்போம். இதனால் பொன்னாச்சி மனுஷியின் பிரதம வாடிக்கையாளராக நாம் மாறியிருந்தோம். ஆச்சி தரும் காசு சிறுவர்கள் மட்டத்தில் எம்மைப் பணக்காரராகத் தோற்றம் காட்ட உதவியது. இரண்டு சதம் பட்டம், ஒரு சதம் போளை நூற்பந்து. எப்படியும் மாசம் இருபது இருபத்தைந்து சதங்கள் - அதாவது கால் ரூபாய் சம்பாதித்து விடுவோம். அதுவும் உழைத்துச் சேமித்த பணம்! சொந்தப்பணம். 'எங்கட காசு!'

இந்த விஸ்தீரணமான பகைப்புலத்தில் ஏன் எல்லிப்போலை ஆச்சியை அறிமுகப்படுத்துகிறேன் என்றால், அதற்கு ஓர் அடிப்படைக் காரணம் இருக்கின்றது. முக்கியமான சங்கதியுண்டு . ஒரு வரலாறு உண்டு.

ஆச்சி ஓர் அபாரமான ரஸிகை. பூந்தான் ஜோசேப்பு என அக்காலத்தில் பிரபலமாகப் பேசப்பட்ட நாட்டுக் கூத்துச் சக்கரவர்த்தி அவர்களின் பிரதம ரஸிகை. அபிமான விசிறி. பூந்தானின் நாடகப் பிரியை.

இந்த ரஸிகத்தனம்தான் என் சிறுவயசு வாழ்க்கையைத் திசை திருப்ப

உதவியாகத் திகழ்ந்திருக்க வேண்டும்! அதை இப்போது யோசிக்கின்றேன்.

எங்கு கூத்துக்கள் நடந்தாலும் ஆச்சியை அங்கு காணலாம். அந்த ரஸிகைக்கு ரஸிகனாக மெல்ல மெல்ல நான் மாறத் தொடங்கினேன். அநேகமாக ஞாயிறு இரவுகளில் தான் நாட்டுக் கூத்து ஆரம்பிக்கும். ஆச்சி கூத்துப் பார்க்க மாலை ஆறு மணியளவில் இருந்தே ஆயத்தப்படுத்தி விடுவார். ரஸிக வட்டாரச் சிறுவர்களாகிய நாங்களோ பகல் சாப்பாட்டுக்குப் பின் ஒரு சின்னக் குட்டித் தூக்கம் தூங்கி, எங்களை நாங்களே, தயார்படுத்திக் கொள்வோம். ''அங்கை வந்து ஆராவது நித்திரை கொண்டீர்களோ, அடுத்தமுறை அவையளைக் கூத்துப் பக்கம் கூட்டிப்போக மாட்டன்!" என ஆச்சி அறுதி உறுதியாகக் கூறிவிடுவார். ''கவனமிருக்கட்டும். நான் சொல்லிப்போட்டன்....! கவனம்.....!"

வாரத்தின் கடைசி நாட்களில் நல்ல பிள்ளைகளாக வீட்டில் பேர் வாங்கி, கூத்துக்குப் போக அப்பாவிடம் அனுமதி பெற்று விடுவோம். சில வீடுகளில் ஆச்சிக்குத் திட்டுகள் நடப்பதுண்டு. ''இந்த அறுந்த கிழவி பொடி பொட்டையளை எல்லாம் நாசமாக்கிப் போட்டுது!"

ஒரு கையில் கந்தறுந்து போன, கம்பியில் இணைக்கப்பட்டிருந்த அரிக்கேன் லாம்பு. மறுகையில் நீண்டு கொண்டுள்ள பூவரசம் கம்பு, கக்கத்தில் தானாகவே இழைத்த பனை ஓலைப் பாய். இத்தனை சகிதம் இளம் பட்டாளம் புடை சூழ, ஆச்சி கூத்துப் பார்க்கப் புறப்படுவதே ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும்.

ஆச்சி கொஞ்சம் முசுடு. பலாப்பழ முரடு. உள்ளே தோண்டிப் பார்த்தால் ஒரே இனிப்பு இனிப்பான சுளை. எங்களை அவர் தன்னைப் போன்ற சம ரஸிகர்களாகவே நடத்தினார். தான் ரஸித்தவைகளையும் சொல்லிச் சொல்லித் தூண்டி எங்களையும் ரஸிக்க வைத்த பெருமை, ஆச்சிக்கு உண்டு. அந்தக் காலத்துத் தரமான ரஸிகை. நாட்டுக் கூத்துக்கென்றே பிறவியெடுத்த மகா ரஸிகை.

ஆச்சி புடை சூழ நாங்கள் பல ஒழுங்கைகளைக் கடந்து போக வேண்டியிருக்கும். எங்களது அரவத்தையும் மங்கல் வெளிச்சத்தையும் காலடி ஓசையையும் கேட்டு, ஒழுங்கையே அலறும்படி நாய்கள் குரைக்கும், துரத்திக் கொண்டு வரும். ஆச்சி எங்களை ஒரு ஓரமாகத் தள்ளிவிட்டு, பூவரசங் கம்பை உயர்த்திப் பிடித்த வண்ணம், களத்தில் ஒரு போராட்ட வீராங்கனைக்கு வந்துவிடும் துணிச்சலுடன் முன்னேறிப் போவார். நாங்களும் குதூகலத்துடன் பின் தொடர்ந்து செல்வோம். இப்படிப் போகும் சந்தர்ப்பங்களில் ஒரு நாள் நாயொன்று சிமிக்கிடாமல் பின்னால் வந்து நமது கூட்டாளி ஒருவனின் காற்சட்டை நுனியைப் கவ்விப் பிடித்து விட்டது. அவன் வீரிட்டான். நிலைமையின் அவலத்தை உணர்ந்த ஆச்சி சடாரெனத் திரும்மி. வயசுக்கு மீறிய ஆற்றலுடன் கைத்தடியால் நாயின் தலையில் ஒரு போடு போட்டார். நாய் 'வாள் வாள்' என அலறியபடியே பக்கம்

பாராமல் ஓட்டமெடுத்தது. எங்களுக்கெல்லாம் ஒரே குதூலம். அன்றிலிருந்து ஆச்சி எங்களுக்கெல்லாம் `வீர ஆச்சி` யாகக் காட்சி தர ஆரம்பித்தார். பின்பற்றத் தக்க வீரநாயகி!

ஆச்சியின் இந்த வீர ஆளுமை எங்களுக்கெல்லாம் ஆச்சியின் மீது தனி மதிப்பையே வளர்த்துவிட்டது. அவர் மீது தனி மரியாதை உயர்ந்தது.

எல்லிப்போலை ஆச்சியைத் தரமான நாட்டுக்கூத்து ரஸிகை எனச் சொல்வதுடன் சேர்த்து, வாழ்வின் சுவையறிந்தவர், என்றுகூடச் சொல்லலாம். மாவிட்டபுரம் தளிர் வெற்றிலையையும், தாவடிப் புகையிலையையும் தேடித் தேடி ஆய்ந்து வாங்கி வந்து, களிப்பாக்குடன் வெண்ணைய்ச் சுண்ணாம்பு கலந்து ஆச்சி வெற்றிலை போடும் அழகை இன்றுகூட, நின்று ரஸிக்கலாம். அப்படியொரு சுவையுணர்வு மிக்கவர், ஆச்சி. சுருட்டுப் புகைக்கக் கூட, அந்தக் காலத்தில் புகழ் பெற்ற வை. சி. சி. கு. திறம் சுருட்டைத்தான் தேடி வாங்கிப் புகைத்துத் தள்ளுவார். `ஆச்சி இரவில் தூங்குவது கூட இல்லையோ?` என எனக்கு அடிக்கடி சந்தேகம் எழும்பும். பால் கலவாத தேநீர்தான் அவரது பிரதான உணவு. வெற்றிலை போட்டுச் சுவைப்பதுதான் அவரது பிரதான முக்கிய பொழுதுபோக்கு. எந்நேரமும் இடியுரல் ``டக் டக்`` என்ற ஓசை வெளி வ்ராந்தையில் இருந்து கேட்டுக் கொண்டேயிருக்கும். நட்ட நடுச் சாமத்தில் கூட, அந்த இடி உரல் ஓசை கேட்கும். `ம்..... ம்! எனச் செருமல் சத்தமும் இடையிடையே விட்டு விட்டுக் கேட்கும்.

ஆச்சி கள் அருந்துவது வழக்கம். அது தவறானதென்று நான் கருதுவதில்லை. ஒருநாள் அவர் வெளி ஆட்களுடன் கதைத்துக் கொண்டிருக்கும் சமயம், நான் குறுக்கிட்டுச் சொன்னேன்: ``ஆச்சியாச்சி! ஆறுமுகண்ணை ஒரு போத்தலிலை கள்ளுத் தந்திட்டுப் போனவர். அதை நீ படுக்கிற இடத்திலை கடகப் பெட்டியால கவனமா மூடி வைச்சிருக்கிறன்!`` இப்படிச் சொன்ன என்னை ஒரு கணம் விறைச்சுப் பார்த்தார். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. அந்தத் தவறு பின்னர்தான் தெரிந்தது. ஆட்களுக்கு முன்னால், தன்னைக் குடிகாரியாகக் காட்டிக் கொடுத்துவிட்டேனாம்! அதற்குத் தண்டனை அடுத்த கிழமை பனை வளவிற்குள் நடந்த கூத்திற்கு ஆச்சி என்னைக் கூட்டிக்கொண்டு போக மறுத்துவிட்டார். எனக்குப் பொல்லாத கோபம். பயங்கர இழப்பு.

பின்னர் நான் கெஞ்சிக் கூத்தாடி, ஆச்சியைச் சமாதானப் படுத்த வேண்டி ஏற்பட்டு விட்டது. சமாதானப்படுத்தி விட்டேன்.

எங்கள் வீட்டிற்கு மிக அருகாக இருந்த இடம்தான் பலவவவு. அங்கு அடிக்கடி கூத்துக்கள் நடைபெறும். போவோம். அதேபோல, கரையூர், பாஷையூர், நாவாந்துறை போன்ற பிரதேசங்களில் நாட்டுக் கூத்துகள் இடம்பெறுவதுண்டு. சற்றுத் தூரம்தான். ஆர்வம் தூரத்தை இலட்சியம் செய்யாது. இரவு எட்டு மணிக்குப் புறப்பட்டுப் போனோம் என்றால், காலை பலபலவென்று விடியத் திரும்புவோம். போகும் போது இருக்கும் உற்சாகம்

வரும்போது இருக்காது. தூக்கக் கலக்கத்துடன் தள்ளாடித் தள்ளாடி நடப்போம். சுணங்கிச் சுணங்கி நடந்து வருவோம்.

இப்படியான ஒரு நாட்டுக் கூத்து மேடையில் தான் நான் முதன் முதலில் பூந்தான் ஜோசப்பு அவர்களைச் சந்தித்ததுண்டு. கூத்தில் பிரதான பிரபல, நடிகர்கள் பிற்காட்சிகளில்தான் மேடையில் தோன்றுவார்கள். சிறுவர்கள் என்ற காரணத்தால் ஒரு கட்டம் வரை கூத்துப் பார்த்து விட்டு, அப்படியே படுத்துக் கண்ணயர்ந்து விடுவோம். வெடி கேட்கும். சுவைஞர்களிடையே அசாதாரணமான பரபரப்புத் தோன்றும். ஆச்சி ஒவ்வொருவரையும் தட்டி எழுப்புவார். ''எழும்புங்கடா.... எழும்புங்கோ! ரெண்டாம் ராசா வந்திட்டார்!'' எனச் சொல்லிய வண்ணம், எங்களை எழுப்புவார். ரஸிகர்கள் மத்தியில் பரபரப்புத் தோன்றும்.

நாங்களும் துடித்துப் பதைத்து எழும்பி, ஆர்வம் மேலிட மேடையை நோக்குவோம். பாடிக்கொண்டே ராசா மேடையில் காட்சி தருவார். ''தண்டார் மணிமாலை அணிந்திடும் தராதி மன்னனை ஏன் அழைப்பது?'' என்ற பாடலுடன் மேடை கலகலப்பாகிவிடும். லைற் வெளிச்சத்தில் ஜிகினாச் சரிகைகள் பளபளக்க, செங்கோலை ஓங்கிக் குத்தியபடி, தலையை அங்குமிங்கும் சிலுப்பிய வண்ணம், ஒரு திருப்புத் திரும்புவார். லைற் வெளிச்சத்தில் டாலடிக்கும் மணிமுடி, கண்ணைப் பறிக்கும். அதே ராஜகம்பீரத்துடன் ஒரு நடை நடந்து அவருக்கென்றே போடப்பட்டிருக்கும் சிம்மாசனத்தில் போய் அமர்ந்து கொண்டு, சனங்களை ஒரு வெற்றிப் பார்வை பார்த்து, புன்சிரிப்புச் சிரித்துவைப்பார். அரங்கம் முழுவதுமே புதுச் சுறுசுறுப்புப் பெற்றுத் திகழும். கைதட்டல் தொடந்து ஒலிக்கும்.

ஆர்வ மேலீட்டால் அடைப்புப் பொட்டுக்குள்ளால் புகுந்து முழு ஒப்பனையில் இருந்த பூந்தான் ஜோசப் அவர்களை ஒரு தடவை தொட்டுப் பார்த்தது கூட, இன்னும் என் நெஞ்சில் பசுமையாக இருக்கிறது. பூந்தானும், பக்கிரி சின்னத்துரையும் எனது மனசுக்குப் பிடிச்ச அபிமான நடிகர்கள். இவர்கள் இருவரையும் தவிர, அந்தக் காலத்தில் கரையூரில் பிரசித்தி பெற்ற நட்டுவன் அந்தோனி, சுவாம்பிள்ளை, பக்கிரி சின்னத்துரை, ராசாத்தம்பி, சுவாமிநாதர் ஆகியோரும் பாஷையூரில் குணசிங்கம், பாவிலுப்பிள்ளை என்போர், நாவாந்துறையில் வின்சன் ரிப்போல், பெலிக்கான் செல்வம், பாக்கியம் போன்றவர்கள் நாட்டுக்கூத்துத் துறையில் பெயர் பெற்றவர்களாக விளங்கி வந்தனர். சோடனை, சீன் வகைகளுக்குப் பிலிப்பு, பெஞ்சமின் போன்றவர்களின் பெயர் அக்காலத்தில் வெகுவாகப் பிரசித்தம். கூத்தென்றால் கூத்து, அப்படியொரு கூத்து! ரஸிகப் பெருமக்களை மெய் மறக்க வைக்கும் கூத்துக்கள்.

இன்று அமைதியாக இருந்து நிதானமாகச் சிந்தித்துப் பார்க்கையில், ஓர் உண்மை புலப்படுகின்றது. இந்த நாட்டுக் கூத்து ரஸனைதான் அந்தச் சின்ன வயசில் என் மனதில் ஆழமான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது

என்பதை, நிறைவாகவே இப்பொழுது உணர்ந்துகொள்ளுகின்றேன். மனோதத்துவம் நன்கு கற்ற ஆரம்பப் பள்ளிக்கூடத்து ஆசிரியைப் போல, எல்லிப்போலை ஆச்சி, எனது கலை உணர்வைத் தன்னையறியாமலே நெறிப்படுத்தியுள்ளார். அந்த ஆரம்பகால வழி நடத்தல்தான் பிற்காலத்தில் என்னை ஓர் எழுத்தாளனாக உருவாக்கித் தந்திருக்கலாம் என்பதை பிற்காலத்தில் மனமறிந்து இப்போது என்னால் உணரக்கூடியதாக உள்ளது. காந்தியடிகளின் வாழ்வைச் செம்மைப்படுத்துவதில் அரிச்சந்திரன் நாடகம் பெரும் பங்கு வகித்ததாகப் படித்திருக்கின்றேன். எல்லோரும் சிந்திக்க வைத்து, ரஸிக்கவைத்து, சிரிக்க வைத்து மெல்ல மெல்ல, கட்டம் கட்டமாக ஆளுமைப்படுத்தியதில் நாட்டுக் கூத்துக்கள் பெரும் பங்கு வகித்துள்ளன என்பதை நிச்சயமாக இப்போது உணர்ந்து கொள்ளுகின்றேன். ஆச்சி என் கலை உணர்வைச் செழுமைப்படுத்துவதற்கு ஆரம்பகால ஆசிரியையாகப் பணியாற்றியுள்ளார் என்பதையும் புரிந்துகொள்ள முடிகின்றது. அந்த ஆச்சி ஓர் அபூர்வப் பிறவிதான். எனக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம்.

பனை வளவு, கரையூர், பாஷையூர், நாவந்துறை மேடைகளில் நான் சிறுவயசில் பார்த்த எல்லா நாடகங்களுமே கிறிஸ்தவ நாட்டுக் கூத்துக்கள் தான். மதப்பிரசாரம் உள்ளோட்டமாகக் கொண்ட கூத்துக்கள்தான், பெரும்பாலும், இந்தப் பகுதி மேடைகளில் மேடையேற்றப்பட்டு வந்திருக்கின்றன. பொதுவான கருத்துக்களை உள்ளடக்கமாகக் கொண்ட கூத்துக்கள் பெரும்பாலும் இடம் பெறுவதில்லை. பிற்காலத்தில் பல்வேறு நாட்டுக் கூத்துக்களைப் பார்த்து இருக்கின்றேன்.

அந்தக் காலச் சூழல் அப்படி. மேடைகள் அப்படி. பிரதேச மக்களின் மத அபிலாஷைகள் அப்படி. கூத்து வடிவங்கள், உள்ளடக்கங்கள் அப்படி. எனவே தான் நாட்டுக் கூத்துக்களில் மதப் பிரசார நெடி மேலோங்கியிருந்தன. இருந்த போதிலும் நாட்டுக் கூத்துக்கு இயல்பான தன்மைகளும், பாடல்களும், பேச்சுக்களும், உடல் அசைவுகளும், நடிகர்களின் நடிப்பு ஆளுமைகளும் மக்களைக் கவர்ந்து கொண்டிருந்தன என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். மக்கள் இந்தக் கலையில் அப்படியே ஊறிப்போயிருந்தனர். ரஸித்து மகிழ்ந்திருந்தனர்.

இப்படியான ரஸிகக் கவர்ச்சி இல்லாதிருந்தால், விடிய விடிய மக்கள் விழித்திருந்து பார்த்து ரஸித்திருக்க மாட்டார்கள். தொடர்ந்து, அந்தக் கூத்துக்களைப் பலதடவைகள் மேடையேற்றியிருக்கவும் முடிந்திருக்காது. அது நிலைத்திருக்கவும் இயலாது. இன்று அலை பற்றிப் பேசி இருக்கவும் மாட்டோம்.

அப்படியொரு பிணைப்பிருந்தது, மக்களுக்கு நாட்டுக் கூத்தின் மீது! மெல்ல மெல்ல நவீன சினிமாத் தியேட்டர்கள், யாழ்ப்பாண நகரில் அதிகரித்து வந்துள்ள போதிலும் கூட, மக்கள் நாட்டுக் கூத்தை ரஸிக்க முன் வந்தார்கள். கூடி ரஸித்தார்கள். ஆதரிக்க முன்வந்தார்கள். அது ஒரு

தனிக்கலை. சுவாரஸ்யமான கலை. நேரடியாக மக்களை ஆட்கொள்ளும் கலை.

ஆச்சியின் ரஸனைக் கூட்டமும், பொடி நடையில் பலமைல் தூரம் நடந்து சென்று கூத்துக்களை ரஸிக்கத் தவறுவதில்லை. 'கற்பலங்காரனும் கற்பலங்காரியும்' என்ற நாட்டுக் கூத்து குருநகர் கடற்கரை மைதானத்தில் நடந்தது, இன்னமும் எனது ஞாபகத்தில் இருக்கின்றது. அப்பப்பா! எத்தனை அற்புதமான நாட்டுக்கூத்து அது! இன்று நினைத்தாலும் நெஞ்சு பூரிக்கின்றது. விம்முகின்றது.

பிற்காலத்தில் உலகின் அதி சிறந்த சினிமாப் படங்களான 'கோன் வித் த வின்ட்', 'பைசிக்கிள் திவ்ஸ்', 'பிரிட்ஜ் ஒன் த ரிவர் க்வாய்,' 'பென்ஹர்,' 'ரென் கொமாண்ட்மென்ஸ்' போன்ற படங்களைப் பார்த்திருக்கின்றேன். ரோ ஷியாம் பெனகல், கிரிஷ் கர்னாட், கோவிந் நிஹாலனி, அகிரோ குரோவா போன்றவர்களின் சர்வதேசப் புகழ் மிக்க படங்களையெல்லாம் தேடித் தேடிப் பார்த்திருக்கின்றேன். ஆனால், அந்த வயசில் அந்த மன உணர்வுகளைத் திருப்திப் படுத்தும் நேரடி மானுட ஆளுமையை - முப்பதடிக்கு முன்னால் வீற்றிருந்து ரஸித்த உணர்வை, என்னால் என்றுமே மறக்க இயலவில்லை. அது எனது ரஸிகத்தன்மையின் இளமைக்காலம். இளம் வயசுப் பொற் காலம்!

இதன் காரணமாகவே பூந்தான் ஜோசப்பு அவர்களின் உருவப் படத்தை 73ம் ஆண்டு ஜூன் மாசத்தில் மல்லிகையின் அட்டையில் பிரசுரித்து, நான் அவர்மீது கொண்டுள்ள ஆழமான கலை அபிமானத்தை வெளிப் படுத்தியிருந்தேன். அவரிடம் நேரில் சென்று கொடுத்தேன். அவரை நமஸ்கரித்தேன்.

நான் ரொம்பவும் ரஸிக்கின்றவர்கள் உலகத் தரத்தின் மர்லன் பிராண்டோ, கிளார்க் கேபிள், கிரகிரி பெக், டைரன் பவர், பீட்டர் உஷ்டினாவ் ஆகியோர்கள். தமிழக நடிப்பில் எஸ். வி. சுப்பையா, கமலஹாசன் முதலானோர். இவர்களை வெறும் செலுலாயிட் பிலிமில் கண்டு களித்திருக்கின்றேனே தவிர, நேருக்குநேர் அவர்களது கலை ஆளுமையைத் தரிசித்தவனல்ல. மாறாக, பூந்தானையும் பக்கிரியையும் மற்றும் நமது மண்ணின் நடிகர்களை முகம் பார்த்து, ரஸிக்கத் தொடங்கியது மாத்திரமல்ல, நேசிக்கவும் கற்றுக் கொண்டவன், நான். அவர்களது திறமையை மனம் திறந்து போற்றினேன். அதற்காகப் பெருமைப்பட்டேன்.

விஞ்ஞான யுகத்தின் அற்புத அறிமுகம்தான் சினிமாக் கலை. அதே சமயம், தொழில் நுட்பம், கமராக் கோணம், லைட், செட்டிங், நடிப்புத் தவறைத் திரும்பவும் திருத்தி எடுப்பது போன்ற காரணங்களால் மனித ஆளுமை சிதறிப் போய் விடுகின்றது. பன்முகச் சிந்தனைகளை இணைத்து முடிவில் கலையாகத் தரப்படுகின்றது. பலதரப்பட்டவர்களின் உழைப்பில் உருவாகி வருவது தான், சினிமா.

நாட்டுக் கூத்து மேடைகளில் தனி மனித ஆளுமையின் மிகச் சிறந்த வெளிப்பாட்டை என்னால் கண்டுணர முடிந்தது. அந்த ரஸனையில் தோய்ந்து தோய்ந்து, என்னை நானே புடம் போட்டுக் கொண்டேன். கலையுலகை நிமிர்ந்து பார்க்கத் தொடங்கினேன். எனக்கு வியப்பாக இருந்தது.

மெல்ல மெல்ல நான் நானாக உருவாகத் தொடங்கினேன்.



7

1939 ஆம் ஆண்டு ஜனவரி மாசம் செம்மா தெருவிலுள்ள எனது அப்பாவின் கடையான ஜோசப் சலூனுக்குத் தொழில் பழக அனுப்பி வைக்கப்பட்டேன். அந்தக் காலத்தில் நானொரு குழப்படிக்காரப் பொடியன். வலு துடியாவரம். எதையுமே நோண்டிப் பார்க்கும் இயல்பான குணம் கொண்டவன். அந்தக் காலத்தில் அப்பாவின் சலூனை மேற்பார்வை செய்து வந்தவர் சங்கரன் என்பவர். இவர் தமிழகத்திலிருந்து அனாதையாக எடுபட்டு வந்து, கடைசியில் எனது தகப்பானாரிடம் அடைக்கலம் புகுந்தவர். பின்னர் தொழில் பழகி, நல்லதொரு தொழிலாளியாகப் பேரெடுத்து, தன்னை நல்ல நிலைக்கு உயர்த்திக் கொண்டவர். இவரை நாங்கள் ''அண்ணாச்சி..... அண்ணாச்சி!'' என்றே அழைத்துப் பழகி வந்தோம். வெகு நேர்மையானவர். கட்டுப்பாடு மிக்கவர். ஆழ்ந்த அறிவும், இயல்பான இலக்கியப் புலமையும் பெற்றுத் திகழ்ந்தவர். இவரிடம் தான் தொழில் பழக என்னை ஒப்புக் கொடுத்தார், என் அப்பா. ''இஞ்சை பாரப்பா, சங்கரன்! முதலாளியின்ரை மகன் இவன் எண்டு பாக்கப்படாது. நல்லாத் தொழில் பழக்கி விட வேண்டும். ஏதாவது தப்புத் தண்டா செய்தால், நல்லா அடிச்சுத் திருத்து. என்ன நான் சொல்லுறதெல்லாம் விளங்குதா?'' என்று சொல்லியபடியேதான் அண்ணாச்சியுடன் என்னை அனுப்பிவைத்தார், அப்பா. குரு சிஷ்ய பாணியில் என்னை ஒப்படைத்தார்.

எனக்கோ பரம்பரைத் தொழில் செய்யக் கொஞ்சம் கூட விருப்பமேயில்லை. படிப்பை இடை நடுவில் முறித்துப் போட்டேனே என்ற கவலை எனது இதயத்தைப் பிய்த்து எடுத்தது. தெருவில் வழியில் யாராவது பள்ளிக்கூடப்

பையன்கள் புத்தகச் சுமையுடன் போனால், ஒருவித ஏக்கப் பார்வையுடன் அவர்களைப் பராக்குப் பார்த்த வண்ணம் நின்றுவிடுவேன். தாங்கமுடியாத சோகம் என் நெஞ்சை அமுக்கும். தொடர்ந்து படிக்க இயலாமல் போய்விட்டதே என ஏங்குவேன். நெஞ்சு பொருமி விம்முவேன்.

கடைக்கு நேரெதிரே பூனைக்கண் சோமு என்பவருடைய சைக்கிள் கடை. அங்கு ஒரு நடுத்தர வயதுக்காரர் சம்பளத்துக்கு வேலை செய்து வந்தார். விசுவலிங்கம் அவரது பெயர். பட்டம் கட்டுவதில் வலு விண்ணன். ''எட, பொடி; கடுதாசி மாத்திரம் வாங்கித் தா, மற்றச் சிலவுகளை நான் பார்த்துக் கொள்ளுறன். உனக்கெண்டு ஒரு கொக்குக் கொடி கட்டித் தாறன். கொண்டுபோய் அந்த வயல், அதிலை போய் வடிவாய் ஏத்து!'' என உற்சாகமூட்டினார், அவர். எனக்குக் கொள்ளை புளுகம். எட்டு மூலைக் கொடி, கொக்குக் கொடி, பாம்பன், சானா என வகை வகையான அழகான வேலைப்பாடுகள் அமைந்த பட்டங்களைக் கட்டித் தருவார். சாயங்கால நேரங்களில் வண்ணான் குளத்துக்குக் கிழக்காலே உள்ள பரந்த வயல் வெளியில் பட்டமேற்றுவதுதான் எனது பொழுது போக்காகச் சில காலம் அமைந்தது. அவர் கட்டித் தரும் பட்டங்கள், மிக மிக அளவுப் பிரமாணமானவை. துல்லியமான நிறை நுட்பங்களைக் கொண்டவை. ஒரு பட்டமேற்றுவதென்றால் ஒருவர் பட்டத்தைத் தூரத்தே கொண்டு சென்று காற்றுக்குச் சாதகமாகப் பிடித்திருக்க வேண்டும். மறு முனையில் நூலைப் பிடித்திருப்பவர், காற்று விசை அறிந்து இழுத்துக் கொண்டு ஓடவேண்டும். அப்பொழுதுதான் பட்டம் காற்றில் மிதந்து, உயரும். இவரது பட்டங்களை ஏற்றுவது வெகு சுலபம். கையில் வைத்துக் கொண்டே காற்று வசதியாக வீசும் பொழுது, நூலை இழக்கி இழக்கி விட்டுக் கொண்டே போகும் நேரம் பட்டம் தானாகவே மேலேறும். நானும் எனது மகனுக்குக் கொழும்பு கால்பேசில் விற்கும் பலவிதமான பட்டங்களை வாங்கி வந்து கொடுத்திருக்கின்றேன். அந்த விசுவலிங்கத்தாரின் கைவண்ணத்தை இதுவரையும் எந்தப் பட்டத்திலுமே காணமுடியவில்லை. அது ஒரு கொடை! தனிக் கலை. அந்தக் கலையில் தேர்ச்சி பெற்ற கலைஞர் அவர்.

வயலுக்குள்ளே பட்டம் விடுவதை ஒரு நாள் அப்பா பார்த்துவிட்டார். தும்பு பறக்கப் பேச்சு நடந்தது. அத்துடன் பட்டமேற்றி மகிழும் எனது பொழுது போக்கு நிகழ்ச்சியும் முற்றுப் பெற்று விட்டது. ஒரு சிறு சந்தோஷமும் குலைந்து போய்விட்டது. எனக்குள் குமுறிக் குமுறி அழுது ஓய்ந்தேன்.

எனக்குத் தொழில் கற்றுத் தந்தவர் ஆறுமுகம் என்பவர். கோப்பாயைச் சேர்ந்த இவர், நீண்ட காலம் சிங்கப்பூரில் தொழில் செய்துவிட்டு வந்து, இங்கு தொழில் பெற்றுக் கொண்டவர். சிகை அலங்கரிப்புக் கலையில் மகா நிபுணத்துவம் பெற்றவர். அந்தக் காலத்தில் இந்தக் கலையில் பேரும் புகழும் பெற்றவர்கள் சிலர் இருந்தனர். ராஜேந்திரன், அந்தோனிப்பிள்ளை, கந்தையா என்பவர்கள் இந்தத் துறையில் பேர் பதித்தவர்கள். அவர்களுக்கென்றே கௌரவமான பெரிய வாடிக்கையாளர்கள்

இருந்தனர். அவர்களில் ஒருவர்தான் இந்த ஆறுமுகம் என்பவரும். வலு நிபுணன். திறமைசாலி. முடி திருத்துவதில் மாபெரும் கலைஞன் எனச் சொன்னால் அது அவர்தான்.

எனக்குத் தொழில் கற்றுத் தந்த ஆறுமுகம் என்பவர் மகா முன்கோபி. முசுடன். ஆனால் மகா கலைஞன். நான் இதுவரை பார்த்த சிகை அலங்கரிப்புக் கலைஞர்களுக்குள் ஈடும் எடுப்புமில்லாத ஒருவர். தொழிலின் நுட்பமும் சூட்சுமமும் தெரிந்த வைத்திருந்த அவர், தலைக்கேற்ற முறையில் தனது திறமையைப் பிரயோகித்து, தனித்து நின்று பெயர் போட்டவர். அவரைத் தேடிப் பல வாடிக்கையாளர்கள் வந்து காத்திருப்பார்கள். அத்தனை தொழில் நுட்பம் வாய்க்கப் பெற்றவர். கலைத்துவம் என்பது எந்தத் தொழிலில் தான் இல்லை? அது அவருக்குக் கை வந்த கலை.

அந்த வயசில் தொழில் பழகுவதென்பதே எனக்கு அலுப்புப் பிடித்த வேலை. 'ஏனடா வந்தோம், இந்தத் தொழிலுக்கு?' என மனசுக்குள் புறுபுறுத்தபடியே அவர் செய்யும் வேலையைக் கவனித்து வருவேன். ஒரு மேக்கப் மேனுக்குரிய லாவகத்துடனும் தொழில் நேர்த்தியுடனும் கத்திரிக்கோலையும் மெஷினையும் சீப்பையும் பயன்படுத்தி, மயிர்க் காட்டினூடாகப், புகுந்து விளையாடுவார், அவர். அவரது நுட்ப வேலைப்பாடுகளைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துப் பழக வேண்டும். அங்கு இங்கு திரும்பிப் பார்த்துவிடக் கூடாது. அத்தனை கண்டிப்பு. பராக்குப் பார்த்தால் பட்டென்று குட்டு விழும். பலமணி நேரமாக நின்ற நிலையில் ஒரே தொழிலை எத்தனை மணி நேரமென்று பார்த்துக் கொண்டு நிற்பது? கால்கள் கெஞ்சும். மனசு மரத்துப் போகும். உடல் சிறு விடுதலைக்காக ஏங்கித் தவிக்கும். இருந்தும் ஒய்வு எடுக்கமுடியாத அவல நிலை. தொழில் மீது வெறுப்பை வளர்க்கும். எரிச்சல் எரிச்சலாக வரும்.

இப்படித்தான் ஒரு நாள் வேலையைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த சமயத்தில் வெளியே தெருவில் காரொன்று 'சடன்' பிரேக் போடும் ஓசையும், ''ஐயோ!'' என்ற அவல அலறலும் கேட்டது. ஆர்வமேலிட்டால் வெளியே தாவி 'என்ன? ஏது?' என்றறிய முயற்சித்துத் திரும்பி எடுத்தடி வைத்தேன். பட்டென்று கையிலிருந்த மெஷினால் மண்டையில் ஒரு போடு போட்டார் என் குருநாதர். குருதி கொப்பளித்து ஒழுகியது. போட்டிருந்த சட்டையில் சொட்டுச் சொட்டாக வடிந்தது. இரத்தம்! எதுவுமே நடக்காதது போல, தொடர்ந்து தொழில் செய்தார். அவர். எனக்கோ இனி இல்லை என்ற வெப்பியாரம். குரலெடுத்து அழுது தீர்க்கவேண்டுமென்ற மன ஆவேசம். அழுதால் மீண்டும் அடி விழுமோ? என்ற பயம். அண்ணாச்சி வந்து மயிரை நீக்கிப் பார்த்தார். பெரிய வெடிப்புக் காயம். அழைத்துப் போய் மருந்து கட்டிக் கூட்டி வந்தார். தொழிலைப் பார்ப்பதில் தற்காலிக விடுதலை. அடி வாங்கியதைவிட, இப்படியான விடுதலை கிடைத்ததே என்று மனசு சந்தோஷப்பட்டது. அதே சமயம் எனது குருநாதரை மனசுக்குள் கிடைக்கத்தக்க அத்தனை வசவு வார்த்தைகளையும் சேர்த்துத் திட்டித்

தீர்த்து மனச் சாந்தி அடைந்தேன். அப்படியொரு காலம்.

இன்றுகூட, தலை வாரும் பொழுது அந்தக் காயத் தழும்பு கையில் தட்டுப்படும். அன்றைக்கு எத்தனை அழுத்தமாக ஆத்திரப்பட்டு வைது தீர்த்தேனோ, அதற்கு மாறாக எனது குருவை நன்றிப் பெருக்குடன் நினைவு கூருகின்றேன். முப்பது ஆண்டுகளுக்கு மேலாக என்னை வாழ்வித்து வழி நடத்திய கைத்தொழிலை முறையாகக் கற்றுத் தந்தவர், அவர். எனது சுயவாழ்வைச் செம்மைப்படுத்தி வருமானத்தையும் வாழ்வு முறையையும் தொழில்சார் வாடிக்கையாளர்களையும் உருவாக்கித்தர மறைமுகமாக உதவி வந்த அவரை, நினைவு கூர்வதில் பெருமிதம் அடைகிறேன். அவர் பரம்பரை வாழ்க! அவருடைய முற்கோபத்திற்கும் நன்றி.

இதற்கிடையில் ஒரு தமாஷ் சம்பவத்தைச் சொல்லியாக வேண்டும். ஒரு நாள் நான் வீதியில் கடைக்கு முன்னால் நின்ற பொழுது, பெரிய கடகத்தில் மீன் பாரத்தைச் சுமந்து வந்த ஒரு நடுத்தர வயசு மனுசி, ''தம்பி, பாரம் இறக்கேலாது, ஒரு பத்துச் சதத்துக்கு அந்தக் கடையிலை வெத்திலை பாக்கு வாங்கித் தாருமன்!'' எனச் சொல்லி, பத்துச் சத நாணயத்தை நீட்டினார். மனசு பரிதாபப்பட்டது.

பணத்தைப் பெற்றுக் கொண்ட நான், கறுத்தப்பா பீடாக்கடையில் வெற்றிலை பாக்குப் பொட்டலத்தை வாங்கி அவவிடம் கொடுத்து விட்டேன். அவ நடந்து மீன்கடைப் பக்கம் சென்று மறைந்துவிட்டா. அந்தக் காலத்தில் யாழ்ப்பாண நகருக்கான பெரிய மீன்சந்தை செம்மாதெரு ஆரம்பிக்கும் இடத்திலிருந்து கிழக்குப் பக்கமாக நூறு யார் தூரத்தில் இருந்தது. சகல கடற் பிரதேசத்து மீன்களும் அந்தச் சந்தைக்கு வரும்.

வெற்றிலைக் கடைக் கறுத்தப்பாதான் இதைத் தொடக்கி வைத்தவர் என நினைக்கின்றேன். சைக்கிள் கடைச் சோமு, சவப் பெட்டிக்கடை ஆறுமுகம், தேநீர்க்கடை குல் முகம்து, சப்பாத்துக்கடை சீனி முகம்மது ஆகியோர் நமுட்டுச் சிரிப்புடன் என்னைப் பார்த்துச் சிரித்து வைத்தனர். ஒரு சிலர் வாய்விட்டுக் கேட்டனர். ''என்ன அன்னமுத்துவுடன் நீ லைனாமே?'' என்று கேட்டுவிட்டுப் பலமாகச் சிரித்தார்கள். அவர்கள் என்னைக் கண்டதும் பக்கத்துப் பக்கத்துக் கடைக்காரர்களெல்லாம் ''எப்பிடிப் பிடிச்சாய், அந்த அன்னமுத்துவை?'' என நையாண்டி செய்யத் தலைப்பட்டனர். கிண்டல் பேசி ஆத்திரமூட்டினர்.

எனக்கோ பொல்லாத வெட்கம், கோபம். கூச்சத்தினால் மனசு குறுகிப்போய் ஓட்டமெடுப்பேன். கடைக்கு உள்ளே உள்ள கக்கூசு மறைவிடத்திற்குள் போய் ஒளிந்து கொண்டு, வெளியே வர மாட்டேன். மனச் சங்கடத்தால் கஷ்டப்பட்டுக் குமைந்து குமைந்து அழுவேன். மன எரிச்சலால் கூசிச் சாம்பினேன்.

பொல்லாத கிழடி அந்த அன்னமுத்து, மனுஷி! தமாஷ் பேர்வழியாகவும்

இருக்க வேண்டும். வியாபாரம் முடிந்து வீடு திரும்பும் நேரத்தில் ஒரு நாள் கடகப் பெட்டிகளை எங்களது கடைப்படித் திண்ணையில் வைத்துவிட்டு, ''இஞ்சேரும்.... இஞ்சேரும்!'' எனக் குரல் கொடுத்தபடி வாசலில் காவல் நிற்க முனைந்தா. தனது அன்புக்குரிய கணவனை அழைக்கும் தோரணையில் அவ என்னை அழைத்ததையும், குழைந்து கூப்பிட்டதையும் கேட்ட பக்கத்துக் கடைக்காரர்கள் பலர் அங்கு குழுமிவிட்டனர். ''இஞ்சேரும்.... இஞ்சேரும்'' என மனைவிமார்கள் தான் கணவன்மாரை அன்புடன் அழைப்பர். இது யாழ்ப்பாணத்து வழக்கம்.

நான் உள்ளே அப்படியே உறைந்து போய்விட்டேன். கடையில் தொழில் பார்த்துக் கொண்டிருந்த ஏனையோர்களும், இந்தத் தமாஷை ரஸிக்கும் தோரணையில் என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டனர். ''அவ கூப்பிடுறா, போய்ப் பார்'' என்றனர். ''மனுஷி நெடுநேரமா நிண்டு கூப்பிடுகிது. போய் ஒருக்காப் பாரன்!''

எனக்குத் தூக்கத்தில் கனவுகளில் கூட, அன்னமுத்து மனுஷி வந்து மிரட்டத் தொடங்கிவிட்டா. தூக்கம் வராமல் இரவுகளில் அடிக்கடி பயத்தால் விழித்து விழித்து எழுந்திருந்து பேந்தப் பேந்த முழிக்கத் தொடங்கினேன். வாய் பிதற்றினேன். இரவுத் தூக்கம், ஒழுங்கு கெட்டது. அம்மா காரணம் கேட்டு வற்பறுத்தினார். சொல்ல மறுத்துவிட்டேன். 'இதைப் போய்ப் பெற்ற தாயிடம் எப்படிச் சொல்லுவது? எப்படி விளங்கப்படுத்துவது?'

தொடர்ந்து கேலியும், கிண்டலும், நக்கலும் நடைபெற்றுக் கொண்டே வந்தன. என்னை நானே சுதாகரித்துக் கொண்டேன். ஞானோதயம் பிறந்தது. 'அவர்களுடைய கேலியில், கிண்டலில் உண்மை சிறிது கூட இல்லையே, நான் ஏன் மிரள வேண்டும்? நான் வெருள வெருள, அதைப் பார்த்து ரஸித்து அவர்கள் சந்தோசப்பட நானேன் இடங்கொடுக்க வேண்டும்?' - எனச் சற்று ஆறுதலாகச் சிந்திக்கத் தொடங்கினேன். அதன் பின்னர் எனது இயல்பான துணிச்சல் தனம் எனக்குக் கைகொடுத்தது. சிரித்தவர்களைப் பார்த்து நானும் சிரித்து வைத்தேன். ''அன்னமுத்து.....'' எனப் பெயர் சொல்லுபவர்களைக் கண்டு மிரளுவதை விட்டுவிட்டு, அந்தத் தமாஷில் நானும் கலந்து, ரஸிப்பதைப் போலப் பாவனை காட்டி முகம் மலர்ந்தேன். நான் மிரள மிரள என்னைக் கோட்டா பண்ணியவர்கள், நானும் சேர்ந்து ரஸித்துப் பகிடி விடுவதைப் பார்த்து தமது கேலியையும் கிண்டலையும் கட்டம் கட்டமாக குறைத்துக் கொண்டனர். அந்தக் கலாட்டாக் கால கட்டமே அப்புறம் ஓய்ந்து விட்டது.

அப்பாடா, கடைசியில் அந்தக் கேலிக் காலகட்டம் மறைந்து விட்டது. இது சிறு சம்பவந்தான். இதிலிருந்து பாடமொன்றைக் கற்றுக் கொண்டேன். பிரச்சினையைக் கண்டு மிரண்டு ஓடக் கூடாது. முகத்துக்கு முகம் அதை நாம் எதிர்கொண்டு, தாங்கிக் கொள்ளும்போது, பிரச்சினையின் தாக்கம் நம்மை நிலை குலைய வைத்து விடாது, என்ற அநுபவ அறிவே அது.

அதையே தொடர்ந்து கைக் கொண்டு ஒழுகி வந்தேன். இது என்னை வழி நடத்தி வருகிறது.

சலுகைகளை மேற்பார்வை பார்த்து நடத்தி வந்த அலுவலாட்சி என்பவர் காந்தி பக்தர். கதர்தான் உடுத்துவார். இந்திய தேசிய காங்கிரஸ் அபிமானி. அவர் ஆனந்த விகடன், பிரசண்ட விகடன், கலைமகள், அநுமான் போன்ற சஞ்சிகைகளைப் படித்த பின்னர் ஓர் அலுமாரியில் வைத்திருந்தார். இன்னொரு அடுக்கில் வடுவூர்த் துரைசாமி அய்யங்கார், ஆரணி குப்புசாமி முதலியார், வை. மு. கோதைநாயகி அம்மாள், ரங்கராஜு போன்றவர்களின் நாவல்கள் இடம் பெற்றிருந்தன. ஒரு பெரிய புத்தகக் குவியலே அங்கு கொலு வீற்றிருந்தது.

ஏராளமான புத்தகங்கள். தரமான வாசகர். அண்ணாச்சி. சுயமாகவே தனது அறிவை வளர்த்துக் கொண்டவர். அவரிடம்தான் நான் ஆரம்ப கால ஆங்கிலத்தை, முறையாகக் கற்றுக் கொண்டேன். காந்தி பக்தர்களுக்கு இருக்கத் தக்கதான மென்மை, எளிமை, தன்னடக்கம், உதவும் மனப்பான்மை நிரம்பப் பெற்றவரான அவர், தொழில் இல்லாத நேரங்களில், தான் சேமித்து வைத்த சஞ்சிகைகளை எடுத்துப் படிக்கும்படி ஊக்கமூட்டினார். உற்சாகப்படுத்தினார்.

எனக்கோ வாசிப்பு வெறி! முறையாகப் பள்ளிப் படிப்பைத் தொடரவில்லையே என்ற மன ஆதங்கம். முன்னரைப் போல தொழில் பழகுவதில் அப்படியொன்றும் கெடுபிடி இல்லை. ஓரளவு தொழிலை முறையாகக் கற்றுக் கொண்ட முன்னேற்றம். எனவே, சிறிது சுதந்திரம் கிடைத்தது. கிடைத்த சுதந்திரத்தைப் பூரணமாகப் பயன்படுத்திக் கொண்டேன். வீட்டுக்குத் திரும்பும் நேரங்களில் புத்தகங்களை, சஞ்சிகைகளைக் கையோடு எடுத்து வந்து படித்துப் பார்ப்பேன். படிப்பதில் பேய்ப் பசி. அந்த வயசுக்குப் புரியக் கூடியவற்றை மாத்திரமல்ல, விளங்காதவைகளையும் சிரமப்பட்டுப் படித்து முடிப்பேன். விளங்காத, சற்றுக் கடினமான கருத்துக்களைக் குறிப்பெடுத்து வைத்து, அடுத்த நாள் அண்ணாச்சியிடம் விரிவாக விளக்கம் கேட்டு, கூடியவரை என்னளவிலும் சிந்தித்துப் புரிந்து கொள்ள முயற்சிப்பேன். உயிரைக் கொடுத்துப் படிப்பேன்.

அவர் என்னை ஒரு மாணவனைப் போல, நடத்தினார். படிக்கப் படிக்க, படிப்பதிலேயே ஒரு சுவை இருப்பதை நாளடைவில் தெரிந்து கொண்டேன். அதுவும் ஒரு தனிச் சுவை. வாழ்க்கையின் பல சூட்சுமங்கள், சுலபமாக விளங்கின.

இடையே முக்கியமான குறிப்பொன்றைக் கூறிவிட வேண்டும். 'எக்காரணத்தைக் கொண்டும் கடைகளுக்குப் போய்ச் சாப்பிடுவதோ, தேத்தண்ணி குடிப்பதோ கூடாது!" என நான் தொழில் பழக வந்த காலத்திலேயே எச்சரித்திருந்தார், அண்ணாச்சி. "அப்பிடி அவசரமெண்டால், கடைக்குப்போய் வாங்கிக் கொண்டு வந்து இங்கே வைச்சுத்தான் சாப்பிட

வேணும்'' எனவும் சொல்லி வைத்தார் அவர். அவர் அதில் கண்டிப்பாக இருந்தார்.

அவர் இப்படி என்னை எச்சரித்ததற்கு ஒரு காரணம் உண்டு. அந்தக் காலத்தில் எம்மைப் போன்ற உழைப்பாளி பரம்பரையினருக்கு தேநீர், சாப்பாட்டுக்கடைகளில் சம ஆசனமோ சம போசனமோ தரக் கண்டிப்பாக மறுப்பார்கள், கடை முதலாளிகள். ''உள்ப் பேணியா - வெளிப் பேணியா?'' என உரக்கக் கேட்டு, வந்திருப்பவர்களின் சாதி வேர்களை அறிய முனைவார்கள். உள் பேணி என்றால் அங்கீகரிக்கப்பட்ட சாதியினர். வெளிப் பேணி என்றால் அவர்கள் மனிதர்கள் அல்ல. நாய்கள் - பேய்கள்! அலட்சியமாகவே அவர்களை நடத்துவார்கள். ஆனால் காசு வாங்குவதில் மாத்திரம் வெகு அக்கறை! வெளிப்பேணி என்பது பொயிலருக்கு முன்னால் ஒரு தடியில் கவிழ்த்து வைக்கப்பட்டிருக்கும் கறள் பிடித்த அழுக்கு நிரம்பிய, ஒரு பண்டம். கழுவியோ, துடைத்தோ வைக்கப்படாத ஒரு தகர டப்பா. இதை விரும்பாத சிலர் சோடாப் போத்தலில் தேநீர் வாங்கிப் பருகுவார்கள். இதைப் பார்த்துச் சில இள வட்டங்கள், ''போத்தலில் டெலிபோன் பண்ணுகிறார்'' எனக் கிண்டலடிப்பதுமுண்டு. அத்தனை கேவலமாக உழைப்பவன் நடத்தப்பட்டான். தமிழன் ஆண்ட பரம்பரையைச் சேர்ந்தவன் அல்லவா? ஆண்ட பரம்பரையின் நீசச் செயல்களில் இதுவுமொன்று.

உழைக்கும் மக்களைச் சாதியின் பேரால் அவர்களது ஆத்மாவையே நோகடிக்கும் செயல், காலம் காலமாகவே யாழ்ப்பாண மண்ணில் நடந்தேறி உள்ளது. இதில் சில விதி விலக்குகளும் உண்டு. செம்மாதெருவில், குல்முகமது கடை, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள சிற்றி பேக்கரி, ஆஸ்பத்திரிக் கேற்றுக்கு எதிரே உள்ள ரத்னா கபே, பறங்கித் தெருவிலுள்ள மில்க் பார் போன்ற இரண்டொரு தேநீர்க் கடைகள் இந்தப் பாகுபாடு காட்டாமல் நடந்து வந்தன. அவர்களுக்கு நல்ல வியாபாரமும் நடந்து வந்தது.

இந்த அக்கிரமத்தை என் சின்ன நெஞ்சும் வன்மையாக எதிர்த்தது. நான் பொருளாதார ரீதியாக இதைப்பற்றி யோசித்துள்ளேன். 'எங்களை மனுஷனெண்டு மதிக்காத இவங்களிட்டை நாங்களேன் காசைக் கொடுக்க வேணும்?' எனச் சிந்தித்தேன். இதன் நிமித்தம், கூடியவரை அக் கடைக்காரர்களுக்கு இயல்பாக எனது பணம் போய்ச் சேருவதைத் தவிர்த்து வந்தேன்.

சத்திரத்துச் சந்தியில் கொய்யர் கடை என்றொரு தேநீர்க் கடை உண்டு. கொய்யரும் அவரது பாரியாரும் தான் பலகாரங்கள் செய்வதும் பரிமாறுவதும். நாக்குச் சப்புக் கொட்டினால், பெரிய லோட்டாவை எடுத்துக் கொண்டு கொய்யரிடம் போவேன். பண்பான அருமையான மனுஷர். அவர். 'மோனே' என்ற சொல்லுக்கு மறு பேச்சுப் பேசமாட்டார். பசித்து வந்தவர்களுக்கு உணவு கொடுப்பதைத் தவிர, பணம் வாங்குவதில் அக்கறை காட்ட மாட்டார். 'குடுத்தால் குடு, இல்லையெண்டால் போ!' என்பது

அவரது நிரந்தரச் சங்கல்பம். இந்த ஒன்றுக்காக நானவரை மதித்தேன். அவரது நல்ல பண்புகளைப் புறக்கணிக்க முடியவில்லை. இன்றுவரை அவர் என் நெஞ்சில் நிறைந்துள்ளார். 'கொய்யர் கடை' என்பது அன்று யாழ்ப்பாண நகரில் வெகு பிரசித்தம்.

லோட்டா நிறையத் தழும்பத் தழும்ப, சுண்டக் காய்ச்சிய பசும்பால் தேத்தண்ணி மூன்று சதம். பெரிய ஆமை வடை ஒரு சதம். சுசியம் ஒரு சதம். சாப்பிடுவதற்குப் பூரண திருப்தியைத் தரும் முறையில் வெகு அந்நியோன்னியமான சினேக பாவத்துடன், வியாபாரம் செய்வார் கொய்யர். சற்று அண்மையில் நாகலிங்கம் போசனசாலை இருந்தது. அரச்சுக் காய்ச்சிய மீன் குழம்புச் சாப்பாடு, பத்துச் சதம். வலு சிக்காராகச் சாப்பிட்டுவிட்டு எழும்பலாம். இலையில் மிச்சம் வைக்கக் கூடாது. அதுதான் சட்டம். தேவையானவைகளை கேட்டு வாங்கிக் கூடச் சாப்பிடலாம்.

நெடுந்தீவு, புங்குடுதீவு, நயினா தீவு உட்பட வேலணையைச் சேர்ந்த பலர் பண்ணைக் கடலைக் கடந்து தோணியேறி வந்து தமது கருமங்களை ஆற்றி விட்டுச் செல்வார்கள். இப்படியானவர்களின் பசியைப் போக்கி, சற்றுச் சிரமபரிகாரம் செய்து போவதற்கென்றே உருவாக்கப்பட்டது போலவே, கொய்யர் கடையும், நாகலிங்கம் போசனசாலையும் அந்தக் காலத்தில் பட்டினத்தில் ஸ்தாபிக்கப்பட்டனவோ என்று எண்ணத் தோன்றும். அத்தனை பிரக்கியாதிபெற்றவை, அந்தக் கடைகள்.

சில நாட்களில் ஞாபகம் வந்தால் லோட்டாவைத் தூக்கிக் கொண்டு கொய்யர் கடைக்குப் போய்த் தேநீரும் வடையும் வாங்கி வருவேன். உண்பது எனது இடத்தில் மட்டும்தான். இங்கே வந்து தான் சாப்பிடுவேன்.

'உழைக்கும் மக்கள் கூட்டத்தைத் தாழ்த்தப்பட்டவர்களாக்கி, அவர்களது மனிதப் பண்புகளைக் காலின் கீழ் போட்டு நசுக்கி வந்த இந்தச் சமூகத் தீமையை யாராவது எதிர்த்துக் குரல் கொடுக்கவில்லையா?' என்ற நியாயமான கேள்வி எழலாம். உண்மை. எழத்தான் எழுந்தது. வெகு உக்கிரமாக எழுந்தது.

கல்விமான்கள், பண்பாளர்கள், மானுட நேசமுள்ளவர்கள், காந்தீயக் கோட்பாடுகளைப் பின்பற்றியவர்கள், அமைதியாக இருந்து தமது சொந்த வாழ்வில் இந்த ஓரவஞ்சகத்திற்குக் கொஞ்சமும் இடம் கொடாமல் வாழ்ந்த பெருமக்கள் உட்பட வாலிபர் காங்கிரஸ் என்றொரு ஸ்தாபனமே வரிந்து கட்டிக் கொண்டு இந்தச் சமூக நாசத்தை எதிர்க்க முனைந்ததுண்டு.

யாழ்ப்பாணச் சாதிப் படிநிலை அமைப்பின் வேர் அகலமானது மாத்திரமல்ல, மிக மிக ஆழமானதுமாகும். அவர்களின் முயற்சியால் தற்காலிகமாகச் சிறிது அசைந்து கொடுத்தது என்பது உண்மைதான். எதார்த்தம் வேறொரு உண்மையைக் காட்டி நின்றது. அதன் மூலாதாரமான ஆணிவேர் அறுபடவேயில்லை. ஆழ வேரோடிப் போயுமிருந்தது. இறுக

வேர் பாய்ச்சி இருந்தது. அசைக்கப்பட்டது. ஆனால் அறுபடவேயில்லை. ஆணிவேர் பிடுங்குப்படவேயில்லை! அது மிக ஆழமாக வேரோடியிருந்தது.

தமிழர்களைப் பீடித்துள்ள இந்தப் பயங்கர நாச நோய்க்கு எதிராகப் பிற்காலத்தில் மாபெரிய போராட்ட இயக்கம் மக்கள் மத்தியில் இருந்தே கனன்றெழுந்தது. அதிக விலை கொடுத்தது. பஞ்சமர் என்ற முறையிலும், ஒடுக்கப்பட்ட சமூகத்தவர் என்ற வகையிலும் எழுத்தாளர் என்ற ஹோதாவிலும் நானும் டானியலும், கவிஞர் பசுபதியும் போர்க்களத்தில் சேர்ந்து நின்று இடையறாது போராடியதும், அதற்காக மாபெரும் அவதூறுப் பிதற்றல்களைக் கேட்டுக் கொண்டதும் பின்னர் நடந்த சம்பவங்களாகும்.

தொழில் கற்றுக் கொள்வதில் கணிசமான முன்னேற்றத்தைக் கண்டு வந்தேன். கச்சிதமாகவும் நுணுக்கமாகவும் விசாலமாகவும் என்னை நானே உருவாக்கிக் கொண்டேன். என்னிடம் தொழில் செய்வதற்கென்றே வாடிக்கையாளர் பலர் காத்திருந்தனர். எனக்குத் தொழில் கற்றுத் தந்த ஆறுமுகம் என்பவர் குடும்பத்தினரைப் பார்த்து வர வன்னிப் பிரதேசத்துக்குச் சென்றவர், குளத்தில் குளிக்கப் போய், தாமரைக் கொடிகளில் சிக்குப்பட்டு மறைந்துவிட்டார். அவரை நம்பியிருந்த வாடிக்கையாளர்களும் என்னால் கவரப்பட்டு, என்னிடமே சிகை அலங்கரிப்புச் செய்ய வரிசையில் காத்திருந்தனர். குருவுக்கு அடுத்து சிஷ்யன்தானே! என்னை நானே தயார் நிலைப் படுத்திக் கொண்டேன். சகலரையும் அரவணைத்துக் கொண்டேன்.

1942 ஏப்ரல் 5ந் திகதி எனது வாழ்க்கையில் ஒரு திருப்பு முனை ஏற்பட்டது. நான் தொழில் பார்த்த ஜோசப் சலூனுக்கும்தான்.

இதுவரை காலமும் ஜோசப் சலூனை வழி நடத்தி வந்த அண்ணாச்சி என்பவர் அன்றைய தினம் திடீரென தலைமறைவாகி விட்டார். ஊரில் எங்குமே அவர் தென்படவில்லை. இந்தியச் சுதந்திரப் போராட்டக் களத்தில் தன்னையும் ஓர் அங்கமாக இணைத்துக் கொள்வதன் நிமித்தமாக, அவர் தென்னிந்தியாவுக்குச் சென்றுவிட்டார் எனப் பின்னர் தெரிய வந்தது. காந்தீய பக்தியும், இந்திய தேசிய காங்கிரஸ் அழைப்பும் அவரைச் சொல்லாமல் கொள்ளாமல் அழைத்துக் கொண்டு போய்விட்டது. அவர் தமிழகத்திற்குத் தலைமறைவாகச் சென்றுவிட்டார்.

போவதற்கு முதல் நாள் அவர் எனக்குப் பல புத்திமதிகளைச் சொன்னார். 'என்ன கஷ்டங்கள் வந்தாலும் கொண்ட கொள்கையில் உறுதியாக இருக்க வேண்டும்' எனவும் சலூனை ஒரு கௌரவமான தொழிற்கூடமாக நினைத்து நடத்த வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். ''நாம் நிமிர்ந்தால், தொழில் நிமிரும்!'' என்றார். ''இந்தத் தொழிலை மற்றவர்கள் மதித்து நடக்கும்படி, நடந்து கொள்''.

அண்ணாச்சி திடீரென ஊரைவிட்டு மறைந்தது எங்கள் குடும்பத்தவரை அதிர்ச்சிக்குட்படுத்தி விட்டது. அவரது மேற்பார்வையிலிருந்த போது கிடைத்த

வரும்படி வீட்டிற்கு இடையறாது கிடைத்துக் கொண்டிருந்தது. அப்பா ஊர் விவகாரங்களில் நேரத்தைச் செலவிட்டு வந்ததனால் சலூன் பக்கமே எட்டிப் பார்ப்பதில்லை. அவருக்கு நேரம் இருப்பதுமில்லை. நேரங் கிடைத்தால், குடித்து வெறிப்பதுதான் நிரந்தரத் தொழில், அவருக்கு.

இப்படியான சிக்கல் நிரம்பிய சூழ்நிலையில், நானே ஜோசப் சலூன் என்ற அந்த ஸ்தாபனத்தைப் பொறுப்பேற்க வேண்டி வந்தது. ஏற்றுக் கொண்டேன். என்னைப் பக்குவப்படுத்திக் கொண்டேன்.

இளைஞன், டீன் ஏஜ் பருவத்தினன், அசாதாரணமான மன ஓர்மம் உள்ளவன். இந்த வகையில் பளுவைத் தாங்கிக் கொண்டேன். உள்ளுணர்வின் மெல்லிய ஓசை உள்ளே ரீங்காரித்துக் கொண்டேயிருந்தது. 'சிரைக்கப் பிறந்தவனில்லையடா, நீ! எதையோ சாதிக்கப் பிறந்தவன் - சாதிக்கப் பிறந்தவன்!'



8

அது யுத்த காலம். இரண்டாவது உலக மகா யுத்தத்தின் உச்சக் கட்டம். ஹிட்லர் உலகையே கிறங்க அடித்துக் கொண்டிருந்தான். ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் என அணிதிரண்டு அச்சு நாடுகள் என்ற பெயரில் யுத்தத்தை நடத்திக் கொண்டிருந்தன. பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் இன்னொரு அணியாக நின்று நேச நாடுகள் என்ற பெயரில் எதிர் யுத்தம் செய்து கொண்டிருந்தன. வி - 1, வி - 2, என்ற அதி நவீன ஏவுகணைகள் லண்டன் மா நகரையே கட்டம் கட்டமாக தாக்கிக் கொண்டிருந்தன.

தென்கிழக்காசியாவின் கேந்திர யுத்த தளமாகத் திருகோணமலை விளங்கியது. லார்ட் மவுண்ட் பேட்டன் என்பவர், நேச தேசங்களின் உயர் தளபதியாக அங்கிருந்து யுத்தக் கட்டளைகள் இட்டுக் கொண்டிருந்தார். எனவே இலங்கை உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்த வண்ணம் இருந்தது. எதிரியின் கவனத்தையும் கவர்ந்திருந்தது. ஜப்பான்காரன் இலங்கை மீது ஒரு யுத்தக் கவனம் வைத்திருந்தான்.

ஒரு சமயம் ஜப்பான்காரனின் யுத்த விமானங்கள் கொழும்பு மாநகரில் குண்டுகளைப் பொழிந்தன. தேசமே அல்லோல கல்லோலப் பட்டது. யுத்தம் எமது வீட்டு வாசலுக்கே வந்துவிட்டது என மக்களெல்லாம் கிலி கொண்டு திகைப்படைந்தனர். எங்கும் ஒரே பீதி. மக்கள் மனசில் எல்லையற்ற கலவரம். பரபரப்பு! யுத்தம் எம் மண்ணுக்கு வந்துவிடவில்லை. இருந்தாலும் அது வந்துவிட்டது போன்ற பயங்கரப் பரபரப்பு நிலவியது.

யாழ்ப்பாண நகரத்து மக்களும் பீதி கொண்டு செய்வதறியாது திகைத்துக்

குழம்பினர். திக்குத் திசை தெரியாமல் மூலைக்கொன்றாகப் பல குடும்பங்கள் சிதறி ஓடின. எங்கள் அயலவர்களும் குடும்பம் குடும்பமாக வெளிக்கிட்டு விட்டனர். அல்லைப்பிட்டியில் அம்மா வழிச் சொந்தக்காரர் இருந்தனர். மாணிக்கம் என்பது அவரது பெயர். அவரது வீட்டில் நமது இனத்தவர்களான சில குடும்பங்கள். அகதிகளாகச் சென்றடைந்தன. அதில் எனது குடும்பமும் ஒன்று. நாங்களும் அங்கு யுத்த அகதிகளாகத் தஞ்சமடைந்தோம்.

அன்று பண்ணைத் தாம்போதியைக் கடந்து தீவுப் பகுதிகளுக்குப் போக வேண்டுமென்றால், கூப்பிடு தூரம் கடலால் பிரிக்கப்பட்ட பகுதிய சிறு சிறு வள்ளங்களில் அல்லது தோணிகளில் ஏறிக் கடந்து செல்ல வேண்டும். கடந்து செல்ல ஆயக் காசு மூன்று சதங்கள். அப்படியொரு வள்ளத்தில் தான் கடல் கடந்து அல்லைப்பிட்டியை அடைந்தோம். யுத்த அகதிகளாகச் சென்றடைந்தோம்.

பின்னொரு காலத்தில் பண்ணைத் தாம்போதியைக் கடந்து என்ஜின் பூட்டிய பெரிய லாஞ்ச் சொன்று பாரமதிகரிப்பால் கவிழ்ந்து போனது. 26 பேர்களுக்கு மேற்பட்ட பிரயாணிகள் கடலில் மூழ்கி இறந்து போனார்கள். மக்கள் திரண்டு எதிர்ப்புத் தெரிவித்ததின் நிமித்தமாக, பண்ணைப் பாலம் நிறுவப்பட்டது. தீவுப் பகுதிகளுக்குத் தரை வழிப் பயணம் பயணிகளால் மேற்கொள்ளப்பட்டது, அதன் பின்னரே - அழிவுதந்த ஆக்கபூர்வமான வளர்ச்சி - பண்ணைப் பாலம்.

ஒரு மாசத்துக்கு மேலாக யுத்த அகதிகளாக எமது குடும்பத்தினர் அல்லைப்பிட்டியில் வாசம் செய்தனர். இரவிலே பொழுது போகாது. பெரியவர்கள் கள்ளுக் குடித்து விட்டுப் பழைய சங்கதிகளை இரை மீட்பார்கள். அல்லது நாட்டுக் கூத்துப் பாட்டுக்களைப் பாடி, மகிழ்வார்கள். பெண்கள் பழங்கதையில் தம்மை மறப்பார்கள். அல்லது பேன் பார்ப்பார்கள். இளைஞர்கள் கடதாசி விளையாட்டில் பொழுதைக் கழிப்பார்கள்.

இளம் வட்டங்களுக்கு ஒரே விரக்தி. ஏதோ தண்ணியில்லாக் காட்டில் எம்மைக் கொண்டு போய்க் கட்டிப் போட்டுவிட்டதான, மனத் தாங்கல். பொழுதைப் போக்க வேறு வழியேதும் இல்லை. வழியேதும் தெரியவில்லை

அது அமாவாசையை அண்டிய நாள். சூள் பிடிப்பதில் மாணிக்கத்தார் வலு விண்ணன். இது ஏற்கெனவே எங்களுக்குத் தெரியும். எனவே அவரை உசுப்பி விட்டோம். அவருக்கும் உஷார் வந்து விட்டது. சாடையான கீறு. கீறென்றால் கள்ளுக் குடித்ததில் சற்று அதிகம். அன்று ஞாயிற்றுக்கிழமை என்று ஞாபகம். பெரியவர்கள் சிலரும் சூளுக்குக் கிளப்புவதை உற்சாகப் படுத்தினார்கள். வீடு முழுவதும் சந்தோஷம் குடிகொண்டிருந்தது.

சூள் என்பது, அருமையான கடல் வேட்டை, காய்ந்த தென்னை ஓலைகளை ஒருங்குசேர நீளத்திற்குக் கூம்பாகக் கட்டி, அதனுள்ளே கார் டயர் துண்டுகளை லாவகமாகப் பொருத்தி, எரியவிட்டுக் கொண்டே

முழங்காலளவு கடல் நீரில் நடந்து போகும் போது, கச இருட்டில் திடீர் வெளிச்சத்தைக் கண்ட மீன்கள், றால்கள், கணவாய்கள், திருக்கைகள் அப்படியே பம்மி. மயங்கி நின்றுவிடும். அந்தச் சமயம் பார்த்துக் கையுடன் கொண்டு போயுள்ள கரப்பை அமிழ்த்திக் குத்தி, அதற்குள் அகப்பட்டவைகளைக் கையால் பிடிக்கலாம். அல்லது பீப்பாத் தகரத்தால் செய்துவைத்துள்ள வாளால் நீர் கிழிய வெட்டி, அவைகளைக் கைப்பற்றலாம். சூள் பிடிப்பது என்பதே ஒரு தனிக்கலை. அது வடபுலத்தில் தெரிந்த கலை.

சாயங்காலமே சூள் பயணம் களை கட்டத் தொடங்கி விட்டது. பழைய ஒடியலை எடுத்து உரலிலிட்டு இடிப்பவர் ஒருவரும், அரிப்பவர் ஒருவரும் வெகு மும்முரமாகக் காரியமாற்றத் தொடங்கி விட்டனர். பெண்கள். இன்னொரு பக்கம் பெரிய மண் குண்டானை எடுத்துக் கிணற்றடியில் வைத்துக் கழுவிக் கொண்டிருந்தனர். சில பெண்டுகள். வடலிப் பக்கமாக வேப்பமர நிழலில் .வடுப்புக் கல் பொருத்திக் கொண்டிருந்தனர். இன்னும் சிலர். ஒரே சுறுசுறுப்பு. உற்சாக உழைப்பு. வீடு, திருமண வீடுபோல, ஒரே உற்சாகமாகக் காட்சி தந்தது. கலகலப்பாக விளங்கியது.

``இப்ப எல்லாத்தையும் முன்னமேயே வைச்சிடுங்கோ. அடுப்புப் பத்தவச்சால் பிறகு எந்தப் பெண்டுகளும் அதுக்குக் கிட்டக் கூட வரத் தெண்டிக்கக் கூடாது!`` என உரத்த குரலில் உத்தரவிட்டார் மாணிக்கத்தார். தொடர்வது ஆண்களின் வேலை. பெண்டுகளுக்கு அப்புறம் வேலையே இல்லையாம்!

ஒடியற் கூழுக்கு அவரது கைராசி அப்படி. மன்னனின் கை ருசி மணக்கும். அவரது சமையல் பாகம் தனித்துவமாகத் திகழும். நெத்தலி மீனை அப்படியே கழுவியெடுத்து, புளி மாங்காயை கொத்திப் போட்டு ஒரு துவட்டல் செய்து தந்தார், ஒரு நாள் இரவு. அந்த ருசியுடன் இரண்டு கோப்பை சோறு சாப்பிட்டுவிட்டு எழுந்தவன், நான். ருசி, பார்த்துச் சாப்பிடுவது எனக்குக் கைவந்த கலை. சாப்பாட்டு ராமனல்ல. ரஸித்துச் சுவைத்துண்பதில் விண்ணன். எனது அம்மாவுக்கு சகோதரி இருந்தா, ஒன்றுவிட்ட சகோதரம். பெயர் அக்கினேஸ். சும்மா அப்படியே சட்டியுடன் வறட்டி ஒரு மீன்குழம்பு செய்வா. அடடா! அது ஒரு தனிச் சுவை. அந்தக் குழம்பிற்காகவே அவரது மரணத்தின்போது விம்மி விம்மி அழுதிருக்கின்றேன். ``சின்னம்மா! இந்தக் குழம்பிற்காகவே உங்கட விரலிலை ஒரு மோதிரம் செய்து போடலாம்!`` எனப் பாராட்டியிருக்கின்றேன்.

``எட, போடா போ! சாப்பிடுமட்டும்தானே இப்பிடி முடிசூட்டுற?`` எனத் தட்டிக் கழிப்பார். அவரது உதட்டோரம் ஒரு திருப்திப் புன்னகை சுழித்திருக்கும். பெருமிதம் துலங்கும். பூரிப்புச் சுடர் விடும்.

இரவு எட்டு மணிபோல, மாணிக்கத்தார் உட்பட பெரியவர்கள் மூவரும் நானும் இன்னொரு வட்டலும் சூளுக்குப் புறப்பட்டோம். யுத்தத்திற்குப் போகின்ற ஆரவாரம்.

அம்மாவுக்கு நான் சூளுக்குப் போவது விருப்பமில்லை. அப்பாவிடம் சொல்லித் தடுக்கப் பார்த்தார். ``கடற்கரையோரம். சின்னஞ் சிறுசுகளை ஏதாவது காத்துக் கறுப்பு அணுகிவிடும். இவனைப் போகாமல் தடுத்திடுங்கோ!'' எனச் சொல்லிப் பார்த்தார். அந்தக் குழுவில் அப்பாவும் சேர்ந்து கொண்டதால் அப்பா எனது வருகையைத் தடுத்து நிறுத்த விரும்பவில்லை. இன்னுஞ் சொல்லப்போனால், அவரே விரும்பி வரவேற்றது போலிருந்தது.

குடியிருப்புக்குப் பக்கத்தேதான், கடல். பரவைக் கடல். நடந்து போய் வரக்கூடிய தூரம். வெளிக்கிட்டோம். எங்களுடன் சேர்ந்து வீட்டு நாய்களு இரண்டும் தொடர்ந்து காவலுக்கு வந்தன. ஆண் நாய்க்குப் பெயர் தம்பா, பெண்ணுக்கு ரோஸி. காட்டு முயல், உடும்பு வேட்டைக்கு அடிக்கடி போய்ப் பழக்கப்பட்டுள்ள அந்த இரு நாய்களும், இதுவும் வேட்டைக்குத்தான் என்ற எண்ணத்தில் எங்களுடன் தொடர்ந்தோடி வந்தன. மாணிக்கத்தார் அவைகளைத் துரத்தவில்லை. விடலைப் பையன்களான எனக்கும் என்னுடன் வந்த சோமனுக்கும் ஒரே கொண்டாட்டம். உற்சாகம். எனக்கு இது புது அநுபவம். கூட வந்தவர்கள் சுருட்டுப் பிடித்தவண்ணம் உரக்கக் கதைத்துக் கொண்டு வழி நடந்தனர். `டோச் லைட்' அடித்தபடி அந்த வெளிச்சத்தில் பாதை காட்டியவாறு, வழி நடத்திக் கூட்டிச் சென்றார், மாணிக்கத்தார். பழக்கப்பட்ட பாதை, அவருக்கு. அந்த ஊரில் பிறந்து வளர்ந்தவர்தான் அவர்.

நடந்து போகும் பாதையில் ஒரு திருப்பத்திற்கு அருகே வெளிச்சம் `மினுக் மினுக்' என எரிந்து கொண்டிருந்த கொட்டிலொன்று தெரிந்தது. சில சைக்கிள்கள் வெளியே நின்றன. பேச்சுக் குரல்களும் கேட்டன. சற்று நின்று நிதானித்த மாணிக்கத்தார், மற்ற இருவருடனும் ஏதோ குசுகுசுத்தார். பின்னர் எங்களைப் பார்த்து ``பிள்ளையள், கொஞ்ச நேரம் இஞ்சை நில்லுங்கோ. இதோ நொடிப் பொழுதிலை இதிலை போயிட்டு வந்திடுறம்'' எனச் சொல்லியபடி, நடையைக் கட்டினார். மற்ற இருவரும் பின்னால் தொடர்ந்தனர். நாங்கள் காத்து நின்றோம். இருட்டு - பேயிருட்டு. பயமாகக் கூட இருந்தது.

எனக்குப் புரிந்துவிட்டது. அது கள்ளுக் கொட்டில், யாரோ ரஸிகர் ஒருவர் பழைய கிட்டப்பா பாட்டொன்றை நீட்டி முழக்கிப் பாடிக் கொண்டிருந்தார். குரல் `கணீர்' ரென்று கேட்டது. ``காயாத கானகத்தே.... நின்று உலவும் காரிகையே....''

போன கையோடை மூவரும் திரும்பிவிட்டனர். திரும்பி வரும்போது சொல்லி வைத்தாற்போல் மூவரும் காறிக் காறித் துப்பிய வண்ணம் வந்து சேர்ந்தனர்.

மீண்டும் நடை பயணம் தொடங்கியது. கடலில் இறங்கிவிட்டோம். முன் சென்றார், மாணிக்கத்தார்.

சூள் வெளிச்சம் சுடர் விட்டு எரிந்து கொண்டிருந்தது. இன்னொரு சூளையும் அதில் கொழுத்திக் கொண்டார், இன்னொருவர். ரப்பர் எரிந்து புகை கக்கும் நாற்றம் குடலைப் புரட்டியது. வாந்தி வரும் போல இருந்தது. போகப் போகப் பழகி விட்டது. ஏதோ மாய உலகில் சஞ்சரிப்பது போல இருந்தது, அதன் பின்னணிக் காட்சி. பயமூட்டுவதாகவும் இருந்தது. ஏனோ தெரியவில்லை பேய்களைப் பற்றிய பயமும் என் நெஞ்சில் அலைமோதியது. உற்சாகப் பரப்பில் என்னை நானே தேற்றிக் கொண்டேன். மெல்ல மெல்லப் பயமும் அகன்றது. சகஜ நிலைக்கு வந்துவிட்டேன். நானும் அவர்களுடன் தொடர்ந்து சென்றேன். குதியாட்டம் போட்டு நடந்தேன்.

சுவாலை விட்டு எரியும் வெளிச்சங்களுக்கு மத்தியில் காலை வெகு மெது மெதுவாக ஊன்றிக் காலால் தடவிச் சென்றார், மாணிக்கத்தார். மட்டி அகப்படுமாம். இடையிடையே அவற்றைப் பொறுக்கி இடையில் கட்டியிருந்த பறியில் போட்டுக் கொண்டார், அவர். அவருக்கு இந்த அநுபவம் புதுசல்ல என்பதை அவரது ஒவ்வொரு செய்கையும் இனங் காட்டின. அவர் செய்ததைப் போலவே நாமும் செய்தோம். இடையிடையே மட்டி அகப்பட்டது. ``ம்.. ம். வந்த அலுவலைச் சுறுக்காய்ப் பாக்கவேணும்!'' எனச் சொல்லிய வண்ணம், காவெடுத்து வைத்து நீரினைக் காலால் வலித்து முன்னேறிச் சென்றார், அவர். சூள் சுவாலைகளும் முன்னோக்கிச் சென்றன. கடல் நீரில் வெளிச்சம் தகதகத்தது. பளபளத்தது.

அந்த அமாவாசை இருட்டில் திடீர் வெளிச்சத்தைக் கண்ட மீன்கள், றால்கள், 'விர்' ரென்று எட்டப்போய் நீரில் விழுந்தன. ``சரி... இண்டைக்கு வேட்டைதான்!'' எனச் சொல்லியபடி எங்களைத் திரும்பிப் பார்த்தார், அவர். அப்படிச் சொன்னது எங்களுக்கு விளங்கவில்லை. தான் சொன்னது எங்களுக்குப் புரிந்திருக்கவில்லை என்பதை விளங்கிக் கொண்ட மாணிக்கத்தார், ``காத்து வளம் இண்டைக்கு நல்லாக் கிடக்கு. மீன்கள் கரையோரம் அடைஞ்சு வருகுது. கெதியா நாங்கள் புடிச்சமெண்டா, வந்த கையோடையே வீட்டை போயிடலாம்!'' எனச் சொல்லி எங்களையெல்லாம் உற்சாகப் படுத்தினார், அவர். காறிக் காறித் துப்பினார். இப்படிக் காறித்துப்பி வந்தால், காத்துக் கறுப்பேதும் கிட்டவே அண்டாதாம்.

அவர் சொல்லிய வாய், மூடுமுன்னர் முழு நீள முரல் மீனொன்று துள்ளிப் பாய்ந்து நம்மைக் கடந்து போய் விழுந்தது. ``பொடியள் கவனம்! இந்த முரலுக்குத்தான் கவனமாக இருக்க வேணும். அங்கை, இங்கை பிராக்குப் பாத்தமெண்டா, முரல் பாய்ஞ்சுவந்து வயிற்றுக் குடலைத் துளைச்சுப்போடும். கவனம்.... கவனம்.....!'' என்றார் மாணிக்கத்தார். அவர் அநுபவஸ்தர். ஊரவர். நாங்கள் புதுப் பழக்கக்காரர். ``ஏதாவது அப்பிடி இப்பிடி நடந்திடக் கூடாது. கவனமாக இருங்கோ. இப்படி ஏதும் நடந்திட்டா, உங்க கொம்மாமாருக்கு நான் சமாதானம் சொல்லித் தீராது`` எனத் தொடர்ந்து சொன்னார். கடல் வேட்டையில் இப்படியும் ஒரு பயங் கலந்த

காரியம் இருக்கின்றது என்பதை அன்று தான் என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. எனக்கோ பயம் கலந்த ஆர்வம். கவனமாக நடந்தேன். கூர்ந்த அவதானத்துடன் செயல்பட்டேன்.

வாய் பேசினாலும் இயங்கிக் கொண்டிருந்தார், மாணிக்கத்தார். அடிக்கடி கரப்புக் கூடையை வாங்கி ஓங்கி நீரில் அமிழ்த்தி, கரப்புக்குள் கைவிட்டு உயிராக மீன்களைப் பொறிக்கி எடுத்தார். குத்தூசியால் கடுக்காய் நண்டுகளைக் குத்திப் பிடித்தார். பீப்பாத் தகட்டு வாளினால் வெளிச்சத்தைக் கண்டு மயங்கித் தயங்கித் திகைத்துப் போய் மேல் மட்டக் கடல் நீரில் நீந்திய மீன்களை வெட்டி அள்ளினார். எனக்கோ புதுப் பழக்கம். என்னுடன் வந்தவனுக்கும் அப்படியே. ஆனால் மற்ற இருவரும் ஓரளவு இந்தத் தொழில் நுட்பம் தெரிந்தவர்களாயிருக்க வேண்டும். மாணிக்கத்தாரைப் போல அவர்களும் சுறுசுறுப்பாக இயங்கினர். அவர்களைப் பார்த்து நானும் சோமனும் சுறுசுறுப்பாக இயங்குவது போலப் பாவனை காட்டிக் கொண்டோம். ஆனால், வேடிக்கை பார்ப்பது தான் எனது நோக்கம். இந்தப் புது அநுபவத்தை முற்று முழுதாகக் கிரகிப்பது தான் எனது விருப்பம்.

நாங்கள் கரையோரம் முன்னேற முன்னேற, நாய்கள் இரண்டும் தொடர்ந்து வருவதை, வெளிச்சத்தில் நான் அவதானித்துக் கொண்டு வந்தேன். தங்களது இருப்பை வெளிக்காட்டுவது போல, அடிக்கடி அவை இரண்டும் குரைத்துக் கொண்டு அங்குமிங்கும் ஓடி ஆடிக் கொண்டிருந்தன. தண்ணீர்க் கரையோரம் வருவதும், பின்னர் திரும்பிக் கரையோரம் ஓடுவதுமாக அவைகள் தங்களது உற்சாகத்தை வெளிப்படுத்தி வந்தன! ''தம்பா....! ரோஸி!'' என அடிக்கடி குரல் கொடுத்துக் கொண்டே வந்தார், மாணிக்கத்தார். நாய்கள் இரண்டும் வாலை ஆட்டிக் கொண்டு கரையோரம் அங்குமிங்கும் இலக்கின்றி ஓடிய வண்ணமிருந்தன.

வெளிச்சப் பரப்பில் திடீர் அதிர்ச்சி கொண்ட, ஒரு முழ நீளமுள்ள மொத்தமான கயல் மீனொன்று துள்ளி எழும்பிப் பாய்ந்ததில், தப்புத் தண்ணீருள்ள கல்லிடுக்கில் விழுந்து மாட்டிக் கொண்டு துடிதுடித்தது. எனக்கோ மெத்தச் சந்தோஷம். கையால் பிடிக்க வழுக்கிச் சென்றது. எல்லோரும் என்னையே வேடிக்கை பார்த்தனர். எனக்கோ ரோசம். அப்பிடியும் இப்படியும் துடித்துப் பிடிபட மறுத்தது. மீன். மனசைத் திடப்படுத்திக் கொண்டு ஒரு வழியாக அந்த மீனை அப்பிப் பிடித்து விட்டேன்! எனக்கென்றால் அப்படியொரு கொள்ளை மகிழ்ச்சி! அன்றைக்குப் பிடித்த மீன்களில் அதுதான் மிகப் பெரியது. உயிருடன் பிடிக்கப்பட்டது! என்னால் பிடிக்கப்பட்டது!

''சரி.. சரி..... ஒரு கூழுக்குத்தானே மச்சக் கறி. போதுமெண்டு நினைக்கிறன். இனித் திரும்பலாம்தானே!'' என எங்களுடைய பறிக் கூடைகளையும் ஆராய்ந்து விட்டுச் சொன்னார், மாணிக்கத்தார். பறிகளைக் குலுக்கிப் பார்த்துக் கொண்டார்.

எங்களுக்கோ உடனடியாகத் திரும்ப இஷ்டமில்லை.

''மழை வரும்போல கிழக்காலை மேகம் கவிஞ்சு வருகுது. தூறல் விழுந்தால் பந்தம் நூந்து போயிடும். பேந்து நாங்கள் மழை இருட்டிலை கஷ்டப்பட வேண்டி வரும். இளம் பொடியளையும் கூட்டிக் கொண்டு வந்திட்டம். அங்கை அதுகள், தலையிலை கை வைச்சுக்கொண்டு இருக்குங்கள். சுணங்காமல் போனால்தான் எதுக்கும் நல்லது'' என்று எங்களது அபிப்பிராயத்தைக் கேட்டார், அவர். அவர் சொல்வதில் நியாயம் இருந்தது.'' சரி..... சரி.... இனித் திரும்பிப் போவம்.''

கரையேற பொடியன்களாகிய எங்களுக்குத் துளிகூட விருப்பமில்லை. மழை வந்துவிடும் என்ற பயமுறுத்தல் அடி மனசில் நெருடத் தொடங்கியது. அவரோ வீட்டுக்காரர். அதிலும் ஒடியல் கூழுக்கு ஆயத்தம் செய்யச் சொல்லிவிட்டு வந்தவர். 'திரும்ப வீட்டுக்குப் போவது தான் சரி' என முடிவுக்கு வந்த நான், சிநேகிதனையும் கேட்டேன். அவனும் சரி என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டினான். விரும்பாமலேயே முடிவில் ஒப்புக் கொண்டோம். நாங்கள் விரும்பாவிட்டாலும், அவர்கள் விட்டிருக்கமாட்டார்கள்.

திரும்பினோம். கரையில் எங்களைக் கண்டு விட்டு நாய்கள் இரண்டும் உற்சாகத்துடன் வாலை ஆட்டிய வண்ணம் அங்குமிங்கும் துள்ளிக் குதித்தோடி தங்களது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டன. இரண்டு கால்களையும் தூக்கி மாணிக்கத்தார் மீது போட்டு, மெல்லிசாக அநுங்கி, தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டிருந்தன. ரோஸி முன்னால் ஓடியபடி வழிகாட்டியது.

திரும்பிக் கொண்டிருந்தோம்.

போனபோது இருந்த உற்சாகத்தைவிட, வரும்போது இருந்த குதூகலம் இரட்டிப்பாக இருந்தது. வானை நோக்கி வெள்ளியைப் பார்த்துவிட்டு ''இப்ப மணி பதினொண்டு இருக்கும்!'' என்றார் மாணிக்கத்தார். மூன்று பறிகளும் கனத்திருந்தன. கனத்த பறிகளை மாறி மாறிச் சுமந்து வந்தார்கள், மற்றவர்கள்.

மூவருக்கும் வெறி முறியும் கட்டம். அவர்களது பேச்சிலிருந்து இது புலப்பட்டது. ''அவர் வாறாராம் வாறாராம், காத்தலிங்க சாமி!'' என்ற காத்தான் கூத்துப் பாட்டொன்றை எடுத்து விட்டார், மாணிக்கத்தார். தொடர்ந்து காத்தான் கூத்து அரங்கேற்றம், தெருவெங்கும் அரங்கேறியது. நல்ல குரல் வளம் அவருக்கு. முன்னொரு காலத்தில் நாட்டுக் கூத்தில் ஆர்வமும் அக்கறையும் கொண்டிருந்தவர், அவர். ஓரிரண்டு கூத்துகளில் - மேடையேறிய அநுபவங்களையும் அவரது பேச்சிலிருந்து அறியக் கூடியதாய் இருந்தது. அதை நிரூபிப்பது போல் இருந்தது அவரின் செய்கை. பாடிய முறை.

பிற்பாட்டுச் சுருதி சேர்க்கும் முகமாக பக்கமாக ஓடிவந்த நாய்கள் இடையிடையே குரைத்துச் சோபையூட்டின.

வீடு வந்த எம்மை எல்லோருமே வரவேற்றனர். பறியைக் கவிழ்த்து விரித்திருந்த பழைய பாயில் கொட்டினோம். பாயில் சில மீன்கள் நீந்த முயற்சித்தன. பாய் நிரம்பி வழிந்தது.

பெண்டுகள் மெச்ச வேண்டுமென்ற ஆசையில் நான் உயிருடன் பிடித்த மீனைத் தூக்கிக் காண்பித்தேன். அது துடித்துப் பதறியது. ''இதை என்ர கையால் நான் தான் புடிச்சேன்!..... நான்தான் இதைப் புடிச்சேன்!''.

யுத்த பய அகதிகளாக வந்திருந்த குடும்பத்தினரில், பட்டணத்தில் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த மாணவியர் இருவர் இருந்தனர். அவர்கள் நான் தூக்கிக் காட்டிய மீனைப் பார்த்துவிட்டு ''அடேயப்பா!'' என வாய்விட்டு ஆச்சரியத்தைத் தெரிவித்துக் கொண்டனர். கையால் பிடிக்கப்பட்டது என்பதை நம்ப மறுத்தனர். ''நீ டுப் விடுறே!'' என்றனர். சொல்லிவிட்டுச் சிரித்தனர்.

இது எனக்குள் எரிச்சலை ஏற்படுத்தியது. கூட வந்தவர்களின் முகங்களை நான் ஏக்கத்துடன் பார்த்தேன். அவர்கள் சாட்சி சொன்னார்கள். ''பொடியன் வலு விண்ணன்! அவன் தான் கையாலை இதைப் புடிச்சவன்.''

கடல் வேட்டைக்குப் போய்வந்த நாங்களனைவரும் உடல், மேல் கழுவினோம். உப்பு நீர் பிசுபிசுப்பு அகல, உரஞ்சிக் கழுவிக் கொண்டோம். உடலைத் துவாய்த் துணியால் துடைத்து நிமிர்ந்த வேளை, கொதிக்கக் கொதிக்கக் கோப்பி வந்தது. பெரிய லோட்டா நிறைந்த கோப்பியை ஊதிக் குடிக்கும் போது. உடம்பில் புதுக் களை பிறந்தது. களைப்புத் தீர்ந்தது போன்ற ஒரு மன உற்சாகம் பிறந்தது. எனக்கென்றாலோ புது அனுபவம்.

பெண்டுகள் பக்கம் பக்கமாக வேலைகளில் சுறுசுறுப்பாக இயங்கினர். முற்றத்து வேப்பமரப் பக்கம் தற்காலிக அடுப்புக் கல்லில் ஏற்றப்பட்ட பெரிய குண்டானில் தண்ணீர் உலை கொதித்துக் கொண்டிருந்தது. பொரிமாத் தூள் ஒருபக்கம் இடித்து அரிக்க. இன்னொரு பக்கம் இடிக்கப்பட்ட ஒடியல் மா புடைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. கூழ் குடிக்க ஏதுவாக வடலிப் பனையில் பனை ஓலை வார்த்து புளாக் கோலிக் கொண்டிருந்தனர், ஒரு சிலர், கடலால் கொண்டு வந்திருந்த கடல் படு மச்சத் திரவியங்களை தரம் பிரித்து ஆராய்ந்து-ஆய்ந்து கழுவிக் கொண்டிருந்தனர், பிறிதொரு பகுதியினர். ஒரே கலியாண ஆரவாரம், அங்கே களைகட்டி இருந்தது.

நட்ட நடுச் சாமவேளை. வேலிப் பூவரச மரத்திலிருந்து சாமக்கோழி கூவும் சத்தம் இடையிட்டுக் கேட்டுக் கொண்டிருந்தது.

மாணிக்கத்தார் தோளில் கிடந்த துண்டைத் தலைப்பாகை கட்டிக் கொண்டார். அவர் அப்படிச் செய்ததைக் கண்டதும் பெண்டுகள் தத்தமது கைப்பணிகளை வெகு பவ்வியமாக எடுத்து வந்து அடுப்புக்குப் பக்கத்தே வரிசையிட்டு வைத்துவிட்டு, ஒவ்வொருவராக ஒதுங்கிக் கொண்டனர். மாணிக்கத்தார் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். ''இனி எல்லாம் சரி.

ஆருமே இனிக் கிட்டடிக்கும் வரக்கூடாது!''

இனிக் கூழ் காய்ச்சி முடியுமட்டும் அவர்தான் ராஜா. ஒருவரும் கமாரிடக் கூடாது. அகப்பையை எடுத்துக் கூழ்ப் பானைத் தண்ணீரைத் துளாவிப் பார்த்தார், அவர். தயார்ப் படுத்தப்பட்ட மீன், நண்டு, திருக்கைகளைச் சருவச் சட்டியிலிருந்து குண்டானுக்குள் மெது மெதுவாகப் போட்டார். நெருப்பு சுவாலைவிட்டு எரிந்தது. ''அச்சா.... அச்சா....!'' மீண்டும் துளாவினார். அகப்பையை எடுத்து முகர்ந்து பார்த்தார். முகத்தைச் சுளித்துக் கொண்டார்.

தரமான சீனச் சமையல்காரனின் பக்குவத்துடனும் பந்தாவுடனும் அவர் இயங்குவதைப் பார்க்க வேடிக்கையாக இருந்தது. அகப்பையால் சிறிது அள்ளிச் சிரட்டையில் விட்டு ஊதிக் கொண்டே உப்புப் புளி ருசி பார்த்துக் கொண்டார். செருமல் வந்தது. செருமிக் கொண்டார். கண்ணில் நீர் வடிந்தது. 'ம்..... ம்.....' என்றார். வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டார்.

கடைசியில் ஒடியல் மாக் கலவைச் சட்டியைக் கையில் எடுத்தார். ''ஒருவரும் இந்த நேரம் கதைக்கக் கூடாது!'' எனக் கட்டியம் சொல்பவனைப் போலச் சொல்லிவிட்டுச் சற்று நிறுத்தி, மாக்கலவையைக் குண்டானுக்குள் சரித்துக் கொட்டினார். அகப்பையால் இரண்டொருதரம் துளாவி விட்டுக் கொண்டார். நெருப்பைத் தணித்தார். விறகுகளை ஓரமாக ஒதுக்கிவைத்தார்.

''அப்பாடா!'' என வாய்விட்டுச் சொல்லிக் கொண்டே தலைப்பாகையை அவிழ்த்து உதறி வேர்த்திருந்த முகத்தையும் தோளையும் அதனால் அழுத்தித் துடைத்துக் கொண்டார். ''இனிப் பெண்டுகள் ஆக வேண்டிய காரியத்தைச் சட்டுப் புட்டென்று பாருங்கோ!'' எனச் சொன்னார். ''ஆம்பிளையளெல்லாம் வாருங்கோவன்' எனக் கூப்பிட்டார். மீண்டும் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டார்.

தறித்துப் போட்டிருந்த பனங் குத்திகள் முற்றத்திற்கு இருகரையும் நகர்த்தப்பட்டன. பனாட்டு, தேங்காய்ச் சொட்டுகள் வைக்கப்பட்ட சிறு சிறு பனை ஓலைக் குட்டான்கள் வந்து சேர்ந்தன.

ஆண்கள், பெண்கள் உட்பட பலர் ஒவ்வொருவராகத் தமக்குத் தோதான புளாக்களை எடுத்துக் கொண்டு, குத்தியில் குந்தத் தொடங்கினர். கல்லூரி மாணவிகளை அழைத்தபோது ''எங்களுக்கு வேண்டாம். குடிச்சுப் பழக்கமில்லை!'' என மறுத்துவிட்டனர். மாணிக்கத்தார் அவர்களை விசித்திரமாகப் பார்த்தார். ''பட்டணத்திலை படிக்கிற புள்ளையளெல்லோ? அப்பிடித்தான் இப்ப சொல்லும்!'' என்றார்.

வீட்டுக் கோடிக்குப் பின்னால் கறிக் கழிவுகளைத் தின்று கொண்டிருந்த நாய்களின் உறுமல் இன்னமும் ஓயவில்லை. பூனைகள் சீறிச் சீறித் தமது எதிர்ப்பைக் காட்டின. முன்னுக்கு நடந்த சமாவிற்குப் பக்கமேளம் வாசிப்பது போல இருந்தது, அந்தப் பின்னணிச் சங்கீதம். தம்பாவும் ரோஸியும் குரைக்கும் சத்தம் விட்டு விட்டு கேட்டது.

மாணிக்கத்தாரின் மனுஷிதான் கூழை வார்த்தா. ஒவ்வொருவருக்கும் கேட்டுக் கேட்டு வற்புறுத்திக் கூழை ஊற்றிக் கொண்டிருந்தா. ''கவனமாகக் குடியுங்கோ..... மீன் முள்ளுக் கவனம்! பார்த்துக் குடியுங்கோ.....!'' என எச்சரித்தா. கூழ்ச் சட்டியை அரக்கி அரக்கி வைத்தா. ஒவ்வொருவராக வற்புறுத்திக் கேட்டா. ''கொஞ்சம்.. இன்னும் கொஞ்சம்...''

உப்பு, புளிப்பு, துவர்ப்பு எனப் பலவகைப்பட்ட சுவைகளின் சங்கமக் கலவைகள் ஒருங்கு சேர்ந்து நாவைச் சுவையின் உச்சத்துக்கே கொண்டு சென்றன. பனாட்டை ஒருவர் கடித்தார். தேங்காய்ச் சொட்டை ஒருவர் சுவைத்தார். பொரித்த மிளகாயை மெல்ல நன்னிய ஒருவர். அதன் ருசியில் தன்னை மறந்து ரசித்து ''ச்சா'' என உரக்கக் குரல் கொடுத்தார். ''பிரமாதம்!'' என்றார் ஒருவர். ''சோக்காயிருக்கு'' என்றார் இன்னொருவர்.

கூழ்ச் சமா களை கூட்டிக் கொண்டிருந்தது. அது முடிய நடுச் சாமத்துக்கு மேலாகிவிட்டது. குடிக்கக் குடிக்கத் தெவிட்டவில்லை, அந்த ஒடியல் கூழ்.

காலத்தால் மறக்கமுடியாமல் மனசில் ஆழமாகப் பதிந்து போயிருக்கின்றது. அந்தச் சுவை. இன்று, நினைக்கவே நாவில் நீர் ஊறுகின்றது. இந்த ரஸனையை இந்தச் சென்மத்தில் மறுபடியும் நானடைவேனோ என்னவோ?

யாழ்ப்பாணத்தானின் ஒடியல் கூழை ஒரு தடவையாவது குடித்துச் சுவைத்தவர்களால்தான் அவனைச் சரிவர விளங்கிக் கொள்ள முடியும். அவனுடைய உணர்வுகளைப் புரிந்து கொள்ள இயலும். அவனது ஆத்மக் குரலைத் தெளிவாகக் கேட்க இயலும். இது வெறும் வார்த்தைகளல்ல, உண்மை!



9

இரண்டாவது யுத்தத்தின் கோரப் பயம் மெல்ல மெல்ல இலங்கையை விட்டு அகலத் தொடங்கிய காலகட்டம். அவலம் முற்றாக நீங்க வில்லை. அதன் சாயல்கள் இடையிடையே தென்பட்டன.

யுத்த பீதியின் காரணமாக யாழ் நகரை விட்டு நாட்டுப்புறப் பகுதிக்கும் தூரப் பிரதேசங்களுக்கும் குடி பெயர்ந்திருந்த மக்கள், கொஞ்சம் கொஞ்சமாகத் தமது வீடு வாசல்களை நோக்கி வரத் தொடங்கினர். குடியேறினர்.

எங்களது குடும்பத்தவர்களும் இன சனங்களும் அயல் அட்டையைச் சேர்ந்தவர்களும் தற்காலிகமாக அடைக்கலம் தேடிய அல்லைப்பிட்டிப் பிரதேசத்தைவிட்டுத் திரும்பவும் தமது இல்லிடங்களை நோக்கி, வந்து சேர்ந்தனர். வீடுகளைக் கழுவிச் சுத்தம் செய்தனர். புதுப்பித்துக் கொண்டனர்.

யுத்த பயம் முற்றாக நீங்கிடவில்லை. அதன் பக்க விளைவுகள் மக்களைப் பாடாய்ப் படுத்தின. அத்தியாவசியத் தேவைகளுக்குத் தட்டுப்பாடு. கூப்பன் கடைகள், உதயமாகின. உணவுப் பொருட்கள் பங்கீடு செய்யப்பட்டு, விநியோகிக்கப்பட்டன. அதிலும் ஊழல்கள் மலிந்தன. மக்களுக்குச் சென்றடைய வேண்டிய பொருட்கள், கள்ளச் சந்தைக்குள் குடி புகுந்தன. அத்தியாவசியப் பொருட்கள் விலை ஏறின. விலை ஏற்றம் மக்களைப் பாதித்தது.

இப்படி இப்படியான எத்தனையோ பிரச்சனைகள்..... குடும்பத்தினருடன் திரும்ப வந்த நான், எனது தொழிலகத்தை - சலூனை - திறந்து தொழில் புரிவதில் மும்முரமாக ஈடுபட்டேன். ஆனால், முந்தைய செந்தளிப்புச் சிறிது

கூட இல்லை. வருமானமும் சீராக அமையவிலை. ஏதோ காலம் ஓடிக் கொண்டிருந்தது.

நகரத்தில் சன சந்தடியே இல்லை. பட்டினமே வெறிச்சோடிப் போயிருந்தது. மக்கள் அத்தியாவசியத் தேவை கருதியே நகருக்குள் வந்து சென்றனர். சும்மா ஒப்புக்கு நடமாடித் திரிந்தனர். வந்து போயினர். அவ்வளவு தான்.

பஜார்க் கடைகளில் வியாபாரம் படுத்துப் போய் விட்டது. பெரிய புடவைக் கடை வைத்திருந்த 'பாய்' மார் தங்களது நிறுவனங்களை இழுத்து மூடி விட்டுத் தங்கள் தாய் நாட்டுக்குக் கப்பலேறிவிட்டனர். சிலது கைமாறிப் போனது. சில நிறுவனங்கள், விலை போயின. நம்மவர்கள் புது முதலாளிகளாகப் புதுப் பரிமாணம் எடுத்தனர்.

நகரத்தின் மீது சோகச் சாயல் கவிந்திருந்தது. ஊருடன் ஒத்ததுதானே நமக்கும். எனவே வருகிற வருமானத்தில் சமாளித்து வந்தது, எனது குடும்பம்.

சலூனில் நான்கைந்து ஆட்கள் தொழில் செய்து கொண்டிருந்த நிலைமாறி, ஒருவர் இருவர் என வந்து ஒப்புக்குத் தொழில் செய்தனர். சில சமயங்களில் ஒருவருமே வந்து சேரமாட்டார்கள். நானே தன்னந்தனியாகக் காத்திருப்பேன். அப்படியொன்றும் விவரம் தெரியாத வயசு. இருந்தும் தொழிலில் வலு சுட்டி. எத்தனை கெட்டிக்காரத்தனங்கள் இருந்தாலும் வாடிக்கையாளர் தானே தேடி வரவேண்டும். அவர்கள் வருவதில்லை. காத்திருந்து மாலையில் ஒரு சில ரூபாய்களுடன் தான் வீடு திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். மனசு வெறுத்துப் போகும். எரிச்சல் எரிச்சலாக வரும்.

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்குத் தெற்குப் பக்கம் எங்களது இருப்பிடம். நடுவே ஸ்டேசன். அதன் வடக்குப் பக்கம் அத்தியடி என அழைக்கப்பட்ட ஒரு பகுதி. அங்கு தீப்பெட்டித் தொழிற்சாலை ஒன்று அவசர கோலத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. யுத்த காலம் காரணமாக நெருப்புப் பெட்டித் தட்டுப்பாட்டை நீக்குவதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட திடீர்த் தொழிற்சாலை, அது. அது வந்த பின்னர் நமது அயலில் ஒரு பரபரப்புத் தோன்றியது. விதவைகள், வீட்டில் சும்மா இருக்கும் குமர்ப் பெண்கள், வேலையற்றுச் சும்மா குந்திக் கொண்டு அடிக்கடி சுருட்டுப் பிடித்துக் கொண்டிருக்கும் வயோதிபத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் ஆண்கள், பெண்களுக்கு வேலை கிடைத்து விட்டது - நெருப்புப் பெட்டி ஒட்டும் வேலை.

தீப்பெட்டியில் தீக்குச்சிகளை வைத்து மூடும் உள் லாச்சிகளை உருவாக்குவதே அந்த வேலை. அதற்கான சகல சாதனங்களையும் - பசை காய்ச்சுவதற்கான கோதுமை மா உட்பட - கம்பெனிக்காரர்களே

தந்துவிடுவார்கள். ஆயிரம் மூடலுக்கு இருபத்தைந்து சதம், கூலி. ஆனால் சேதாரமும் இருக்கக் கூடாது. செருகும் பெட்டிகளிலும் சதுரம் கோணக்கூடாது. தப்பாய்ச் செய்தால் கூலியில் பிடிக்கப்படும். தொடர்ந்து செய்தால், சாதனங்கள் நிறுத்தப்படும். சில வீடுகளில் பத்தாயிரம், இருபதாயிரம் என மூடல் பெட்டி ஒட்டிவிடுவார்கள். குடும்பமே சிறிய தொழிற்சாலையாக இயங்கிவந்தது. சதா இயங்கி வந்த குடும்பங்கள், தமது முழு நேரத் தொழிலாகவே இதைக் கைக்கொண்டு உழைத்து வந்தனர். தொடர்ந்து வேலை செய்தனர்.

எங்களது வீட்டிலும் பெயர் பதியப்பட்டது. அம்மா தொடக்கி வைத்தார். வீட்டில் நான்கைந்து பேர் இருந்தோம். சும்மா சோம்பிக் கிடப்பதை விட, நெருப்புப் பெட்டியாவது ஒட்டுவோம் என அம்மா எடுத்துள்ள முடிவை அமுல் நடத்துவதில் நான் முன்னின்று உற்சாகமாக ஆதரித்தேன். கடையிலும் தொழிலில்லை. வருமானமோ கம்மி. அப்பா இதைப் பற்றியெல்லாம் கவலைப்படாத தனிப் பெரும் பிறவி. பொறுப்புக்கள் அத்தனையும் அம்மாவின் தோள் மீது. அம்மா எடுத்த முடிவைச் செயல்படுத்த ஒரு ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஆயத்தமானோம். இயங்கத் தொடங்கினோம்.

ஏனெனில் ஞாயிறு வாரத்தில் கடை அரைநாள் லீவு. பின்னர் வீடு வந்து குளித்துச் சாப்பிட்டால் மிஞ்சுவது பெரிய இடைவெளி நேரம். 'பிளாக் அவுட்' முற்றாக நீக்கப் பட்டிருக்கவில்லை. தியேட்டர்களிலும் பகலில் பழைய படங்களைக் காட்டுவார்கள். அதுவும் இங்கிலீஸ் படங்கள். எனவே வெளிப் பொழுது போக்குகளைத் தவிர்த்து, தீப்பெட்டி மூடல்கள் ஒட்டும் பணி அமோகமாக எங்கள் வீட்டிலும் அரங்கேறியது. இதில் நான் முழு மூச்சாக ஈடுபட்டு உழைத்து வந்தேன். சீராகச் செயல்பட்டு வந்தேன். அந்தச் தொழிலிலும் நான் நிபுணத்துவம் பெற்றேன்.

இந்த இடத்தில் ஓர் உண்மையையும் சொல்லித்தான் ஆக வேண்டும். பசை காய்ச்சத் தரும் கோதுமை மாவை, அன்றும் இன்றும் மா பசை காய்ச்சத்தான் லாயக்கு என்ற எண்ணம் பெருவாரியானோரிடம் பரவியிருந்த காலம். சாவீட்டுப் பிணம் சுமக்கும் பாடைகளுக்கு வண்ணக் கடதாசிச் சோடனைகளை ஒட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் பசை காய்ச்சும் மா என்றே பெரும்பாலானவர்களின் வீடுகளில் நம்பிக்கை. அப்படிப் பாடை சோடிக்கப் பயன்படுத்தப்பட்ட பசை காய்ச்சிய மண் சட்டிகளைக்கூட வீட்டிற்குள் அனுமதிக்க மாட்டார்கள். பசைச் சட்டியை அடிவளவிற்குள் உள்ள மா, வேம்பு மரங்களின் கீழ் கவிழ்த்து வைத்துவிட வேண்டும் என்பது, அந்தக் காலத்து எழுதாச் சட்டமாக எங்கள் பகுதியில் நிலவி வந்தது. காரணம் அப்படிப் பசை காய்ச்சிய சட்டி துடக்குச் சட்டியாம். அதை வீடு வாசல்களுக்குள்ளே வைத்திருந்தால் அந்த வீட்டுக்கே ஆகாதாம். கூடாதாம். அது துர்க்குறியாம்.

இப்படியாக ஒதுக்கப்பட்ட துடக்குச் சட்டி மெதுமெதுவாக எங்களது

அயலவர்களின் சோற்றுப் பானைக்கு அணித்தாக இடம்பிடித்துக் கொண்டது தான், காலத்தின் விசித்திரம். கணிக்கத் தக்க அம்சம்.

அந்தப் பசைக்குத் தரும். அமெரிக்கன் மாவில் தான் பாண் தயாரிக்கின்றார்கள். என்ற அதிசய உண்மையை ஒரு நாள் கண்டு தெளிந்தேன். எங்கள் கடைக்குச் சற்றுத் தூரத்தில் கிரவுண் பேக்கரி என்ற பெயரில் ஒரு பேக்கரி இருந்தது. மாத்தறையைச் சேர்ந்தவர்கள். எங்களது கடைக்குத்தான் முடி திருத்த வருவார்கள், அங்கு வேலை செய்யும் தொழிலாளர்கள், முதலாளி ஒரு தங்கமான மனுஷன். நல்ல குணம். இவர்தான் மாவின் சூட்சுமத்தை எனக்கு விளங்கப்படுத்தினார். அரிசியைப் போல. இதுவும் ஒரு உணவுக்குரிய பண்டம் தான் என எனக்குத் தெளிவாக விளங்கப்படுத்திச் சொன்னார்.

அமெரிக்கன் மா என நாம் பசை காய்ச்சப் பயன்படுத்தும் மாவும் பாண் தயாரிக்கத் தங்களால் பயன்படுத்தப்படும் மாவும் ஒன்றுதானாம்!

அம்மாவுக்கு இந்த உண்மையை எடுத்துச் சொல்லி நம்பவைக்கக் கனகாலம் எடுத்தது. ஒரு நாள் என்னுடைய நச்சரிப்புத் தாங்காமல் இரவு அந்த மாவில் ஒரு சிறங்கை எடுத்து அரிசி மாப் பிட்டு அவிப்பது போல. நிறையத் தேங்காய்ப்பூச் சேர்த்து அமெரிக்கன் மாய்பிட்டு அவித்துச் சுளகிலே பரப்பி வைத்தார். தேங்காய்ப்பூவுடன் சேர்ந்து ஒருவகை வாசனை வீசியது. அந்தப் பிட்டு.

அப்பொழுதும் அம்மாவுக்கு இது உணவுக்கான மூலப் பொருட்களில் ஒன்று என்ற ஞானம் பிறக்கவில்லை. சகோதரர்களும் இது ஏதோ ஒரு விசர் வேலை என நினைத்து, ஒதுங்கிப் போய்விட்டனர். சாப்பிடவில்லை.

ஏதோ புதியதைக் கண்டுபிடித்த பெருமிதம் என் நெஞ்சில். அன்றைக்குத் தொட்ட இரவு உணவுப் பழக்கம். இடியப்பமோ அல்லது பிட்டோ அமெரிக்கன் மாவாகத்தான் இருக்க வேண்டும். அரிசி மாவை மறந்து எத்தனையோ காலங்கள். இப்பொழுதும் அதைப் பற்றியெல்லாம் நான் நினைத்துப் பார்ப்பதுகூட இல்லை.

தீப்பெட்டித் தொழிற்சாலையிலிருந்து வாரத்தில் சனிக்கிழமை தோறும் கணக்குத் தீர்க்க வருவார்கள். அவர்கள் வரும் நாட்களில் சில வீடுகளில் கொண்டாட்டம் களி கொள்ளும். அன்றைக்குத்தான் சில வீடுகளில் ஆமான சாப்பாடு இடம்பெறும். சிறிய தொகைக் காசுதான். ஆனால் முழுக் குடும்பமுமே பாடுபட்டு உழைத்த பணமல்லவா? உழைப்புக்கேற்ற ஊதியமில்லாது போனாலும், அதில் கிடைக்கும் மகிழ்ச்சியே தனியானது தான். அந்தச் சந்தோசம் அக்குடும்பத்தினரிடம் தெரியும். சில குடும்பத்தினர் கூட்டாகச் சினிமாவுக்கும் சென்று வருவார்கள்.

தீப்பெட்டி மூடல் ஒட்டுவதில் நான் விண்ணன் எனப் பெயர் சம்பாதித்துவிட்டேன். அயலில் எனக்கு நல்ல உழைப்பாளி என்றும்,

சுறுசுறுப்பானவன் என்ற பெரும் பெயரும் நிலைத்துப்போய் விட்டது. காசு அல்ல, எனக்கு முக்கியம். உழைக்கிறோம், உழைப்பாலே பயன் பெறுகின்றோம் என்ற உணர்வே என்னுள், என்னை இயக்கிக் கொண்டிருந்தது. புதியதொரு வேகம், பிறந்தது.

எங்கள் அயல் தீப்பெட்டி வேலைத் தொடர்புகளை மேற்பார்வையிட நியமிக்கப்பட்டிருந்தவர், சொக்கலிங்கம் என்பவர். இவர் சிறு சண்டியன். 'சட்புட்' என்றுதான் பேசுவார். அதிலும் கொஞ்சம் பணிந்துபோய், பெண்கள் 'அப்பு..... ராசா' என்றால் உச்சிக் கொம்புக்குத் தாவிவிடுவார். மதிக்கமாட்டார், அதுவும் கணக்குத் தீர்க்க வரும் சனிக்கிழமைகளில் அவரைப் பிடிக்கவே முடியாது. அப்படியொரு கெப்பர்த் தனம். பெண்களை மிரட்டுவதில் அசகாய சூரர். கம்பனி முதலாளி ரொம்பவும் நல்லவர். இந்த எடுபிடிகள் தான் கோலோச்சி வெருட்டினர். மக்களெல்லாம் பயந்து குறாவினர். பம்மிப் பம்மிப் பேசினர்.

வீட்டுக்கு வீடு மௌனமான ஒப்பந்தம் ஒன்றை அவர் அமுல் நடத்தி வந்தார். வீட்டுக்கேற்ற வகையிலும் மூலப் பொருட்களை விநியோகிக்கும் முறையிலும் ஆளாளுக்கு ஆயிரம் மூடல்கள் கணக்கில் வராமல் எண்ணித் தரச் சம்மதிக்க வேண்டும். அப்படித் தரச் சம்மதிக்க எதிர்ப்புக் காட்டும் வீட்டினர் தயாரிக்கும் தீப்பெட்டி மூடல்கள் கோணல் மாணல், வடிவாயில்லை, கொடுக்கும் சாமான்களுக்குப் போதுமானதாகவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படும். பணம் வெட்டப்படுவது மாத்திரமல்ல, இக்குற்றச்சாட்டையொட்டி அந்த வீடும் பதிவில் இருந்து நீக்கப்பட்டு விடும். தொழில் நிறுத்தப்படும்.

பிரச்சினை என்றால் கரும்பு கிடைத்த சந்தோஷம் தானே, எனக்கு. பிரச்சினைக்குப் போகக் கூடாது, வந்தால் விடக்கூடாது! எதுவென்றாலும் வரட்டுமே!

சொக்கலிங்கத்திடம் எனக்கு எந்த விதமான வெறுப்புமில்லை. துவேஷமுமில்லை. அவரை முதன் முதலில் பார்த்தபொழுது எனக்கு அவர் மீது நல்லபிப்பிராயம் சுரக்கவில்லை. ஆள் விறுசன் என்ற உணர்வே என் மனசில் பதிந்து விட்டது. அதற்காக என் அபிப்பிராயம்தான் சரி என நான் நம்பவில்லை. தொழிலை மெய்யுணர்வுடன் செய்து கணக்குத் தீர்த்து வந்தேன்.

இவர் மெல்ல மெல்ல எங்கள் வீட்டில் ஒட்டும் பெட்டிகள் ஒழுங்காய் இல்லை, வளைஞ்சுபோய் கிடக்கு, மனேஜரிட்ட ரிப்போட் செய்ய போறன்! எனப் புறுபுறுத்த வண்ணம் எச்சரிப்பது போல என்னை நோட்டமிட்டார்.

எனக்கு ஏற்கனவே இப்படி நடக்கும் எனத் தெரியும். ஏன் இத்தனை காலம் கடக்கின்றதென்று தெரியாமல் இருந்தேன். இன்று எனது வீட்டு வாசல் படிக்கே பிரச்சினை வந்துவிட்டது. இதுவரையில் வராமல்

இருந்ததற்கும் காரணமுண்டு. வாய்ச் சாதுர்யக்காரன் என்று அயலில் பெயர் எடுத்துள்ளவன், நான். அத்துடன் அசாதாரண துணிச்சல்காரன். எனவே பகை சற்று விலகி இருந்தது. எட்ட நின்றது. இப்போ கிட்டே வந்து கதவைத் தட்டுகிறது.

இன்று அதை நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டேன்.

வந்த சொக்கலிங்கம். எங்கள் வீட்டில் கணக்குத் தீர்க்காமல் கட்டிவைத்திருந்த சாக்கு மூட்டையைக் காலால் ஒரு எத்து எத்திவிட்டு, வந்த சயிக்கிளிலேயே ஏறிப் போய்விட்டார். நான் சொன்னதை அவர் நின்று கேட்கத் தயாராகவில்லை.

எனக்கு அவர் 'ரெக்கிளாஸ்' பேசியதில் வருத்தமில்லை.

என் கையால் பாடுபட்டுச் சிருஷ்டித்த படைப்புக்களைக் காலால் எட்டி எத்தியதைத்தான் என்னால் சகிக்க இயலவில்லை. மனசு பொறுக்கவில்லை.

பாதிக்கப்பட்ட பெண்களை அழைத்தேன். நேரே கம்பனிக்குப் போய் நியாயத்தைக் கேட்போமெனக் கூப்பிட்டேன். பல நேரங்களில் இந்த அநியாயவானுடைய கெடுபிடிகளை என் காது கேட்கத் திட்டித் தீர்த்த பெண்கள், பயத்தினால் பின்னடைந்து விட்டனர். அம்மா சம்மதிக்கவில்லை. ''ஏதோ அன்றன்றாடு வாய்க்கு வயித்துக்கு குடிக்கிற கஞ்சித் தண்ணியைக் கெடுத்துப் போட வேண்டாம்!'' என எனக்கு அறிவுரை சொல்லியும் பயமுறுத்தினார்.

நான் எதற்குமே கிறங்கவில்லை. கிறங்கக்கூடிய மனசல்லவே என்னுடைய மனசு

நீண்ட நாட்களாக ஒரு தொழிலுக்கு நடந்த அயோக்கியத் தனத்தை தட்டிக் கேட்க வேண்டுமெனத் துணிந்து செயல்பட்டேன். இது அவசரத்தில் எடுத்த முடிவுமல்ல. நீண்ட நாட்களாக என் நெஞ்சில் வெந்து கொண்டிருந்த வெக்காரத்தைத் தணிக்கும் செயலுக்காக என்னைத் தயார்ப் படுத்திக் கொண்டேன்.

நடுவே யாழ்ப்பாண ரெயில்வே ஸ்டேசன். கடந்தால் அத்தியடி. ரெயில் தண்டவாளத்தினூடாக மூடையுடன் கடந்து சென்று கம்பெனியை அடைந்தேன். பக்கத்தவன் என்கின்ற முறையில் இடம் ஏற்கெனவே நன்கு தெரிந்திருந்தது.

வாசலில் ஒருவருமில்லை. நேரடியாக மனேஜர் என்று எழுதப்பட்ட அறைக்குள் நுழைந்து, சாக்குப் பாரத்தை இறக்கி வைத்தேன். வியர்வையை துடைத்துக் கொண்டேன்.

கதிரையிலிருந்தவர் என்னை அண்ணாந்து பார்த்தார். ''என்ன விசயம்?'' எனக் கேட்டார். அவர்தான் மனேஜர். முதலாளியும் அவராகக் கூட இருக்கலாம்.

நான் நடந்த சம்பவங்களைக் கோர்வையாகச் சொன்னேன். 'கப்பம்' அறவிடுவதையும் சொல்லிவைத்தேன். நான் என் கைப்படத் தயாரித்த மூடிகளை எடுத்து ''இதில் என்ன பிழை இருக்கிறது?" எனக் கேட்டு வைத்தேன்.

அவர் பொறுமையாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டார். கொப்பியொன்றில் ஏதோ எழுதினார். என் வாக்குமூலத்தை எழுத்தில் பதியவைத்தார் போலும்.

''சாக்கு மூட்டையை மூலையோரம் வைச்சிட்டுப் போ, தம்பி" என்றார். ''எண்ணிக் கணக்கில பதிஞ்சு வைப்போம்! நீ போயிட்டு வா. நான் பாத்துக் கொள்ளுறன்".

அடுத்த சனிக்கிழமை கணக்குத் தீர்க்க அண்ணன் சொக்கலிங்கம் வரவேயில்லை. வேறொருவர் அவருக்காக வந்திருந்தார். அவரது பெயர் மதிமுகராஜா.

இது எனது தார்மீகப் போராட்டத்திற்குக் கிடைத்த இன்னொரு வெற்றி.



10

உலக உக்கிர யுத்தத்தின் நடுப்பகுதி, ஹிட்லர்தான் சர்வதேச ஹீரோ. அவனது நாஸிஸத்தின் கொடுங் கோன்மையை விளங்கிக் கொள்ளாத, இலட்சக் கணக்கான யூத மக்களை நச்சுப் புதைகுழிகளில் அடைத்து அவர்களைச் சாகடித்த ஹிட்லரை வழிபட்டு, ஏற்றிப் போற்றுதற்கும் ஒரு கூட்டத்தினர் யாழ்ப்பாணத்திலும் இருந்தே வந்தனர்.

''ச்சா..... எப்படிப்பட்ட வீரனவன்!'' எனப் புகழ்ந்து பேசுவதுடன், தினசரி அவனது வெற்றியைத் தெரிந்து கொள்வதற்காகப் பத்திரிகை வாங்கிப் படித்தவர்கள் அநேகர் அன்று இருந்தனர். அவன் மீது ஒரு வகை வாலாயம்.

ஹிட்லரின் நாசிப்படை பாரிஸ் மாநகரத்தைக் கைப்பற்றி விட்டது என்ற செய்தியைக் கேள்விப் பட்டதும், சென்னையில் மைலாப்பூரிலுள்ள சில பிராமணக் கும்பல்கள் பட்டாசு கொழுத்தி வரவேற்றதையும் 'ஆரிய வீரத்தின் மகத்தான உலக வெற்றி!' எனக் கூத்தடித்து மகிழ்ந்ததையும் அன்றைய தமிழகச் செய்திப் பத்திரிகையில் படித்து நெஞ்செரிந்திருக்கின்றேன்.

மாஸ்கோவுக்கு முப்பதாவது மைலில் ஜெர்மன் படைகள் தரித்து நின்றபோது, அன்றைய பிரபல சினிமா நடிகர் தியாகராஜ பாகவதருக்கும் சினிமா இயக்குநர் ராஜா சந்திரசேகருக்கும் ஒரு பந்தயம்கூட, நடைபெற்றதாகப் பத்திரிகையில் தெரிந்து கொண்டிருந்தேன். ரஷ்யத் தலைப் பட்டினம் மாஸ்கோ விரைவில் ஹிட்லரிடம் சரணாகதி அடைந்துவிடும் என்பது இயக்குநர் கட்சி. 'இல்லை! மாஸ்கோவை ஜெர்மனிய படையினர் பிடித்துவிட மாட்டார்கள்' என்பது பாகவதரின் அபிப்பிராயம். இந்தப்

பந்தயத்தின் வெற்றி, தோல்விகளை நீங்களே அறிவீர்கள். சோவியத் செஞ்சேனை அங்கிருந்து ஹிட்லர் படைகளை விரட்டி வென்றது, என்பது சரித்திர வரலாறாகும். இது சிலருக்கு இங்கு மிகப்பெரிய அதிர்ச்சி! தங்களது சர்வதேச வீரன் தோற்றுவிட்டானே என்ற சொல்லிலடங்காத சோகம்.

எனக்கும் பத்திரிகை படிக்கும் ஆர்வம் மிகுந்தது. ஜோசப் சலூனின் நிர்வாகியாக இயல்பாக நான் வந்தடைந்ததும், எனக்குப் படிக்கக் கூடிய நேரம் அதிகரித்தது. நான் முன்னர் குறிப்பிட்டதுபோல, பூனைக்கண் சோமுவுடைய சைக்கிள் கடை முன்னால் இருந்தது. வாடகைச் சைக்கிள்களை வரிசையாக நிறுத்துவதற்கமைந்த பெரிய விறாந்தை. இரண்டு பக்கீஸ் பெட்டிகள் அருகருகே கிடந்தன. ஒரு பெட்டியில் சிக்காராக நான் இருந்துகொண்டு, வீரகேசரி தினசரியை வாய்விட்டுப் படித்துக் கொண்டிருப்பேன்.

ஒரு நாள் ஒரு முதியவர் நாலு முழ வேட்டி, உடலில் போர்த்த சால்வை சகிதம் வந்து சேர்ந்தார். நல்ல பொலிவான தேகக் காந்தி. கண்களில் அறிவுத் தீட்சண்யம். பார்த்தவுடன் ஒரு மரியாதை தரத்தக்க தோற்றப் பொலிவு. பக்கத்தேயுள்ள அடுத்த பக்கீஸ் பெட்டியில் அமர்ந்து கொண்டவர். ''ம் பொடியா, கொஞ்சம் பெலத்து வாசி, எனக்கும் கேக்கிறத்துக்குப் படி" என உத்தரவிட்டார். வெகு இயல்பாகவே சொன்னார். நேசம் தொனிக்கும் வேண்டுதல்.

அவரது அந்தக் கோரிக்கை எனக்கு உத்தரவிடுவது போலவும் தெரிந்தது தமது பேரனுக்கு கட்டளையிடும் தொனி போலவும் இருந்தது. நான் வாசிப்பதை நிறுத்திவிட்டு அவரை ஒருமுறை உற்றுப் பார்த்தேன். ''என்ன பார்க்கிறாய், மோனை? கொஞ்சம் ஊண்டிப் படியன். நாலும் கேக்கிறத்துக்கு" என நேசம் நிறைந்த குரலில் ஒரு கனிவை வரவழைத்துக் கொண்டு கேட்டார். சொல்லிக் கொண்டு வெற்றிலையை எடுத்துச் சுண்ணாம்பு தடவிக் கொண்டார். வாய்க்குள் திணித்தார். வெற்றிலையை மெல்லத் தொடங்கினார்.

எனக்கு எனது பாட்டனாரின் - அப்பாவினுடைய அப்பா - ஞாபகத்திற்கு வந்தார். அவரும் இப்படியான ஒரு வெற்றிலைப் பிரியர்தான். இப்படித் தான் வெற்றிலை போட்டு வாயசைப்பார்.

அவரது நேசமான நெருங்கிய குரல் என் மனசை அரவணைத்தது. வெகு உற்சாகமாகக் குரல் எழுப்பி பேப்பர் வாசிக்கத் தொடங்கினேன். அவர் காது குளிரக் கேட்டு ரஸித்துக் கொண்டு தலையாட்டி வந்தார்.

அது தினசரி நிகழ்ச்சியானது. ஒரு வாரம் சென்றிருக்கும். அவரது பேச்சும் செயலும், அடிக்கடி பகிடி விடும் குணமும், தாராளமாகச் சிரித்து வைக்கும் பாங்கும், என்னையும் தன்னில் ஒருவனாகக் கருதிய நெருக்கமும் அவர் மீது நல்ல அபிப்பிராயம் எற்படுத்தி விட்டது. நேசம் நெருங்கியது. இருவரும் பிரியமுடன் உரையாடிக் கொண்டோம்.

முன்னர் எனக்காக வீரகேசரி வாசித்து வந்த நான், இப்பொழுது அவருக்காகவும் சேர்த்துப் படிப்பதில் தனி ஆர்வத்தைக்காட்டி வந்தேன். பக்கத்தேயுள்ள கறுத்தப்பா கடையில் அவருக்கென்றே மாவிட்டபுரம் வெற்றிலையும் சரவணைப் புகையிலையும் வாங்கி வைக்கத் தொடங்கினேன் இத்தனைக்கும் அவர் யாரென்றே எனக்குத் தெரியாது. மனசிற்குள் 'அவர் என்னுடைய பாட்டனார்! என்றே கருதி வந்தேன். நெருக்கமான நேசத்தை வளர்த்தேன்.

நான் அவருடன் சரளமாகக் கதையடிக்க ஆரம்பித்தேன். நானும் சேர்ந்து பகிடி விடத் தொடங்கினேன். இப்படியாக இருவரும் கதையளந்து கொண்டிருக்கும் வேளைகளில் நான் ஏடாகூடமாக ஏதாவது சொல்லியிருப்பேன் போல இருக்கின்றது. பூனைக் கண் சோமு நான் தொழில் செய்து கொண்டிருக்கும் சமயம் என்னை ரகசியமாகக் கூப்பிட்டுச் சொன்னார்: ''எட தம்பி, உன்னோடை என்ரை கடையிலை கதைச்சுச் சிரிக்கிறவர் ஆரெண்டு தெரியுமா? அவர்தான் பபூன் செல்லையா! பெரிய நாடக நடிகன். ஆக்களைத் தெரிஞ்சு கொண்டு பழகு!'' என அறிவுரை சொல்லிச் சென்றார்.

இளம் வயசு அறியாமை, அதுவும் சென்ற தலைமுறை நாடகம் பற்றித் தெரியாமை. சினிமாவின் ஆதிக்கம் இளம் தலைமுறையை ஆட்டிப்படைக்கின்ற காலம். பாகவதர், சின்னப்பா கட்சி கலையுலகில் இளந்தலைமுறையினரிடம் ஆதிக்கம் செலுத்தி வந்த அந்தக் காலத்தில் எப்போதோ மேடையைக் கலக்குக் கலக்கிய பபூன் செல்லையாவைப் பற்றி நான் பெரிசாக ஒன்றும் மனசிற்குள் எடுத்துக்கொள்ளவில்லை.

அதற்காக இன்று நெஞ்சார வருந்துகிறேன். எப்படிப்பட்ட அருமையான சந்தர்ப்பம் என்னைத் தேடிவந்தது? அந்தச் சந்தர்ப்பத்தை நான் சரிவரப் பயன்படுத்தத் தவறிவிட்டு விட்டேனே! இதற்கு இளவயசு அறியாமைதான் காரணம். ஒரு காலத்தில் யாழ்ப்பாண நாடக மேடைகளில் தமது நடிப்பாற்றல் மூலம் பொறி பறக்க வைத்த நகைச்சுவை நடிகர் பபூன் செல்லையா. ஸ்திரி பார்ட் கன்னிகா பரமேஸ்வரி, கிருஷ்ணாழ்வார் போன்றோரின் கலை வரலாறே இன்றைய இளம் தலைமுறையினருக்குத் தெரியாமல் போய் விட்டதே! எத்தனை பெரிய இழப்பு, நஷ்டம் இது! ஒரு கலை வரலாறே மறக்கடிக்கப் பட்டுவிட்டதே! எத்துணை பெரிய துரதிர்ஷ்டம்!

பபூன் செல்லையாவுடன் நெருங்க நெருங்க, கதைக்கக் கதைக்க என்னையறியாமலேயே அவருடைய நெருங்கிய ரஸிகனாகிவிட்டேன், நான். சேர்ந்து திரிந்தேன். சேர்ந்து சிரித்து மகிழ்ந்தேன்.

பின் நாட்களில் நகைச்சுவை என மகுடமிடப்பட்டு மதிக்கப்பட்டு வந்த கலை, ஆரம்ப காலங்களில் பபூன் என்றே கொச்சையாக அறிமுகப்படுத்தப்பட்டது. ராஜபார்ட் - ஸ்திரி பார்ட் என மதிக்கப்படும் பிரதம நடிகர்களுக்கு எந்த விதத்திலும் குறைவுபடாமல் தமது திறமையாலும்

ஆற்றலாலும் சமயோசித புத்திக் கூர்மையாலும் ரஸிகர்களின் பேராதரவைத் தக்க வைத்துக் காப்பாற்றி வந்தவர்தான், இந்த பபூன் செல்லையா அவர்கள். இன்றும் அவர் பெருமை யாழ்ப்பாணத்தில் பேசப்பட்டு வருகின்றது. பிறவிக் கலைஞன் அவர்.

அவர் ஏராளமான தகவல்களை எனக்குச் சொல்லிச் சென்றார். நகைச்சுவையான சம்பவங்களை எனக்கும் சொல்லிச் சொல்லி என்னைச் சிரிக்க வைத்துள்ளார். தானும் சேர்ந்து என்னுடன் சிரித்தார்.

பிற்காலத்தில் எழுத்தாளனாக மலருவேன் எனக் கனவு கூடக் காணாத காலமது. இப்படிச் சுயவரலாறு எழுத முற்படுவேன் எனச் சிந்திக்கவே முனைந்திராத இளம் பிராய வயசு. எனவே எந்த விதமான குறிப்புகளோ ஆவணத் தகவல்களோ இல்லாமல் வெறும் ஞாபகப் பெட்டகத்தைத் திறந்து வைத்துக் கொண்டேதான் இவைகளை இங்கு பதிவு செய்து வைக்கின்றேன்.

தகரக் கொட்டகை என்று அன்றைய பாமர நாடக ரசிகர்களால் அழைக்கப்பட்ட றோயல் தியேட்டர் அதிபர்தான் துரைராஜா அவர்கள். இவரைப் பெரிய துரைராஜா என்றும் அழைப்பார்கள். அன்றைய சினிமா ஆதிக்கத்திற்கு முற்பட்ட காலத்தில் நாடகங்களே மக்களிடம் அதிக பிரபல்யம் பெற்றுத் திகழ்ந்தன. மூன்று பெரும் புள்ளிகள் அன்றைய நாடக அரங்கை கைவசப்படுத்தியிருந்தனர். இவர்களது கைதான் நாடகக் கொட்டகை அதிகாரத்தில் ஓங்கியிருந்தது. ஒருவர் பெரிய துரைராஜா. அடுத்தவர் கொட்டடிச் சீனிவாசகத்தார். மற்றவர் புத்துவாட்டிச் சோமு. இவர்களில் கொட்டடிச் சீனிவாசகத்தாரைப் பிற்காலத்தில் சந்தித்திருக்கின்றேன். மற்றைய இருவரையும் எனக்கு நேரில் தெரியாது. ஆனால் அவர்களது பிரக்கியாதி பற்றித் தெரியும்.

இந்த மூன்று நாடக அரங்கத்தினருக்குள்ளும் ஏகப்பட்ட தொழில் போட்டி நிலவிய காலமது. நாடக மேடைச் சொந்தக்காரர் ஒருவர் நடத்திய நாடகமேடையில் வள்ளி திருமணம் நாடகம் அரங்கேற இருந்ததாம். பிரமாண்டமான விளம்பரம் செய்யப்பட்டிருந்ததாம். நாடக நேரம் நெருங்க நெருங்க அங்கே ராஜபார்ட்டான எம். ஆர். கோவிந்தனை ஒப்பனை அறையில் காண முடியவில்லை. குதிரை வண்டிலில் ஆட்கள் தேடிப் புறப்பட்டனர். நாடக மண்டபம் சனத்திரளால் நிரம்பி வழிந்தது. ஆனால் ஹீரோ எங்குமே தென்படவில்லை. கடைசியில் ஒரு கள்ளுக் கொட்டிலில் மரண வெறியில் தள்ளாடிக் கொண்டிருந்த அவரைக் கண்டு பிடித்து வண்டிலில் கூப்பிட, கோவிந்தன் வர மறுத்து வெறித் தத்துவம் பேச ஆரம்பித்து விட்டாராம். அரங்கச் சொந்தக்காரனால் அழைக்கப்பட்டும் அவர் மறுக்க, குதிரைச் சவுக்கைப் பறித்து அந்த இடத்திலேயே கதறக் கதற விளாசி விட்டாராம் அரங்கத்தார். முடிவில் அள்ளிப் போட்டுக் கொண்டு வந்து குளிப்பாட்டிக் குளிர வைத்து, மேடையேற்றினார்களாம்.

நாடக அரங்கமேறிய அந்தக் கலைஞன், மேடையில் வைத்தே அறம்

பாடினாராம். தான் ஒரு கலைஞன் என்று கூடப் பாராமல் மிருகத்திற்கு அடிக்கும் சவுக்கைக் கொண்டு தான் அடிக்கப்பட்டதை நினைவு கூர்ந்து, மனமுருகி அறம்பாடி முடித்தானாம். அப்படி மனம் நொந்து அறம் பாடுவது என்பது ஒரு கலைஞனின் ஆத்மக் கொதிப்பு. தனது நெஞ்சுக் கொதிப்பைப் பாடலில் கொட்டிவிட்டாராம், அந்த ராஜபார்ட்.

பல ஆண்டுகளுக்குப் பின்னரும் அந்த மேடை உய்வு பெறவில்லையாம். கடைசியில் எருக்கு முளைத்து அந்தக் காணியே பாழ்பட்டுப் போய் விட்டதாம்.

இது பபூன் செல்லையா அவர்கள் எனக்குச் சொன்ன கிளைக் கதைகளில் ஒன்று. இப்படி எத்தனையோ குறுங்கதைகள், தகவல்கள், வரலாறுகள், சம்பவங்கள்.....

இவருக்கு உற்சாக மூட்டி ஆதரவு தந்து, மேடை கொடுத்து உதவியவர் பெரிய துரைராஜாதான். துரைராஜா இந்தியாவிலிருந்து காலத்திற்குக் காலம் பிரபலமான நாடகக் கோஷ்டிகளை இங்கு தருவித்துப் பலவகையான நாடகங்களை மேடையேற்றுவித்தவர். அக்குழுவினருடன் பபூன் அவர்களையும் இணைத்து நடிக்க வைத்தார். பபூன் செல்லையாவின் நடிப்பாற்றலைக் கண்டு இந்திய நடிகர்கள் வியந்தனர். வந்திருந்தவர்களில் பபூன் சண்முகம் பிள்ளையும் ஒருவர். திறமான நடிகர். இவரது நடிப்பு ஆற்றலைப் பாராட்டி 'றோயல் பபூன்' என்ற பட்டமும் வழங்கப்பட்டிருந்தது. இவருடன் சேர்ந்து நடிக்க நமது செல்லையாவையும் தெரிவு செய்திருந்தார்., துரைராஜா. றோயல் சண்முகம்பிள்ளை வித்துவச் செருக்கு நிரம்பியவர். தனது திறமைகளில் நம்பிக்கை கொண்டவர். இவரைத் தனது சமயோசித நடிப்பில் மட்டம் தட்டிவிடலாம் என நம்பினார்.

தமது பயிர்ச் செய்கையைத் துஷ்ட மிருகங்கள் அடிக்கடி அழித்து வருவதை மன்னரிடம் முறையிட மக்கள் விரும்பினர். தங்களில் ஒருவரை நியமித்து மன்னரிடம் முறையிடும் காட்சி. றோயல் பபூன் முறையிடுபவராக நியமிக்கப்பட்டார். நமது பபூன் தனது நடிப்பால் றோயலைத் தலைகுனிய வைத்து விட வேண்டும் எனச் சபதமேற்றார்.

அரச சபைக் காட்சி ஆரம்பிக்கும் நேரம். ஒரு பக்கம் றோயல் தயாரானார். சீன் இழுக்கக் காத்திருந்தார். சீன் இழுத்ததும் மறுபக்கம் காத்திருந்த பபூன் செல்லையா உடன் மேடைக்குள் பிரவேசித்து மக்கள் கஷ்டங்களை மன்னரிடம் முறையிட்டார். அரசரும் தான் உடனடியாக மக்கள் குறைகளைத் தீர்த்து வைப்பதாக வாக்குறுதி கொடுக்க, இவர் திரும்பிச் சென்றார். செல்லும் சமயம் மேடைக்குள் பிரவேசிக்கிறார், றோயல் பபூன். உடன் அவரை மறித்து விவரத்தை அறிகிறார், செல்லையா. அறிந்ததும் தாம் ஏற்கெனவே மன்னரைச் சந்தித்து நிவாரணம் கோரியதையும் கூறி, றோயலைத் திரும்பிப் போகும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றார். இதைப் பார்த்த ரஸிகர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்ததுடன் பபூன் செல்லையாவின்

சமயோசித நடிப்பையும் பாராட்டிக் களித்தனர். நோயல் சண்முகம்பிள்ளை இங்கு தொடர்ந்து நடிக்காமலேயே தாயகம் திரும்பி விட்டார். இந்தத் தோல்வியை அவரால் சகித்துக் கொள்ள இயலவில்லை.

அந்தக் கால நாடக அரங்கில் விசித்திர சம்பவங்கள் இடம்பெறும். பாத்திர அமைப்போ, சம்பாஷணையோ மீறப்படும். காட்சியமைப்பில் சமயோசித திறமை முன் நின்று தலைகாட்டும். ஆலோலம் பாடும் தினைப் புனத்து வள்ளி, கைக்கடிகாரத்துடன் காட்சி தருவாள். முருகப்பெருமான் தேசியப் பாடல்கள் பாடுவார். பவளக்கொடி இங்கிலீஸ் பேசுவாள். இன்னும் இன்னும் எத்தனையோ வேடிக்கைகள் எல்லாம் நடந்தேறுமாம். மக்களும் அதைப் பார்த்து ரஸித்துக் கைதட்டுவார்கள். நாடகமேடையே கந்தறுகோளமாகக் காட்சி தரும். பலதரப்பட்ட குழறுபடிகள்.

ரஸிகர்கள் கூட, தர்க்க ரீதியாகச் சிந்திக்கமாட்டார்கள். பகுத்தறிவு கொண்டு யோசிக்கப் பின் நிற்பார்கள். யார் கரகோசம் அதிகம் பெறுகிறார்களோ, அவர்களே சிறந்த நடிகர்களாக மதிக்கப்பட்டனர். கரகோசம் கைதட்டல் அதிகம் பெற்றவரே சிறந்த நடிகர்.

வள்ளி திருமண நாடகம். பிற்காலத்தில் பாகவதருடன் சேர்ந்து சினிமாவில் நடித்துப் புகழ்பெற்ற எஸ். டி. சுப்புலட்சுமி நாரதராக நடிக்கும் காட்சி, நமது பபூன், வள்ளியின் அண்ணனாக நடித்தார். இவர் தினைப் புனத்தில் அங்குமிங்குமாக நடந்து திரிகிறார். இதைக்கண்ட நாரதருக்கு எரிச்சல் ஏற்பட்டு விடுகின்றது. ''என்ன காவல்காரரே, மணிக்கூடு பெண்டுலம் போல, இங்குமங்கும் ஆடுகிறீர்?'' என் நகைச்சுவையாகக் கேட்டார். மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். நாரதர் நவீன ஆங்கிலம் பேசுகிறார்.

அதற்குப் பபூன் செல்லையா, ''ஏன் கீழே ஆடுகிற சாமானைப் பார்க்க வேண்டும்? மேலே பாருங்கோவன்'' எனப் பதிலடி கொடுத்தார். உள் அர்த்தம் விளங்கிய ரஸிக மகா சனங்கள் எழும்பி நின்று ஆரவாரித்து கைதட்டி மகிழ்ந்தனர். விசிலடித்தனர்.

வார்த்தைகளால் உரிக்கப்பட்ட சுப்புலட்சுமி, வெட்கத்துடன் தலைகுனிந்தபடி மேடையை விட்டு உள்ளே போய் விட்டாள்.

எப்படியும், எந்த விரசமான சம்பாஷணைகளைக் கூறியும், பார்வையாளர்களைத் திருப்திப் படுத்துவதே அன்றைய திறமையாகக் கருதப்பட்டு வந்தது. இப்படியா.....ன விரசமான வக்கிர உரையாடல்களை ரஸிப்பதற்கும் மேடையேற்றுவதற்கும் அன்று நிலவிய சமூக அமைப்பே காரணமாகும். ஊருக்குள் பெரிய மனுஷன், கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த தலைவன் ஒருவன் ஒன்றுக்கு மேற்பட்ட வைப் பாட்டிமார்களை வைத்திருக்க வேண்டும். அதுவே அன்று சமுதாய அந்தஸ்து. சமுதாய அந்தஸ்து. மதிப்புகளை விடுங்கள். பெண்களை எடுத்துக் கொண்டால் கூட, ''என்ரை அவருக்கு வட்டுக்கோட்டையிலை ஒரு வைப்பு உண்டு. சங்கரத்தையில் இன்னொரு தொடுப்பு உண்டு! உன்ரை

மனுஷனைப் போல உன்னையே கதி எண்டு கிடப்பவராடீ என்ரை புருஷன்?" எனப் பக்கத்து வீட்டுக்காரியுடன் வாய்த் தர்க்கம் நடத்தும் போது, தனது குலப்பெருமைகளைப் பேசும் 'தர்ம பத்தினி' களையும் பரக்கக் காணலாம். அன்று நமது பிரதேசத்தில் உயர் குடும்பப் பெருமைகளில் குறிப்பிடக்கூடிய பெருமைகளில் இதுவும் ஒன்று. 'சின்ன வீடு' வைத்திருப்பது.

இந்தத் தகவல்களெல்லாம் எனக்குப் பபூன் செல்லையா சொல்லித்தான் தெரியவந்தன. இந்தியாவில் ராஜபார்ட்டாகப் பெரும் புகழ் படைத்தவர் எஸ். எஸ். விஸ்வநாததாஸ். இவர் சிகை அலங்காரத் தொழில் செய்யும் குடும்பத்தில் பிறந்தவர். மதுரை மாவட்டம் திருமங்கலத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். எத்தனையோ அவமானங்களைப் பட்டவர். 1911ல் காந்தியடிகளைத் தூத்துக்குடியில் சந்தித்த பின்னர், நாடக மேடையை சுதந்திரப் பாடல் மேடையாக்கிப் பாடியதால் வெள்ளையர் ஆட்சியில் 29 முறை சிறை சென்ற தேசபக்தர். பல தேசியத் தலைவர்கள் இவரது நாடகம் என்றாலே முன் வரிசையில் இருந்து ரஸிப்பார்கள். இந்தத் தேச பக்தருடன் நாடகமாடிய அநுபவம் பற்றிச் சொல்லும்படி கேட்பேன்.

பபூன் செல்லையா சொண்டுக்குள் சிரித்துக் கொண்டே ''மகாகலைஞன் அப்பா, விஸ்வநாதன்! மிகப் பெரும் கலைஞன்!'' என்றார் ஒருநாள். இதைச் சொல்லிக் கேட்கும்போது என் தேகம் எங்கும் புல்லரித்தது.

தகரக் கொட்டகையில் கோவலன் நாடகம். கோவலன் விஸ்வநாததாஸ். மாதவியின் மாமா செல்லையா. கண்ணகியிடம் பணம் பெற்றுவர மாதவியின் வீட்டிலிருந்து கடிதமெழுத முற்படுகிறார், கோவலன் விஸ்வநாததாஸ். பபூன் செல்லையாவிடம் காகிதம் எழுதப் பத்திரம் ஒன்று தரச் சொல்லிக் கேட்கும் காட்சி. பபூன் செல்லையா ஒரு சிறிய கடதாசித் துண்டைக் கொண்டு வந்து நீட்டுகின்றார் கோவலன் கேட்டார்: ''உனக்கு மூளை கீளை இல்லையா? இத்தனை சிறிய பத்திரத்தில் எப்படிக் கடிதம் எழுதுவது?'' என்றார்.

உடனே பபூன் பதில் சொன்னார். ''உங்களது தேவைக்கு இது போதுமென்று எண்ணினேன்.'' எனக் குறிப்பால் விஸ்வநாததாஸின் சாதியைக் குறிப்பிட்டு உணர்த்திக் கிண்டல் பண்ணினார். அதாவது ஷேவெடுத்த பின்னர், சவர்க்கார நுரை துடைப்பதற்குத் துண்டுக் கடதாசி போதும் என்பது இதன் உள் அர்த்தம்.

கூட்டம் இந்த உள்ளர்த்தத்தைப் புரிந்து கொண்டு பெருங்கூச்சலிட்டுச் சிரித்தது. எனது தகப்பானாரும் ஒரு தரமான நாடக ரஸிகர். இந்த இழிந்த தாக்குதல் அவரது நெஞ்சைப் புண்படுத்திவிட்டது. ஒரு சாதியைத் தாழ்த்துவது அல்ல, இங்கு பிரச்சினை. ஒரு கௌரவமான தொழிலை இப்படிக் கேவலமாக ஒரு பொது மேடையில் கிண்டலடித்து விட்டார்களே என ஆதங்கப் பட்டார். ஆவேசப்பட்டார்.

அடுத்த சனிக்கிழமை. அடுத்த நாடகம். பவளக்கொடி. இதே ராஜபார்ட்தான் இதே ஸ்திரிபார்ட்தான். இதே பபூன்தான் நடிகர்கள்.

ஜோசப் சலூனில் துடிப்பான, தரமான, தொழிலாளிகள் இருந்தார்கள். அந்தோனிப்பிள்ளை, ராசேந்திரம், சுவலைக் கந்தையா என்பவர்கள். இவர்கள் தான் நாடக நடிகர்களுக்கு மேக்கப் போடுவதற்கு முன்னர் முகச் சவரம் செய்து விடுவது. இவர்கள், நான் முந்தி நீ முந்தி என அவசரப்படுவார்கள். இலவச டிக்கட் கிடைப்பது மாத்திரமல்ல, இப்படியான பிரபல கலைஞர்களைத் தொட்டுப் பார்த்தோம் என வெளியில் பெருமை பேசுவதற்கும் அது தோதாக அமைந்திருந்தது. பிரபலங்களைத் தொட்டுப் பார்ப்பதில் ஒரு சுகம். இன்றைய இளைஞர்கள் சினிமா நடிகர்கள் மீது வைத்துள்ள அபிமானம் போல.

அப்பா அவர்களுக்குச் சடுதியான உத்தரவு ஒன்றைப் போட்டு வைத்தார். ''இண்டைக்குப் பின்நேரம் நாடகம். என்னைப் கேக்காமல் ஒருவரும் கொட்டகைப் பக்கம் போகக் கூடாது. கவனம்!''

அந்தக் காலத்தில் இன்று போலப் பரவலாகச் சலூன்கள் இல்லை. இக்காலம் போல, சுய சவரம் செய்யும் சாதனங்களும் இல்லை. நேரம் போனது. கொட்டகையிலிருந்து ஆளுக்கு மேல் ஆட்கள் வந்து கொண்டிருந்தனர்.

''ஷேவெடுக்க ஆட்கள் வர ஏலாதாமெண்டு போய்ச் சொல்லுங்கோ!'' இது அப்பரின் விடை. கடைசியாகத் தொகுத்துச் சொன்னார், பபூன் சண்முகம். ''நேரமோ நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆட்கள் கொட்டகைக்குள் வந்து கொண்டிருந்தனர். ஆனால் ஒப்பனை முடிந்தபாடாய்க் காணவில்லை. சங்கதி நாடக முதலாளி துரைராஜா காதுக்கு எட்டிவிட்டது. அவசரமாக என்னைக் கூப்பிட்டார். உன்ரை அப்பரையும் ஆள்விட்டுக் கூப்பிடுவித்தார். நடந்தவற்றை விளக்கமாக எடுத்துச் சொன்னார், உன்ரை அப்பன்.

முடிவென்ன? - தெரியாத்தனமாக, அறியாமையாலே மேடையில் பகிடிவிட்டுச் சொன்னதுக்காக நான் உன்ரை அப்பனிடத்திலே மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன். பிறகென்ன, நாடகம் ஜாம் ஜாமென்று நடந்தேறியது. இது எனக்கொரு பெரிய அநுபவம். பெரிய பாடமொன்றை அன்றைக்குப் படிச்சுக் கொண்டன். இனிமேல் இப்படியான கொச்சைத்தனமான பகிடிகளைப் பொது மேடைகளில் விடமாட்டன் எண்டு அண்டைக்கே சபதமெடுத்துப் போட்டன்!'' அவரது குரலில் அமைதி தொனித்தது.

தொடர்ந்து சிறுபிள்ளையின் உற்சாகக் கோலத்துடன் அவர் தன்னைப் பற்றியே சொல்லத் தொடங்கினார். அடிக்கடி வெற்றிலை போட்டுக் கொண்டார்.

''சுந்தராம்பாளும் கிட்டப்பாவும் அந்தக் காலத்திலை யாழ்ப்பாணத்திற்கு வந்த சமயம். நானும் கூட அவையளோட ஒரே மேடையில் இந்தத் தகரக் கொட்டகையில் பபூனாக நடிச்சவன்தான். ரெண்டு மூண்டு மாசத்துக்கு

முன்னம் கூட, சுந்தராம்பாள் யாழ்ப்பாணத்துக்கு ஒரு கச்சேரிக்கு வந்திருந்தா. அப்ப நான் சுகமில்லாமல் பெரியாஸ்பத்திரியில் கிடந்தனான். அவ அப்ப ஒரு நாள் என்னைப் பார்க்க ஆஸ்ப்பத்திரிக்கு வந்தவ. அத்தோடை ஐந்நூறு ரூபாக் காசும் தந்திட்டுப் போனவ'' என்றார்.

இளைஞனான எனக்குக் கொஞ்சம் கொஞ்சமாக விளக்கம் ஏற்பட்டது. என்னுடன் கதைச்சுக் கொண்டிருக்கிற இந்த ஆள் பெரிய ஆசாமிதான் என மனசுக்குள் முடிவெடுத்துக் கொண்டேன்.

''அப்ப விஸ்வநாததாஸைப் பற்றி இன்னும் கொஞ்சம் சொல்லுங்கோவன?'' என என் ஆவலைக் கேள்வியாகப் போட்டேன். தொடர்ந்து வற்புறுத்தினேன்.

நான் விஸ்வநாததாஸைப் பற்றி இத்தனை அக்கறையாக விசாரித்ததற்கு அர்த்தமுண்டு. என்னைப் போலவே அவரும் நாவித சமூகத்தைச் சேர்ந்தவர். எத்தனை எத்தனையோ சிரமங்களை, அவமானங்களைத் தாங்கிக் கொண்டு நாடகத் துறையில் காலூன்றி வளர்ந்தவர் என்பது ஒரு முக்கியமான காரணமாக அமைந்ததெனலாம். இப்பொழுது யோசித்துப் பார்க்கும் வேளையில் அவர்தான் எனக்கு ஆதர்ஸமாகத் திகழ்ந்து, என்னை ஊக்குவித்தவர் எனச் சொல்லத் தோன்றுகிறது. என் அடித்தள மனசும் இதனை அங்கீகரிக்கின்றது.

அவர் நம்மவர் என்பதல்ல, இங்கு முக்கியம். நாடக மேடைக்காகத் தன்னையே அர்ப்பணித்த அந்தப் பிறவிக் கலைஞன். இறுதியில் அந்த மேடையிலேயே உயிரை விட்டதும் என் உணர்வுகளை உலுக்கி விட்டது. இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.



11

இப்பொழுது நினைத்தாலும் ஆச்சரியமாக இருக்கின்றது. வெறும் கோமாளி, விதூஷகன், பபூன் என மக்களால் கருதப்பட்டு அவரது நகைச்சுவையை மாத்திரம் ரஸித்துப் பழக்கப்பட்ட யாழ்ப்பாணத்து மக்கள், பபூன் செல்லையாவின் மனித ஆளுமையை அன்று புரிந்து கொண்டிருப்பார்களோ? என இன்று ஆறுதலாக இருக்கும் வேளைகளில் சிந்தித்துப் பார்க்கிறேன். என்னால் அப்படி யோசிக்காமல் இருக்க முடியவில்லை.

அவர் எத்தனை கதைகள் எனக்குச் சொல்லிச் சென்றுள்ளார்! இன்று நினைக்க, நினைக்க ஏக்கம் மனசை வாட்டுகின்றது. எனது இளம் வயசு அறியாமையினால் நான் கூடச் சரிவர அவரைப் புரிந்து கொள்ளத் தவறி விட்டேன் போலத் தோன்றுகிறது. போல என்ன. உண்மையில் தவறி விட்டேன்.

அவர் எனக்குச் சொன்ன விஸ்வநாததாஸ் கதைகளில் இதுவுமொன்று. ஒரு சமயம் விசுவநாததாஸ் நடித்த அரிச்சந்திரா நாடகம் தமிழ் நாட்டில் ஒரு சிற்றூரில் நடந்தது. ஏராளமான கூட்டம். நாடகக் கொட்டகை நிரம்பி வழிந்தது.

அந்தக் காலத்தில் ஆண், பெண் நடிகர்கள் மேடைகளில் சுயமாகவே வசனம் பேசி நடித்து விடுவது வழக்கம். இதன் மூலம் தங்களது திறமையை வளர்த்தெடுப்பதுடன், பார்வையாளரின் கரகோஷத்தையும் பெற்று விடுவார்கள். இதில் சிலர் அசகாய சூரர்கள். அன்று சந்திரமதியாக நாடகத்தில் நடித்த பெண்மணி கொஞ்சம் வாய்த் துடுக்கு வாய்க்கப்

பெற்றவர். சற்றுத் திமிர் உள்ளவர். அத்துடன் சாதிக் கொழுப்பு மிக்கவர். தன்னுடன் ராஜபார்ட்டாக நடிக்கும் விசுவநாததாஸ் பிறப்பால் சவரத் தொழிலாளர் சமூகத்தைச் சேர்ந்தவர் என்ற இகழ்ச்சியும் அந்த நடிகைக்கு உண்டு.

எனவே மேடையில் வைத்தே ரஸிகர்கள் மத்தியில் அவரை அவமதிக்க வேண்டும் என்ற மனக்குரோதத்துடன், ஆரம்பத்திலிருந்தே மேடையில் வார்த்தைச் சவுக்கைக் சுழற்றி சுழற்றி விஸ்வநாததாஸின் மனசை நோகடித்துக் கொண்டிருந்தார். புண்படுத்தினார். வேண்டுமென்றே கிண்டலடித்தார். மறைமுகமாகக் கொச்சையாகப் பேசி, நடித்தார். சிரித்தார்.

மாண்டுபோன மகனின் சடலத்தை இரவில் எரிக்க வரும் சந்திரமதியை மயானத்தைக் காவல் காக்க நிற்கும் அரிச்சந்திரன் சந்திக்கிறான். அவள் தனது மனைவியென்றோ, உயிரற்றுக் கிடக்கும் சடலம் தனது மகன் லோகிதாஸன் என்றோ தெரிந்திருக்காத அரிச்சந்திரன், அவளுடன் தர்க்கம் செய்யும் காட்சி, அது.நாடகத்தில் உச்சக் கட்டக் காட்சி.

மயானத்தில் சடலத்தை எரிப்பதற்கு உரிய கட்டணத்தைக் கேட்கிறான். அரிச்சந்திரன். ''என்னிடம் செப்புக் காசு கூடக் கிடையாது!" எனச் சந்திரமதி புலம்பிய வண்ணம் பதிலளிக்கிறாள். கதறுகிறாள்.

''அப்படியானால் உன் கழுத்திலே மின்னும் அந்தத் தங்க மாங்கல்யத்தைக் கழற்றிக் கொடேன்" என்று அரிச்சந்திரன் கேட்கிறான்.

இதைக் காதால் கேட்டதும் பதறிப்போய் அரற்றுகிறாள். ''இந்திரனுக்குத் தெரியாத தாலி, அந்தச் சந்திரனுக்கும் தெரியாத தாலி, சுந்தரலோகத் தேவர்களுக்குக் கூடத் தெரியாத எனது தாலி, இந்தச் சுடுகாட்டைக் காக்கும் புலையனுக்குத் தெரிந்து விட்டதே!" எனச் சந்திரமதி வசனப் புலம்பலினூடே வேண்டுமென்றே விஸ்வநாததாஸை மேடையில் வைத்தே இழிவு படுத்தும் கபட நோக்கத்தை உள்ளடக்கி, அந்த நாடக நடிகை, தனது சொந்த வசனத்தையும் இத்துடன் சேர்த்துக் கூட்டிப் பேசினாள்: ''சுடுகாட்டைக் காக்கும் புலையன் இடும் கட்டளையைக் கேட்டு வந்து நிற்கும் குடிமகனுக்குக் கூடத் தெரிந்து விட்டதே!" எனத் தனது கைச்சரக்கையும் ஊடே சேர்த்து, வசனத்தையும் பேசி முடித்தாள். பேசி முடித்துவிட்டு இறுமாப்புடன் நிமிர்ந்து நின்றாள்.

குடிமகன் என்பதற்கு - அந்த வார்த்தைக்கு - தேசத்து மக்களில் ஒருவன் என்ற பொருள் மாத்திரமல்ல, கிராமிய மட்டத்தில் சவரத் தொழில் செய்பவர் என்ற ஒரு அர்த்தமுமுண்டு. அப்படி ஒரு அர்த்தம் வருவதற்காகவே குடிமகன் என்ற வார்த்தையைச் சற்று நிறுத்தி, அழுத்தி உச்சரித்து வசனம் பேசினாள், அந்த நாடக நடிகை.

அரிச்சந்திரனாக மேடையில் நின்ற விஸ்வநாததாஸ் சபையோரைப் பார்த்துச் சிரித்தார்.

சிரித்துவிட்டு அவரும் வசனம் பேசினார். ``கொய்த கனியைக் கொய்யாக்கனி எனச் சொல்லுகின்றது உலகம். கொத்தும் விஷப் பாம்பைக் கூட நல்ல பாம்பென்று கூறுகின்றது. உலகம். கூந்தலில்லாத தலையுள்ளவளைக் கார் குழலாள் என்றும் அதே உலகம்தான் அழைக்கின்றது. அதேபோல, கூப்பிட்டவனுக்கெல்லாம் முந்தானை விரித்துப் பழக்கப்பட்ட மடிசாயும் பெண்களெல்லாம் குலப் பெண்களைப் போல, வேஷம் கட்டி மேடையேறிவிட்டால் அவர்களெல்லாம் பத்தினிப் பெண்களாக ஆகிவிடுவதில்லை.'' என அந்தப் பெண்ணின் இயல்புத் தன்மையைக் குத்திக் காட்டி, வசனத்தைப் பேசி முடித்தார் விஸ்வநாததாஸ்.

அதற்கும் கைதட்டி ஆரவாரம் செய்து, தமது மகிழ்ச்சியைக் காட்டிக் கொண்ட ரஸிக மகா சனங்கள், இந்தக் குத்தல் நையாண்டிகளைக் கேட்டதும் கைதட்டி ஆரவாரம் செய்ததுடன் `ஒன்ஸ் மோர்' கூடக் கேட்டனர்.

இந்தக் கதையையும் பபூன் செல்லையாவே எனக்குச் சொல்லிச் சென்றார்.

விஸ்வநாததாஸ் கதையை ஊடு பாவாக எனது சரிதக் கட்டுரையில் இத்தனை விரிவாக நான் சொல்வதற்கு ஓர் அடிப்படையான காரணமுண்டு.

தேசத் தியாகி, காந்தியடிகளினால் பாராட்டப் பெற்ற ஒரு மேடைக் கலைஞன். 26 தடவைகள் தேசத்திற்காக ஜெயிலில் அடைக்கப்பட்டவர். சாதியின் பேரால் தமிழகத்திலும் யாழ்ப்பாணத்திலும் மேடையிலேயே அவமதிக்கப்பட்டவர். மேடைக்கு சும்மா வந்துபோன நடிகரல்ல. தமது திறமையாலும், உழைப்பாலும் தரமான சாரீரத்தாலும் மக்கள் மனசில் தக்க இடம் பிடித்த காரணத்தால், அந்தக் காலத்திலேயே பல போட்டியாளர்களுக்கு மத்தியிலும் ராஜபார்ட்டாகவே சகல மேடைகளிலும் வேஷமிட்டு நடித்து வந்தவர், அவர். பிரபல நடிகர். பிரபல நாடக மேதை.

அத்தகைய தேசியப் பெறுமதி வாய்ந்த மதிக்கப்படத் தக்க கலைஞனை, நடிகனை, சும்மா மேடைக்கு வந்து போகும் குட்டி நடிகர்களே மேடையில் வைத்து அவமரியாதை செய்வதைக் கேட்டுக் கேட்டே என் இளவயசு மனம் ஆத்திரம் கொண்டது. நெஞ்சில் எரிச்சல் மூண்டது.

அந்த இளவயசுக் காலத்திலேயே எனக்கென்று சில தீர்க்கமான முடிவுகளை வயசுக்கேற்ற நிலையில் ஆழ் அடி நெஞ்சில் பதிய வைத்துக் கொண்டேன்.

நான் தொழில் செய்து வந்த சுற்றாடலில் பல சாதி வெறியர்களைச் சந்தித்திருக்கின்றேன். அவர்களை மிக நுணுக்கமாகக் கூட இனங்கண்டு புரிந்து வைத்திருக்கின்றேன். எந்தக் கட்டத்திலும்கூட, நான் அவர்களை மதிப்பதில்லை. கனம் பண்ணுவது கூட, இல்லை. அவர்களது தயவு வேண்டி நிற்பதுமில்லை. அணுகுவதுமில்லை. வெறுத்தொதுக்கினேன்.

இதில் ஆச்சரியம் என்னவென்றால் தங்களை நான் மதிப்பதில்லை

என்பது சம்பந்தப்பட்டவர்களுக்கே நன்கு தெரியும். இருந்தும் காட்டிக் கொள்வதில்லை, அவர்கள். காட்டிக் கொண்டால் தங்களுக்கு மரியாதையேயில்லையாம்!

யாழ்ப்பாணத்தில் அந்தக் காலத்திலிருந்தே ஒரு வழக்கம் இருக்கிறது. இப்படியானவர்களை 'ஐயா!' என்று அழைக்க வேண்டும், என அவர்களது பரம்பரையினரின் எழுதாச் சட்டம். அதே சமயம் ஒடுக்கப்பட்ட முதியவர்களைக் கூப்பிடும் அவர்களது பையன் ''இந்தா நன்னி! வீட்டை வரட்டாம் உன்னை!'' இப்படித்தான் தமது இளந் தலைமுறையைக் கடந்த காலத்தவர்கள் பண்பாட்டுத் தளத்தில் பழக்கம் பண்ணி வைத்திருக்கின்றனர். இது தங்கள் குலத்திற்குப் பெருமையாம். இன்றும்கூட இந்த இழிசெயல் சில வீடுகளில் அரங்கேறிக் கொண்டுதான் இருக்கின்றது. இதுதான் தங்களது குலத்துக்குரிய பண்பாடாம்.

இதற்கெதிராக அந்த இளம் வயசிலேயே நடைமுறையில் குரல் கொடுத்து வளர்ந்து வந்தேன். இப்படியான சாதிக் கொம்பன்களை விழிக்க நேரிட்டால் 'ஸார்' என்றுதான் அழைப்பேன். ஐயா என்ற தமிழ்ப் பதமும் ஸார் என்ற ஆங்கிலப் பதமும் ஒன்றைத்தான் குறிக்கும். ஆனால், ஐயா எனச் சொல்லும்போது இருக்கும் தாழ்வு மனப்பான்மை, ஸார் என்று சொல்லும்போது ஏற்படுவதில்லை.

இந்த உயர்குடிச் சாதிக் கிறுக்கர்களை எதிர்த்த எதிர்ப்பின் காரணமாக நான் பட்ட மன அவஸ்தைகள், ஏராளம். பொருளாதாரச் சங்கடங்கள் அனேகம். இருந்தும் எந்தச் சூழ்நிலையிலும் என்னுடைய சுயமரியாதையை விட்டுக் கொடுத்து விடவில்லை. சமரசம் செய்து கொண்டதும் இல்லை.

இந்த ஞானத்தைக் கற்றுத் தந்தவர், அன்றைய ஒரு நாடக நடிகன். பபூன் செல்லையா. இந்த ஞானத்தைப் புரிந்து கொள்வதற்குக் கீதை நூலாகத் திகழ்ந்தவர் கூட, ஒரு நாடக நடிகர்தான். விஸ்வநாததாஸ் அவர்கள். ஒருவர் பபூன். இன்னொருவர் ராஜபார்ட். இருவரும் நாடக நடிகர்கள். எனது சிறு வயசுக் கால ஆசான்கள். ஒருவரை நேரில் பார்த்திருக்கின்றேன். மற்றவரை நேரில் தெரியாது.

மீசை முளைக்காத அந்த அரும்பு வயசில் இந்த வரலாற்று ஞானோதயம் என் மனச் செவிகளில் விழாமல் வளர்ந்திருப்பேனாக இருந்தால், ஒரு மல்லிகை ஆசிரியர் இந்த யாழ்ப்பாணத்து மண்ணில் வேர் பாய்ச்சி வளர்ந்திருப்பாரோ என்பது யோசிக்கக் கூடிய சங்கதிதான். ஓர் எழுத்தாளன் தோன்றியிருக்கிவே மாட்டான். அப்படியே ஒதுக்கப்பட்டு, மறைந்து, காணாமலே கூடப் போயிருப்பான்.

இன்று இதை எழுதிக் கொண்டிருக்கும் வேளையில், நான் நடந்து வந்த பாதையை நினைத்துப் பார்க்கும் அதே சமயம், சமகாலத்தையும் எண்ணிப் பார்க்கிறேன்.

அன்று எனது மானசீகக் குருவாக வரித்துக் கொண்ட விஸ்வநாததாஸ் அவர்கள் தனது வாழ்வு நடத்தையின் மூலமும், கலைச் சேவையின் மூலமும் எனக்குக் கற்றுத் தந்த பாடநெறியைச் சிறிதும் பிசகாமல் கடைப் பிடித்து ஒழுகியிருக்கிறேன். எந்த நசுக்கப்பட்ட - ஒடுக்கப்பட்ட - மக்களிடையேயிருந்து தோன்றினேனோ, அந்த மக்களின் விடிவுக்காகவே கடைசி வரை உழைப்பேன் பாடு படுவேன் எனச் சபதமேற்றதை நடைமுறைப் படுத்தி வருவதில் இன்று ஆத்ம திருப்தி அடைந்து வருகிறேன்.

நாடக மேடையில் மயிலாசனத்தில் மரணமடைந்த ராஜபார்ட் விஸ்வநாததாஸ் அவர்களை அதே மயிலாசனத்தில் வைத்து இறுதி ஊர்வலம் நடத்தினார்கள், ரஸிகப் பெருமக்கள். அந்த இறுதி ஊர்வலத்தினால் எட்டு மணி நேரம் நகரப் போக்கு வரத்தெல்லாம் ஸ்தம்பித்துப் போய்விட்டனவாம். இது ஒரு கலைஞனுக்குக் கிடைத்த வரலாற்றுப் பெருமை, அதிலும் தமிழகத்தில்.

ஒரு நாடக நடிகனுக்கு அப்படி ஒரு சிறப்போ ஒரு மதிப்போ அதுவரை நடந்ததில்லையாம். வரலாற்றில் பதிக்கப்பட்ட நிகழ்ச்சியாக இன்றுவரை பேசபட்டுவரும் தகவலாகும். இது. ஆவணப்படுத்தப்பட்ட வரலாறுமாகும்.

இவைகள் அனைத்தையும் விடச் சிறப்பு என்னவென்றால் விஸ்வநாததாஸ் அவர்களை மேடையிலேயோ நேரிலேயோ பார்த்திருக்காத ஒரு யாழ்ப்பாணத்துப் பொடியன் - கேள்வி ஞானத்தால் மாத்திரமே அவரது பேராண்மையைத் தரிசித்திருந்த ஓர் இரண்டுங் கெட்டான் வயசுப் பையன் - அந்த வயசிலேயே தன்னை வெளிப்படுத்த இத்தகவல்களை எல்லாம் மனப்பதிவு செய்து கொண்டான் என்பதே முக்கியமானதாகும்.

அசாதாரண திறமைகள் இருந்தும் மேடைக்கேற்ற அழகு, திறமை, குரல் வளம் வாய்க்கப் பெற்ற ஒரு பிறவிக் கலைஞன், காந்தியடிகளின் அருளாசியை நேரில் பெற்றுக் கொண்டவரும் நாட்டிற்காக, சுதந்திரத்திற்காகச் சிறை சென்றவரும், மக்களால் போற்றிப் புகழப் பெற்றவருமான ஒரு தரமான நாடகக் கலைஞன், சிகை அலங்கரிக்கும் சமூகத்தவர் குலத்தில் பிறந்துவிட்ட பிறவிக் காரணத்திற்காக அவர்மீது எறியப்பட்ட அவதூறுச் சேற்றையெல்லாம் துடைத்து அழித்துவிட்டு, ஒரு மா மானுடனைப் போல, நிமிர்ந்து நின்றாரே, அது இந்த யாழ்ப்பாணத்து இளைஞனுக்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழ்ந்தது. அவனது வாழ்வைச் செழுமைப்படுத்தியது. அதை அவன் பாடமாக ஏற்றுக் கொண்டான். அதன் வெளிச்சத்திலேயே நடைபோட்டு வளர்ந்து வந்தான், வளர்ந்து வருகின்றான்.

சமீபத்தில் தமிழகப் பத்திரிகை ஒன்றில் படித்தேன். தேசிய சுதந்திரத்தின் 50வது ஆண்டு ஞாபகார்த்தமாக மதுரையில் திருமங்கலத்திலுள்ள விஸ்வநாததாஸ் அவர்கள் பிறந்த இல்லத்தை, தமிழ்நாடு அரசாங்கம் அந்த கலைஞன் பிறந்த ஞாபகத் தேசியச் சொத்தாகப் பிரகடனப் படுத்தியுள்ளதென, அந்த பேப்பர்ச் செய்தி கூறுகின்றது.

இங்கும், கடல் கடந்து இலங்கையிலும் ஒரு மூலையில் தனிமையாக இருந்து கொண்டு, தனது இளமைக் கால நினைவுகளை, தன்னை உருவாக்கியவர்களின் பங்குப் பணிகளை, எழுத்தில் வடித்துக் கொண்டிருக்கின்றானே ஓர் எழுத்தாளன், இவனும் தனது ஞாபக அர்ப்பணிப்பை அந்த நாடகக் கலைஞனுக்கு இந்த எழுத்தின் மூலம் சமர்ப்பணம் செய்து களிக்கின்றான்.

காந்தியடிகள் அரிச்சந்திரன் நாடகம் பார்த்ததின் பாதிப்பால் தனது அஹிம்ஸா தத்துவத்தின் உள்ளடக்கக் கூறுகளை அன்றே உணர்ந்து கொண்டதாக எழுதியுள்ளார். ஒரு தமிழக நாடக நடிகன் யாழ்பாணத்திற்கு வந்து நாடகமாடியதையும், அந்த நாடக நடிகனுடன் சேர்ந்து நடித்த ஒரு நகைச்சுவை நாடக நடிகன், ஒரு சிறுவனின் நெஞ்சில் தன்னையறியாமலே விதைத்த விதை பிற்காலத்தில் ஒரு தலித் எழுத்தாளனை யாழ்ப்பாண மண்ணில் உருவாக்க ஏதுவாக அமைந்ததையும் இந்தச் சந்தர்ப்பத்தில் எண்ணிப் பார்க்கின்றேன்.

இந்தத் தகவல்கள் கூட, ஒரு வரலாற்று ஆவணப் பதிவுகள் தான்.

இதுவும் கூட, பபூன் செல்லையா 50-55 வருடங்களுக்கு முன்னர் எனக்குச் சொல்லிச் சென்ற கதைகளில் ஒன்றுதான். வரலாற்றுப் பதிவுகளில் ஒன்று.

கூத்து மடுவத்தில் இப்படியான ஒரு பிரசித்தி பெற்ற நாடகம் நடந்து கொண்டிருந்தது. கலரி நாடகச் சுவைஞர்கள், அன்று அம்மண்டபத்தில் ஏராளமாகத் திரண்டு போய் இருந்தனர்.

பரபரப்புக்குப் பஞ்சமில்லை. எங்கும் ஒரே ஆரவாரம்.

கன்னிகா பரமேஸ்வரி என்ற யாழ்ப்பாணத்து நடிகை. பேரழகி. இளமை குலுங்கும் சிரிப்பழகி. அன்றைய யாழ்ப்பாணத்து இளைஞர்களின் கனவுக் கன்னி. அந்தச் சிரிப்பழகி அன்றைய நாடகத்தில் பிரதான ஸ்திரி பார்ட். அவளுக்காகவே அத்தனை கூட்டம். சனத்திரள் நெருங்கியடித்தது.

அந்தக் காலத்தில் கடையடிக் கணேசன் பெரிய சண்டியன். இந்தக் கணேசனைக் கோணாந்தோட்டத்துக் கணேசன் என்றும் அழைப்பர்.

யாழ்ப்பாணத்துச் சண்டியர் உலகிலேயே பெயர் பதித்த ஒருவர். அழுக்கடைச் சண்முகம், மணியம், அம்மான் தம்பிராசா, தெய்வேந்திரம் எனப் பின்னர் சண்டியர் கூட்டம் யாழ்ப்பாணத்தில் உருவாவதற்கு அத்திவாரமிட்டவர். இந்தக் கடையடிக் கணேசன் தான். பெரும் புகழ்பெற்ற தாதா.

இவர் பகிரங்கமாக ஒரு சவால் விட்டிருந்தார்: 'கன்னிகா பரமேஸ்வரி மேடையில் நடிக்க வரும் போது, மேடையில் ஏறி அவளை எல்லோருக்கும் முன்னாலே ஒருமுறை கட்டிப் பிடித்து விடுகிறேன்' என்பது தான் அவர்

சொன்னதாகச் சொன்ன சபதத்தின் சாரம். பகிரங்கமாகச் சவால் விட்டிருந்தார்.

கூட்டம் நாடக ரஸனைக்காகவும் மாத்திரமல்ல, வதந்தியாக வந்த இந்தச் சண்டியர் சபதத்தின் உண்மை விளைவுகளையும் தரிசிக்கத்தான் இத்தனை சனங்கள் கூட்டமாக கூடியிருந்தது. நெரிசல் பட்டனர். அதில் ஒரு மகிழ்ச்சி!

நாடகம் களை கட்டும் நேரம்.

வதந்தி வதந்தியாகப் போய் விட்டதே என்ற எதிர்பார்ப்பு ஏமாற்றத்தினால் ரஸிகப் பெருமக்கள் சோர்ந்து துவண்டு போய்க் காட்சி தந்தார்கள். சிலர் வெளியேறவும் செய்தார்கள். ஆரம்பப் பரபரப்பு, அடங்கிவரும் வேளை.

திடீரென மேடைப் பக்கமிருந்து பெருத்த ஆரவாரம் கேட்டது.

கடையடிக் கணேசன் மேடை ஏறியதும், அணிந்திருந்த சேட்டைக் கழற்றி பார்வையாளர் பக்கம் விசிறி வீசிவிட்டு, சடாரெனப் பாய்ந்து மேடையில் விக்கித்துப் போய் நின்ற நடிகை கன்னிகா பரமேஸ்வரியை அரவணைத்துக் கட்டிப்பிடிக்க முனைந்து, கிட்டத்தட்ட கட்டிப்பிடித்தேவிட்டான்.

சொல்லிவைத்தாற்போல, வெளிச்சங்கள் அனைத்தும் அணைக்கப்பட்டன. ஒரே இருட்டு.

நாடக அமைப்பாளர்கள் முன்னரே இதற்காகத் தம்மைத் தயார்ப் படுத்திய நிலையிலேயே காத்திருந்தனர்.

கன்னிகா பரமேஸ்வரியைக் கணேசன் தொட்ட மறுகணமே, விழுந்தது விலாவில் ஓர் ஆழமான கத்திக் குத்து.

கூத்து மடுவமே அந்தக்கணம் அல்லோல கல்லோலப்பட்டது. பார்வையாளர் நசுக்கப்பட்டனர். நெரிக்கப்பட்டனர். சிலர் மூர்ச்சையுற்றதினால் மிதிக்கப்பட்டுக் காயப்பட்டனர். சிலர் காயமடைந்தனர். யாருமே மரணமடைந்ததாகத் தகவல் இல்லை. ஒரே களேபரம்.

''இப்படித்தானப்பா இந்த மண்ணில் நாடகம் வேர் விட்டு இந்தளவு தூரம் வளர்ந்து வந்திருக்கு'' என முடிவுரையாகச் சொன்னார், பபூன் செல்லையா. சொல்லிவிட்டு ஓர் ஆழ்ந்த பெருமூச்சு விட்டார். பாரம் இறக்கப்பட்டு விட்டது போன்ற பெருமூச்சு.

கலையிலக்கியத் துறையைச் சேர்ந்தவர்கள் கடந்த காலங்களில் பட்ட கஷ்ட, நிஷ்டுரங்களை இளம் தலைமுறையினர் பூரண தெளிவோடு புரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆத்ம உணர்வுடனேயே அவர் எனக்கு இந்த வரலாற்றுத் தகவல்களைச் சொல்லி, வைத்தார். பின்னர் இதுவே எழுத்து ஆவணமாகப் பதியப்படும் என அவர் நம்பியிருக்கவில்லை.

அதே உணர்வுடன்தான் நானும் அவர் சொல்லிச் சென்ற தகவல்களை இங்கு பதித்து வைக்கின்றேன். எழுத்தில் ஆவணப்படுத்துகின்றேன்.

பிற்காலத்தில் நான் ஒருநாள் அந்தக் கடையடிக் கணேசனை நேரில் பார்த்தேன், யாழ்ப்பாண பஸ் நிலையத்தில்.

'ஊர் உலகத்தை எல்லாம் கலக்கியடித்த கணேசனா, இவர்?' என நான் ஆச்சரியப்பட்டது என்னவோ உண்மைதான்.

'கடைசியில், பிரபல தாதாக்களின், இறுதி முடிவே இதுதானோ?'



12

1944 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26ம் திகதியை என் உள் நினைவு என்றுமே பதியவைத்து வந்திருக்கின்றது. மறக்க முடியாத தினமது. யாழ்ப்பாண வரலாற்றில் கறுப்புத் தினம். யாழ்ப்பாண நகருக்கு உட்பட்ட சுடலையின் பெயர் வில்லூன்றி மயானம் என்பது. அன்று, அந்த நகரில் அந்தச் சுடுகாட்டில் பிரேதத்தைத் தகனம் செய்யச் சென்றவர்களுக்கு எதிராகத் துப்பாக்கிச் சூடு நடை பெற்றது. முதலி சின்னத் தம்பி என்பவர் சாதி வெறியர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். உயர் குடியினரைத் தகனம் செய்யப் பயன்படுத்தப்படும் அந்தச் சுடுகாட்டில், ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணின் பிணம் இறுதிக் கிரியைகளுக்காகக் கொண்டுவரப்பட்டு தீயிட்டிருந்த வேளையில், இதை ஏற்கெனவே மனசார வெறுத்த ஒரு வெறி பிடித்த உயர் கும்பல், துப்பாக்கிப் பிரயோகம் செய்து, அந்தச் சுடலையிலேயே ஒரு கொலையை நடத்தி முடித்து விட்டது. இரத்தப் பெரு வேள்வி நடந்து முடிந்தது. கொலையைக் கலையாகச் செய்து காட்டியது.

துப்பாக்கிக் கலாசாரத்திற்கு அன்றே அந்த யாழ்ப்பாண மண்ணில் அத்திவாரம் இடப்பட்டு விட்டது என இன்று நான் கருதுகின்றேன். அன்றே தொடங்கிவிட்டது, கொலைக் கலாசாரம்.

வில்லூன்றி மயானத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட பிணம், எங்கள் கடைத் தெரு வழியாகத் தான் போனது. நான் கடையின் வெளிப் படிக்கட்டில் நின்றபடியே அந்தச் சவ ஊர்வலத்தைப் பார்த்துக் கொண்டு தான் நின்றேன். எதிர்ப் பக்கத்திலிருந்த தேநீர்க் கடையிலும் சைக்கில் கடையிலும் வெற்றிலைக் கடைப்படிகளிலும் நின்ற ஒரு சிலர் 'குசு, குசு' எனத்

தங்களுக்குள் கதைத்துக் கொண்டு நின்றதை நான் அவ்வளவு பெரிசாக அப்பொழுது கவனத்தில் எடுக்கவில்லை. ஆனால் அப்போதே அவர்களுக்கு அந்தச் சம்பவத்தின் பின்னணித் தகவல்கள் தெரிந்திருக்க வேண்டும் எனச் சம்பவம் நடைபெற்றதன் பின்னர் என்னால் உணர முடிந்தது. இதை ஊகித்துக் கொண்டேன். அதுதான் உண்மையும், கூட.

''சுட்டுப் போட்டான்கள்! சுடலையிலே சுட்டுப்போட்டான்கள்!'' எனக் கூவிக் கொண்டு சனக் கும்பலின் ஒரு பகுதி தெருவழியாக ஓடிக்கொண்டிருந்ததைக் கண்டு, சில கடைகளின் கதவுகள் சாத்தப்படுவதைப் பார்த்து, நானும் உள்ளுக்குள் பயந்தவண்ணம் கடைக்குள் நுழைந்து ஒதுங்கியிருந்து கொண்டேன். 'என்ன நடந்திருக்கும்? - என்னதான் நடந்திருக்கும்?'

அன்று சாயங்காலம் வரை பலவிதமான வதந்திகள் பரவியபடியே இருந்தன. மக்கள் கூடிக் கூடிப் பேசிக்கொண்டிருந்தனர். வதந்திகள் சிறகு கட்டிப் பறந்தன.

யாழ்ப்பாணம் பலாலி வீதி ஆரியகுளத்தடியைச் சேர்ந்த வள்ளியம்மை என்ற கிழவி இறந்து விட்டார். அந்தப் பகுதிக்கு வெகு அண்மையில் உள்ள சுடலைதான் இந்த வில்லூன்றி மயானம். நீண்ட நெடுங்காலமாகவே அப்பகுதி, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அந்தச் சுடலையில் அவர்களது பிணங்களை எரியூட்ட மறுக்கப்பட்டு வந்தது. தடுக்கப்பட்டிருந்தது.

படித்தவர்களும், இளைஞர்களும் இந்தச் செயலைக் கண்டித்து வந்தனர். இந்த ஜனநாயக யுகத்தில் தங்களது மக்களுக்கு இழைக்கப்பட்டு வரும் இழிவான செயல்களை துடைத்தெறிய முன்முயற்சி எடுத்து உழைத்து வந்தனர், ஒடுக்கப்பட்ட மக்களும், அதன் தலைவர்களும்.

தங்களது அடிப்படை உரிமையை வென்றெடுத்து நிலைநாட்ட முனையும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப் பட்டதுதான் இந்த வில்லூன்றிச் சுடலைப் போராட்டம். யாழ்ப்பாணப் பலாலி வீதி, போராட்டப் பாசறையாக மிளிர்ந்தது.

இந்தப் போராட்டத்திற்கு முன்னின்று தலைமை தாங்கியவர்களில் ஒருவர் தான், பின்னர் சிறுபான்மைத் தமிழர் மகா சபையின் தலைவராகவும், ஸ்ரீமாவோ அரசாங்கத்தில், இந்த ஒடுக்கப்பட்ட பகுதி மக்களின் தலைவராக அங்கீகரிக்கப்பட்டு, பாராளுமன்ற நியமன அங்கத்தவராகவும் விளங்கிய தோழர் எம். சி. சுப்பிரமணியம் என்பவர் என்பதை, நான் இங்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். இவரது போராட்ட வரலாறே தனியானது. தனியாக நூல் எழுதத் தக்கது. ஒடுக்கப்பட்ட மக்களின் மாபெரும் தலைவர் இவர்.

இந்த மனித உரிமைப் போராட்டம் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டது. உரிமை கேட்டுப் போராடிய மக்களில் ஒருவர் படுகொலை செய்யப்பட்டார். அந்தச் சுடலையிலேயே பிணமாகச் சரிக்கப்பட்டார். இந்தக் கொடூரச் செயலைக் கேள்விப்பட்ட நல்லெண்ணம் படைத்த மக்கள்

கொதிப்பேறிப் போயினர் ஆத்திரப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவத்தை அறிந்து அன்று தமிழ்ச் சமூகமே அப்படியே உறைந்து போய்விட்டது. நல்லவர்கள், படித்த கனவான்கள், பண்பாடான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பேசுவது என்னவென்றே தெரியாமல் ஸ்தம்பித்துப் போய் விட்டனர். நமது காலாசாரம் கந்தப் புராணக் கலாசாரம் என வடபுலத்துக் கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் பற்றிப் பெருமைப்பட்டவர்கள், வாயடைத்துப் போய் மௌனமாகிவிட்டனர். குற்ற உணர்வால் குமைந்து போய்க் காணப்பட்டனர். சிலருக்கோ நெஞ்சில் சொல்லொண்ணா மகிழ்ச்சி.

இந்த மனிதச் சங்காரத்தை எதிர்த்து, எதிர் நடவடிக்கை எடுக்கப் பெரும் மனப்பண்பு கொண்டவர்கள் முன் வந்தனர். அறிக்கை விட்டனர். கண்டித்தனர். தமது எதிர்ப்பைச் செயல் முறையில் நிரூபித்தனர். பொதுக் கூட்டம் போட்டனர். அன்று யாழ்ப்பாணப் பட்டினசபைத் தலைவராக விளங்கிய கனவான் சி. பொன்னம்பலம் என்பவர், ஒடுக்கப்பட்ட மக்களின்பால் உறுதியாக நின்று பல்வேறு நடவடிக்கைகள் அரசு ரீதியாக எடுக்க முன்னின்று உழைத்தார். அவருடன் ஆவேச முற்றவர்களில் சென்ட்டர் ஏ. பி. இராஜேந்திராவும் ஒருவர். இன்னும் பலரும் கொதிப்படைந்தனர்.

இதில் இடதுசாரித் தலைவர்களும் இணைந்து கொண்டனர்.

இந்தக் காலகட்டத்தில் தினசரிப் பத்திரிகைகளில் எல்லாம் இது சம்பந்தப்பட்ட செய்திகளே தலைப்புச் செய்திகளாக மிளிர்ந்தன. எதிர்ப்புச் செய்திகளை விரிவாகப் பிரசுரித்தன. யாழ்ப்பாண மண்ணின் சாதித் திமிர் குறித்து நாடெங்கும் சிரிப்பாய்ச் சிரித்தது. பலருக்கு இதன் உட்கிடக்கை விளங்கியது.

இந்த மானுடச் சங்கார நிலையிலும் கூட, `இதுகளுக்கு, இந்த எழியதுகளுக்கு நல்ல பாடம்தான் படிப்பிச்சாங்கள்!' எனச் சில கீழ் நிலை மனநோயாளிகள் தமது சாதி வெறிப் புலம்பலைப் புலம்பினர். சிலரது வாய்ப் பேச்சின் மூலமும் என்னால் இதைக் கிரகிக்கக் கூட முடிந்தது. அவர்களை நான் மனசார வெறுத்தேன். சிலரோ அநுதாபம் காட்டுவது போல, நடித்தனர்.

இந்த மனித உரிமைப் போராட்டம் இந்தச் சுடலைப் போராட்டத்துடன் ஆரம்பிக்கப்பட்ட உரிமைப் போராட்டமல்ல. இதற்கு நீண்ட வரலாற்றுப் பின்னணி உண்டு. பாரிய சரித்திரம் உண்டு. அது நீ.....ண்....ட.....து....!

இது நடப்பதற்குச் சில தசாப்தங்களுக்கு முன்னர், `யுத் காங்கிரஸ்' என்றொரு அமைப்புத் தோற்றுவிக்கப்பட்டது. இந்திய சுதந்திரப் போராட்ட அலையும், காந்தியடிகளின் அஹிம்சா உணர்வு வேகமும் கலந்த ஓர் அழுத்த நிலை வடபுலத்துக் கல்விமான்களிடையேயும் அரும்பியது. அதன் அமைப்பு வெளிப்பாடே இந்த இளைஞர் காங்கிரஸ் என்ற இயக்கம். தமிழ் மக்களினதும் பொதுவான முழு நாட்டினதும் சுதந்திர வேட்கையைப்

பிரகடனப் படுத்த ஏற்பட்ட இந்த இயக்கத்திற்கு அன்று எல்லோராலும் மதிக்கப்பட்ட, பெருமதிப்புடன் போற்றப்பட்ட திரு. ஹண்டி பேரின்பநாயகம் தலைமை தாங்கினார். இந்த இயக்கம் ஒடுக்கப்பட்ட மக்களிடையேயும் தன் வேர்களைப் பரப்ப முனைந்து செயற்பட்டது. அவர்களது உரிமையை அங்கீகரித்தது. அந்தக் காலகட்டத்தில் `சம ஆசனம் - சம போசனம்!` என்ற கோஷம் பரவலாக ஒலிக்கத் தொடங்கியது. இந்த இயக்கம் பெரிய மாற்றங்களை உடனடியாகச் செய்யமுடியாமல் இருந்த போதிலும்கூட, வடபுலத்து ஒடுக்கப்பட்ட மக்களின் மனித உரிமைகளை அங்கீகரித்து, அவர்களுக்காகப் பொது வாழ்வில் முதல் குரல் கொடுக்க முன்வந்தது. நசுக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகளில் உள்ள நியாயத்திற்காகப் போராட முன் நின்றது. இந்த அங்கீகரிப்பு வரலாற்றில் ஒரு திருப்புமுனை என்றே குறிப்பிடலாம். இது ஒரு புதிய மாற்றம். புதிய திருப்பம்.

இந்தக் கோரிக்கைப் போராட்டத்திற்கு எதிராக அந்தக் காலத்தில் பலர் அவதூறு செய்யப்பட்டதுண்டு. தமது சொந்தச் சாதிக்காரர்களாலேயே சாதிப் பிரஷ்டம் செய்யப்பட்டவர்களுமுண்டு. தங்களது சமூக நன்மை தீமைகளில் இவர்களை, இவர்களது குடும்பத்தினரைத் தள்ளி வைத்ததுமுண்டு. இதைக் கண்டு மிரண்டு போனவர்கள் பொதுவாழ்விலிருந்தே ஒதுங்கிப் போய்விட்டனர். ஒதுங்க முடியாமல் தலை நிமிர்ந்து நின்றவர்கள், தேர்தல் காலத்தில் தோற்கடிக்கப்பட்டனர். அரசியல் அதிகாரம் இவர்களுக்கு மறுக்கப்பட்டு வந்தது. இவர்களே பின்னர் இடதுசாரித் தலைவர்களாக மலர்ச்சி பெற்றனர். மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தனர்.

தமது உரிமைகளை மற்றவர்கள் வென்றெடுத்துத் தருவார்கள் என்பதை விடுத்து, தமது சமூக விடுதலைக்குத் தாம் தாமே போராட வேண்டும் என்ற ஞானோதயம் சில துடிப்புள்ள அந்தக் கால இளைஞர்கள் மத்தியில் அரும்பு விடத் தொடங்கியது. பொருளாதார விடுதலை, கல்வி மேம்பாடு இவை இரண்டின் மூலம்தான் தாம் தமது சமூகத் தரத்தைத் தரம் உயர்த்த முடியும் என்ற யதார்த்த நிலைக்குச் சிலர் தள்ளப்பட்டனர். பொதுக் கருத்தை உருவாக்க உழைத்தனர். சிலர் தம்மையே அர்ப்பணித்துப் பாடுபட்டனர். உழைத்து வந்தனர்.

நகரங்களில் மிஷனரிமார்களின் கல்லூரிகளில் தமது குழந்தைகளைச் சேர்ப்பித்து, உயர் கல்வி கற்பிக்க முனைந்தார்கள். அத்துடன் பரம்பரை அடிமை, குடிமை வேலைகளை மெல்ல மெல்ல விடுத்து, மாற்றுத் தொழில் செய்யப் பழகிக் கொண்டனர். அடக்குமுறையிலிருந்து மெல்ல மெல்ல விடுபடத் தொடங்கினர். ஆதிக்க வலை, மெல்ல மெல்ல நெகிழ்ந்தது.

இந்த இயக்கம் வடபகுதியில் பகுதி பகுதியாகப் பரவி வந்தது. இந்த இயக்கத்தினால் சில இளம் தலைவர்கள் தோன்றினார்கள். அத்துடன் திரு. எம். சி. சுப்பிரமணியம், திரு. யோவேல் போல், திரு. ஆ. ம. செல்லத்துரை, திரு. ஜேம்ஸ் மூப்பர் என்போர் குறிப்பிடத் தக்கவர்கள்.

இன்னும் அனேகரைக் குறிப்பிடலாம். காந்தி ஜேக்கப் . ஜி . எம். பொன்னுத்துரை என்போரும் உண்டு.

இந்தக் காலகட்டத்திலேதான் பருத்தித்துறைப் பகுதியில் வதிரி என்ற கிராமத்தில் ஒரு புதுமை நடந்தது. நிலமானியச் சமூக அமைப்பின் நச்சுவேர்கள் ஆழப் பதிந்துள்ள அந்தப் பகுதி மக்களின் பேரவாவை நிறைவேற்றி வைத்தவர்களின் முன்னோடி திரு. கா. சூரன் அவர்கள். தேவரையாளிச் சைவப் பாடசாலையை ஆரம்பித்து வைத்தவர். இந்தச் சமயத்தில் அந்தப் பகுதியில். மிஷனரிப் பாடசாலை ஒன்றும் இருந்தது. இருந்தும் தமது சைவ மக்களின் குழந்தைகள் கல்வி கற்க இந்தப் பாடசாலையை நிறுவினார், சூரன். இது பின்னர் தேவரையாளி இந்துக் கல்லூரியாகப் பரிணாமம் பெற்றது. இந்தக் கல்விப் பணியை வெற்றிகரமாகச் செய்து முடிப்பதற்கு சூரன் அவர்களுக்குக் கரவெட்டி மணியகாரர் சிற்றம்பல முதலியார் பக்க பலமாக நின்று, வேண்டிய உதவிகளை நல்கினார். இவர் தமிழர் கூட்டணித் தலைவர் திரு. சிவசிதம்பரத்தின் பேரனாவார். இப்படியான மனிதர்களும் இருந்தனர். இன்றும் இருக்கின்றனர்.

இக்காலப்பகுதியில் கவிஞர் மு. செல்லையா அவர்கள் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்று பாடசாலையைத் தரமுயர்த்த உழைத்தார். சைவப் புலவர் வல்லிபுரம். ஆ. ம. செல்லத்துரை, ச. சிவகுரு, ஆசிரியர் க. முருகேசு ஆகியோர் சைவ போதனையிலும் சைவப் பண்பாட்டு வளர்ச்சியிலும் தீவிர முனைப்புடன் செயலாற்றி வந்தார்கள். தேவரையாளிச் சமூகத்தின் உயிர் மூச்சாகச் சைவமும் தமிழும் விளங்கி வந்தன. ஆசிரியர்கள் அனைவரிடமும் காந்தீய உணர்வே மேலோங்கி நின்றது. பண்பாட்டு ஒழுக்கமே சிறந்து விளங்கியது. சமூகம் இவர்களை மதித்தது. இவர்களும் சமூகத்தை மதித்தனர். மாற்ற முனைந்தனர்.

பிற்காலத்தில் இந்தச் சமூகத்தினரைச் சுட்டும் பொழுதெல்லாம் 'தேவரையாளிச் சமூகம்' என்றே பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் குறிப்பிட்டு அந்தச் சமூகத்திற்கு ஒரு தனித்துவப் பெயரையும் சூட்டி மதிப்புக் கொடுத்தது இங்கு குறிப்பிடத் தக்கதொன்றாகும். தேவரையாளிச் சமூகத்தில் பல சாதனையாளர் தோன்றினர். மகத்தானவர்கள் இன்றும் இருக்கின்றனர்!

தேவரையாளிச் சைவப் பாடசாலையின் தோற்றம், சும்மா ஒரு பாடசாலை நிறுவிய சங்கதி மாத்திரமல்ல, இது ஒரு போராட்ட சமூகத்தின் வரலாறுமாகும். கல்வியில் பின், தங்கிய ஒரு சமூகம், கல்வியுடன் சேர்த்துச் சைவத்தையும் பேணி இன்றுவரை வளர்த்து வருவது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க சம்பவமாகும். இன்றுவரை இது பேசப்பட்டு வருகிறது.

சைவத்தையும் தமிழையும் இலங்கையில் அழிந்து போகாமல் பாதுகாத்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் என்பது சரித்திரப் பதிவு. இது நாவலர் செய்த மிகப் பெரிய தொண்டு என்பதும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றுதான். அதில் நாவலரின் ஒரு பக்கம்தான் மக்களுக்குத்

தெரிகிறது.ஸ்ரீலஸ்ரீ நாவலருக்கு இன்னொரு பக்கமும் உண்டு. இன்று அப்பக்கம் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. வரலாறு பூர்வமாக இது ஆய்வு செய்யப்படுகிறது. அந்நியர் வருகையாலும் வடபுலத்து நிலமானியச் சமூக அமைப்புச் சிதிலமடையத் தொடங்கி விட்டது. நாவலர் போன்றவர்களால் கட்டிக் காத்துப் பேணி வளர்க்கப்பட்டு வந்த சாதிப்படி முறைத் தன்மைகள் கலகலக்கத் தொடங்கிவிட்டன. இந்தச் சைவ வேளாள தலைமைத்துவச் சாதி அமைப்புத் தகர்ந்து போகாமல் தன்னால் இயன்றவரை பாதுகாக்க முன்வந்தவர், நாவலர். ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, உரிமை மறுக்கப்பட்ட உழைக்கும் மக்களின் மனித உரிமைகளைக் கூட, உயர்சாதி அகம்பாவக்காரர்களுடன் கூட்டுச் சேர்ந்து ஒட்டு மொத்தமாக நிராகரித்தவர், அவர். பின் தங்கிய விளிம்பு நிலை மக்களை மனிதச் சீவன்களாகவே ஏற்றுக் கொள்ளாதவர்தான் நாவலர். இதை அவரது எழுத்துக்களே நிரூபிக்கின்றன. இதை ஒடுக்கப்பட்ட மக்களே நன்கு புரிந்துள்ளனர்.

இந்த அரக்கத்தனத்தையும், அகம்பாவத்தையும், கொடூரமான ஆதிக்க மனப்பான்மையையும் எதிர்த்து, அதன் நுகத்தடிமைகளாக இருக்கப் பிரியப்படாமல் கிறிஸ்தவ மதத்திற்கு மதம் மாறிச் சென்றனர், ஒரு சாரார். மற்றும் இந்த மக்களுக்குத் தமிழைத் தவிர, வேறு மொழியே தெரியாது. தங்களது கிராமிய நம்பிக்கைகளையும், நாட்டார் பாடல்களையும் மரபார்ந்த கலைகளையும் பேணி வந்தவர்கள், இவர்கள். இவர்கள் அனைவரையுமே ஒட்டு மொத்தமாக நிராகரித்த நாவலர், தமிழையும் சைவத்தையும் பாதுகாத்தார் என; எப்படி ஓர் ஒடுக்கப்பட்ட மக்களின் புத்திஜீவியால் ஏற்றுக் கொள்ள இயலும்? வரலாற்றுப் பிறழ்வல்லவா இது? எப்படி இதை அங்கீகரிக்க இயலும்? தலித்துகள் எந்தக் காலத்திலுமே இதனை அங்கீகரித்துவிட மாட்டார்கள். ஒப்புக் கொள்ளவும் மாட்டார்கள்.

முடியுமானால் இப்படிச் சொல்லலாம், அன்றைய சமூக அமைப்பின் மிக உயர் குடிப் பிறப்பாளர்களின் மதத்தையும் மொழியையும் பாதுகாத்தவர் நாவலர் என்று சொல்லலாம். சைவத்தையும் மக்கள் பேசும் மொழியாகிய தமிழையும் எனச் சொல்ல இயலாது. அன்பே சிவம், என்பதுதான் நான் அறிந்த சைவ தத்துவம். உலகமே அன்பு மயம். உயிர்களிடத்தே அன்பு செய்வதுதான் சைவத்தின் அடிப்படைச் சாரம். கோழி, ஆடுகளைக் கொலை செய்து ஊன் உண்பது பாவம் என்பதைவிட, மனித உணர்வுகளைச் சாகடிப்பதே சாவான பாவம் என நான் கருதுகிறேன். வார்த்தைக்கு வார்த்தை அகம்பாவக் கொக்கரிப்புடன், தினசரி தன்னைப் போன்ற சக மனிதர்களின் மனித உணர்வுகளைப் புண்படுத்திச் சாகடித்துக் கொண்டே தம்மைப் பரம்பரைச் சைவர்கள் எனக் கூறிக் கொண்டு திரிபவர்களைப் பார்த்து - இவர்களது வெளி வேஷங்களைக் கண்டு - உண்மையாகவே இவர்கள் மீது நான் கோபப்படுவதை விட, பரிதாபப் படுகிறேன். இவர்களது அகம்பாவ அறியாமைகளை எண்ணி எனக்குள் நான் துக்கப்படுகின்றேன்.

சாதி ஒடுக்கு முறைகளைக் கண்டு உள்ளிருந்து போராடாமல் தப்பித்து

ஓடி, மதம் மாறித் தம்மைப் புதுப்பித்துக் கொண்டவர்கள் கூட, அங்கு புதிய உரிமைகளுடன் வாழ்ந்து வருகின்றார்கள் என்றால், அதுவுமில்லை. 'இக்கரைக்கு அக்கரை பச்சை' என்ற கதைதான். இறுக்கமான சமூகப் பிடிமானம் சற்றுத் தளர்ந்து போயிருக்கலாமே தவிர, முற்றாக அது வென்றெடுக்கப்படவில்லை என்பதே யதார்த்த உண்மையாகும். கிறிஸ்தவ வேளாள உயர்சாதி என நடுப் புதுச் சாதி தோற்றங்கண்டு விட்டது!

இத்தனை கெடுபிடிகளுக்கு மத்தியிலும், நான் மேலே சொன்ன தேவரையாளிச் சமூகம் இன்றும் தொடர்ந்து தமிழையும், சைவத்தையும், பண்பாடுகளையும் பேணிப் பாதுகாத்து வளர்த்து வருகின்றதென்றால் அது நாவலருக்கே விடப்பட்ட பெரும் சவால் என்றே நான் கருதுகின்றேன். நவீன சமுதாயத்தை வரவேற்கும் செயல் இது. சைவத்துக்குள் இருந்து கொண்டே மனித உரிமைகளை வென்றெடுக்கும் செயலிது. மதம் சந்தர்ப்பவாதம்.

வில்லூன்றி மயானத்தில் தொடங்கி இத்தனை விஸ்தாரமாகக் கருத்துக்களை நான் சொல்வதற்கு, ஓர் அடிப்படைக் காரணமுண்டு. நோக்கமுண்டு.

வடபுலத்தில் முதல் முதலில் ஒரு கம்யூனிஸ்டான தோழர் பொன். கந்தையா அவர்களைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைத்ததே இந்த வதிரியை உள்ளடக்கிய பாராளுமன்றத் தொகுதிதான். அத்துடன் இந்தத் தேவரையாளிக் கல்லூரியில் கல்வி பயின்ற தேவரையாளிச் சமூகத்தைச் சேர்ந்த, கல்விமான் ராஜலிங்கம் அவர்கள்தான் வட பிரதேசத்து ஒடுக்கப்பட்ட மக்களிடையே இருந்து முதல் முதலில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றப் பிரதிநிதியும் ஆவார்! இந்த அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்ந்து பேணப்பட வேண்டும்.

வில்லூன்றிச் சுடலைச் சம்பவம் இளைஞனான என்னுடைய ஆத்மாவை அப்படியே அசைத்துவிட்டது. நோகடித்து விட்டது. அதன் எதிர்ப்புக்குறியாக அன்றைய கொலை செய்யப்பட்டவரின் முப்பத்தோராம் நாளன்று - துடக்குக் கழிவன்று - சுத்த வெண்மையான நிறத்தில் வேட்டியும் வெள்ளை நாஷனலும் அணியத் தொடங்கினேன். எமது தொழில் நிலையங்களின் வழக்கத்துக்கு விரோதமாகக் காலில் செருப்பும் போட்டுக் கொண்டேன். என்னையே நான் புதுப்பித்துக் கொண்டேன்.

எனது வெள்ளை உடை மாற்றத்தை பற்றித் தாயார் அத்தனை கரிசனை காட்டவில்லை. ஆனால் காலில் செருப்புப் போட்டுக் கொண்டு, அத்துடன் நின்று கொண்டு தொழில் செய்வதை அம்மாவால் சீரணிக்க முடியவில்லை. ''இதென்னடா இது, புதுப்பழக்கம்!''

''எடேய் பொடியா! எங்கட வயித்துக்குச் சோறு போடுற தொழிலப்பா நாலுபோ நாலு விதமாய்க் கதைபபினம். நல்லாய் யோசிச்சுப் பார், தம்பி'' என, எனக்குச் சோறு போட்டுத் தரும் பொழுதெல்லாம் புத்தி சொல்ல

ஆரம்பித்தார், அம்மா. அம்மா பழைய காலத்துப் பரம்பரை. அந்த காலத்து மனுஷி.

''இந்தா, பாரம்மா, மாஸ்டர் மார், காலிலை செருப்புப் போட்டுக் கொண்டுதான் படிப்பிக்கினம். ஏன் எங்கட மாதா கோயிலிலைக் கூட, குருமார் சப்பாத்துப் போட்டுக் கொண்டுதானே பூஜை செய்யினம்?'' என நான் மறுத்தான் விடுவேன். நான் செய்தது சரி என்ற பிடிவாதம், எனது சொல்!, எதிர்ப்புக்கு ஓர் அறிகுறி.

''என்ன இருந்தாலும் அதுவும் இதுவும் ஒண்டே?'' என வாய்க்குள் முணுமுணுத்தபடியே, அன்றைய உழைப்புக் காசை எண்ணத் தொடங்குவார். முதல் நாளை விட, அன்று கடை வருமானம் அதிகரிக்குமே தவிர, குறைந்திருக்காது. முகத்தில் ஒரு திருப்தி அரும்பும். எல்லோரில் ஒரு நம்பிக்கை பிறக்கும்.

செயல் மூலம் அம்மாவுக்குப் பதில் சொல்ல, நான் என்னைக் கஷ்டப்படுத்திக் கொண்டு தினசரி முயன்று வந்தேன். உழைத்தேன். பாடுபட்டேன்.

காலில் செருப்பு, ஆசிரியர்களைப் போன்ற தூய வெள்ளை வேட்டி, அதற்கேற்ற நாஷனல், எதற்கும், கிறுங்காத நேர்ப்பார்வை, சொகுசான நடை இத்தனை அலங்காரங்களுடன் என்னை ஆரம்பத்தில் பார்த்த பலர், விநோதமாக என்னை நோக்கினர். தொழில் செய்யச் சவூனுக்கு வந்தவர்களில் சிலர் பார்வையால் மிரட்டினர். புதுப் பார்வை பார்த்தனர்.

என்னை தெரிந்த இன்னும் சிலர் முகபாவத்தின் மூலம் `இவருக்கு இப்ப வந்த கெப்பரைப் பார்!' எனச் சாடை செய்து, சைகை மூலம் கருத்துத் தெரிவித்தனர். புறணி பேசிச் சிரித்தனர்.

எனக்கு ஏற்கெனவே இதன் பின் விளைவுகள் தெரியும் என்ற காரணத்தால் எதைப் பற்றியுமே கண்டு கொள்ளாதவன் என்கின்ற பாவனையில் தினசரிக் கடமைகளைத் திட்டமிட்டுச் செய்து வந்தேன். ஒழுங்காகத் தொழில் செய்து வந்தேன். செய்யும் தொழிலில் முன்னேற்றம் கண்டேன்.

நாள் போக, நாள் போக, என்னை அலட்சியம் செய்த ஒரு சிலரே பார்வையால் எனக்கு மதிப்புக் காட்டத் தொடங்கினர். மரியாதையாக வழி விட்டனர். இன்னும் சிலரோ `மாஸ்டர்... மாஸ்டர்!' என வாய் நிறைய அழைக்கத் தலைப்பட்டனர். நானும் கல்லூரியத்துடன் அவர்களுக்கு மதிப்புக் காட்டத் தொடங்கினேன். என்னை நானே ஒழுங்குபடுத்திக் கொண்டேன். பண்பாட்டுடன் நடக்கப் பழகினேன்.

ஓர் உண்மையை இங்கு கூறிவைக்கின்றேன். உயர்சாதித் திமிர்காட்டும் சாதிமான்கள் படுகோழைகள். துணிந்து எதிர்த்தால், மிரண்டு போய்விடுவார்கள். சாதியை நம்புகிற அளவிற்கு, சத்தியத்தை நம்பும் திராணி அவர்களிடம் இருப்பதில்லை. அது தான் காரணம்.

அதிலிருந்து நான் ஒரு பாடத்தைக் கற்றுத் தெளிந்தேன். நேர்மை, ஒழுக்கம், தன்னில் தானே நம்பிக்கை கொண்டவனை முடிவில் அவனைப் புரிந்து கொண்ட மக்கள், மதிக்கவே செய்வார்கள். கௌரவம் தந்து நடத்துவார்கள். சிறப்பிப்பார்கள்.



13

இந்தத் தொழில் துறை சம்பந்தப்பட்ட மட்டில் என்னை ஒரு வித்தியாசமானவனாகவே பலர் கருதத் தொடங்கினர். எனது பெயர் ஏதோ ஒரு வகையில் பிரமுகர் மத்தியில் வெகு வேகமாகப் பரவிப் படரத் தொடங்கி விட்டது. பிரபல்யமடையத் தொடங்கிவிட்டேன்.

விளம்பரம் பரவி விட்டதால் என்னிடம் தொழில் செய்ய விரும்பி வருபவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கத் தொடங்கியது. எனது பொருளாதார நிலையும் மாதாமாதம் மேம்பட ஆரம்பித்து விட்டது. உற்சாகமாக உழைத்தேன்.

பின் ஆண்டுகளில் பெரும் பிரமுகர்களாகப் பரிணமித்த, மக்கள் செல்வாக்குப் பெற்ற கனவான்கள் அனைவருமே, எனது வாடிக்கையாளர்களாக விளங்கி வந்தனர். என்னைத் தேடி வந்தனர். என்னிடம் நட்புக்கொள்ள விழைந்தனர். நேசபாவத்துடன் பழகினர்.

பாராளுமன்றப் பிரதிநிதிகளாக மக்கள் மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகள் பலரும் இதில் அடங்குவர். வடமாகாண வரலாற்றிலேயே கம்யூனிஸ்ட் கட்சிப் பாராளுமன்றப் பிரதிநிதியாக முதலில் தெரிவு செய்யப்பட்ட பருத்தித்துறை நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் பொன். கந்தையா உட்பட, கோப்பாய்ப் பிரதிநிதிகளாகத் தெரிவான அட்வகேட் பாலசுந்தரம், அருளம்பலம் போன்றவர்கள் எனது வாடிக்கையாளர்களாகத் திகழ்ந்தவர்களே. ஒடுக்கப் பட்டவர்களின் தனிப் பெரும் பிரதிநிதியாகப் பாராளுமன்றத்திற்கு நியமிக்கப் பெற்ற தோழர் எம். சி. சுப்பிரமணியம் தொடக்கம் பிரபல கல்விமானும் 56ல் வட்டுக்கோட்டைத் தொகுதியில்

தமிழர் பிரதிநிதியாகப் போட்டியிட்ட தலைவர் அமிர்தலிங்கத்திடம் சுமார் இரண்டாயிரம் ஓட்டு வித்தியாசத்தில் தோல்வி கண்ட தோழர் வைத்திலிங்கம் ஈறாக, எனது தொழில் ஆளுமைக்குள் உட்பட்டுத் திகழ்ந்தவர்களே. அத்துடன் தமிழ்ச் சான்றோர்கள் என மதிக்கப்பட்ட வித்வ சிரோண்மணி கணேசையர், க. கி. நடராஜன், வித்துவான் வேந்தனார் போன்றோரும் கல்லூரி அதிபர்கள் ஆசைப்பிள்ளை, குமாரசுவாமி, தம்பு ஆகியோரும் வின்ஸர் தியேட்டர் கதிரித்தம்பி, படத் தயாரிப்பாளர் தம்பு, அந்தக் காலத்தில் தனது அசகாய சூரத்தனங்களால் மக்கள் மத்தியில் பிரபலம் பெற்றிருந்த வல்வெட்டித்துறை ஹிட்லர் கந்தசாமி, யாழ்ப்பாணத்தின் முதல் மேயர் எனப் பெயர் பெற்ற சாம். ஏ. சபாபதி, யாழ்ப்பாண வரலாற்றில் இன்றும் இடம் பெற்றுத் திகழும் முஸ்லிம் முதல் மேயர் சுல்தான், வேலணை இராசரத்தினம் வாத்தியார், கைலாசபதி அவர்களின் தகப்பனார், பேராசிரியர் சிவத்தம்பிக்குப் பெண் தந்த மாமனார் நடராஜா போனறோர் எனது வாடிக்கையாளர்களில் குறிப்பிடத்தக்க சிலராவர். இலக்கிய முன்னோடிகளில் குறிப்பிடத்தக்கவரான இலங்கையர்கோனும் அடிக்கடி வந்து போவார். அவர் அப்போது வன்னிப் பகுதியில் டி. ஆர். ஓவாகக் கடமையாற்றி வந்தார். இவர்கள் வந்து காத்திருந்து, என்னிடம் தொழில் செய்து கொண்டு போவதில் அவர்களுக்கு அப்படியொரு ஆத்ம திருப்தி. எனது முகராசி அப்படி. எனது கைராசியும் அப்படியே. எனது தொழில் ராசியும் அப்படித்தான்.

இன்று அதையெல்லாம் நினைத்துப் பார்க்கும்போது நெஞ்சு நிறைந்த பூரிப்படைகிறேன். என்னை உருவாக்கியவர்கள் தான், எத்தனை பேர்! எத்தனை வகையானவர்கள்! - எத்தனை விதமானவர்கள்.

அவர்களுடைய வாழ்த்துக்களும், ஆசீர்வாதங்களும், புத்திமதிகளும் தான் என்னைக் கட்டம் கட்டமாகச் செழுமைப்படுத்தி, பண்படுத்தி, ஒழுங்குபடுத்தி வளர்த்து வந்துள்ளது என மெய்யாகவே இன்று மனந் திறந்து ஒப்புக் கொள்ளுகிறேன். அவர்களது பரம்பரை வாழட்டும் - செழிக்கட்டும்!

இந்த இடத்தில் அந்தக் காலத்தில் நடந்த ஒரு வரலாற்றுத் தகவலைக் கூறுவது மிகப் பொருத்தம் என நினைக்கின்றேன்.

ஒரு நாள் மாலை நாலு மணி இருக்கும்.

உள் அறையிலிருந்து, டி. எஸ் சொக்கலிங்கம் ஆசிரியராக இருந்து நடத்திய 'தினமணி' என்ற பேப்பரைப் படித்துக் கொண்டிருந்தேன். யாரோ சலூன் கேற்றைத் தள்ளித் திறந்து கொண்டு உள் நுழைந்து கதிரையில் அமர்வதைக் சாடைமாடையாக அனுமானிக்க முடிந்தது.

'எங்கேயோ பார்த்த முகம்.! எங்கேயோ பார்த்த முகம்!'

'ஓ.....! இவரா?'

மெல்ல எழுந்து முன் பகுதிக்கு வந்த கண்ணாடிக்குள்ளால் உற்றுப்

பார்த்தேன்.

'அவர்தான்!.... அவர்தான்!.....'

மட்டிட்டுக் கொல்லேன்.

ஷேவெடுக்க ஆயத்தப்படுத்தின உதவியாளரைக் கையமர்த்தி மறித்துவிட்டு, துவாய்த் துண்டையும் சோப்பு நுரை தள்ளும் பிரஷ்ஷையும் நான் பெற்றுக் கொண்டேன்.

துவாயை அவரது நெஞ்சில் போர்த்து விட்டு சவர்க்காரப் பிரஷ்ஷை கையில் வைத்துக் கொண்டு நான் சம்பாஷணையைத் தொடங்கினேன்: ''உங்களுடைய பேர் இன்னதுதானே?'' என்றேன்.

அவர் நிமிர்ந்து உட்கார்ந்த வண்ணம், வெகு பூரிப்புடன் சுதாரித்துக் கொண்டார்.

''ஓமோம்.....! ஓமோம்!'' என்றார்.

''நீங்கள் ஒரு பட்டதாரி தானே?''

''ஓம்.....ஓமோம்!''

''நீங்க கல்லூரி ஆசிரியராக்கும்.....''

''ஆசிரியர் மட்டுமில்லை, உதவி அதிபரும் நான் தான்''

''நீங்கள்தானே கிட்டடியிலை ஒரு நோட்டீஸ் விட்டனீங்கள், கண்ட நிண்ட எழிய சாதியளுக்குக் கோயிலுக்கை போறதுக்கு அனுமதிக்க முடியாது, ஆகம விதிகளுக்கு அமைய, அது சாத்தியப்படாது என்ற நோட்டீஸ்..''

மெல்ல நெளிந்தார். சம்பாஷணையின் உட் சூட்சுமப் போக்கைச் சற்று உணர்ந்து கொண்டவராக ''அது வந்து...அது வந்து.... என்னண்டால்.....'' எனக்கு விளக்கம் தர முற்பட்டார்.

''எழும்பு! ம்.....ம்..... எழும்பு, கதிரையை விட்டு!'' அகங்காரக் குரலில், உரத்துக் கத்தினேன். நான் செய்வதைத் தெரிந்துதான் செய்தேன்.

''என்ன? என்னை சொல்லுறாய்?'' வாய் குழறினார். பரிதாபப்பட்ட ஒரு சீவானைப் போல, அவர் காட்சி தந்தார். வெருட்சியால் முகம் வியர்த்தது.

''நீயெல்லாம் ஒரு மனுஷனா? சாதாரண சட்டம்பி எண்டால் நான் பறுவாய் பண்ணமாட்டன். ஒரு பட்டதாரி ஆசிரியர். என்ரை வரிப்பணத்திலை படிச்சுப் பட்டம் பெற்றவன். நீ! என்ரை பரம்பரை எழிய சாதியள். நாய்கள் கோயிலுக்கை போறது தீட்டு. ஆனா உங்களுக்கு நாங்கள் தவறாமல் சேவகம் செய்ய வேணும்? அரைவாசிச் சவரத்தோடை திரத்தியிருப்பன். என் தொழிலுக்கு அது மதிப்பில்லை. போ வெளியாலை'' எனக்கு எப்படித்தான் இந்த ஆத்திரம் வந்ததோ தெரியவில்லை. பொழிந்து தள்ளினேன்.

கதிரையைப் பின்னுக்குச் சத்தமிட இழுத்து விட்டு எழுந்தார். அவர். கோபம் அவரைப் பேசவிடவில்லை. அடுத்து இருந்த சலூன் ஆசைமுத்து என்பவருடையது. இவர் அடுத்து அங்குதான் போவார் என்பது என் ஊகம். அது நடந்தது.

இவர் அந்தச் சலூனுக்குள் நுழையவும், நான் பின்னாலே சென்றேன். கதிரையில் குந்தினார். நான் ஆசைமுத்துவுக்குச் சொன்னேன்: ''அண்ணை இவருக்குச் ஷேவெடுக்கேலாதெண்டு வெளியிலை அனுப்புங்கோ.... சங்கதியைப் பின்னாலை சொல்லுறன்''

பட்டதாரி ஆசிரியர், மிரள மிரள விழித்தார். இருப்பை விட்டு மெல்ல எழுந்த அவர், தொடர்ந்து நடந்தார். நானும் விடாமல் பின் தொடர்ந்தேன்.

கஸ்தூரியார் வீதியில் நடுப்பகுதியில் மலாயன் சலூன் படி ஏறினார், சட்டம்பியார். நானும் உள் நுழைந்தேன்.

என்னைக் கண்டதும் சிவப்பு நிறத்தைக் கண்டு விட்ட ஸ்பெயின் காளை மாடு போல மிரண்டடித்தார்.

''கனகண்ணை!.....இந்தாளை வெளியாலை அனுப்பு. இவங்களைப் போன்றவன்களுக்குச் ஷேவெடுக்கேலாது எண்டு சொல்லண்ணை!'' என்றேன்.

உண்மையிலேயே பயந்துவிட்டார், அந்தப் பட்டதாரி ஆசிரியர். கனகண்ணன் சொல்வதற்கு முன்னரே, கேற்றைத் திறந்து வெளியேறினார்.

அடுத்தது, என் தம்பி தொழில் பார்க்கும் சலூன். ஆசிரியரும் பிடிவாதமாக முயன்றார். நானும் வெகு ஆக்ரோஷத்தோடு அவருக்கு மறுத்தான் விட்டேன். தம்பி கடைக்குள் புகுந்து முகத்தைத் தடவிக் கொண்டே கண்ணாடியில் பார்த்தவர், என் உருவம் அதில் தெரிந்ததும் மெல்ல எழுந்து கொண்டார்.

''என்ன நீ நினைச்சுக் கொண்டிருக்கிறாய்? இந்தத் தெருவுக்கே நீதான் நட்பு, நாட்டாமைக்காரனா?''

''அப்படியெல்லாம் ஒண்டுமில்லை, வாத்தியாரே! நான்தான் சவரத் தொழிலாளர் சங்கத்தின்ரை காரியதரிசி. இதை விளங்கிக் கொண்டால் போதும். இப்ப எங்கட பலமென்ன வெண்டு புரியுதா?''

இரண்டு மூன்று நாட்களுக்குப் பின் கண்ணன் என்ற திருப்பத்தூரைச் சேர்ந்த என் நண்பன், போகும் வழியில் என்னைக் கண்டான். அவன் காங்கேசன் துறை வீதியில் புடவைக் கடையில் ஓர் ஊழியனாகக் கடமையாற்றி வருபவன். என்னுடைய நீண்ட நாளைய நண்பன். பெரியாரின் அபிமானி. நடந்த விவரங்களைக் கேட்டறிந்தான். காரணம் அந்தப் புடவைக் கடைக்காரரின் ஊரைச் சேர்ந்தவராம், இந்தச் சாதிமான் சட்டம்பியார். அத்துடன் அவருடைய சொந்தக்காரருமாம்.

''பொல்லாத ஆத்திரத்துடன்தான் எங்கட கடைப் படியேறி வந்தார். எனக்கு நல்லாத் தெரிஞ்சுபோச்சு. இதன் கதாநாயகன் நீதானெண்டு.''

''எங்கட ஊரெண்டால் இவனைப் போன்றவங்களை முள் முருக்கிலை கட்டி வைச்சு புளிய மிளாராலை நாலு சாத்துச் சாத்தி முதுகுத் தோலை உரிச்சுப் போட்டிருப்பம்! சே! கேவலம்..... கேவலம்'' என்று அழுவாரைப் போல பினாத்தினார்.

''அது சரி. உங்கடை ஊர் ஒரு பக்கமிருக்கட்டும். உங்கட அகராதிப்படி ஒரு எழிய சாதிக்காரன். ஷேவெடுக்க விடாமல் றோட்டு றோட்டாத் திரத்தியடிச்சானே. அப்ப உங்கட சாதிப் பெருமையெல்லாம் எங்கை போச்சு? இப்படி நான் கேட்டன்'' என்றான் கண்ணன்.

இதை எழுதிக் கொண்டிருக்கும் இந்த வேளையில் சமீபத்தில் படித்து ரஸித்த புதுக்கவிதை மனசை வருடிக் கொள்கிறது.

'நாங்கள் சேற்றுக்குள் கால் வைக்காவிட்டால்
நீங்கள் சோற்றுக்குள் கை வைக்க முடியாது!'

சாதிக் கொழுப்பால் சகலதையும் சாதித்து விடலாம் எனத் திமிர் பிடித்துத் திரிபவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நாங்கள், அதாவது ஒடுக்கப்பட்டவர்கள் விழித்து விட்டோம்!

'எனது வாழ்க்கைத் தேவைக்காக எனது பரம்பரைத் தொழிலை செய்து வந்த போதிலும் கூட, என் நெஞ்சுக்குள் ஒரு மெல்லிய நெருப்புப் பொறியொன்று எந்த நேரமும் கனன்று கொண்டேயிருந்தது. இதை நான் நன்றாக உணர்ந்து வைத்திருந்தேன். இரவு கனவுகளில் கூட. இந்த நெஞ்சக் கனல் உருவமெடுத்து எனக்கு வழிகாட்டி வந்துள்ளது. 'சும்மா சிரைக்கப் பிறந்தவனில்லையடா, நீ!' என என் உள்ளுணர்வு எந்த நேரமும் என்னை உசார்ப்படுத்திய வண்ணம் ஊக்குவித்துக் கொண்டிருந்தது.

'நாள் தோறும் நாள் தோறும் எல்லா விதங்களிலும் முன்னேறி முன்னேறி வருகின்றேன், நானே!' எனத் தேவமந்திரம் போல, தினசரி சாயங்கால வேளைகளில் தனிமையில் இருந்து மனசுக்குள் சொல்லி வர ஆரம்பித்தேன். மனனம் செய்துவந்தேன்.

இன்று திரும்பிப் பார்க்கின்றேன். ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக, இந்த மூலமந்திரத்தைத் தொடர்ந்து பல தடவைகள் சொல்லி வந்தது என்வரைக்கும் பலன் தந்து வந்துள்ளது. மறதி அல்லது பிரயாணக் குறுக்கீடுகள் தவிர, தொடர்ந்து செபம் போல, சொல்லிச் சொல்லி வந்தேன். தொடர்ந்து செபித்து வந்தேன். 'நாள் தோறும் நாள் தோறும்' எல்லா விதங்களிலும்.....!'

சாயங்கால வேளைகளில் விளக்கு வைக்கும் நேரத்திற்குச் சற்றுப் பின்னர், நான் எங்கிருந்தாலும் ஒதுங்கித் தனித்திருந்து, இந்த வசனங்களைக்

கோர்வையாக மனசுக்குள் சொல்லிய வண்ணம் மௌனித்திருப்பேன்.

இதைப் பலர் கண்டுள்ளனர். சிலர் இதுபற்றி விசாரித்துமுள்ளனர். குறுக்கு விசாரணை செய்துமுள்ளனர். 'அண்ணன் தியானத்திலிருக்கிறார்' என, என் காதுபடவே சொல்லியுமிருக்கின்றனர். கேலி பேசியவர்களுமுண்டு.

இந்த விமரிசனங்கள், அபிப்பிராயங்கள் பற்றி நான் எதுவுமே கூறுவதில்லை. கூற வேண்டிய தேவையும் எனக்கில்லை. இயல்பாகச் சிரித்து வைப்பேன். இந்தச் சிரிப்பைப் பற்றி அவர்கள் என்ன கருதினார்களோ தெரியாது. தொடர்ந்து என்னை விசாரிப்பதை நிறுத்திவிடுவார்கள். இது நான் கையாளும் ஒரு டெக்னிக். ஒரு புது வகைத் தந்திரம்.

மனோதத்துவ ரீதியாக எனக்குள் நானே என்னை உற்சாகப்படுத்திச் சொல்லி வந்த இந்த மந்திரச் சொற்கள், என் வாழ்க்கையில் மாபெரும் மாற்றங்களைச் செய்யத் தொடங்கி விட்டதை பின்னைய ஆண்டுகளில் வெகு துலாம்பரமாகவே நான் உணரத் தலைப்பட்டேன். தெளிவாகவே அது தெரிந்தது.

இந்த மனோதத்துவ சிகிச்சை என் வரையில் பெரிய வெற்றிகளை ஈட்டித் தந்துள்ளது. மனநிலை சமப்பட்டுக் கட்டுப்பட்டது. புத்தி தெளிந்தது.

திரும்பத் திரும்ப ஓதும்போது தொடர் வார்த்தைகள் மந்திரம் போல மாறி, அவன் விரும்புவது போலவே அவனை ஆக்கிவிடும் என்பதை எனது வாழ்க்கை அநுபவங்கள் மூலமே நான் கண்டறிந்ததைக் கண்டதும், என்னுள் நானே ஆச்சரியப்பட்டுக் கொண்டேன். எனவே எனது தினசரி மந்திர உச்சாடனம், வெகு விமரிசையாகத் தொடர்ந்து நடைபெறத் தொடங்கியது. இன்று வரை தொடர்கிறது. தொடர்ந்து செய்து வருகின்றேன்.

எனது இளம் பருவ காலத்தில் என் கவனத்திற்குத் தட்டுப்பட்ட இரண்டு வாழ்க்கை நெறி நூல்களே இத்தனைக்கும் காரணம் என இப்போது ஒப்புக் கொள்ளுகின்றேன். ஒரு புத்தகம் ஈழத்தின் இலக்கிய முன்னோடிகளில் ஒருவரான அ. ந. கந்தசாமி அவர்கள் மொழி பெயர்த்து வெளியிட்ட, வாழ்க்கை முன்னேற்றம் சம்பந்தப்பட்ட நூல். மற்றப் புத்தகம், அப்துற் றஹீம் எழுதிப் பல்வேறு பதிப்புக்களைப் பின்னர் கண்ட 'வாழ்க்கையின் வெற்றி' என்ற நூல்.

அந்த இரண்டு புத்தகங்களும் சொல்லி வைத்த உள்ளடக்கத்தை திரும்பத் திரும்ப உள்வாங்கிக் கொண்டேன். உள்வாங்கிக் கொண்டதுமல்லாமல் ஓரளவுக்கு என் வாழ்க்கையிலும் கடைப்பிடித்து ஒழுங்கு தவறாமல் ஒழுகத் தலைப்பட்டேன். கடுமையாகப் பின்பற்றி ஒழுகி வந்தேன்.

எனது இளம் வயசுக்காலத்தில் அதிர்ஷ்ட வசமாகக் கிடைத்த எனது பரம்பரைத் தொழில் கூடத்தை, ஒரு பல்கலைக் கழகமாக எண்ணிச் செயல்பட ஆரம்பித்தேன். கற்றுக் கொள்ள மனசைத் திறந்து

வைத்திருந்தேன். அடேயப்பா! எத்தனை வகையான மனிதர்கள்! எத்தனை வகைப்பட்ட குணச் சித்திரங்கள்! எத்தனை வகையான பாத்திரங்கள்! எத்தனை வகையான சம்பவங்கள்!'

வருபவர்களுடன் கதைப்பது மாத்திரமல்ல, அவர்களைக் கூர்ந்து பார்த்து அவதானிக்கத் தொடங்கினேன். வெளியில், பொது இடங்களில் அவர்கள் என்னிடம் காட்டும் பரிவை அல்லது அலட்சியத்தை வைத்து அவர்களின் நடத்தையை மனசுக்குள் மட்டிட்டுக் கொண்டேன். தெளிவு பெற்றேன்.

ஒருவன் சமூகத்தில் தனக்கென ஓர் அந்தஸ்தைப் பெறுவதற்கு மூன்று தகைமைகள் அத்தியாவசியம் தேவை. ஒன்று பணம், மற்றொன்று கல்வி. இன்னொன்று படைப்பாற்றல். சிறுஷ்டிக்கும் திறமை.

என்னிடம் ஏற்கெனவே பணம் இல்லை. எமது பரம்பரைத் தொழிலை எத்தனை ஆண்டுகள், எத்தனை தூரம் கச்சிதமாகச் செய்தபோதிலும் கூட, பணக்காரனாகவே வர முடியாது. ஏதோ பசியில்லாமல் வாழலாம். உயிர் போகாமல் சீவிக்கலாம். எப்படியோ வாழ்வு நடத்தி வரலாம்.

ஆனால், கல்வி என்பது வேறு. எனது கல்வி வயசுக் காலத்தில் இந்தச் சமூகக் கொடுமை காரணமாக - அதன் விஷத் தீண்டல் காரணமாக - எனது கல்வி ஆர்வம் மழுங்கடிக்கப் பட்டது - என் நெஞ்சில் என்றுமே வடுவாக இருந்தபோதிலும்கூட, கல்வி - பள்ளிக்கூடக் கட்டங்களுக்குள்ளோ அல்லது பல்கலைக்கழக வளாக வளவுக்குள்ளோ முடங்கிப் போய்க் கிடக்கவில்லை. அநுபவ ஞானத்தைப் போதியதாகப் பெற்றுக் கொண்ட காரணத்தால், சுயமாகவே என் அறிவை விருத்தி செய்ய ஆரம்பித்தேன். தொடர்ந்து சிந்தித்தேன். படித்தேன்.

படிப்பு - ஓயாத படிப்பு - என் நோக்கமாகத் திகழ்ந்தது. விடாது வாசித்தேன்.

அது யுத்த பிற்காலக் காலம்.

'தினசரி' என ஒரு நாளிதழ் சென்னையில் இருந்து வெளிவந்து கொண்டிருந்தது. தினமணி என்ற பத்திரிகையிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆசிரியர் டி. எஸ். சொக்கலிங்கம், அதிலிருந்து வெளியேறி ஆரம்பித்த பத்திரிகை. அதன் ஆசிரியத் தலையங்கம் வெகு காரசாரமாக இருக்கும். தொடர்ந்து, அவரது ஆசிரியத் தலையங்கங்களைப் படித்து, அதன் கருத்துக்களின் உள்ளீடுகளை மனசுக்குள் உள்வாங்கிக் கொண்டு இடையிடையே இரை மீட்டிக் கொள்வேன். அவரது அந்த ஆணித்தரமான நடை எனக்குப் பிடித்திருந்தது.

அந்தக் காலத்தில் யாழ்ப்பாணக் கச்சேரியடியில் த. தம்பித்துரை என்பவர் நியூஸ் ஏஜெண்டாக இருந்தார். இந்தியாவிலிருந்து வெளிவரும் சகல சஞ்சிகைகளுக்கும் அவர்தான் யாழ்ப்பாண ஏஜெண்ட். கலைமகள், கிராம

ஊழியன், ஹனுமான், கல்கி, காவேரி என வந்து குவியும் சஞ்சிகைகளுக்கு மார்க்கட் தேடி பஸ் நிலையத்திற்கு அணித்தாக ஒரு புத்தகக் கடையொன்றை ஆரம்பித்து நடத்தி வந்தார், அவர்.

அந்தத் தம்பித்துரை புத்தகக் கடையில் ஒரு சிப்பந்தியாக இருந்து உழைத்து, தனது அயராத முயற்சியாலும் கெட்டிக்காரத் தனத்தாலும் முன்னேறி வந்தவர்தான் பிரபல புத்தகக் கடைப் பிரமுகர், ஆர். ஆர். பூபாலசிங்கம் என்பவர். இந்தப் பூபாலசிங்கம்தான் எனக்கு முதன் முதலில் அ. ந. கந்தசாமி அவர்களை அறிமுகப்படுத்தி வைத்தவர். பல அரிய நூல்களைப் படிக்கத் தந்து உதவியவர்.

நான் தொடர்ந்து புத்தகக் கடையிலேயே தவம் கிடக்க ஆரம்பித்தேன். புதுப் புதுப் புத்தகங்களைத் தட்டித் தட்டிப் பார்ப்பேன். அறிமுகப்படுத்திக் கொள்வேன்.

படிப்பு..... படிப்பு..... இரவு பகலாக ஒரே வாசிப்பு! வாசிப்பதால் ஒரு மனிதன் முழு மனிதனாகிறானாம். அது உண்மை. முற்றிலும் உண்மை.

சுதந்திரப் போராட்ட கால இந்தியத் தேசிய காங்கிரஸ் தலைவர்கள் மீது அதித பக்தி செலுத்தினேன். காந்தி, நேரு, போஸ் பற்றியெல்லாம் படித்தறிந்து தெரிந்து கொண்டேன். பட்டேல், ராஜாஜி போன்றோரை எனக்கு அறவே பிடிக்காது. அவர்கள் இருவரும் நரித் தந்திர மூளை படைத்தவர்கள் என்பது என் எண்ணம். அதீத புத்திசாலிகள், எப்போதுமே அபாயகரமானவர்கள். தந்திரசாலிகள், மக்கள் நேசிப்பு அற்றவர்கள் என்பது எனது எண்ணம்.

இந்தக் கால கட்டத்தில் பூபாலசிங்கம் தனியாகப் பிரிந்து, பெரியகடை பஜார் வீதியில் பூபாலசிங்கம் என்ற பெயரில் புத்தகக் கடையொன்றைத் திறந்தார். அரிய புத்தகங்களை விற்பனைக்கு அங்கு வைத்தார். பெரிய பெரிய புத்தகங்கள். பெரிய பெரிய எழுத்தாளர்களின் நூல்கள்.

அப்பொழுது அ. ந. கந்தசாமி அவர்கள் இரண்டு கைகளிலும் சிரங்கு காரணமாக, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து தங்கியிருந்தார்.

அவர் தான் மாக்ஸிஸம் என்ற சொல்லை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தவர். அமரர் அ. ந. க. வின் சிறப்பான குணம் என்னவென்றால் எதற்குமே நிதானம் தவறமாட்டார். கோபப்பட மாட்டார். மிகப் பொறுமையாக விளங்கப் படுத்துவார். இளைஞர்களை அரவணைப்பார். பரிவு காட்டுவார்.

வயசு காரணமாகவும் அதீத ஆர்வமேலீட்டாலும் நான் குதர்க்கமாக அவருடன் வாதம் செய்வது வழக்கம். இருந்தும் அ. ந. க. புரியும்படி விளக்கமளிப்பார். கொஞ்சம் கொஞ்சமாக எனது அடி மனக் கருத்துக்கள் மாறுதலடையத் தொடங்கின. புதிய கருத்துக்களைக் கேட்டறிந்தேன்.

இந்தக் கால கட்டத்தில்தான் தோழர் கார்த்திகேசன் யாழ். இந்துக்

கல்லூரிக்கு ஆசிரியராகப் பொறுப்பேற்க வந்திருந்தார். ஆஸ்பத்திரிக்குப் பின்பக்கமுள்ள விக்டோரியா ரோட்டில் வீடெடுத்துத் தங்கியிருந்தார். கொழும்பிலிருந்து வந்திருந்தார்.

பூபாலசிங்கம் புத்தகக் கடைக்கு ஓர் இளைஞர் அடிக்கடி வரத் தொடங்கினார். படித்த பின்னர், ஆசிரியக் கலாசாலைக்கு விண்ணப்பித்துவிட்டு வேலையற்று இருந்த அந்த இளம் நண்பர், கந்தர் மடம் பகுதியில் குடியிருந்தார். சொந்த ஊர் சாவகச்சேரி. பெயர் த. ராஜகோபாலன்.

பூபாலசிங்கம் புத்தகக் கடைக்கு அருகாமைக் கடை.. காதர் என்பவருடையது. அவர் ஒரு டெயிலர். இரு கடைகளையும் பிரிக்கும்இடத்தில் குறுக்காக ஒரு வாங்கு போடப்பட்டிருந்தது. அந்த வாங்கில் காலையில் வந்து குடியிருந்தபடியே, பேப்பர் சஞ்சிகைகளைத் தொடர்ந்து படித்துக் கொண்டிருப்பார், ராஜகோபாலன். அங்கு பார்த்த ஞாபகம்தான்.

ஆரம்ப காலங்களில் நான் அவரைக் கணக்கெடுப்பதில்லை. நாட்கள் செல்லச் செல்ல, சிறிது சிறிதாக உரையாடத் தொடங்கியவர், பின்னர் என்னுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்தார். பாரதியார் நூல்கள், ராகுல்ஜி புத்தகங்கள் ஈறாகப் படிக்கத் தந்து உதவினார். பல இலக்கியத் தகவல்களையும் பரிமாறினார்.

என்னை எழுதத் தூண்டியவரும் இவரே. பாரா அமைப்பது எப்படி? பாத்திரங்கள் பேசும்போது அடைப்புக் குறி எப்படி தொடக்கம் இடுவது - எழுதுவதில் உள்ள நுணுக்கங்களை வரிக்கு வரி சொல்லித் தந்து. என்னை வழி நடத்தியவர்களில் முதன்மையானவர் இவர் என்றே சொல்லலாம்.

இந்தக் கால கட்டத்தில்தான் யாழ்ப்பாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சி யாழ்ப்பாணக் கிளை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. தோழர் கார்த்திகேசன் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

கிளைக் காரியாலயம் எஸ்ரான்லி வீதியில் ரயில்வே ஸ்டேசனுக்குப் பின்புறமுள்ள ஒரு கடையில் இயங்க ஆரம்பித்தது. எங்கள் வீட்டுக்கு மிகச் சமீபமாக இருந்தது. அந்த இடம். அதன் திறப்பு விழாவுக்கு நானும் பார்வையாளனாகச் சென்றிருந்தேன். கலந்து கொண்டேன். தோழர்களையும் சந்தித்தேன்.

நல்லூரைச் சேர்ந்த ராமசாமி ஐயர், எம். சி. சுப்பிரமணியம், பூபாலசிங்கம், டெயிலர் காதர், உடும்பிராயைச் சேர்ந்த குலவீரசிங்கம், செயலாளர் கார்த்திகேசன், ராஜகோபாலன் போன்றோர் உட்படப் பலர் திறப்பு விழாவுக்கு வந்திருந்தனர்.

ராஜகோபாலன் கூப்பிட்டதற்கிணங்க நானும் கூட்டத்திற்குச் சென்றிருந்தேன்.

இந்த அநுபவங்கள் என்னைச் சிந்திக்கத் தூண்டின. இந்திய தேசிய

காங்கிரஸ் தலைவர்களின் அபிமானியாக இதுவரை திகழ்ந்து வந்த நான், புதிய அரசியல் கோணத்தில் சிந்திக்க ஆரம்பித்தேன். இந்தக் காலகட்டத்தில் என்னுடைய வாழ்க்கையில் புதிய திருப்பமொன்று ஏற்பட்டது.

வடபிரதேசத்தில் பலமானதும் பிரபலமானதுமான தொழிற் சங்கங்களாக அன்று மிளிர்ந்தவை இரண்டு சங்கங்கள். ஒன்று பஸ் தொழிலாளர் சங்கம். மற்றையது சுருட்டுத் தொழிலாளர் சங்கம். இரண்டு சங்கங்களும் இலங்கை சமசமாஜக் கட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வந்தவை. அன்று சமசமாஜக் கட்சியின் பிரபல தமிழ் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர், தோழர் தருமகுல சிங்கம். இவர் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் நெருங்கிய உறவினர். அரசியலில் இருவரும் இரு துருவங்களைச் சேர்ந்தவர்கள். நான் இன்றுவரை நேசிக்கும் மிகச் சிறந்த தலைவர்களில் ஒருவர் தர்மகுலசிங்கம் அவர்கள். மதிக்கப்படத் தக்க தோழர், இவர். எங்களைப் போன்ற சாதாரணர்களையெல்லாம் மனமார நேசித்த தோழர்.

சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் ஆயுட் காலத் தலைவராகத் திகழ்ந்தவர்தான் தோழர் ஆ. துரைராஜசிங்கம். இவரும் ஒரு தொழிலாளியாக வாழ்க்கையை ஆரம்பித்துப், பின்னர் தலைவரானவர். நல்லூர் வட்டாரத்துக்கு மாநகரசபைப் பிரதிநிதியாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். தொடர்ந்து பிரதிநிதித்துவம் வகித்த இவர், மாநகரசபை உதவி மேயராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றவர்.

இவரது தலைமையில் மேதினம் யாழ்ப்பாணத்து முற்றவெளியில் தொழிலாளர்களால் கொண்டாடப்பட்டது. பிரதம பேச்சாளராகத் தோழர் கொல்வின் ஆர். டி. சில்வா கலந்து கொண்டார். இவர் அக்கட்சியின் அகில இலங்கைத் தலைவர்களில் ஒருவர். பாராளுமன்ற அங்கத்தவராகவும் திகழ்ந்தவர்.

கூட்டத்தின் நடுக் கட்டத்தில் நண்பர் ராஜகோபாலன் உட்பட இளம் வட்டத்தினர் தலைவரை அணுகி எங்கள் பிரதிநிதி ஒருவரையும் மேதின மேடையில் பேச அனுமதிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். தலைவரும் அனுமதி தந்தார். தந்துவிட்டுப் பேசப் போகிறவரின் பெயரை எழுதித் தரும்படி கேட்டுக் கொண்டார். இவர்களும் எழுதிக் கொடுத்தனர். நானும் வெகு ஆவலாக தயாராகிக் கொண்டிருந்தேன். 'ஆர் பேசப் போகிற ஆள்?'

தலவைர் அடுத்துப் பேச இருப்பவரின் பெயரை ஒலிபெருக்கியில் பலத்த குரலில் சொன்னார். அடுத்துப் பேச இருப்பவரின் பெயரைக் கேட்டதும் என்னால் நம்பவே முடியவில்லை. காரணம் அடுத்துப் பேச அழைக்கப்பட்டவரின் பெயருக்குரியவரின் பெயர் என்னுடையதாக இருந்தது. அப்படியே வெலவெலத்துப் போய்விட்டேன். திக்பிரமையடைந்து நின்றேன். என்னால் என்னையே நம்பக் கூட முடியவில்லை.

இப்படியான பகிரங்கக் கூட்டங்களில் என்றுமே பிரசங்கம் செய்த அநுபவமற்றவன், நான். சில வாசிகசாலைக் கூட்டங்கள், பள்ளிக்கூட விழாக்களில் உரையாற்றிய சிறிய அநுபவந்தான் எனக்குண்டு. இப்படியான திறந்த வெளிக்கூட்டங்களில், அதுவும் முற்றவெளிப் பகிரங்கக் கூட்டத்தில் நான் உரையாற்றுவதா? என மலைத்துப் போய் ஒன்றுமே விளங்காமல் நின்றிருந்தேன். திகைத்துப் போய் நின்றேன்.

நண்பர் ராஜகோபாலனும் மற்றும் இளம் நண்பர்களும் வற்புறுத்தி அழைத்துப் போய் மேடையேற்றிவிட்டனர். உற்சாகம் தந்து ஊக்கப் படுத்தினார்கள். பேச்சுக்குப் பேச்சு, கைதட்டி ஆரவாரித்தார்கள்.

அன்றைய எனது பொது மேடைக் கன்னிப் பேச்சு, வெகு கச்சிதமாக அமைந்திருந்ததாகத் தோழர் தர்மகுலசிங்கம் பின்னர் பாராட்டி முதுகில் தட்டினார். அன்று தொடக்கம் அவர் எங்கு என்னைக் கண்டாலும் நின்று கதைத்தார். என்னை அங்கீகரித்தார்.

அன்றிலிருந்து நான் பேசப் பட்டேன். மேடைப் பேச்சாளனானேன்!



14

இரண்டொரு நாட்களுக்குப் பின்னர் வீரகேசரிப் பத்திரிகையில் யாழ்ப்பாணத்தில் நடந்த இந்த மேதின விழா பற்றிய செய்தி பிரசுரமாகியிருந்தது. நான்கு கலம் தலைப்பில் வெளிவந்திருந்தது.

'ஜெயம்' எனத் தொழிலாளர்களால் அன்புடன் அழைக்கப்பட்டு வந்த தோழர் தர்மகுலசிங்கத்தின் பேச்சுடன் அன்றைய பிரபல இடதுசாரி அரசியல் தலைவரும், தலைசிறந்த சட்டத்தரணியும் மக்கள் செல்வாக்குப் பெற்று விளங்கியவரும் பாராளுமன்றப் பிரதிநிதியுமான தோழர் கொல்வின் ஆர். டி. சில்வாவின் பேச்சும் வெளிவந்திருந்தது.

இதில் ஆச்சரியம் என்னவென்றால், என்னுடைய பொது மேடை அரசியல் கன்னிப் பேச்சின் சில பகுதிகளும் அந்தச் செய்தியில் இடம் பெற்றிருந்ததுதான்.

அன்று கடைக்குக் கடை வீரகேசரி வாங்கி வந்த காலம். நான் தினசரி புழங்கி வந்த யாழ் பஸார்த் தெருப் பிரதேசத்தில் அந்தச் செய்தி பெரு வியப்பைத் தந்ததுடன், என்னையும் திடீர்ப் பிரமுகர் வரிசைக்கு உயர்த்தி வைத்து விட்டது.

இந்தச் செய்தியின் பின்னணியில் திகழ்ந்தவர், அன்றைய வீரகேசரி யாழ் நிருபர் எஸ். செல்லத்துரை அவர்கள். இவர் அச்சுவேலிப் பிரதேசத்தைச் சேர்ந்த நாவல்காட்டுப் பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர். மகா திறமைசாலி. வெளிநாட்டில் பிறந்திருக்க

வேண்டியவர்.

வீரகேசரியின் காலகட்டங்களை இரண்டு கூறுகளாகப் பிரித்தெடுக்கலாம் என்பது எனது எண்ணம். ஒரு காலகட்டம், ஆரம்பகால வருடங்கள். மற்றையது செல்லத்துரை வீரகேசரி நிருபராக இயங்கிய இடைக்கால ஆண்டுகள். யாழ்பாணத்தைப் பொறுத்தவரை இப்படித்தான் கணிக்கலாம்.

வீரகேசரி ஆரம்ப காலகட்டத்தில் `ஞானமுத்தன் கொலை வழக்கு' என்ற பிரபலமான கொலை வழக்கின் விபரங்களை வெகு சாங்கோ பாங்கமாக விரித்தெழுதி வாசகர்களின் பேராதரவையும் பேரபிமானத்தையும் பெற்றுக் கொண்டது. வீரகேசரி தினசரி இதழ், அந்தக்காலத்தில் வெளிவந்த தினசரிகளில் பிரபலமானது.

ஞானமுத்தன் கொலை வழக்கு என்பது, அந்தக் காலத்தில் முப்பதுகளின் மிகவும் பிரபலமாகப் பேசப்பட்ட ஒரு பாலியல் வல்லுறவுக் கொலை வழக்கு. ஆண்டு நடுப் பகுதியில் யாழ்ப்பாணப் பிரமுகர் ஒருவர் வீட்டில் வேலைக்காரியாகக் கடமை புரிந்த கவர்ச்சிகரமான அழகியாகவிருந்த சிங்கள யுவதி ஒருத்தி, ஒருசிலரால் கடத்திச் செல்லப்பட்டு, பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு, இறுதியில் கொலை செய்யப்பட்டாள். அதன் பின் அவளது சடலம் வல்லை வெளிக் கடற்பரப்பில் வீசி எறியப்பட்டு பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட சம்பவம். இதுதான் அடிப்படைத் தகவல். வீரகேசரி தந்த ஆரம்பத் தகவலும் இதுதான்.

துப்புத் துலக்கப்பட்டது. விசாரணைகள் சூடு பிடித்தன. அதன் பிரகாரம் கைது செய்யப்பட்டவர் தான், அந்த ஞானமுத்தன் என்பவர். இவருடைய சலூனுக்குள், தான் இந்த மனித சங்காரம் இடம் பெற்றது. அன்று பிரபலமாகப் பேசப்பட்ட பிரமுகர்களில் சிலரே, இச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருந்தனர். இது பொதுசனக் கணிப்பு. இருந்த போதிலும் கூட, சம்பவம் இவரது கடைக்குள் நடைபெற்றுள்ளது என நிரூபிக்கப்பட்டதால், இவர் சிக்காராக மாட்டிக் கொண்டு விட்டார். அன்றைய பெரும் புள்ளிகள் இயல்பாகவே விடுபட்டு விட்டனர். எனவே இவரும் இவரையொத்த எடுபிடி இன்னொருவனும் கைது செய்யப்பட்டனர்.

அன்றைய சுப்ரீம் கோர்ட் நீதிபதி அக்பர், பெரும் நீதிமான். விசாலமான அறிவு வாய்க்கப் பெற்றவர். கனதி மிக்கவர். சான்றோன். நீதி நெறி பிறழாதவர்.

`இப்படியானவர்களுக்குத் தூக்குத் தண்டனைதான் தரவேண்டும் நேரடியாகக் கண்கண்ட சாட்சிகள் இல்லாதபடியால் சாதக சாட்சியங்களை முன்னிறுத்தி, சதா காலக் கடுங்காவல் தண்டனை!' என அக்பர் நீதவான் தனது தீர்ப்பை வழங்கினார். தீர்ப்பு, அடுத்த நாள் வீரகேசரியில் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்கப் பட்டிருந்தது.

இந்தக் கற்பழிப்புக் கொலையில் குற்றஞ் சாட்டப் பட்ட ஞானமுத்தன்

என்பவர் இருக்கிறாரே. இவர் எனது தகப்பனாரினது தாயாரின் சகோதரியின் மகன். எனது அப்பனுக்குத் தம்பி முறை. எனக்குச் சித்தப்பா. நெருங்கிய. கிட்டடிய இரத்த சொந்தம். இரத்த உறவு.

சிறைத் தண்டனை அனுபவித்த பின்னர். பல ஆண்டுகள் கழித்து இவர் விடுதலையானார். இவர் விடுதலையாகிய பின்னர் இவரைச் சந்தித்து ஓரிரவு முழுவதும் இது சம்பந்தமாகப் பேசிக் கொண்டிருந்தேன். அவரது வாய் முறைப்பாட்டை நேரடியாகக் கேட்டதும் நான் பிரமித்துப் போய் விட்டேன்.

கால வளர்ச்சியின் சுழற்சி மாறுதல்களை எண்ணியெண்ணி எனக்குள் நானே சில சமயங்களில் வியப்படைவதுண்டு. முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் சிறிய தகப்பனாரின் சலூனுக்குள் கற்பழிப்புக் கொலை நடை பெற்றது. பரவலாகப் பேசப்பட்டது. எண்ணி முப்பது ஆண்டுக்குப் பின்னர் அதே பட்டணத்தில். இன்னொரு பகுதியில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையத்தினுள் `மல்லிகை` என்ற இலக்கிய மாத இதழ் மலர்ந்து வெளி வந்தது. அதன் ஆசிரியர் கொலை வழக்கில் தண்டனை அடைந்தவருடைய பெறாமகன் முறையானவர். படித்தவர்கள் என்று பலராலும் ஒத்துக் கொள்ளப்பட்ட வடபுலத்துக் கல்விமான்கள் அச் சிற்றேட்டின் இலக்கிய சேவையை அங்கீகரித்துள்ளனர். எழுதி வந்தனர். எழுதி வருகின்றனர். நாவலர் பூமியில் இந்த அதிசயம் நடைபெற்றுள்ளன.

எனது சித்தப்பாவின் வாக்கு மூலத்திலிருந்து ஒன்று எனக்குத் தெளிவாகப் புரிந்தது. ஒன்றை விளங்கிக் கொண்டேன்.

பஞ்சமர்கள் எனப் பரவலாக அழைக்கப்படும் ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் சிலரிடம். இயல்பாகவே ஒரு தாழ்வுச் சிக்கல் அடி நெஞ்சில் குடி கொண்டுள்ளது. ஊருக்குள். இரு மரபும் துய்ய சநாதன வேளாளர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் எனச் சொல்லிக் கொள்பவர்களுடன் தாங்களாகவே வலிய ஒட்டிக் கொள்வார்கள். தங்களையும் அவர்களுடைய செயல்களில் இணைத்துப் பிணைத்துக்கொண்டு. தொண்டுழியம் பார்ப்பதில் முன்னின்று உழைப்பார்கள். மாடாய்ப் பாடுபடுவார்கள்.

இதனால் இவர்களுக்கு மிகப் பெரிய திருப்தி. அந்தப் பெரிய மனிதர்களின் நிழலில் சீவிப்பதே. தமது பிறவிப் பெரும் பயன் என்ற எண்ணம். அதுவே பெரும் பாக்கியம். தமது சொந்த பந்தங்களையே அலட்சியமாக நடத்துவார்கள். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் எஜமானனின் பெயரை வெகு பவ்வியத்துடன் செபம் செய்வார்கள். பெயரை உச்சரிப்பதுகூட. மகாபாவம் என்பது போல. மற்றவர்களின் காதுபடக் கூறவே கூச்சப்படுவார்கள். அதே சமயம் தமது எஜமான்களின் வீர பராக்கிரம செயல்களையும். கொடை வள்ளல் சிறப்புகளையும் சந்தி முனைகளில் நின்று பிரசாரம் செய்வதிலும் தனித் தலைமை தாங்குவார்கள். உயர்த்திப் பிடிப்பார்கள். தேர்தல் வந்தால் `ஜே` போடுவார்கள்.

மொத்தமாகச் சொன்னால் தினசரி, வேலைத் திட்டமே அவர்களினது ஏவல் நாய்களாகச் செயற்படுவதுதான். இவர்களது பொழுதுபோக்கு என்பதே, தினம் தினம் அவர்களுடன் இணைந்திருப்பதுதான். அவர்களுக்குத் தொண்டுழியம் செய்வதுதான். அவர்களது நிழல் போலத் தொடர்வதுதான்.

இந்தச் சாதீயக் கட்டுக்கோப்புக்குள் அடங்காதவர்கள் பலரை, நாம் இன்றும் காணலாம். அன்றும் இருந்தனர். அவர்களே வரலாற்றில் இன்றும் பேசப்படுகின்றனர். விதந்து கூறப்படுகின்றனர். அது வேறு விஷயம். அவர்களை எண்ணி நான் தலை வணங்குகின்றேன். மனசுக்குள் பெருமைப்படுகின்றேன்.

ஆனால், எஜமான் என இவர்களால் கொண்டாடப்படுகின்றவர்களோ மிக மிகப் புத்திசாலிகள். தந்திரசாலிகள். காலாதி காலமாக - தலைமுறை தலைமுறையாக இவர்களது பரம்பரையையே மேய்த்துப் பழகியவர்களின் பின்சந்ததியினர் இவர்கள் இவர்களை அறியாமலே தலையில் மிளகாய் அரைத்து விடுவார்கள். இது இவர்களுக்கு விளங்காது. சொன்னாலும் புரியாது. புரிந்தாலும் உறைக்காது.

இவர்களால் லாபம் கிடைக்கும்வரை உச்சி குளிரப் பேசி வைப்பார்கள். அப்பன் வைத்த பெயர் கந்தசாமி. ஆனால் முழுப் பெயர் சொல்லமாட்டார்கள். ``கந்தனை ஆரெண்டு நினைக்கிறியள்? என்ர உசிரே இவன்தான். என்ர சகோதரத்திலை ஒருத்தன் தான், இவன். நுனி நாக்கால் பேசி, உச்சி குளிர வைத்து விடுவார்கள். கந்தனுக்கு வேறென்ன வேண்டும்?'' பெருமகனார்தான். தன்னைத் தன்ர சகோதரமெண்டிட்டாரே!..... சொல்லி விட்டாரே! அதுவே போதும். சாகும் வரைக்கும் போதும்!

தமக்கோ அல்லது தமது குலம் கோத்திரத்துக்கோ இவர்களால் சங்கடம் அல்லது சிக்கல்கள் ஏற்பட்டுவிட்டால் அப்பொழுது பார்க்க வேண்டுமே இவர்களை. சகோதர பாசமெல்லாம் வெருண்டோடிவிடும். உடனடியாக இப்படித்தான் அவர்களது வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவரும். ``எழிய சாதியள்! பலபட்டறைச் சாதி. நாய்கள்! தங்கட எழிய சாதிப்புத்தியைக் கடைசிலே காட்டிப் போட்டுதுகள்! எழிய சாதியள் எண்டதே இதுக்குத்தானே?''

எனது மறியலுக்குப் போன சித்தப்பாவின் சுயவாக்கு மூலத்திலிருந்தும், பிற்காலத்தில் எனது சொந்த அநுபவங்களிலிருந்தும் நான் கற்றுக் கொண்ட பாடமிது. ஞானோபதேசப் பாடத்தின் சுருக்கமே இவைகள்தான். இந்த அநுபவங்களை எழுதப்படாத வாய் வார்த்தைகளில் இருந்து நான் கற்றுத் தெளிந்தேன்.

என்ன இடையிலே 'மறியலுக்குப்போன' என்ற அடைமொழி என்றால், சப்த தீவுகள் அனைத்திலிருந்தும் உரும்பிராய், கோப்பாய், இளவாலை போன்ற கிராமப் பிரதேசங்களிலிருந்தும் வந்து, யாழப்பாண நகரத்தில்

காணி பூமி வாங்கி, சொந்த வீடு கட்டி வாழ்ந்து வந்தவர்கள் தான் எனது முன்னோர்கள். தீவுப் பகுதிகளிலும் நாட்டுப் பிரதேசத்திலும் கொண்டு - கொடுத்து உறவாடி வந்தவர்கள், வெறும் அப்பாவிகள். கொழுவலுக்குப் பின் நிற்பவர்கள். இவர்களில் அனேகருக்குப் பொலிஸ் ஸ்டேசன் எந்தத் திசையில் இருக்கிறது என்பதே வாழ்நாளில் தெரியாது. தொழில் செய்வது, பிள்ளைகள் பெறுவது, சாப்பிடுவது, தலை தெறிக்கக் குடித்துக் கூத்தாடுவது, கடைசியில் செத்துப் போவது, அவ்வளவுதான் தெரிந்தவர்கள். இதுதான் இவர்களது மொத்த வாழ்க்கையின் உள்ளடக்கம்.

இத்தகைய படு அமைதிச் சமூகத்தில் மறியலுக்குப் போவது என்பது நினைத்துப் பார்க்கவே முடியாத நிகழ்ச்சி, அது. கற்பனை செய்யமுடியாத சங்கதி. எனவேதான் 'மறியலுக்குப் போன', என்ற அடைமொழி எங்களது சுற்று வட்டாரத்தில் கனகாலம் நிலவி வந்தது. அப்படி ஒரு அபூர்வ நிகழ்ச்சி அது. சிறைக்குப் போவது என்பது கற்பனைக்கெட்டாத சங்கதி.

அந்த மறியலுக்குப் போன ஞானமுத்துச் சித்தப்பரின் மனம் திறந்து சொன்ன பாவ சங்கீர்த்தனம் என் அடி நெஞ்சைத் தொட்டு உலுப்பிவிட்டது. பாவசங்கீர்த்தனம் என்பது பாவமன்னிப்பு பெறுதல். கிறிஸ்தவ முறைப்படி ஒரு குருவானவரிடம்தான் கேட்க வேண்டும். நான் கேட்காமலேயே சித்தப்பர் தனது குற்றங் குறைகளை என்னிடம் ஒளிக்காமல் மறைக்காமல், சகலவற்றையும் சொல்லி வைத்தார். அழுதார். மனம் வருந்தி அழுதார். தான் அணாப்பப்பட்ட சங்கதிகளை எல்லாம் சொல்லிப் புலம்பினார்.

அவரது சுயவாக்குமூலத்தைச் செவிமடுத்த எனக்கு, இந்த ஞானோதயம்தான் அடி மனசில் முளைவிட்டது. எப்படியெல்லாம் ஏழைகள் அணாப்பப் படுகிறார்கள்? ஏமாற்றப் படுகிறார்கள்?

'எந்தக்காலத்திலும், எந்தக் கட்டத்திலும் இந்த மாதிரியான தாழ்வுச் சிக்கலில் மாட்டுப்பட்டுச் சிக்கி என்னை - எனது தனித்துவத்தை - விட்டுக் கொடுத்துக் கீழிறங்கிவிட மாட்டேன்!' எனத் தூய மனத் தெளிவுடன் சங்கல்பம் செய்து கொண்டேன். மன உறுதி பூண்டேன்.

நிருபர் செல்லத்துரை செய்தி சேகரிப்பதில் அசகாய சூரர். வீரகேசரிப் பத்திரிகையைத் தனது செய்தித் திறத்தால் மக்கள் மத்தியில் பரவலாகக் கொண்டு சென்ற பத்திரிகையாளர். தமிழரசுக் கட்சியை மக்கள் மத்தியில் வளர்த்தெடுத்ததில் பெரும் பங்கு வகித்தவர். அந்தக் கட்சியின் பல தலைவர்களின் பேரபிமானத்தைப் பெற்றுக் கொண்டவர். அவர்களது செய்தியை முக்கியப்படுத்தியவர். தனது செய்திப் பலத்தால் ஒரு கட்சியையே மக்கள் மத்தியில் வேரூன்றச் செய்தவர்.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் வடபுலத்து எழுத்தாளர்களின் மேடைக் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் தந்து பிரசுரிக்க வைத்த பெருமை அவரையே சாரும். அத்தனை அன்பு எழுத்தாளர்களிடம், அத்தகைய

மதிப்பு அவர்களிடம்.

நான் அடிக்கடி சொல்லும் கருத்தொன்று உண்டு. ``ஈழத்து எழுத்தாளர்கள் தமிழக எழுத்தாளர்களைவிட ஒரு வகையில் சிறப்புத் தன்மை வாய்ந்தவர்கள். நம்மில் அநேகர் சிறந்த மேடைப் பேச்சாளர்களாகவும் விளங்கி வருகின்றோம். இது நமது தனித்துவத்தின் ஒரு வெளிப்பாடு!'' என நான் கருத்துக் கூறி வந்துள்ளேன். அத்துடன் செய்திப் பிரபல்யத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

என்னை, நண்பர் டானியலை மக்கள் மத்தியில் பெரும்பாலும் ஆரம்பகாலங்களில் அறிமுகப் படுத்தி வைத்தது, எமது எழுத்துத் திறமைகளல்ல. எமது மேடைப் பேச்சின் வலிமைகளே. இந்த மேடைப் பேச்சுக்களை வரிக்கு வரி சேகரித்து, செய்திகளாக உருவாக்கிப் பத்திரிகையில் பிரசுரித்து, எம்மையெல்லாம் வளர்த்தெடுத்த பெருமை நண்பர் செல்லத்துரைக்கே சேர வேண்டும். இவரும் ஆரம்ப காலத்திலிருந்தே என்னைப் போல, திராவிடக் கழக அநுதாபிதான்.

அந்த நன்றியுணர்வை இன்றளவும் நான் என் அடி நெஞ்சில் வைத்திருந்தே வருகின்றேன். `செய்தி வேட்டை' என்றொரு சிறுகதையைப் படைத்திருந்தேன். அதில் நிருபர் நித்தியலிங்கம் என்பவர் நடமாடித் திரிபவர் அந்த நித்தியலிங்கம், நமது செல்லத்துரை அவர்களே. இந்தக் கதையை எழுதிவிட்டு, அக்கதையை அவரிடம் படித்துக் காட்டிவிட்டே பிரசுரத்திற்கு அனுப்பி வைத்தேன்.

நான் தொகுத்த `டொமினிக் ஜீவா- சிறுகதைகள்' என்ற ஐம்பது சிறுகதைகளில் `செய்தி வேட்டை' என்ற சிறு கதையும் இடம் பெற்றுள்ளது என்பது என் மனசுக்கு நிறைவைத் தருகின்றது. மகிழ்ச்சியையும் தருகிறது.

நிருபர் செல்லத்துரையின் செய்திக் கைங்கரியத்தினால் வட பிரதேசத்தில் பல கூட்டங்களில் மேடைப் பேச்சுகளுக்கு என்னை அழைக்கத் தொடங்கினர். நானும் இளவயசுத் துணிச்சல் காரணமாக, சைக்கிளில் சென்று அக்கூட்டங்களிலெல்லாம் கலந்துவிட்டு நட்ட நடுச் சாமங்களில், சொறி நாய்கள் வீதியெங்கும் குரைத்துக் குரலெழுப்ப, வீடு வந்து சேருவேன். வேலிக் கிளுவை மரத்தில் படுத்திருக்கும் சேவல் சாமத்தில் இடையிடையே கூவி நேரத்தை நினைப்பூட்டும்.

அந்த வேளையிலும் இரவுச் சாப்பாடு வைத்துக் கொண்டு, கூனிக் குறுகிக் குளிரில் குறண்டிப் போய் எனது தாயார் கைலாம்பு சகிதம் எனக்காக காத்திருப்பார். இதைக் கண்டதும் எனது உடல் சிரமங்கள் அத்தனையும் பறந்தோடிப் போய்விடும். நெஞ்சு பதறும்.

எனது பகிரங்க முற்றவெளி மேடைப் பேச்சு சமசமாஜக் கட்சி மேடையில் இடம் பெற்ற போதிலும்கூட, என்னை ஆரம்பகாலம் தொட்டே உருவாக்க முனைந்த நண்பர் இராஜகோபாலன் அக்கட்சியின் நெருங்கிய ஆதரவாளராக

இருந்த போதிலும்கூட, நான் உள்ளுக்குள்ளாலே தி. மு. க. ஆதரவாளனாகவே விளங்கி வந்தேன். அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி என்றால் அவர்களது அறிவாற்றல் மீது அபாரமான நம்பிக்கை கொண்டிருந்தேன். எனவே, அவர்களது எழுத்தும், பேச்சுமே எனக்கு ஆதர்ஸமாகத் திகழ்ந்தன. அவர்களது கருத்துக்களையே எதிரொலித்தேன். புரட்சிகரமான கருத்துக்களாக எனக்கு அவர்களது கருத்துக்கள் தோற்றமளித்தன.

யாழ்ப்பாணம் காங்கேசந்துறை வீதியில் நாடார் ஒருவருடைய புடவைக் கடை ஒன்றிருந்தது. அக்கடை முதலாளிக்கு பெரியாருடைய ''விடுதலை'' என்ற நாளிதழ் தபாலில் வந்து சேரும். அதைப் படிப்பதற்கென்றே அந்தக் கடைக்குச் சென்று வரத் தொடங்கினேன். பெரியார் - மணியம்மை திருமணம் தொடர்பாக தி. க. பிளந்து தி. மு. க. தோன்றியது. விடுதலை தினசரிச் செய்தி மாத்திரம் என் தேடல் முயற்சிக்குப் போதுமானதாக இருக்கவில்லை. அண்ணா, கலைஞர், நெடுஞ்செழியன், மதியழகன், சிற்றரசு, ஆசைத்தம்பி போன்றவர்களின் புத்தகங்களைச் சேகரிக்கத் தொடங்கினேன். மலேசிய நாட்டில் சிரம்பான் என்ற ஊரில் எனது உறவினர் வாழ்ந்து வந்தார். அவர் பெயர் பாக்கியநாதன். வாலிப வயசு வரை சலூன் தொழில் செய்துவிட்டுக் கர்நாடக சங்கீதத்தில் கொண்ட இடையறாத பக்தியினால், இசை பயிலச் சிதம்பரம் அண்ணாமலைக்கு வந்தவர்.வயலின் இசை படித்துச் சங்கீத பூஷணம் பட்டம் பெற்றவர். பிற்காலத்தில் மேடைதோறும் கச்சேரிகளுக்குப் பக்க வாத்தியம் வாசித்தவர். தனியாக ஸோலோ கச்சேரிகளும் செய்து பிரபலம் பெற்றவர்.

இவருடைய ஒப்புதலின் பேரில் சிறய காலம் மிருதங்கம் வாசிக்கக் கற்றுத் தேறினேன். தொடர்ந்து இசை உலகில் நின்று பிடிக்க முடியவில்லை.

இவர் விடுமுறைக்குத் தாய் வீட்டுக்கு யாழ்ப்பாணம் வந்து போவார். அவரைச் சிநேகிதம் பிடித்தேன். அண்ணாவின் `திராவிட நாடு' வாரச் சஞ்சிகைக்குச் சந்தா கட்டச் செய்தேன். அவர் சிதம்பரத்திலிருந்து ஊர் வந்து போகும். சமயங்களில் அண்ணா, கலைஞர் தவிரச் சிற்றரசு, தில்லை வில்லாளன், ஆசைத்தம்பி, நெடுஞ்செழியன், டி. கே. சீனிவாசன் போன்றோரது புதிய புதிய நூல்களை எனக்காக வாங்கித் தந்து உதவினார். அப்புத்தகங்களைச் சுவைத்துச் சுவைத்துப் படிப்பதில் அயராது உற்சாகம் காட்டி வந்தேன். அதில் அண்ணாவின் `தீ பரவட்டும்' முக்கியமான நூல். `கம்பரசம்' அடுத்தது.

எனது இளவட்டாரக் கூட்டம் பெருகியது. நட்பு வட்டம் விசாலித்தது. புத்தகப் பரிமாற்றம் தொடர்ந்தது. இளம் வயசுக் குழப்பத்திற்கேற்ப வாய்க்கு வந்தபடி எல்லாம் கதைக்கப் பழகிக் கொண்டோம். பகிரங்கமாகத் தெருச் சந்திகளில், பஸ் நிலைய முன்றிலில் நின்றெல்லாம் விவாதித்துக் கத்திப் பேசிக் கற்றுத் தேறினோம். கத்திப் பேசுவதுதான் அறிவின் முதிர்ச்சி என

நம்பினோம். அதன்படி செயல்பட்டோம். அதுதான் எங்களுக்கு வாலாயமாக அமைந்திருந்தது.

அண்ணா, கலைஞர் போலப் பேசுவது, எழுதுவதுதான் நவீன தமிழ் வளர்ச்சி, புதிய தமிழ்ச் சிந்தனை எனக் கற்பிதம் செய்த வண்ணம், அவர்கள் நடையில் பேச, எழுத முற்பட்டு உழைத்தோம். அதையே பின்பற்றினோம்.

உண்மையை இன்றைய தினம் மனம் திறந்து ஒப்புக் கொள்வதாயிருந்தால், அறிஞர் அண்ணாதான் இப் பூவுலகில் ஒப்பற்ற தன்னிகரில்லாத அறிஞர் என மெய்யாகவே நம்பிக் கற்பிதம் செய்து மனசில் பதிய வைத்து இயங்கிவரத் தொடங்கினேன். சதா அண்ணா பற்றியே சிந்தனை.

இந்தத் தாக்கத்தினால் போலும், கல்கி அவர்கள் இரண்டாவது தடவையாக யாழ்ப்பாணம் வந்திருந்தபோது, அன்னாருக்கு மக்கள் சார்பாக யாழ்ப்பாண நகர மண்டபத்தில் ஒரு பகிரங்க வரவேற்புக் கொடுக்கப்பட்டது. இக்கூட்டத்திற்கு முன் ஆசனங்களில் இடம் பிடித்துக் கொண்டோம். காரணம், இலக்கிய ரஸனையல்ல. கல்கி அவர்களின் நகைச் சுவையான மேடைப் பேச்சை சுவைப்பதும் அல்ல. அன்றைய குதர்க்கப் புத்தி, குதர்க்கம் செய்யும் மூளை. திராவிட மாயை. மாயமான் துரத்துதல்.

கூட்டம் ஆரம்பித்தது. பேசாமல் இருந்தோம். வரவேற்புரை நிகழ்ந்தது. பேசாமல் இருந்தோம். கல்கி ஆசிரியர் பேச எழுந்தார். ஒவ்வொருவராகப் பேச எழுந்து நின்றோம். அவர் பேச ஆரம்பித்ததுமே கேள்விகள் சீறிக் கொண்டு வந்தன. நானும் முன்வரிசையில் எழுந்து நின்று ''பேரறிஞர் அண்ணா பற்றி உங்கள் கருத்தென்ன?" எனக் கேள்விக் கணை தொடுத்தேன். ஒரே உற்சாகம் எனக்கு.

கல்கி அவர்கள் தனது வாழ்க்கையில் எங்களைப் போல எத்தனையோ பேரை நேர்முனையில் சந்தித்திருப்பார் தானே? அவர் வெகு இயல்பாகப் பதில் சொன்னார் ''அவர் தமிழில் அழகாகத் திட்டினால்கூட, அண்ணா அவர்களுடைய தமிழ் எத்துணை அற்புதமாகத் திகழ்கின்றது! அவரது அழகு தமிழுக்காக நான் அவரைப் போற்றுகின்றேன். வாழ்த்துகின்றேன்.!" என்றார், கல்கி. கூட்டம் கையொலி எழுப்பி ஆமோதித்தது. எமக்கோ சொல்லொண்ணாத மகிழ்ச்சி!

உணர்ச்சி வெறி தானே எமது அன்றைய நிலை. எனவே எமக்கெல்லாம் உச்சி குளிர்ந்துவிட்டது. கல்கி அவர்களது பேச்சைக் கடைசிவரை இருந்து கேட்டு வைத்தோம். இருந்தாலும் அண்ணாவைப் போல இல்லை இவரது பேச்சு.

இந்தக் காலகட்டப் பின்னணியில் தான் எனக்கு நண்பர் டானியலின் அறிமுகம் ஏற்பட்டது. எஸ். பொ. என்கிற பொன்னுத்துரையை ஏற்கெனவே

நண்பர் ராஜகோபாலன் அறிமுகப்படுத்தி வைத்துவிட்டார். எஸ். பொ. வின் வீடு எனது தொழிலகத்திற்கு வெகு சமீபமாகவே இருந்தது. எனவே அடிக்கடி சந்திக்கக்கூடிய வாய்ப்பு இருந்தது. டானியலின் சொந்தப் பிறந்த இடம், யாழ் நகரை அடுத்துள்ள கிராமமான ஆனைக்கோட்டை. அவர் வீடு மாறி வந்து கோவில் வீதியிலுள்ள இல்லத்தில் வசித்து வருவதாகக் கேள்விப்பட்டிருந்தேன். இருவரும் நேருக்கு நேர் சந்திக்கவில்லை. சந்திக்க வேண்டுமென விரும்பினேன். அவர் என்னைச் சந்திக்க விரும்பித் தேடிக்கொண்டிருந்தார். நானும் அவரைக் கண்டு கலந்தக்க ஆவலாக இருந்தேன். இத்தனைக்கும் நாங்களிருவரும் நகரின் மையப்பகுதியில் தான் கடை வைத்திருந்தோம். நான் வண்ணான் குளத்திற்கருகே சவரக்கடை என அழைக்கப்படும் ஜோசப் சலூனில் தொழில் பார்த்து வந்தேன். அவர் தாராக்குளம் என அழைக்கப்படும் ஆஸ்பத்திரிக்கு அருகே உள்ள பிரதேசத்தில், சலவைத் தொழிற்சாலை ஒன்றை நடத்தி வந்தார்.

'நல்லூரடியில் கோவில் வீதியிலுள்ள டானியல் வீட்டில் இன்றிரவு ஏழு மணிக்கு ஒரு கூட்டம். தோழர் வைத்திலிங்கமும் இக்கூட்டத்தில் நிச்சயம் கலந்து கொள்ளகின்றார். என்றொரு கையால் எழுதப்பட்ட அழைப்பொன்று எனக்குக் கிடைத்தது. நண்பர் டானியல் தான் அந்த அழைப்பை அனுப்பியிருந்தார். அவசியம் கூட்டத்தில் கலந்து கொள்ளும் வண்ணமும் அவ்வழைப்பில் கேட்டிருந்தார். நான் கோவில் வீதியிலுள்ள டானியலின் வீட்டிற்குச் சென்றிருந்தேன். டானியல் அவர்களையும் வைத்தி அவர்களையும் ஒருங்கு சேர முதல் முதலில் அங்கு தான் சந்தித்தேன். வைத்தி அரசியல் வகுப்பு நடத்தினார். இதுவரை காலமும் திராவிட மாயையில் சிக்கித் தலை கழன்றிருந்த எனக்குப் புதிய பார்வை கிடைத்தது. புதிய கதவு திறந்தது போல இருந்தது. புதிய வெளிச்சம் தெரிந்தது.

யாழ்ப்பாணம் பெற்றெடுத்த மிகப்பெரும் சிந்தனையாளர்களில் வைத்தியும் ஒருவர். வட்டுக் கோட்டைப் பிரதேசத்தில் சுண்டியெடுக்கப்பட்ட சைவ வேளாளர் பரம்பரையைச் சேர்ந்தவர். முன்னோர் பெரும் பெரும் நிலக் கிழார்கள். உயர் கல்விக்காக இங்கிலாந்து அனுப்பப்பட்டவர். அங்கு உலகப் பெரும் இடது சாரிகளின் தொடர்பால் உந்தப் பெற்று, ஐரோப்பாவிலேயே கம்யூனிஸ்ட் கட்சியில் தன்னை இணைத்துப் பிணைத்துக் கொண்டவர். அங்கு இந்திரா காந்தியுடன் அரசியல் உறவு கொண்டு இயங்கியவர். பெரும் சிந்தனையாளர். அன்பாளர். கொள்கைப் பிடிப்பு மிக்கவர்.

இங்கு எனது இயல்புக்கு விரோதமாகச் சுண்டியெடுக்கப்பட்ட வேளாளர் என ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், ஆரம்பகாலங்களில் - ஏன் இன்றுங்கூட, சாதி வெறியர்கள், வர்க்க விரோதிகள் சமசமாஜக் கட்சியை அல்லது கம்யூனிஸ்ட் கட்சியைக் குறிப்பிட்டுப் பேசும்போது 'ஓ அதுவா! அது எழிய சாதியளின்ர கட்சியல்லவோ!, அது நளவன், பள்ளன்களின்ர கட்சி!' என

ஏளனம் செய்வார்கள். சாதி சொல்லி இகழ்வதுதான் இவர்களது உயர் பண்பு.

இது யாழ்ப்பாண உயர்குடிப் பரம்பரையினரின் அரசியல் தந்திரம். சாதி சொல்லித் தாக்குவது, சாதி சொல்லித் தனிமைப்படுத்தவது, சாதி சொல்லி அரசியல் ஆதாயம் பெறுவது, சாதி சொல்லிப் பிளவு படுத்துவது. வெற்றி பெறுவது. சாதி சொல்லி..... சாதி சொல்லி.....

யாழ்தேவி ரெயில் யாழ்ப்பாணம் நோக்கி ஓடிய காலம் என் நினைவுக்கு வருகின்றது. இருக்கையில் பலர் இருப்பார்கள். பலர் இளைஞர்கள். ஒருவர் சுருட்டைப் பற்ற வைத்துக் கொண்டு, பக்கத்திலுள்ள பயணியிடம் பேச்சைத் தொடங்குவார். ஆராய்வதுதான் அவர் வேலை. பிறவிக்குணம் சட்டென்று விடுமா? அது கட்டையில் தானே வேகும்.

``அப்ப தம்பி நல்ல உத்தியோகத்தில கொழும்பில் இருக்கிறியள். சம்பளம் கனக்க இருக்கும்தானே? தம்பி எந்த ஊர்?``

``யாழ்ப்பாணம்`` தம்பி தெரியாத் தனமாக வாய் கொடுப்பார். சகபிரயாணி பற்றிப் பிடித்துக் கொள்வார். ``யாழ்ப்பாணமெண்டால் எந்தப் பக்கம்?``

``நல்லூரடி``

``அப்ப தம்பி..... நல்லூரடி எண்டால், எந்தக் குறிச்சி``

இளைஞருக்கு மனக் கிலேசம் பிடித்துக் கொள்ளும். உண்மையைச் சொல்ல மனக் கூச்சம். சுருட்டுப் புகையோ விடுவதாயில்லை. தொடர்ந்து கேள்வி கேட்டு, அறிய முனைப்புக் காட்டும் ``சொல்லுமன் தம்பி, நல்லூரில கோவிலுக்கு அந்தப் பக்கமா? அல்லாட்டி இந்தப்பக்கமா?`` பக்கம் தெரிந்து கொள்வதில் உள்சூத்திரம் இருக்கிறது. சுருட்டுக்கு ஊர் உலகம் தண்ணீர் பட்ட பாடு. `` சொல்லுமன் தம்பி, எந்தப் பக்கம்?`` கேள்வி கொக்கி போடும். வலிந்து பேச வைக்கும். வாயைக் கிண்டிக் கிளறும்.

பதில் சொல்லும் இளைஞன் தப்புவதற்கான வழி அடைக்கப்பட்டு விடும். வழி யடைத்தது கேள்வியாலல்ல. அவனது சாதித் தாழ்வுச் சிக்கலால். பதில் சொல்லாமல் தப்ப இயலாத படி விலங்குப்பூட்டு. ``நரியன் குண்டடி!`` வார்த்தைகளை மிரட்சியுடன் துப்பித் தொலைப்பான். மிரட்சியே அவனது சாதியைக் காட்டிக் கொடுத்துவிடும்.

``ஓ அப்ப நீ, அந்தப் பகுதியே?`` இதுவரை தம்பி, நீர் என மரியாதையுடன் கதைத்த அந்தச் சுருட்டுப் புகைக் கூண்டு, வெகு அலட்சியமாக `நீ ` என விழிக்கும். இதுவரைக்கும் மரியாதை கொடுத்துக் கதைத்ததற்காக மனசுக்குள் புறுபுறுக்கும். பிரயாண நட்பைத் தொடர்வதற்குக் கூடச் சாதி தேவைப் படுகின்றது. இது அந்த மண்ணின் பரம்பரைப் புத்தி - சாதிக் கொழுப்புத் தனத்தின் வடிகால்!

கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலக நானும் பிரயாணம் செய்திருக்கிறேன். இப்படியான அநுபவங்களும் எனக்கு ஏற்பட்டுள்ளன. இது மெயில் ரயிலில் சகஜம். இது நம்மவனின் இரத்தத்துடன் ஊறிப்போன வியாதிகளில் ஒன்று.

பக்கத்தே உள்ளவர் கேள்விக் கொக்கி போட ஆயத்தம் செய்வார். குலம், கோத்திரத்தை அறிந்து கொள்வதுதால் இதற்குரிய முதல் வேலை. சாதி தெரிய வேண்டும். அதுதானே யாழ்ப்பாணத்தானுக்கு முக்கியமான வேலை.

''தம்பி எங்கை இருக்கிறது?''

''இஞ்சை பாருங்கோ. எனக்கு எல்லாம் விளங்கும். நீங்கள் என்னத்தைக் கேட்கப் போகிறிங்கள் எண்டதும் எனக்குத் தெரியும். கடைசியில் தெரிஞ்சு கொள்ள நீங்கள் நினைக்கிறதும் எனக்கு நல்லாவே விளங்கும்!'' - இது நான்.

''தம்பி..... தம்பி. ஏன் இத்தனை அவசரப்படுறியள்? ஏன் கோவிக்கிறியள்?''

''நான் அவசரப்படேல்லை. முழுக்கவே சொல்லி விடுகிறன். என்ர பெயர் ஜீவா. டொமினிக் ஜீவா எண்டும் சொல்லுவினம். யாழ்ப்பாணத்தில் கஸ்தூரியார் வீதியிலே கடை. என்ன கடை தெரியுமோ? சவரக்கடை. ஜோசப் சலூன். யாழ்ப்பாணம் ஸ்டேசன் அருகே சொந்த வீடு. சுமாரான வருமானம். குழந்தை குட்டியள் இருக்கு. போதுமா? இன்னும் சொல்ல வேணுமா?''

பக்கத்துப் பிரயாணி வாயடைத்துப் போய்விடுவார். பயணம் முடியும்வரை இந்தப் பக்கமே திரும்பிக் கூடப் பார்க்கமாட்டார். இருந்து வந்த ஆசனத்தைக் கூட மாற்றி விடுவார்.

இந்த மண்ணின் பரம்பரைப் புத்தி இங்கு மட்டுமல்ல, கடல் கடந்து, தேசம் கடந்து போய் வேரோடியுள்ள புலம் பெயர்ந்தவர்களிடையே கூடத் தனது நச்சு வேர்களைப் பரப்பி வருகின்றது என்பதுதான் இன்றைய சர்வ தேசச் சோகம்! சர்வதேசக் கொடுமை! சர்வதேச அக்கிரமம்! அயோக்கியத்தனம்!

கீழ் பிளாட்டில் இருப்பவர்கள் ஊரில் என்ன சாதி என, மேல் பிளாட்டில் வசிப்பவர்கள், தூண்டித் தூண்டி விசாரிப்பார்களாம். பக்கத்து வீட்டில் வசிப்பவர்களுக்குத் தங்கள் ஒரிஜினல் சாதி தெரிந்துவிடக்கூடாது என நினைத்துப் பயந்து பயந்து ஒடுங்குவார்கள், இந்தப் பக்கத்து வீட்டார். ''அவர்களோ? அவர்கள் அந்தப் பகுதி நாங்கள் போக்கு வரத்தெல்லாம் அவையளிட்டை வைச்சுக் கொள்ளுகிறதில்லை!'' எனப் பெருமைப்பட்டு ஜம்பமாகத் தமது உயர் குலத்துத் தூய்மையைப் பிரகடனப் படுத்துவார்களாம், இன்னொரு சாரார். ''ஊரிலை என்டால் அவையளின்ரை

வீட்டுக்கெல்லாம் போய் நாம செம்பு தண்ணி தூக்கிறதில்லை!"..... இது வேறோர் குழு. புலம் பெயர்ந்து அதனால் தங்களது இருப்பை இலக்கியத்தின் மூலம் வெளிப்படுத்த நினைக்கும் எழுத்தாளர்களையும் இந்த உயர்குல வருணாச்சிரமத் தர்மப் பிரச்சனை விட்டு வைக்கவில்லை பிரம்ம குலத்தைச் சேர்ந்த ஒருவர் லண்டனுக்குப் போயும் அகதி அந்தஸ்தில் தன்னை ஒருவராகப் பதிந்து கொண்டிருந்த போதிலும் கூட, `அய்யர்' என்ற வாலை ஒட்டிய வண்ணமே பவனி வந்துகொண்டிருக்கிறார், என ஓர் இலக்கிய நண்பர் சமீபத்தில் எனக்குச் சொல்லி வருத்தப்பட்டார். புலம் பெயர்ந்து அகதி நிலை ஏற்பட்ட நிலையிலும் கூட, பிரம்ம, ஷத்திரிய, வைசிய, சூத்ர, பஞ்சம என்ற வருணாசிரமப் படி நிலை, ஐரோப்பாவில் இன்று கைக்கொள்ளப்படுகின்றது, நம்மவர்களால். எத்தனை பெரிய கொடுமை இது. இன்னும் சில காலம் போனால் ஐரோப்பியனுக்கே அவர்களுக்குள்ளேயே இந்தச் சாதிப் பிளவுகளை உருவாக்கி விடுவான், இவன். அவர்களது மண்ணையே நச்சுப் படுத்தி விடுவான், நம்மவன்.

இந்தப் பின்புலத்தில் தான் அன்றைய யாழ்ப்பாணத்துச் சமூகப் படிநிலைகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தோழர்கள் பொன். கந்தையாவும் 'ஜெயம்' என அழைக்கப்பட்ட தர்மகுலசிங்கமும் வடமராட்சியைச் சேர்ந்தவர்கள். சொல்லப்பட்ட சாதிமான்கள். நீர்வேலியைச் சேர்ந்த எஸ். கே. கந்தையா, நீர்வேலி கார்த்திகேசனும் வைத்திலிங்கமும் வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். சுண்டியெடுக்கப்பட்ட குலம் கோத்திரத்தை உடையவர்கள். நயினாதீவைச் சேர்ந்த பூபாலசிங்கமும் பரம்பரைப் பெருமை கொண்டிருந்தவர். நல்லூரைச் சேர்ந்த இராமசாமி அய்யர். நல்லூரில் கோயில் வைத்துத் தினசரி நைவேத்தியம் செய்து வந்த அந்தணர். இவர்கள் அனைவரும் ஒடுக்கப்பட்ட உழைப்பாளி மக்களின் விடுதலைக்காகத் தமது சகல பெருமைகளையும், எல்லாவிதமான கீர்த்திகளையும் ஓர் இலட்சியத்தின்பால் ஆகுதியாக்கியவர்கள். அர்ப்பணித்தவர்கள். தியாகம் செய்தவர்கள். அடுத்த நூற்றாண்டிலும் பேசப்படக் கூடியவர்கள். இந்த மண்ணுள்ளவரை இவர்கள் நாமம் வாழும்.

இவர்களது அளப்பரிய தியாகத்தால் இந்த மண்ணே பூரித்தது. நாவலர் பெற்றுத்தர விரும்பாத சமூக விடுதலையை இவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் பெற்றுத்தர விளைந்தனர். இதில் ஓரளவு வெற்றியும் பெற்றனர். இதற்கான இலக்கியச் சாட்சிகள் தான் நானும் டானியலும். இதை யாருமே மறுக்க இயலாது. நாளைய நூற்றாண்டு இதைப் பதிவு செய்யப் போவது உறுதி.



15

கைலாசபதி, சிவத்தம்பி என்ற இருவரையும் விமரிசனம் சம்பந்தப் பட்ட ஆய்வுக் கட்டுரைகளில் அல்லது விமரிசனக் கூட்டங்களில் விமரிசன இரட்டையர்கள் எனக் குறிப்பிட்டு எழுதுவார்கள். அல்லது பேசுவார்கள், அல்லது அழைப்பார்கள்.

இதைப்போலவே எழுத்துப் படைப்புத்துறை சம்பந்தப்பட்ட ஆய்வரங்குகளில் அல்லது இலக்கியக் கூட்டங்களில் ஜீவா - டானியல் என்ற இலக்கிய இரட்டையர்கள் என எங்களிருவரையும் சேர்த்துப் பிரஸ்தாபிப்பார்கள், பல விமரிசகர்கள் எழுதியும் வருகின்றனர். இது பல தடவைகளில் நடந்ததுண்டு.

இப்படியாகப் பல்வேறு கால கட்டங்களில் இலக்கிய இரட்டையர்கள் என நாம் இருவரும் ஏன் பிரஸ்தாபிக்கப்பட்டு வருகின்றோம்? என நான் கனகாலமாகவே எனக்குள் சிந்தித்து வந்திருக்கின்றேன். இதைப்பற்றி ஆழமாக யோசித்துப் பார்த்திருக்கின்றேன். சிலரிடம் கேட்டும் இருக்கின்றேன்.

அதிலும் இந்த மண்ணில் ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட பாமரச் சாதியினர் பற்றிய இலக்கிய விவகாரங்கள் இடம்பெறும் கூட்டங்களிளெல்லாம் தவிர்க்க முடியாமல் ஏதோ ஒரு காரணத்தினால் என்னுடைய பெயரும் டானியல் அவர்களுடைய நாமமும் நிச்சயம் இடம்பெற்று விடும். இது இயல்பாகவே நடந்து வரும் சம்பவங்களில் ஒன்று.

'ஏன் எங்களை இலக்கிய இரட்டையர்கள் என அழைக்கிறார்கள்? விவகார இலக்கியப் பிரச்சனைகளில் ஏன் எங்கள் இருவரது பெயர்களையும் இணைத்துக் குறிப்பிடுகின்றனர்?' எனப் பலதடவைகள் நான் சிந்தித்துப் பார்த்ததுண்டு.

``ஒடுக்கப்பட்ட, வாழ்வு சிதைக்கப்பட்ட, மனித உரிமைகள் சாதாரணமாக மறுக்கப்பட்ட சமூகப் பின்னணியில் இருந்தவர்களான பல எழுத்தாளர்கள் இந்த மண்ணிலிருந்தெல்லாம் முகிழ்ந்தவர்களாக இவர்கள் கணிக்கப்படுகின்றனர். இவர்களில் பலர் பட்டதாரிகள், கல்விமான்கள், ஆசிரிய உத்தியோகம் பார்ப்பவர்கள். இருந்தும் டானியல் டொமினிக் ஜீவா என்பது போல, அழைக்கப்படுவதில்லையே. அது ஏன்? என்னத்திற்காக எங்கள் இருவரையும் இரட்டையர் என அழைக்கின்றனர்?''

இது எனது நீண்ட காலச் சிந்தனை.

'ஒடுக்கப்பட்ட சமூகத்தின் உண்மையான இலக்கியப் பிரதிநிதிகளா, டானியல் - டொமினிக் ஜீவா? ஏன் இரட்டையர்கள் எனக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்? இதில் ஏதோ அடிப்படை அர்த்தம் இருக்கத்தானே வேண்டும்?' இப்படி என் யோசனை ஓடிற்று. 'அர்த்தமில்லாமல் தொடர்ந்து இப்படி அழைப்பார்களா? அதை இலக்கிய உலகம் ஏற்றுக் கொள்ளுமா என்ன?'

நானும் டானியலும் ஒடுக்கப்பட்ட சாதியில் பிறந்தவர்கள் மாத்திரமல்ல, காலம் காலமாக எமது அப்பன்மார் செய்து வந்திருந்த பரம்பரைத் தொழிலைத் தொடர்ந்து செய்து வந்தவர்கள். அதிலும் யாழ்ப்பாண மண்ணில் செய்தவர்கள். வாழ்ந்து வந்தவர்கள். எங்கள் தொழிலின் மூலம் எங்களது குலம் கோத்திரங்களைப் பகிரங்கமாக மக்கள் மத்தியில் பிரகடனப் படுத்தி இனங் காட்டியவர்கள். வெட்கப்படாதவர்கள். பெருமை பாராட்டியவர்கள்.

இப்படிப் பகிரங்கமாகத் தன்னம்பிக்கையுடன் தலை நிமிர்ந்து முழுச் சமூகத்தையும் ஆரோக்கிய மனோ பாவத்துடன், விமரிசனப் பார்வையுடன் பகிரங்க மேடைகளில் பேசிவந்த, பத்திரிகைகளில் எழுதி வந்த, எம் இருவரையும் பார்த்து யாழ்ப்பாணச் சமூகம் பிரமித்துப் போய் விட்டது. ஆச்சரியத்துடன் நிமிர்ந்து பார்க்கத தொடங்கியது. சிலர் புறணி பேசவும் தயங்கவில்லை. அது எடுபடவில்லை. எடுபடாததற்குக் காரணம் எங்களது வாழ்க்கை முறை.

இத்தனைக்கும் ஆரம்ப காலங்களில் எமது பரம்பரைத் தொழிலை நாம் விட்டு விடவில்லை. தொடர்ந்து செய்து கொண்டுதான் வந்தோம்.

அடிமை - குடிமைகள் என வர்ணிக்கப்பட்டு நடைமுறையில் நலிந்தோராகக் கணிக்கப்பட்டவர்களின் பின் சந்ததியில் இப்படியானவர்கள் தோன்றுவார்கள் என யாருமே எதிர்பார்க்கவில்லை. இதனால் நம் சமூகத்திலும் கூட எதிர்ப்பு.

எனக்கு இன்னமும் ஞாபகம் இருக்கிறது. எழுத்துப் பயிற்சிக் காலத்தில் எனக்காக நான் சூட்டிக் கொண்ட புனைப்பெயரே 'நாவிதன்' என்பதுதான். பத்திரிகை உலகம் அதை அங்கீகரிக்க மறுத்துவிட்டது. இந்தப் புனைப் பெயர் அச்செழுத்தில் பதியப்படவேயில்லை. எழுத்து உலகிலும்

எடுபடவில்லை. அதனால் எனக்கு அந்தக் காலத்திலேயே பெரிய மனத் தவிப்பு.

அதனால் நான் சோர்ந்து போய் விடவில்லை. நாவிதன் என்ற புனைப்பெயர் உபயோகிக்க எனக்குக் கற்றுத் தந்தவர்கள் தமிழ் நாட்டு நாடார் சமூகத்தவர்கள். ஒரு காலத்தில் ஒடுக்கப்பட்டவர்களின் சாதிப் பெயராகக் கருதப்பட்ட இந்த நாடார் என்ற பெயர், காமராஜ் நாடார் என்பதின் மூலம் வரலாற்றுச் சிறப்புப் பெற்றுத் திகழ்ந்ததை நானறிவேன். அது ஒரு புது அநுபவம். புதிய தன்னம்பிக்கையை எனக்குள் ஏற்படுத்தியது. கற்றுத் தந்தது.

ஒரு ஐயர். ஐயரென்று சொன்னால் அல்லது ஒரு வேளாளன் தன்னைப் பிள்ளை என்று சொன்னால் அல்லது தமிழ்நாட்டுக்குக் கவுண்டர், நாயுடு, தேவர் எனப் பெயருக்குப் பின்னால் சேர்த்துக் கொண்டால் அது ஆதிக்கப் பெருமை. ஆனால் ஒரு சவரத் தொழிலாளி நாவிதன் எனத் தனக்குப் பெயர் சூட்டிக் கொண்டால் அது கலகக் குரல்.

இவை இரண்டினது அர்த்தமும் பாவனையும் ஒன்றல்ல.

அந்த அநுபவத்தின் பெறுபேறாகத் தான் எத்தனையோ வசதி வாய்ப்புக்கள் வந்த போதிலும் கூட, என்னை நெஞ்சார விசுவசிக்கும் நண்பர்கள் அழைத்த போதிலும் கூட, கடந்த முப்பது வருடங்களாகக் கொழும்பு வரும் சமயங்களில் எல்லாம் ஓரியண்டல் சலூன் மேல்மாடியில் இன்று வரை தங்கி வருகின்றேன். என்னைப் பகிரங்கமாகத் தெரிய வேண்டும், பலருக்கு. இது தான், எனது முதல் நோக்கம்.

காரணம் நான் தடம் புரண்டு விடக் கூடாது. பிரபலம், புகழ், செல்வாக்கு என்னை வளர்த்த பாதையை விட்டுத் திசை திருப்பி விடக்கூடாது. நான் பிரமுகராக மாறி, வளர்ந்து வந்த பாதையை, என்னை மனிதனாக்கி, உருவாக்கி, ஊக்கமளித்து வந்த தொழில் சார் இன சனத்தவர்களை விட்டுத் தூரப் போய்விடக் கூடாது. அதற்காகவே இந்த நடைமுறை நியதியைக் கைக் கொண்டு ஒழுகி வந்தேன்.

இந்த எனது எண்ணத்திற்குப் பின்னாலும் ஓர் இறுமாப்பு உணர்வு இழையோடியுள்ளதை, மெதுவாக இந்தக் கட்டத்தில் சொல்லி வைக்கலாம் என எண்ணுகிறேன்.

என்னை இன்று பல நிறுவனங்கள் அங்கீகரிக்கின்றன. பல பிரமுகர்களும் மதிப்பு, மரியாதை காட்டி ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால், என்னுடைய அடிப்படைக் கோரிக்கைகளை அங்கீகரிக்கின்றனரா? இல்லை.

பிற்காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஜோசப் சலூனுக்குள் நான் மல்லிகைச் சஞ்சிகையை நிறுவி நடத்தி வந்து கொண்டிருந்த காலத்தில், மல்லிகையின் பெயர் கொஞ்சம் கொஞ்சமாகப் புத்திஜீவிகள், படித்தவர்கள் மத்தியில்

பிரபலமடைந்து கொண்டிருந்த சமயத்தில், கல்வித் துறையில் பிரபலமடைந்துள்ள ஒரு பிரமுகர் - அவரது நாமம் இங்கு எனக்கு முக்கியமல்ல - என்னைத் தேடி வந்தார். என்னைத் தேடி என்பது கூடச் சரியல்ல. மல்லிகை ஆசிரியரைத் தேடிக் கஸ்தூரியார் வீதியிலுள்ள 60 ஆம் நம்பர் கடைக்கு வந்தார். வந்தவருக்கு அப்பொழுதுதான் தெரிந்தது, அது ஒரு சலூன் என்று. மல்லிகை ஆசிரியர் இருப்பதும் ஒரு சலூனில்தான். மல்லிகை வெளிவருவதும் ஒரு சலூனுக்குள் இருந்துதான்! 'அட, அப்படியா?'

அவருக்கோ அந்த மண்வாசனைச் சாதித் திமிர், சலூன் கேற்றைத் திறந்து, உள்ளே வந்து என்னைச் சந்திக்க இடம் கொடுக்கவில்லை. தான் வந்திருப்பதை எனக்குத் தெரிவிக்க எவ்வளவோ முயற்சித்துப் பார்த்தார். காவல் நின்று பார்த்தார். எனக்கோ 'பஞ்சமத் திமிர்' உழைத்து வாழும் பரம்பரையில் பிறந்ததைத் தவிர, யாரையுமே தட்டிச் சுற்றி வாழ்ந்த பரம்பரையில் வந்தவனல்ல, நான். கள்ளக் கடத்தல்காரனல்ல. கள்ளச் சாராயம் காய்ச்சி விற்று வாய்ச் சவடால் சாதி பேசும் பரம்பரையல்ல, என்னுடையது, என்ற இயல்பான தன்னகங்காரம் எனக்குள் குடிகொண்டிருந்தது. எனவே 'உள்ளே வந்தால் வரட்டும்' என்று அசட்டை காட்டினேன். பேசாமல் இருந்தேன். தெரிந்திருந்தும் தெரியாமல் நடித்தேன்.

காவல் நின்ற அந்த யாழ்ப்பாணத்தில் பிறந்து கொழும்பு வாழ் பிரமுகர், வந்த வழியே திரும்பிப் போனார். இது எனக்கொரு புதிய பாடத்தை இன்றுவரை புகட்டி வருகின்றது. அதை இன்றுவரை கடைப்பிடித்து வருகின்றேன்.

மிக நுண்மையான வடி கட்டல் முறையிது. 'என்னைத் தேடி உண்மையான நேசிப்புடன் ஒழுகி நெஞ்சார்ந்த பாசத்துடன் வருபவர்கள் எந்த விதமான மன விகல்பமும் இல்லாமல் சவரக் கடையின் வாசலைத் திறந்துதான் வரட்டுமே! அப்படி வந்துகொள்ளப் பிரியப்படாதவர்கள் என்னை விட்டுச் சற்று ஒதுங்கியிருப்பதுதான் எனக்குச் சரியான பாதுகாப்பு' என உண்மையில் நம்பி வருகின்றேன். போலிகள் வேண்டாம். சந்தர்ப்பவாதிகள் நெருங்குவதையும் விரும்பவில்லை.

நான் இப்படியாக நுணுக்கமாக வியூகம் அமைத்துச் செயற்படுபவன் என்றால், டானியல் நேரடியாகச் செயல்படுபவர். அவருடைய அநுபவங்கள், வாழ்க்கையைப் பற்றிய பார்வைகள் ரொம்பவும் கசப்பானவை. அவருடைய இளமைக்கால நெஞ்சை ரொம்பவும் புண்படுத்தியவை. அதன் வெளிப்படையாகத்தான் தனது முதல் நாவலுக்கே 'பஞ்சமர்' என நாமகரணம் சூட்டி, நம்மையெல்லாம் நமக்குப் புரிய வைத்தவர். பிற்காலத்தில் 'தலித்' இலக்கியத்தின் முன்னோடி எனத் தமிழகத்தவரால் ஏற்றுக் கொள்ளத் தக்க படைப்பியக்கத்தை சிருஷ்டிப்பதற்கான மன ஆளுமையை இள வயசிலேயே பெற்றுக் கொண்டவர். அத்தகைய துணிச்சல்காரர்.

யாழ்ப்பாண மக்களைப் பொறுத்தவரை அவரது பார்வை வேறு. என்னுடைய பார்வை வேறு. இருவரும் ஒரே மாதிரியாகச் சிந்தித்தாலும் இருவரது வாழ்க்கைத் தரங்களும், வாழ்க்கை அநுபவங்களும் வேறு வேறானவை. இதற்கு நிதர்சன சாட்சியாகவே நமது படைப்புக்களும் அமைந்திருந்தன.

இப்படியான எங்களை இனங்கண்டு, உற்சாகப்படுத்தி, எங்கள் மீது படிந்துள்ள தூசிகளை அகற்றிச் செம்மைபடுத்தியவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய கார்த்திகேசன் ஆவார். இவரைக் கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் எனவும் சொல்வார்கள். அசல் மனிதன்! - மா மனிதன்!

இவர் முதன் முதலில் எனது கையெழுத்துக் கொப்பியில் எழுதித் தந்தது இன்னமும் எனது ஞாபகத்தில் இருக்கிறது. 'மற்றவர்களின் பொன் மொழிகளைப் பிதற்றுவதை விட, உங்களுடைய பித்தளை மொழிகளை இயற்றுவதே மேல்!'

அவர் பித்தளை மொழிகள் எனக் குறிப்பிட்டது, நமது சகோதர உழைக்கும் மக்கள் தினசரி வாழ்வில் வாய் வார்த்தைகளாகப் பாவிக்கும் பாமரச் சொற்களையே இயற்றுங்கள் என்பதாகும். அதனையே எழுத்தில் வடியுங்கள் என்பதாகும்.

தோழர் கார்த்திகேசனை நமது வட்டத்துக்குள் அடைத்து வைத்துச் சிறை வைப்பது எனது நோக்கமல்ல. நம்மைப் போன்று உழைக்கும் வர்க்கத்துப் புத்திரர்கள் உதாசீனம் செய்யப்படுவதைக் கண்டு வெகுண்டெழுந்து, எமக்குரிய பாதையை இனங் காட்டித் தந்த அதே சமயம், மனுக்குலத்தின் விடிவுக்காக உழைக்கத் தகுந்த இளம் தலைமுறையினரையும் அவர் எம் போன்றவருக்கு இனம் காட்டத் தவறவில்லை அவர்களில் எனக்குத் தெரிந்தவர்களில் வலு முக்கியமானவர்கள். ஒருவர் போராசிரியர், பிரபல விமர்சகர் கைலாசபதி. இன்னொருர், தரமான எழுத்தாளரும் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பதிவாளராகவும் கடமை புரியும் கலாநிதி க. குணராசா, என்கின்ற செங்கை ஆழியான். பிறிதொருவர் வடகிழக்கு மாகாணத்தின் கல்வி கலாசாரப் பகுதிச் செயலாளராக விளங்கும் டிவகலால. தங்களை இன்னும் கார்த்தியின் மாணவர்கள் எனச் சொல்லிக் கொள்வதில் பெருமிதமடைபவர்கள்.

இவர்களைத் தவிர, கார்த்திகேசனின் மாணவர்கள் பலர் இலங்கையிலும், வெளிநாட்டிலும் உயர்ந்த ஸ்தானங்களில் இருக்காலம். எனக்குத் தெரிந்தவர்களை மாத்திரம் தான் குறிப்பிட்டுச் சொல்லுகிறேன். எனக்குத் தெரிந்தவர்கள் இவர்கள் தான்.

இவர்களை விடவும் முக்கியமானவர் ஒருவரது பெயர் இப்பொழுது எனது ஞாபகத்திற்கு வருகின்றது. அவரது பெயர் தோழர் க. நவரத்தினம். இவர் கார்த்தியினுடைய பள்ளி மாணவர் மாத்திரமல்ல, அரசியல் மாணவரும்

கூட. யாழ் இந்துக் கல்லூரியில் பாடம் படித்ததுடன் அக் கல்லூரியிலேயே ஒரு சிற்றூழியராகவும் கடமை புரிந்து வந்த இவர், சென்ற தடவை யாழ்ப்பாணப் பாராளுமன்றத்திற்கு ஓர் உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டதை எண்ணி யாழ் மண்ணே ஆச்சரியத்தால் அப்படியே திகைத்துப் போய் விட்டது. மிகப் பெரிய அதிசயம், இது! மிகப்பெரிய ஆச்சரியம், இது!

தமிழ்க் காங்கிரஸ் கட்சி கொடிகட்டிப் பறந்த காலத்தில் அதன் தலைவராக இருந்த ஜீ. ஜீ. பொன்னம்பலம் எம். பி. யாகத் தெரிவு செய்யப்பட்டார். அதன் பிறகு தமிழர் தலைவர் என அழைக்கப் பெற்ற செல்வநாயகம் பாராளுமன்றத்திற்குத் தெரிவானார். அதே கால கட்டங்களில் தமிழர் தளபதி என அறிமுகப்படுத்தப்பட்ட அமிர்தலிங்கம் பாராளுமன்ற உறுப்பினரானார். இவர்கள் அனைவருமே, படிப்பு, பட்டம், வாதத் திறமை, வெகு சனச் செல்வாக்கு நிரம்பப் பெற்றுத் திகழ்ந்தவர்கள். கார்த்திகேசன் மாஸ்டரால் கண்டு பிடிக்கப்பட்டு, அவர் கல்வி கற்பித்த இந்துக் கல்லூரியில் ஒரு சிற்றூழியனாகக் கடமை புரிந்து வந்த தோழர் நவரத்தினம், பாராளுமன்றப் பிரதிநிதியாகக் தேர்ந்தெடுக்கப் பட்டது அடித்தட்டு மக்களுக்கு ஒரு தன்னம்பிக்கையை ஊட்டியது. புதிய வெளிச்சத்தைத் தந்தது.

தோழர் கார்த்திகேசன் அறிமுகப்படுத்தியவர்கள் யாருமே சோடை போகவில்லை. இன்று வரைக்கும் அவரது பெயரை நிலை நாட்டிக் கொண்டு, ஞாபகமூட்டிக் கொண்டு வருகின்றனர், பலர் பல வகைகளில்.

இந்த உருவாக்கப் பின்னணியில் தான் அன்னாரால் கண்டெடுக்கப்பட்ட மண் உருவங்களான என்னையும், டானியலையும் விளங்கிக் கொள்ள வேண்டும். புரிந்துகொள்ள வேண்டும்.

திராவிட உணர்வுச் சுழியோட்டங்களிலிருந்து மெல்ல மெல்ல விடுபட்டு வந்த நாங்கள், மறு எல்லைக்கே வாய் வார்த்தைகளால் தள்ளப்பட்டுச் சென்றடைந்தோம்.

அதன் வெளிப்பாடுதான் நாங்கள், அதாவது நான்., டானியல், எஸ். பொன்னுத்துரை ஆகிய நாங்கள் மூவரும் நமது எழுத்திற்காகத் தேர்ந்தெடுத்து வைத்துக் கொண்ட புனைப் பெயர்ப் பட்டியல். எனது புனைப் பெயர் 'புரட்சி மோகன்' எஸ். பொன்னுத்துரையின் புனைப்பெயர்: 'புரட்சிப் பித்தன்', டானியல் தேர்ந்தெடுத்த பேனாப் பெயர்: 'புரட்சி தாசன்'. மூவருக்கும் வேறு வேறு புரட்சி நாமங்களே.

புரட்சி என முன் பெயரைப் புனைப் பெயராகக் கொண்டவுடனேயே இந்த மண்ணில் புரட்சி வெடித்துப் பரவி விட்டது எனக் கற்பனை செய்து கொண்டு வாழ்ந்து வந்தோம். புரட்சி மயக்கத்தில் இருந்தோம் என்று தான் சொல்லவேண்டும்.

நாங்கள் கற்பனையில் காலூன்றிக் கனவுலகில் நடமாடினோமே தவிர,

எதார்த்தத்தில் காரியம் ஒன்றுமே நடைபெற்று விடவில்லை.

இதில் டானியல் தனது புனைப்பெயரில் மெய்யான ஆர்வம் கொண்டிருந்தார். தனது மூத்த மகனுக்குப் 'புரட்சி தாசன்' என்றே நாமம் சூட்டி விட்டார். இதில் எனது மனோநிலை சற்று மாற்றம் கண்டிருந்தது. அந்தக் காலகட்டத்தில் மராட்டிய எழுத்தாளர் வி. ஸ. காண்டேகர் நாவல்களில் 'கிரௌஞ்சக வதம்' என்ற நாவல் என் மனசைக் கவர்ந்த புத்தகம். அந்த நாவலின் கதாநாயகன் பெயர் தான் திலீபன். எனது புனைப் பெயரிலுள்ள வார்த்தைப் புரட்சி எழுத்தை நிராகரித்து. இலக்கியக் கதாநாயகனான திலீபன் என்ற பெயரை எனது மகனுக்குச் சூட்டி மகிழ்ந்தேன். பிற்காலத்தில் தனது பெயரின் வரலாற்றைக் கேள்வியாகக் கேட்டபொழுது இந்தப் பின்னணியை மகனுக்கு விளங்கப்படுத்தப்பட வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது. விரிவாகச் சொல்லி விளங்கப்படுத்தினேன்.

உண்மையாகவே நெஞ்சு பெருமிதத்தால் விம்மியது. இந்த எனது மகன் கீழ் வகுப்பில் கத்தோலிக்கப் பாடசாலையில் கல்வி கற்றுத் தேறியதன் பின்னர், கல்லூரியில் சேர்க்க வேண்டிய காலகட்டம் தொடங்கியது. கிறிஸ்தவப் பின்னணி கொண்ட கல்லூரி ஒன்றில் சேர்க்க வீட்டில் ஆயத்தங்கள் நடைபெற்றன. அயலில் 'அதுதான் சரி' என அபிப்பிராயமும் நிலவியது. மனைவியும் அதையே விரும்பினார். 'அங்கை படிச்சால்தான் பிள்ளையள் உருப்படும்!'

கட்டுப்பாடு, கீழ்ப்படிதல், ஒழுக்கம், நல்நடத்தை சகலதுக்கும் அப்படிப்பட்ட கல்லூரிதான் குழந்தைகளின் வருங்காலத்தைச் சிறப்பாக அமைத்துத் தரும் என்ற அபிப்பிராயத்திற்கு நான் எதிரானவன் அல்ல. அது உண்மையும் கூட!

ஆனால், எனக்கு மனசுக்குள் மெல்லியதொரு ஆசை. மண் பொம்மைகளாக இருந்த என்னைப் போன்றவர்களையெல்லாம் மனிதர்களாக உருமாற்றிய கார்த்திகேசன், கல்விமான் வைத்திலிங்கம், ஆசிரியர் அற்புதரத்தினம் ஏறி இறங்கி வரும் யாழ் இந்துக் கல்லூரியின் படிக்கட்டுகளில் எனது மகனின் பாதங்களும் பட்டு வர வேண்டும் என்பதே எனது மன விருப்பமாகும். நெஞ்சார்ந்த ஆசையாகும்.

ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில் தேர்வுக்காகக் கொண்டு சேர்த்தேன். தேர்வில் வெற்றி பெற்றதும் அந்தக் கல்லூரியிலேயே தொடர்ந்து கற்று வரத் தொடங்கினார், மகன் திலீபன்.

எனக்கு மன நிறைவும் மகா மகா சந்தோஷமும் என்னவென்றால் எனது மகன், கார்த்திகேசன் கற்பித்த கல்லூரியில் கல்வி பயின்றார் என்ற பெருமித உணர்வுதான் இன்றும் என் நெஞ்சில் நிலவுகிறது. அத்துடன் பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் பட்டப் படிப்புக்காகத் தேர்வு செய்யப் பெற்றார்.

எங்களில் பலபேர் கார்த்தியிடம் போதம் பெற்றோம் என்பதுடன் சிந்திக்கத் தெரிந்த பலர் வாரத்தில் இரண்டொரு தடவைகள் அவர் வீட்டில் சந்திப்பது வழக்கம். தொடர்ந்து சந்திப்போம். உரையாடுவோம்.

முன் விறாந்தை நீண்டது, அகலமானது. அங்கே நீளத்திற்கு ஒரு மேசை போடப்பட்டிருக்கும். இரண்டு பக்கமும் வாங்குகள். எப்போதுமே இரண்டொருவர் வாங்கிலிருந்து பேப்பர் படித்துக் கொண்டேயிருப்பர். நாங்கள் படிப்பதை விட, இலக்கியத் தர்க்கம் செய்து கொண்டிருப்போம். எழுதக்கூடிய கதைக் கருவைச் சொல்லி பாத்திரங்களைப் பற்றி விரிவாக ஆராய்ந்து கொண்டிருப்போம்.

இந்த விவாதங்களில் நானும் டானியலும் எஸ். பொன்னுத்துரையும் தான் அடிக்கடி கலந்து கொள்பவர்கள். மற்றவர்கள் தூர இடங்களில் வசிப்பவர்கள். வரும் வேளைகளில் கலந்து கொள்வார்கள். இந்த இலக்கிய நட்புப் பிற்காலத்தில் பிணக்காகப் பிறந்த காலத்தில் எஸ். பொன்னுத்துரைதான் எனக்கும் டானியலுக்கும் எழுதிக் கொடுத்தவர் என்ற வதந்திக் கதை பரவத் தொடங்கியது. ஏனென்றால் எஸ். பொன்னுத்துரை படித்தவர். பட்டதாரி. இந்தக் கதைப் பரம்பலுக்கும் எஸ். பொன்னுத்துரை ஓரளவு காரணமாக இருந்திருக்கிறார். ஏனெனில் படித்தவன் சொல்லைத்தானே இந்த உலகம் அடிப்படையாக நம்பும்! ஏற்றுக்கொள்ளும்! இது வெறும் சவடால் புளுகு.

இந்த அழுக்காற்றுப், பெட்டைப் புலம்பல்களை நான் முற்றாக நிராகரித்தேன். நட்பைத் துண்டித்தேன். நாங்கள் மூவரும் ஆரம்ப காலங்களில் சேர்ந்து கூட்டாகக் கருத்துப் பரிமாற்றங்கள் செய்து கொண்டது உண்மைதான். நாங்கள் இருவரும் படிக்காதவர்கள் என்ற காரணத்தால் கொச்சைப்படுத்தப்படுவதையும் முற்று முழுதாக எதிர்த்தேன். அலட்சியம் செய்தேன். சாஹித்திய மண்டலப் பரிசு கிடைக்கவில்லையே என்று வெப்பியாரம் தான் இதற்கு மூல காரணம்.

அமில வார்த்தைகளால் என்னைக் குளிப்பாட்டி வைத்தவர், எஸ். பொ.

எஸ். பொ. எங்கள் இருவரையும் மாத்திரமல்ல, கைலாசபதி, சிவத்தம்பி போன்றவர்களைக் கூட, காலத்திற்குக் காலம் வார்த்தைகளால் வக்கணை பேசிச் சிரித்தவர், எஸ். பொ. திறமைசாலி. ஆனால், மற்றவர்களின் புகழை ஏற்றுக் கொள்ளாத மனநோயாளி. புலமைக் காய்ச்சலால் புழுங்குபவர்.

நானோ டானியலோ எமது தனித்துவத்தை எந்தக் கட்டத்திலும் இழந்து விடவில்லை. சோரம் போய் விடவில்லை. அவதூறுகளுக்கும் பலியாகவில்லை.

எங்களுடைய எழுத்துப் பிரபலத்தை சீரணிக்க லாயக்கற்ற அவதூறை, நான் கண்டு கொள்ளவேயில்லை. அவதூறு பரப்புவது எஸ். பொவுக்கு ஒரு தனிக் கலை! அதை இன்றும் நாடு கடந்து செய்து வருவது தான் மிகப் பெரிய தமாஷ்!

பிற்காலத்தில் தோன்றிய மல்லிகையின் வளர்ச்சியும் மல்லிகைப் பந்தலின் ஆக்கபூர்வமான தொடர்ச்சியும் என்னை அங்கீகரித்த இலக்கிய நெஞ்சங்களின் அரவணைப்பும் இதை நிரூபிக்கப் போதுமானவைகளாகும்.

இந்த இடத்தில் டானியல் பற்றி ஒன்றைக் குறிப்பிட வேண்டும். இன்றுவரை வாய் கிழிய ஜனநாயகம் பேசி வரும் யு. என். பி. தலைவர்கள், 1981ல் தன்னுடைய அதிரடிக் காண்டயர்களை அழைத்து வந்து, தென்கிழக்காசியாவிலேயே சிறப்புற்று விளங்கிய யாழ் நூலகத்தை எரித்துச் சுடுகாடாக மாற்றினார்கள். அந்தச் சம்பவத்தின் கோர அழிவுகளைப் படமெடுத்து 1981 ஜூலை மல்லிகை இதழில் அட்டைப் படத்திலும் உள்ளேயும் 14 படங்களையும் வெளியிட்டிருந்தேன். மல்லிகையில் இந்த அட்டுழியத்தைப் பதிவு செய்திருந்தேன்.

அதே காலகட்டத்தில் யாழ்ப்பாணத்துக்கு அண்மித்த எழுதுமட்டுவாள் என்ற சிற்றூரில் பள்ளிக்குச் சென்ற தாழ்த்தப்பட்ட சமூகக் குழந்தைகளின் புத்தகம், கொப்பிகளைப் பிடுங்கி, சாதி வெறியர்கள் அவற்றைக் தீயிட்டுக் கொழுத்தினர். எரித்து மகிழ்ந்தனர். மாணவர்களை மிரட்டினர்.

'இவை இரண்டையும் நோக்கினால், இவை இரண்டுக்கும் என்னைப் பொறுத்தவரை வித்தியாசம் தெரியவில்லை. ஒன்றைக் கடுமையாகக் கண்டிக்கும் தமிழ் சமூகம், மற்றொன்றைக் கண்டு கொள்ளாமல் மூடி மறைத்தது. ஏன்?' எனக் கடுமையாகப் பத்திரிகைக்குப் பேட்டி கொடுத்தார், டானியல்.

பலர் - 'தமிழன் பேரினவாதிகளால் அழித்தொழிக்கப் படுகின்றான்!' என ஜனநாயகக் கூச்சலிடும் எழுத்தாளர் உட்படப் பலர் - டானியலின் கருத்துக்கு எதிராகக் கண்டனக் கணைகளைத் தொடுத்து அவரைக் கண்டித்தனர். அவர் தனது கருத்தை மாற்றிக் கொள்ளவில்லை. இந்த இலக்கிய மேன்மை, கைவரப் பெற்றவர், டானியல். தமிழ்த் தேசியம் பேசுகின்றவர்கள் பேசிக் கொண்டுதான் இருக்கின்றனர். இற்றை வரைக்கும்.

'இலக்கியம்' சம்பந்தமான அவதூறு வதந்திகள் யாழ்ப்பாணத்திற்கே தனியுரிமையானதல்ல. தமிழகத்தில் வடுவூர் துரைசாமி அய்யங்கார் எழுத்தில் பேர் புகழ் பெற்றிருந்த காலத்தில், வை. மு. கோதைநாயகி அம்மாள் அவரிடம் தான் எழுதிய நாவல்களைப் படிக்கக் கொடுத்து அபிப்பிராயம் கேட்க ஆரம்பித்தார். வை. மு. கோதைநாயகி அம்மாளுக்கு அவரது எழுத்தால் பேரும் புகழும் வந்து குவியத் தொடங்கியவுடன் அய்யங்காரும் இதே வதந்தியைப் பரப்பக் காரணமாக இருந்திருக்கிறார். இது தமிழக இலக்கிய வரலாற்றில் நடந்த உண்மை.

காலம் அய்யங்காரினது இலக்கியப் புலமையையும் கோதை நாயகி அம்மாளின் சிருஷ்டி ஆளுமையையும் நன்கு நிரூபித்து விட்டது.

அய்யங்கார் கடைப்பிடித்தது ஆண் ஆதிக்க அவதூறு. எஸ்.

பொன்னுத்துரை செய்ய நினைத்தது பட்டதாரி மமதைப் புலம்பல். இந்த ஆதிக்க அவதூறுகளும் புலம்பல்களும் மெய்யான திறமை ஆற்றல்களுக்கு முன்னால் நின்று நிலைக்க முடியாது. காலம் அதற்குச் சரியான சாட்சியாகும். புலம்பல்கள் திரும்பித் தாக்கும் வல்லமை வாய்ந்தவை.

அவதூறுகள் கால்களற்றவை. ரொம்பத் தூரம் அவைகளால் பயணம் பண்ண இயலாது. இதை நன்கு தெரிந்தவன் நான். எனவே அன்று தொடக்கம் இன்று வரை அவதூறு வம்புகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது மில்லை. பதில் சொல்லுவதுமில்லை. அது எனது வேலையுமில்லை. நான் இயங்க வேண்டும். அதுதான் என் கவலை. நான் பேசப்பட வேண்டும்.

என்னுடைய எழுத்து வழி ஒரு தனிவழி. அதுபோலவே டானியலின் பாதையும், அவரது அநுபவத்துக்குகந்த பாதை. எஸ். பொன்னுத்துரையினதும் அவருக்கே உரித்தான தனி நடை. ஆரம்ப எழுத்துக் காலங்களில் சேர்ந்து விவாதித்திருக்கலாம். கருத்துப் பரிமாறி இருக்கலாம். ஒருவரை ஒருவர் பாதித்துக் கூட, இருக்கலாம். ஆனால் விலை போகவில்லை. போனவர்கள் என்றால்தான் காலமதை நிரூபித்திருக்குமே.

காலக் கிரமத்தில் அநுபவங்கள் பெருக்கப் பெருக்க, சனப் பழக்கமும் புழக்கமும் வலுக்க வலுக்க, தொழில் சார் அறிவு முதிர முதிர, எங்களது எழுத்துக்கள் பல கோணங்களை நோக்கி நகர்ந்து கொண்டேயிருக்கின்றன. புதிய வெற்றிகளை, அநுபவத் தோல்விகளை எமது எழுத்துக்கள் எதிரொலித்துக் கொண்டேயிருக்கின்றன.

இதுவே உண்மையும் கூட!

இந்த அவதூறுப் படலத்திலிருந்து ஒரு பாடத்தைக் கற்றுக் கொண்டேன். மல்லிகைச் சஞ்சிகைக்குத் துணைக்குக் கூட ஒருவரையும் இணைத்துக் கொள்ளவில்லை என்ற முடிவுக்கு வந்தேன். நாளைக்கு ஜீவாவுக்குத் தலையங்கமே சரியாக எழுதத் தெரியாது. நான் தான் எழுதிக் கொடுப்பது வழக்கம்!' என்பார், துணைக்கு இடம் பிடித்த இன்னொரு எஸ். பொ. அது வதந்தியாகக் கூடப் பரவும்.

நான் இத்தனைக்கும் காணாமலே போயிருப்பேன். நல்ல காலம், எழுத்து அநுபவம் எனக்கு கை தந்தது. சமகாலங்களில் சில வகை அநுபவங்கள் கசப்பானவைகளாக இருக்கலாம். ஆனால், அவை கற்றுத் தரும் பாடங்களோ அளப்பரியவை. மதிப்பு வாய்ந்தவை. பெறுமதி மிக்கவை.

அந்த அநுபவங்களே, எனது வளர்ச்சிக்குப் பசளையாக அமைந்தன.



16

தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் யாழ்ப்பாண மண்ணில் கொடிகட்டிப் பறந்த காலகட்டம், அது. 1947ல் பாராளுமன்றத்திற்கு யாழ்ப்பாணத்திற்கு - யாழ்ப்பாண நகரப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். 'தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா!' எனத் தேர்தலில் கோஷமெழுப்பி மகாதேவாவைத் தோற்கடித்து, பாராளுமன்றத்திற்குத் தமிழ்த் தலைவராகச் சென்ற திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம், பின்னர் பிரதமர் டி. எஸ். சேனாநாயக்காவின் மந்திரி சபையில் மீன் பிடி மந்திரியாகப் பதவியேற்றுக் கொண்டார். கோஷங்களை மறந்தார். மக்களையும் மறந்து செயல்பட்டார்.

இதைப் பெரும்பான்மையான யாழ்ப்பாணத்து உழைக்கும் மக்கள் அங்கீகரிக்கவில்லை. மன உழைச்சலால் உள்ளுக்குள்ளேயே குமைந்து மறுகினர். எதிர்ப்புத் தெரிவித்தனர். பகிரங்கமாகப் பொது இடங்களில் விவாதித்தனர்.

இந்தக் குமைச்சலைப் புரிந்து கொண்டார் மாஸ்டர் கார்த்திகேசன். மக்களின் எதிர்ப்பு உணர்வுகளை வெகு துல்லியமாகப் புரிந்து கொண்ட அவர், சில திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்தினார். அப்பொழுது அவர் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் பிரதேசச் செயலாளராகவும் இயங்கி வந்தார். நாங்கள் பக்கப் பலமாக நின்றோம். ஒடுக்கப்பட்ட மக்களும் ஒன்று திரண்டனர்.

அந்தக்காலத்தில் 'ரகுபதி ராகவ ராஜாராம்....!' என்ற காந்தியடிகளின் பஜனைப் பாட்டு ரொம்பவும் பிரசித்தம். அந்த மெட்டில் ஜீ. ஜீ அவர்களின்

கொள்கைப் பிறழ்வைச் சாடி, மக்கள் மத்தியில் பிரசாரப் படுத்தக் கவிதை ஒன்று புனையப்பட்டு அச்சியற்றப் பெற்றது. நோட்டீஸ் தயாரானது. மக்களிடம் கொண்டு சென்று விநியோகித்தோம். அந்தக் காலத்தில் நான் கம்யூனிஸ்ட் கட்சியின் அனுதாபி. பின்னர்தான், அங்கத்தவரானேன். தொடர்ந்தும் செயல்படுகிறேன்.

என்னுடைய ஞாபகத்திற்கு எட்டியவாறு அந்தப் பாடல்களின் வரிகள் இப்படியாகத்தான் அமைந்திருந்தன என்பது எனது எண்ணம்.

'யு என் பீ ஆட்சியை எதிர்த்தாரா.....
மந்திரியாக நினைத்தாராம், '
பணப்பெரும் பொன்னம் பலத்தாராம்.
சாமி சாமி என்றதினாலே
சரிதான் மீன்பிடி என்றாராம்.....'

அப்பாடல் பல வரிகளைக் கொண்டது. எனது ஞாபகத்திலுள்ள கடைசி வரிகள் இப்படித்தான் அமைந்திருந்தன.

இந்தப் பாடலை ஆக்கித் தந்தவர் யாழ்ப்பாண மண்ணுக்குப் புதியவர். பார்த்த முகமும் இல்லை. கார்த்தியின் வீட்டு முன் விறாந்தையில் வைத்துத்தான் முதல் முதலில் எனக்கு அவர் அறிமுகமானார். மென்மையானவர். மெதுவாகத் தான் பேசுவார். எங்களைப் போன்ற இளைஞர்களைச் சம தோழர்களாக நினைத்துப் பழகும் பக்குவம் கொண்டவர். மலை நாட்டவர்.

இவர் எழுதிக் கொடுத்து அச்சியற்றப் பெற்ற பாடல்களை மனப்பாடம் செய்து வீதியெங்கும் உரத்த குரலில் பாடப் பழகிக்கொண்டோம். பாடித் திரிந்தோம். பிரசாரப் படுத்தினோம். சுவர்களிலும் முதலடிகளை எழுதிவைத்தோம்.

அந்தப் பாடலை இயற்றியவர் மலையகத்திலிருந்து வந்திருந்தார். தலத்தோயாவிலுள்ள கரணகொல எஸ்டேட்டைச் சேர்ந்த கே. கணேஷ் என்பவர்தான், அவர். அந்தக் காலத்திலேயே பிரபல எழுத்தாளர் கணேஷ்.

இளந்தலைமுறையைச் சேர்ந்த எங்களுக்கெல்லாம் அவரை ரொம்பவும் பிடித்துப்போய்விட்டது. தனது இலக்கிய அநுபவங்களையெல்லாம் வெகு சுவாரசியமாகக் கதைபோலச் சொல்லிச் சொல்லியே எங்களையெல்லாம் ஆச்சரியப்பட வைத்தவர், அவர். அதிசயிக்க வைத்தவர்.

பிற்காலத்தில் அதே யாழ் நகரத் தொகுதித் தேர்தலில் திரு. ஜீ. ஜீ. அவர்கள் ஒரு தடவைக்கு இரு தடவைகள் தோற்கடிக்கப்பட்டார்கள். தோற்கடித்தவர் யாழ் மேயர் துரையப்பா அவர்கள். இந்தத் துரையப்பா அவர்களை 'ஐஞ்சு ரூபாய்ப் புரக்கராசி. அவர்!' எனத் தமிழ்க் காங்கிரஸ் மேடைகளில் நையாண்டி செய்தவர்கள் அந்தக்காலத்தில் அநேகர் உண்டு.

இருந்தாலும் அந்த ஐந்து ரூபாய் புரக்டர் ஒரு தடவைக்கு இருதடவைகள் இந்த உயர் நீதிமன்றச் சட்டத்தரணியை, தமிழ் காங்கிரஸ் தலைவரைத் தோற்கடித்துவிட்டதை நாடு பூராவும் அன்றே விதந்து பேசியது. இதை நானறிந்து வைத்திருக்கிறேன்.

உண்மையில் திரு. ஜீ. ஜீ. அவர்களை அன்று தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் செல்வாக்குப் பெற்றிருந்த தமிழரசுக் கட்சி தான் இயல்பாகவே தோற்கடித்திருக்க வேண்டும். வரலாறு அப்படியில்லை. காரணம் என்னவெனப் பல நாட்களாக இதைப் பற்றி யோசித்திருக்கின்றேன். அன்று கார்த்திகேசனின் வீட்டு விறாந்தையில் எழுதப் பட்டு, மக்கள் மத்தியில் பரப்பப்பட்டு வந்ததே அந்தக் கவிதை வரிகள், அவை தான் மக்கள் மனசில் ஊறிப் பதிந்து, பின்னர் செயல் வடிவம் பெறும்போது சம்பந்தப் பட்டவரை தோற்கடிக்க வைத்து விட்டது. இதுதான் யதார்த்தம்.

கவிதைகளுக்குத் தான் எத்தனை அரசியல் வலிமை உண்டு!

பார்க்கப் போனால் துரையப்பா அவர்கள் ஒரு கருவிதான். செயல் திட்டமோ வேறு. உண்மையான சூத்திரதாரி வெகு அமைதியாக இருந்து தனது அரசியல் வேலைகளை அடக்கமாகச் செய்து கொண்டிருந்தார். பகிடி விட்டுக் கொண்டிருந்தார். மாணவத் தலைவர்களை உருவாக்கிக் கொண்டிருந்தார்.

முதல் தடவை தேர்தலில் தோல்வி கண்டு, அடுத்த முறையும் யாழ் நகரத் தொகுதியில் பாராளுமன்றத் தேர்தலுக்கு வேட்பாளராக நகரெங்கும் வாக்காளர்களைச் சந்தித்துக் கொண்டு திரு. ஜீ. ஜீ அவர்கள் வந்து கொண்டிருந்த ஒரு சமயத்தில், அவரை நான் ஆஸ்பத்திரி வீதித் திருப்பத்தில் ஒரு நாள் சந்தித்தேன்.

தேர்தல் காலமானபடியால் அவரைச் சூழ்ந்து நின்ற கூட்டத்தின் மத்தியில் கிட்டே நெருங்கி, ''ஸேர்!'' என்றேன்.

ஓரளவு என்னைத் தெரிந்திருந்தபடியால் திரும்பி என்னைப் பார்த்து 'என்ன?' என்பது போலப் பார்வையால் வினவினார். நெருங்கி வந்தார். ''என்ன?'' என்றார்.

''ஸேர்! உங்களிட்டை இரண்டு முக்கியமான விஷயங்களைக் கேட்கப் போறேன். இது உங்களால அவசியம் செய்துவிட முடியும்.'' எனச் சொல்லி நிறுத்தினேன். ''கட்டாயம் உங்களாலை செய்து காட்ட முடியும்!''

கூட்டம் என்னையும் அவரையும் உற்று நோக்கிய வண்ணம் திரண்டு சூழ்ந்து கொண்டது. ஏதோ தேர்தல் வாக்குறுதியைத் தான் கேட்கப் போவதாக நினைத்து நெருங்கிய கூட்டத்தினர், என் வாயை ஆவலாகப் பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டு மனசுக்குள் சிரித்துக் கொண்டேன்.

''சொல்லும்..... சொல்லும்! என்ன சங்கதி கேட்கப் போகிறீர்?

பயப்படாமல் கேளுமன்!" என்றார். ஜீ. ஜீ., அரசியல் வாதியல்லவா? அந்த நுட்பம் தெரிந்தது.

''தேர்தலும் வெற்றியும் இண்டைக்கு வரும், நாளைக்குப் போயிடும். அதல்ல, எனக்கு முக்கியம். உங்கட வாழ்க்கைச் சரித்திரத்தை முற்று முழுசாக ஒரு புத்தகமாக எழுத வேணும். முதலிலை. அடுத்தாக உங்கட சுப்பிறீம் கோட் அநுபவங்களை நீங்களே எழுதி வெளியிட வேணும். இரண்டையும் இங்கிலீஸிலைதான் எழுத வேணும். வேணுமெண்டால் நீங்கள் வாயாலே சொல்லச் சொல்ல, சுருக்கெழுத்தாளர்களைக் கொண்டே அதை எழுதி முடிக்கலாம். பேந்து அது தமிழிலே மொழி பெயர்த்து வரும். உங்கட புத்தகங்களை முதலிலை இங்கிலாந்திலை வெளியிட்டு வையுங்கோ. இதை நான் உங்களிட்டை இருந்து எதிர்பார்க்கிறன்."

எனது இந்தக் கோரிக்கை, அந்தத் தேர்தல் சூழ்நிலையில் அர்த்தமற்றதாகத் தொனித்திருப்பதைக் கூட்டத்தினரின் முகக் குறிப்பிலிருந்தே நான் அவதானித்துக் கொண்டேன். எனக்கோ ஊதுகின்ற சங்கை ஊதி வைப்போமே என்ற மனநிலை. சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டேன். அந்த மனத்திருப்தி.

'' சரி, சரி யோசிப்போம். யோசிக்கிறன். நான் வாறன்" அவர் தேர்தல் மும்முரத்தில் ஈடுபட்டு மக்கள் கூட்டத்திரளுள் மறைந்து விட்டார். பின்னால் ஒரு கூட்டம் திரண்டு சென்றது.

கடைசியாக அவரை நான் பார்த்தது அந்தச் சமயத்தில் தான். எனது தார்மீகக் கோரிக்கையை அவர் நிறைவேற்றவில்லை. நிறைவேற்ற அவருக்கு நேரம் கிடைக்க வில்லை என்பதைப் பின்னர் உணர்ந்து கொண்டேன். தமிழுக்குப் புதிய புதிய தகவல்கள் கிடைத்திருக்கலாம்.

இதை ஏன் இங்கு இத்தனை விரிவாகக் குறிப்பிடுகிறேன் என்றால், எனக்கென்று ஒரு கருத்துத் தளம் உண்டு. அதற்காக என்னையே அர்ப்பணித்து அந்த உணர்வுடன் செயல்பட்டு வருபவன், நான். கருத்து முரண்பாடுகளைத் தனிப்பட்ட பகையாக எண்ணி, குரோதமாக ஒழுகுபவனுமல்ல, நான். கருத்து முரண்பாடு கொண்டவர்களிடமுள்ள மதிக்கப்படத்தக்க பண்புகளை வியந்து பாராட்டுவதுடன் அதைப் பெரிதும் எனது வாழ்வில் கடைப்பிடித்து ஒழுக வேண்டும் என உண்மையாகவே விரும்புபவன். அதனைப் பின்பற்றி வருபவன்.

சாஹித்திய விழாவில் யாழ்ப்பாணத்தில் 1963ல் கூழ் முட்டையடித்த சம்பவம். அதில் எனக்கு அபிப்பிராய பேதம் உண்டு. நான் கலந்து கொண்ட ஒரு கூட்டுச் சம்பவத்திலிருந்து என்னைப் புனிதமானவனாக்கிக் கொள்ள நான் அறவே விரும்பவில்லை. அது நேர்மையுமல்ல. எனவே பொறுப்பை நானும் மனசார ஏற்றுக் கொள்கிறேன். அதில் மனப் பாதிப்பு அடைந்தவர் நமது கனக செந்திநாதன். இது நடந்து இரண்டு நாட்களுக்குப்

பின்னர் என்னைத் தேடி வந்தார். செந்தி மாஸ்டர்.... ``பேந்து, சொல்லடா சொக்கா!'' எனச் சொல்லிக் கொண்டே கதிரையில் குந்தினார், அவர். எனக்கோ மனக் கஷ்டம். அவருடன் தொடர்ந்து கதைக்க வெட்கமாக இருந்தது. சங்கடமாக இருப்பதை என்னால் உணர முடிந்தது. மனச் சங்கடப் பட்டுப் பேசாதிருந்தேன்.

அவரோ எனது மன மருட்சியைப் புரிந்து கொண்டவர் போலக் காட்டிக் கொள்ளாமல், இயல்பாகவே என்னுடன் கதைத்ததுமல்லாமல், தேநீர்க் கடைக்கு அழைத்துச் சென்று, தேநீர் வாங்கித் தந்து என்னை ஆசுவாசப்படுத்தினார். கருத்து முரண்பாடுகளைக் கடந்தவர், அவர். அதற்கெல்லாம் அப்பாற்பட்டவர்.

மனசுக்குள் அன்று அவரைக் கையெடுத்துக் கும்பிட்டேன். இன்றும் நினைவில் வைத்திருக்கிறேன். ரஸிகமணி மறக்கப்படத் தக்கவரல்ல!

காலையில் திருநெல்வேலி பண்டிதமணியுடன் உரையாடிக் கொண்டிருப்பார். மத்தியானம் என்னுடன் பேசிக்கொண்டிருப்பார். சாயங்காலம் றீகல் தியேட்டரில் ஆங்கிலப் பட்த்தை ரஸித்துக் கொண்டிருப்பார்.

அற்புதமான, அதே சமயம் விசித்திரமானவர், அவர்.

அந்த உயரிய மனப் பக்குவம் எனக்கு ஏற்பட வேண்டும் என இன்று வரை முயன்று வருகின்றேன். நண்பர் மு. தளையசிங்கம் அடுத்தவர். கொட்டாஞ்சேனையில் `பூரணி' இதழ் அறிமுக விழா மேடையில் நேரடிக் கருத்து மோதல். கூட்டம் முடிவில் என்னை அழைத்துப் போய் சிற்றுண்டி வாங்கித் தந்து உபசரித்ததை இன்றளவும் யோசித்து மனசில் புளகாங்கிதம் அடைபவன் நான், கருத்து வித்தியாசம் இருந்த போதிலும் கூட, மு. தளையசிங்கத்தின், கணிசமான கட்டுரைகள் மல்லிகையில் தான் வெளிவந்தன என்பது பலருக்குத் தெரிந்த உண்மை. நட்பின் ஆளுமையை அவரிடமிருந்து தெரிந்து கொண்டேன். அவரிடம் நெருங்கிய நட்புப் பாராட்டி வந்துள்ளேன்.

ஆனால், ஒன்று. அடிப்படைத் தார்மீக நெறி பிறழ்ந்தவர்களுடன் நான் நெருக்கத்தையே வைத்துக் கொள்வதில்லை. கோபமல்ல காரணம். எனக்கு ஒத்து வராது. அவ்வளவு தான் `ஆளை விடு!' என நானாகவே ஒதுங்கிக் கொள்வேன். இது சரியோ தப்போ எனக்குத் தெரியாது. என் தாயின் வளர்ப்பு அப்படி. என்னுடைய சிந்தனைப் போக்கு அப்படி. எனது ஆசான்களின் வழி நடத்தல் அப்படி. இது எனது தனிக் குணம்.

கணேஷ் அவர்களைச் சந்தித்ததற்குப் பின்னால் அதே வீட்டில் அதே இடத்தில் இன்னொருவரையும் சந்திக்க முடிந்தது.

அந்தச் சந்திப்பு என் வாழ்க்கையை - ஏன் என்னுடைய பெயரையே - மாற்றி அமைத்து விடும் என அப்பொழுது நான் நினைக்கவில்லை. கற்பனை கூடப் பண்ணிப் பார்க்கவுமில்லை.

தோழர் கார்த்திகேசன் தான் அவரை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். பக்கத்தே என்னை இலக்கியத் துறைக்கு அறிமுகப்படுத்திய ராஜகோபாலன் மாஸ்டரும் உடனிருந்தார். இன்னும் சிலரும் இருந்தனர்.

பெரீய்..... ய மீசை. ஸ்டாலின் மீசையைப் படங்களில் பார்த்திருப்பீர்கள் அல்லவா, அப்படிப்பட்ட மீசை. குறும்புத்தனம் மிளிரும் கண்கள். புன்முறுவல் பூத்த உதடுகள். கதர்ப் பைஜாமா. கதர்ச் சட்டை. தோளில் ஒரு துண்டு. சிவப்புத் துண்டு. எளிமை என்றால், மகா எளிமை!

'தோழர் வாங்க..... வாங்க..... இருங்க....." நகர்ந்து இடம் தந்து, பக்கத்தே இருத்திக் கொண்டு, தோளில் கை போட்டபடி சுக சேமம் விசாரிக்கிறார், அவர். அவர் நிச்சயமாக யாழ்ப்பாணத்தானாக இருக்க முடியாது. காரணம் அவர் தமிழைப் பேசிய விதம். இருந்தும் அந்தத் தமிழ் கொஞ்சி விளையாடியது. உச்சரிப்பில் தனிப்பாசம் தொனித்து, முன்னர் எங்கேயோ சந்தித்துப் பழகியிருக்கிறோமோ, என்ற நெருக்கத்தை ஏற்படுத்தியது. அன்பை வெளிப்படுத்தியது. தோழமை என்ற சொல்லுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தது.

'தோழர்' எனச் சொல்லப் பயம். ஆனால் அவரே வார்த்தைக்கு வார்த்தை தோழர் என என்னை அழைத்தார். அவருடைய வயசென்ன? என்னுடைய வயசென்ன? நானோ ஒரு பொடியன். நான் மலைத்துப் போய் விட்டேன். அவர் பேசுவதையே கேட்டுக் கொண்டிருந்தேன். சம்பாஷிப்பதே ஒரு கலையாகத் தெரிந்து வைத்திருப்பவரைப் போல, சூழ்நிலையைச் செம்மைப் படுத்தும் விதமாகக் கதைத்துக் கொண்டிருந்தார், அவர். அதில் நகைச் சுவையும் இளையோடி இருந்தது.

''இவர் தமிழ் நாட்டுத் தோழர், ஜீவா. ப. ஜீவானந்தம் என்பவர் இவர் தான். இப்ப இவர் இங்கை வந்திருக்கிறார்" எனக் கார்த்தி அறிமுகத்தைத் தொடங்கி வைத்தார். ''எங்களையெல்லாம் பார்ப்பதற்காக இங்கை வந்திருக்கிறார்."

உண்மையைச் சொல்லுகின்றேன். அந்த அறிமுகம் எனக்கு அந்தச் சந்தர்ப்பத்தில் பெரிசாகப் படவில்லை. சும்மா ஒப்புக்கு எனக்கு இவரைப் பற்றித் தெரியும் என்ற விதத்தில் தலை ஆட்டி வைத்தேன்.

இந்திய சுதந்திரத்திற்குப் பின்னர் கல்கத்தாவில் நடந்த கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டில் எடுத்த தீர்மானத்தைச் சாட்டாகக் கொண்டு, கட்சி நேரு அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டு விட்டது. தலைமறைவாகப் போன தலைவர்களில் ஒருவரான ஜீவானந்தம், கள்ளத் தோணி மூலம் வல்வெட்டித்துறையூடாக இலங்கைக்குத் தப்பி வந்து விட்டார். இவரைப் பத்திரமாகக் கொண்டு வந்து, கொண்டு போக வழி சமைத்துத் தந்தவர் 1956ல் பருத்தித்துறை பாராளுமன்றப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப் பட்டிருந்த தோழர் பொன். கந்தையா அவர்கள்.

அது யுத்த பிற்காலம். கெடுபிடிகள் அதிகம். பிரஜைகள் ஊர் விதானைகள் மூலம் பதியப்பட்டு அரிசிக் கூப்பன்கள் வீடு வீடாகப் புழங்கப்பட்ட சமயம்.

அந்தக் கால கட்டத்தில் ஐயம்பிள்ளை என்ற பெயர் பதியப்பட்டு அவருக்கு அரிசிக் கூப்பனும் பெறப்பட்டிருந்தது. நமது தோழர்கள் சமயோஜித புக்தியுடன் இந்த நடவடிக்கைகளை எடுத்திருந்தனர். தோழர் ஜீவானந்தத்தினுடைய புலம் பெயர்ந்த கூப்பனரிசிப் பதிவுப் பெயர்! ஐயம் பிள்ளை என்பதாகும்.

பத்திரிகை மேதை சொக்கலிங்கம் அவர்களுடைய ''தினசரி'' என்ற பேப்பரை ஒழுங்காகப் படித்து வந்த போதிலும் கூட, எனக்கு இந்தத் தகவல்கள் எல்லாம் பின்னால்தான் தெரிந்தன. தோழர்கள் சொல்லச் சொல்லக் கேட்டு வியப்புற்றேன். எனக்குப் புது அறிவு பிறந்தது. புதுத் தகவல்கள் கிடைத்தன. புதிய சேதி சொல்லப்பட்டது. புதிய பார்வை பிறந்தது.

ஒரு தடவை தமிழகத்திற்குக் காந்தி அடிகள் விஜயம் செய்திருந்தார்கள். உற்சாகமான ஆர்வமுள்ள ஓர் இளைஞனைப் பார்த்தார். ''உன்னிடமுள்ள சொத்து எவ்வளவு?'' என்று கேட்டாராம்.

''இந்தியா தான் என்னுடைய சொத்து'' என்றாராம், அந்த இளைஞன்.

''இல்லை.....! இல்லை.....! நீ தான் இந்தியாவின் சொத்து!'' எனக் கூறிப் பாராட்டினாராம் காந்தி மகாத்மா. இது வரலாற்றுச் செய்தி.

மகாத்மா காந்தியால் பாராட்டப் பெற்ற அந்த மகா மனிதன் தான் என்னைத் தன்னருகே இருத்திச் சுக சேமம் விசாரித்தார் என்பதைப் பின்னால் தெரிந்தபோது அவரை மானஸீகமாகவே குருவாக என் உள்ளத்தில் வரித்துக் கொண்டேன்.

அந்த அரசியல் தலைவர் தம் ஆடைகள் அடங்கிய சிறு துணி மூட்டையுடன் சென்னை நோக்கிச் செல்லும் ரயிலில் அமர்ந்திருக்கிறார். ரயில் சென்னை வந்து சேர்கிறது. இறங்கி நடக்க ஆரம்பிக்கிறார்.

சாலையோரமாக நடந்து செல்கையில் எதிர்ப்படுகிற ஒருவர் வியப்புடன் பார்த்து வணக்கம் சொல்லுகிறார்.

''என்னங்க இப்படி?.....''

''வெளியூர்ல கட்சி மீட்டிங்குக்குப் போய்ட்டு இப்பதான் வர்றேன்.....''

''கட்சி ஆபீஸ் ரொம்பத் தொலைவாச்சே. ஏன் நடந்து போறீங்கள்?''

நடந்து வந்தவர் சங்கடத்துடன் நெளிந்தவாறு ''இல்ல.....பஸ்சுக்கு கைல காசில்லை. அதான்.....!'' என்கிறார்.

''இதென்ன, மூட்டை முடிச்சு?''

''இது தொண்டர்கள் கட்சிக்காக கொடுத்த நிதி! ரூபாய் நோட்டுகளோடு, நிறையச் சில்லறைக் காசுகளும் இருந்திச்சு. அதான் மூட்டையாகக் கட்டி வச்சிருக்கேன். கையிலை காசு இருந்துமா நடந்து போறீங்க.....?''

''ஐயோ, இது கட்சிக்காகத் தொண்டர்கள் கொடுத்த நிதி! இதை என் சொந்தச் செலவுக்குப் பயன்படுத்த முடியாது!''

என்றவாறே தொடர்ந்து நடக்கிறார், அந்தத் 'தலைவர்'.

அப்போது தமிழக முதலமைச்சராக விளங்கியவர், காமராஜர். தாம்பரம் பகுதியில் கார் நுழைகிறது. அங்கே ஒரு குடிசையில் தான் ஜீவா வாழ்ந்து வந்தார். காமராஜரைப் பார்த்ததும் வெற்றுடம்பும் வெறும்மேலும் இடுப்பில் கட்டிய துண்டுமாக எழுந்து வரவேற்கிறார் ஜீவா.

''எத்தனை நாளைக்கு இந்தப் குடிசையிலே வாழப் போகிறீங்கள்?'' எனக் கேட்கிறார், காமராஜர்.

''மக்கள் எல்லாம் மாடி வீட்டுக்கு மாறும்போது, நானும் அவர்களோடு மாறிவிடுவேன்'' எனப் பதிலளிக்கிறார் ஜீவா.

''என்ன ஜீவா, நீங்க வசிக்கிற பகுதியிலே பள்ளிக்கூடம் திறக்க போகிறோம். நீங்க வராமலா?'' என்று வினவுகிறார், முதல்வர்.

''கட்டாயம் வருகிறேன். நீங்கள் முன்னால் செல்லுங்கள். இதோ வந்து விடுகிறேன்'' என்று சம்மதிக்கிறார், ஜீவா.

அதை மறுத்து, உடன் வந்தால் தான் ஆயிற்று என்று கட்டாயப் படுத்துகிறார் தமிழக முதல்வர்.

''இல்லை. என் சட்டையும் வேட்டியும் கொடியில் காய்கின்றன. காய்ந்ததும் போட்டுக் கொண்டு வருகிறேன். அதற்குத் தாமதமாகிவிடும். நீங்க முன்னால் செல்லுங்கள்?'' என்ற ஜீவாவின் பதிலைக் கேட்டு காமராஜரும் உடன் வந்தவர்களும் அதிர்ந்து போகிறார்கள்.

ஜீவா அவர்கள் சில நாட்கள் தான் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தார். அவர் போன இடம், கூட்டம், வரவேற்பு அத்தனைக்கும் நான் செல்லத் தவறவில்லை. ஒரே நாம பஜனைதான். வழிபாடுதான்.

என்னுடைய இந்த ஏகலைவப் பக்தியைப் பார்த்து அதிசயித்த ராஜகோபாலன் மாஸ்டர்தான் எனது இயற்பெயரை விடுத்து, ஜீவா என அழைக்கத் தொடங்கினார். எனக்கும் அது மனசுக்குச் சுகமாக இருந்தது. எனது இயற்பெயர், பதிவுப் பெயர், ஞானஸ்நானப் பெயர், ஜோசப் டொமினிக். டொமினிக் என்ற பெயருடன் ஜீவா என்ற பெயரையும் இணைத்துப் பார்த்தேன். டொமினிக் ஜீவா என ஒரு நாதம் பேசியது. பட்டதாரி ஆசிரியரான எனது நண்பன் தேவதாஸன் என்பவர் ஒரு தடவை சொன்னார். ''டொமினிக்

ஜீவா என்ற பெயரின் உச்சரிப்பு ஹாலிவூட் நடிகனின் பெயர் உச்சரிப்பைப் போலத் தொனிக்கிறது" என்றார்.

அவர் இப்பொழுது கனடாவில் வசிக்கிறார்.

பல புனைப் பெயர்களுக்குப் பின்னர், எனது இணைப்புப் பெயரைத்தான் நான் எனது படைப்புக்களுக்குப் பயன் படுத்தி வந்தேன். முதன் முதலில் எனது இணைப்புப் பெயரைத் தாங்கி வெளிவந்த பத்திரிகை 'சுதந்திரன்' என்பதாகும். அதில் எழுதினேன். தொடர்ந்து எழுதினேன்.

கொஞ்சம் கொஞ்சமாக நான் மக்களின் கவனிப்பைப் பெறத் தொடங்கினேன். அந்தச் சமயம் பார்த்துச் சட்டபூர்வமாக நடவடிக்கையை மேற்கொண்டு பிறப்புப் பத்திரத்தில் பதிவு செய்து எனது முழுப் பெயராக 'டொமினிக் ஜீவா' என ஆவணப்படுத்திக் கொண்டேன். பத்திரப் பதிவு செய்து கொண்டேன்.

என்னுடைய படைப்புக்களுக்கு ஆரம்ப காலங்களில் களமமைத்துத் தந்தது 'சுதந்திரன்' பத்திரிகையே. ஆரம்பத்தில் இருந்தே எம்மைப் போன்ற இளைஞர்களை வளர்த்தெடுத்தது. அதன் ஆசிரியர் எஸ். ரி. சிவநாயகம். அங்கு உதவி ஆசிரியர்களாகப் பலர் பதவி வகித்தனர். அ. செ. மு., அ. ந. கந்தசாமி, இராஜதுரை, பிரேம்ஜி, சில்லையூர், துரைசாமி எனப் பலர் அங்கு பதவி வகித்தனர். இவர்கள் அனைவருமே சிறந்த எழுத்தாளர்கள். இலக்கிய நேசிப்பு உள்ளவர்கள்.

உண்மையைச் சொல்லப் போனால் சுதந்திரன் ஆசிரியரும் உதவி ஆசிரியர்களும் இல்லாமல் இருந்திருந்தால் இந்த நாட்டில் இந்த அளவிற்கு எழுத்தாளர் பட்டாளமே உருவாகி இருக்க முடியாது. இதில் விசித்திரம் என்னவென்றால் தமிழரசுக் கட்சிப் பத்திரிகை சுதந்திரன். ஆனால் அதில் உருவாகின எழுத்தாளர்களில் அநேகர் இடதுசாரிச் சிந்தனையாளர்களே. சுதந்திரனில் எங்களது படைப்புக்கள் இடம் பெற கொழும்பில் அன்று உத்தியோகம் பார்த்து வந்த எழுத்தாளர் கணேசலிங்கனின் பங்குப் பணியும் குறிப்பிடத்தக்கதாகும்.

என்னுடைய முதல் சிறுகதைத் தொகுதி சென்னையில் 'சரஸ்வதி' வெளியீடு மூலம் விஜயபாஸ்கரனைக் கொண்டு வெளியிட ஆவன செய்தவர் இதே கணேசலிங்கன் அவர்கள்தான்.

1960ம் ஆண்டுக்கான ஸ்ரீலங்கா சாகித்ய மண்டலப் படைப்பு இலக்கியப் பரிசை முதன் முதலில் பெற்றுக் கொண்டதும் எனது முதல் தொகுதியான 'தண்ணீரும் கண்ணீரும்' என்ற இந்த நூலே. இதன் மூலம் தேசம் தழுவிய இலக்கிய அங்கீகாரம் எனக்குக் கிடைக்கப் பெற்றது. அத்துடன் சரஸ்வதி சஞ்சிகையில் தொடர்ந்து எழுதியதின் மூலம் தமிழ் நாட்டிலும் பெரிதும் அறியப்பட்டிருந்தேன்.

1961ம் ஆண்டு நவம்பர் மாதம் முதன் முதலில் நான் தமிழ் நாட்டிற்குப் போயிருந்த சமயம், ஒரு மாதம் சரஸ்வதி ஆசிரியர் திரு. விஜயபாஸ்கரனின் விருந்தினராகத் தங்கியிருந்தேன். ஒரு நாள் கலை இலக்கியப் பெரு மன்றத்தின் தலைவர் என்ற முறையில் தோழர் ஜீவானந்தத்திடமிருந்து அழைப்பு வந்திருந்தது. என்னைப் பாராட்டிக் கௌரவிக்கப் போவதாக அந்த அழைப்பு என்னை விரும்பிக் கூப்பிட்டிருந்தது. அவர் தன் கைப்படக் கடிதமும் எழுதியிருந்தார்.

திருவல்லிக்கேணி என நினைக்கின்றேன். ஒரு கட்டட மேல் மாடியில் வெகு சிறப்பாக என்னை வரவேற்று உபசரித்தனர். சிற்றுண்டி அருந்திய வண்ணம் அந்தக் கூட்டம் நடைபெற்றது.

தோழர் ஜீவானந்தம் இதயத்தைத் தொடக் கூடிய ஒரு சிற்றுரையை நிகழ்த்தினார். நண்பர்கள் வரவேற்றுப் பேசினார்கள். எனக்கோ தலை கொள்ளாத மகிழ்ச்சி. புளகாங்கிதம். வார்த்தைகளுக்கு அகப்படாத பெருமிதம்.

யாழ்ப்பாணத்தில் இளம் வயசில் அவரைச் சந்தித்த நான், வாலிபனாக வளர்ந்து, படைப்பாளியாக அவர் முன்னால் நின்று அவரது பாராட்டையும், ஆசீர்வாதத்தையும் பெறுகிறேன் என நினைத்த பொழுது என் நெஞ்சு விம்மியது.

என்னை வழியனுப்பிய போது, அந்தக் கனம் பண்ணத்தக்க தோழர் என் தோளின் மீது கை வைத்தவாறு மெதுவாகக் கேட்டார். ''அது சரி தோழர். உங்க ஊரிலே ஜீவா என்ற பெயர் பரவலாகக் காணப்படுகிறதா?'' எனக் கேட்டார்.

நான் சொண்டுக்குள் சிரித்தபடி அவரைப் பார்த்தேன். ''அப்படி இல்லைத் தோழர். நீங்க ஒரேயொரு தடவை தான் நம்ம நாட்டுக்கு வந்தீங்க. அதுவும் தலை மறைவா வாழ்ந்தபோது வந்தீங்க. அதற்கொரு ஞாபகச் சின்னம் வேண்டாமா? என் முன் பேரின் பின்னால் ஒட்டிக் கொண்டுள்ளதே ரெண்டெழுத்துப் பேர். அது உங்கள் வருகையின் ஞாபகச் சின்னம்!''

''அப்படியா? அப்படியா?'' என என்னை இறுக அணைத்தபடியே பார்வைப் பரவசத்துடன் என்னைப் பார்த்தார். அவரது பார்வையில் தோழமையின் கனிவு நிறைந்திருந்தது. எனக்கு நெஞ்சு நிறைந்தது.

நான் ஆதர்ஸமாகப் பின்பற்றிய தோழர் ஜீவானந்தம் அவர்கள் தன் கைப்பட 27-11-61 ல் பரிசுபெற்ற சிறுகதைப் பிரதியின் முகப்பு பக்கத்தில் கீழ்க் கண்டவாறு எழுதி தமது கைச்சாத்தினையும் இட்டுத் தந்தார்.

''தோழர் ஜீவாவுடன் உரையாடிக் கொண்டிருந்தேன். அவர் போன்ற இலங்கைத் தமிழ் எழுத்தாள நண்பர்களும் தக்க திசை வழியில் உறுதியாகச் செல்வதை நன்கு அறிந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்தது. எனது கலை இலக்கிய உடம்பிலும் புது இரத்தம் பாயும் பேறு பெற்றேன். வாழ்க அவர்

பணி. வளர்க அவர் கலைத்திறன்!" எனக் குறிப்பிட்டு எழுதி வாழ்த்தியிருந்தார்.

இந்த இடத்தில் எனது மதுரை அநுபவத்தைச் சொல்லவேண்டும். இந்தத் தடவைதான் நான் மதுரைக்கு முதன் முதலில் வந்திருந்தேன். ஏன். தமிழகத்திற்கும் எனது வருகை இதுதான் முதல் முதல் தடவை. 1961ம் ஆண்டு நவம்பர் மாதம்.

மதுரையில் டவுண் ஹால் றோட்டில் ஓரிடத்தில் லாட்ஜில் ரூமெடுத்துத் தங்கியிருந்தேன். தலைமன்னார் - தனுஷ்கோடி கப்பல் வழியாக வந்திருந்தேன். என்னுடைய ஒரு நண்பரும் வந்திருந்தார். அவர் சேலத்திற்குப் போய் விட்டார்.

மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தைத் தொடர்ந்து பார்ப்பதிலேயே எனக்கு அப்படி ஓர் ஆவல். தொடர்ந்து கோயிலைப் பார்த்துப் பார்த்துக் களித்தேன்.

ஒருநாள் சாயங்காலம் ரூமை விட்டு வெளியே வந்தபோது தெருவில் ஒருவர் சந்தித்தார். கிட்டே நெருங்கி ''ஸாரு எந்த ஊரு? கேரளமா?" என்றார்.

''இல்லை! சிலோன்".

''சிலோனென்றால், கொழும்புவா?"

''ஓம்"

''ஊர் பார்க்க, டூரிஸ்டா வந்தீங்களா?"

''ஓம்"

இந்த விசாரிப்புக்களை நான் எனக்குள் மெல்லிசாக ரஸித்தேன். சிறுகதைகளில் இப்படியான `அந்த' விவகாரப் பாத்திரங்களைப் படித்துத் தெரிந்துள்ளேன். ஒருவேளை அப்படியானவராக இருக்குமோ என்ற மன ஐயம். `இருந்தாலும் இருக்கும்!'

''ஸார் தப்பா எடுத்துக்காதீங்க. அருமையான குட்டி. தஞ்சாவூரிலிருந்து இப்பத்தான் வந்திருக்கு. வீட்டோடை இடம். மரியாதையானவங்க.... முடியுமானாச் சொல்லுங்க"

எனக்குத் தேகமெல்லாம் ஓடி விறைத்துவிட்டது. முகம் வியர்த்தது. எனக்கு இது புது அநுபவம். மனசில் சபலம். வேறு சலனம் வேறு. ஆள், முகம் தெரியாத புது ஊர். மெல்லிய நப்பாசை. பேரம் பேசினோம்.

நூறு ரூபாயில் ஆரம்பித்து எண்பது ரூபாயில் பேரம் முடிந்தது.

கோயில் சுற்று வட்டம் கடந்து, பாத்திரக் கடைகளைத் தாண்டி, பூ விற்கும் இடங்களையெல்லாம் ஒதுக்கி, ஒரு சந்து வழியாக நான் அழைத்துச் செல்லப்பட்டேன். மூத்திர வாடை மூச்சை அடைத்தது. வாகனங்கள் போக்கு

வரத்துச் செய்ய முடியாத சிறிய சந்து.

தெரு வாசல். வாசலோடு வீட்டுப்படி. தெருக் கதவை இரண்டு தடவை தட்டினார், வந்தவர். அது ஒரு சங்கேத பாஷை போலும். கையை நுழைத்துத் தெருக் கதவின் கொக்கியைத் தளர்த்தி தெருக் கதவை அகலத் திறந்து விட்டார்.

சொல்லி வைத்தாற் போல, வீட்டுக் கதவும் திறக்கப் பட்டது. சின்ன வீடு. படிக்கட்டுக்கு முன்னால் கோலம் போடப்பட்டிருந்தது. குடும்ப வீடுபோலக் காட்சி தந்தது.

நிமிர்ந்து நோக்கினேன். மஞ்சள் குளித்த முகம். முகத்தில் செயற்கைப் புன்னகை ஒன்று மிளிர்ந்தது. கண்களில் மைதீட்டப் பெற்றிருந்தது. தலையில் பூ. மூக்குத்தி மின்னியது. ஒருவகைக் கவர்ச்சி இருக்கத்தான் செய்தது.

''யோகா..... யோகா..... ஸாரை உள்ளே கூட்டிக் கொண்டு, போ. பார்த்துக் கவனி. ஸார் கொழும்புக்காரர்.''

படாரென்று இரத்தம் முழுவதும் சிரசுக்கேறிய அவலம். நெஞ்சை ஏதோ செய்தது. சிந்திக்கவே இயலாத பதற்றம். தெருக் கதவை விரியத் திறந்து கொண்டு அந்தக் கணமே நான் வீதிக்கு வந்து விட்டேன்.

அழைத்து வந்தவர் பதறிப் போய் விட்டார். ''என்ன ஸார்.... என்ன ஸார்.... எங்களோடை விளையாடிறீங்களா?'' என்றார். சட்டைப் பையைத் துளாவினேன். ஐம்பது ரூபா தட்டுப்பட்டது. பொத்தியபடி அவரது கைகளுக்குள் ரூபா நோட்டைத் திணித்து விட்டு, நான் அவசர அவசரமாகப் பிரதான தெருவுக்குள் நுழைந்து, நிமிர்ந்தேன்.

மெல்லிய காற்று வீசியது. இந்த மாறுதலுக்கு எல்லாம் காரணம் யோகா என்ற பெயர்தான். எனக்கு ஒரேயொரு சகோதரி. அவள் மீது அதீத பாசம் பாராட்டி வந்தவன், நான். அவளுடைய பெயரும் யோகா. மற்றவர்கள் என்னைப் பற்றி, என் ஒழுக்கத்தைப் பற்றி வெகு தூய்மையாகக் கணித்திருக்கலாம். அத்தனை பெரிய யோக்கியனல்ல, நான். இப்படியான சபல புத்தியும், சலன எண்ணங்களும் எனக்கு ஏற்கெனவே ஏற்பட்டதுண்டு. அதன் வெளிப்பாடுகளில் இதுவும் ஒன்று.

நான் நீங்கள் நினைத்திருப்பது போல, அத்தனை யோக்கியனல்ல என எழுத்தில் இதைப் பகிரங்கமாக ஒத்துக் கொள்ளுகின்றேன். இதைப் பகிரங்கமாக என் எழுத்தில் ஒத்துக் கொள்வதற்கு, நான் எத்தனை பெரிய யோக்கியனாக இருக்க வேண்டும்!



17

டாமினிக் ஜீவா என்ற பெயரில் நான் எழுதத் தொடங்கினேன். தமிழ் நாட்டிலிருந்து அன்று வெளிவந்து கொண்டிருந்த விஜயபாஸ்கரனின் 'சரஸ்வதி' சஞ்சிகையில் தொடர்ந்து எழுதி வந்தேன். விஜயபாஸ்கரன் அவர்கள் அதன் ஆசிரியராகவும் வெளியிடுபவராகவும் இருந்தார். அடிக்கடி கடிதம் எழுதுவார். 1958ல் சரஸ்வதியில் என்னுடைய படத்தை அட்டைப் படமாகவும் வெளியிட்டிருந்தார்.

பலர் மத்தியில் நான் அன்று பேசப்பட்டேன். அறியப்பட்டிருந்தேன். மெல்ல மெல்ல என்னுடைய எழுத்தும், பெயரும் சுவைஞர்கள் மத்தியில் பிரபல்யமடையத் தொடங்கின.

புகழ், செல்வாக்கு, மதிப்பு போன்றவைகள் சம்பந்தமாக எனக்கென்றொரு பார்வை உண்டு. இந்தக் கண்ணோட்டம் இளவயசுக் காலத்திலிருந்தே என் நெஞ்சில் சிக்காராகக் குந்தியிருந்து கொண்டேயிருக்கிறது.

எனது வாலிபக் காலத்தில் யாழ்ப்பாணம் றீகல் தியேட்டரில் தாக்கமான ஹாலிவுட் படமொன்று பர்த்தேன். 'பிளட் அன்ட் சான்ட்' இரத்தமும் மண்ணும் என்பது அதன் பெயர். அன்று மேல் நாட்டில் பிரபலம் பெற்றிருந்த நடிகர் ரைரன் பவர், உலக இளைஞர்களின் கனவுக் கன்னி ரீத்தா ஹேவர்த் நடித்திருந்த ஆங்கிலப்படமது. அன்று அப்படம் பிரபலமாகப் பேசப்பட்டு வந்தது.

ஸ்பெயினில் காளை மாடு பிடிக்கும் ஓர் அசகாய சூரனது வீரத்தின் பெறுபேறுகள் பற்றிய படமது. தமிழ் நாட்டில் ஜல்லிக்கட்டு என இதைக் குறிப்பிடுவார்கள். மதுரை மாவட்டம் அலங்கா நால்லூர் அருகே உள்ள

பாலமேட்டில் வருடா வருடம் பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப் பொங்கல் தினத்தில் அந்த ஜல்லிக்கட்டு விழா நடைபெறுவது வழக்கம். இந்த விழாவில் மதுரை ஜில்லாவிலுள்ள ஏராளமான கிராமங்களில் இருந்தெல்லாம் காளை மாடுகள் வந்து சேரும். இதில் பொத்துகம்பட்டி, காஞ்சரம் பேட்டை, சரந்தாங்கி, கீழ்ச்சின்னம் பட்டி, ஆனையூர், அலங்கா நல்லூர், சந்திர வெள்ளாம்பட்டி, வலசை, முடுவார்பட்டி, வீரபாண்டி, சிங்கம்புணரி, அரும்பலூர் ஆகிய ஊர்களைச் சேர்ந்த காளைகள் இடம்பெறுவது ஆண்டாண்டு காலமாக நடைபெறும். சம்பிரதாயச் சடங்காகும். வெளிநாட்டுப் பார்வையாளர்களும் இதில் கலந்து சிறப்பிப்பார்கள் அத்தனை சிறப்பு மிக்க நிகழ்ச்சி இது. வீரம் செறிந்த மயிர்க் கூச்செறியும் நிகழ்ச்சி.

சீறிப் பாய்ந்து வரும் காளைகளை வீர வாலிபர்கள் அடக்கி, மடக்கி, வீழ்த்தி வெற்றி கொள்வார்கள். ஊரெல்லாம் அந்த வீரர்களைக் கொளரவித்துப் பேசுவார்கள். பரிசளித்துக் கொளரவிப்பார்கள். தத்தமது ஊர்களின் வீரப் பிரதாபங்களையெல்லாம் சாங்கோபாங்கமாகப் பேசிப் பேசிக் களிப்படைவார்கள்.

காதல் அரும்புவதும், திருமணங்கள் நிச்சயிக்கப்படுவதும் இந்த விழாவின் பெறுபேறாகப் பின்னால் மலர்வதும் உண்டு. இது ஆண்டாண்டுகளாக நடைபெறும் சம்பவங்கள்.

இந்தத் தமிழ் நாட்டுத் தகவல்கள் ஏற்கெனவே எனக்கு நன்கு தெரியும். இதன் பின்னணியிலேயே நான் அந்தக் ஹாலிவுட் படத்தைப் பார்த்து ரஸித்தேன். புரிந்து கொண்டேன். காளைகளை அடக்கி வெற்றி கொண்டு மகா வீரனாகப் பவனி வந்து கொண்டிருந்த அந்த வீரனை, ஒரு பெண் காதலித்தாள். அன்பு செலுத்தினாள். மக்களோ அவன் புகழ் பாடினர். பத்திரிகைகள் எல்லாம் அவனைப் பற்றிய செய்திகளையே பிரசுரித்தன. அவனது வீரத்திற்கு வழிபாடு செய்தன. இளைஞர்கள் வெறி பிடித்தவர்களைப் போல, அவனது நாமத்தையே ஜெபித்த வண்ணம் வலம் வந்தனர் - இன்றைய இளைஞர்கள் ரஜனி காந்தை வழிபடுவதுபோல.

புகழின் உச்சியில் இளைஞன் ஜொலித்துக் கொண்டிருந்தான். ஒவ்வொரு முறையும் ஜெயித்துக் கொண்டிருந்தான். அந்தக் கட்டத்தில் இன்னுமோர் காளை பிடிக்கும் விழா அறிவிக்கப்பட்டது.

'யாராலுமே இதுவரை அடக்க முடியாத, இந்தக் காளையை அடக்கும் வீராதி வீரன் யார்?' என்ற விளம்பரப் பின்னணியுடன், அந்த விழா பிரபலப்படுத்தப் பட்டது. ஊரெங்கும் இதே பேச்சு.

நமது வீரன் அந்தச் சவாலை ஏற்றுக் கொண்டான். களத்தில் குதித்தான். தன்னைத் தயார்படுத்திக் கொண்டான். நிதானமாகக் களத்தில் நின்றான்.

இந்த வீரனைக் காதலித்த பெண், கலரியில் இருந்த வண்ணம் முத்தங்களைக் காற்றில் தூதனுப்பிக் கொண்டிருந்தாள்.

உசுப்பிவிடப்பட்டதால் மூர்க்கமடைந்து வெறிகொண்டு களத்தில் திமிறிய காளையை நோக்கி வியூகமமைத்துப் போர் தொடுத்தான், அந்த வீரன்.

'காளைக்கு வெற்றியா? அல்லது வீரனுக்கு வெற்றியா?' என, சன வெள்ளம் நினைத்த வேளையில் தனது பலத்தையெல்லாம் ஒருங்கு திரட்டிய காளை, திமிறி வீரனது பிடியிலிருந்து விடுபட்டு, விடுபட்ட அதே வினாடி, தனது கூரிய கொம்புகளைச் சரித்து வீரவாலிபனது வயிற்றுப் பக்கம் செலுத்தி, குடலைக் கிழித்துப் பந்தாடி விட்டு, சனக் கூட்டத்தை வெற்றி மமதையுடன் ஒரு கணம் நிமிர்ந்து பார்த்து, உடலைச் சிலுப்பிக் கொண்டு நின்றது.

சனக்கூட்டம் அப்படியே விக்கித்துப் போய்விட்டது. இந்த மௌனம் சற்று நேரம்தான். சற்றே நேரம்தான்.....

பின்னர் களமே கையொலி மூலம் தனது ஆரவாரத்தை வெளிப்படுத்தியது. மக்கள் கூட்டம், எழுந்து நின்று, இந்த இரத்த வேள்வியை ரஸித்து மகிழ்ந்தது.

இரத்த வெள்ளத்தில் கிடந்த அந்த வீரனது உடலை உடனடியாக பக்கத்தேயுள்ள ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார்கள், அமைப்பாளர்கள்.

களத்தில் காட்சி மாற்றம் இடம்பெற்றது. புதிய இளம் வீரனொருவன் உடனடியாகக் களத்தில் குதிக்கிறான். காளை போக்குக் காட்டுகிறது. இறுதியில் அந்த வாலிபன், அதே காளையை அடக்கி, மடக்குகிறான். வெற்றி கொள்ளுகிறான்.

சனங்களின் வெற்றி ஆரவாரக் கரவொலி மெல்ல மெல்ல வைத்தியசாலை வட்டத்தை வந்தடைகின்றது. வீரனது காதுகளிலும் விழுகிறது.

அதைக் காதால் வாங்கிய வண்ணம் இந்த வீரவாலிபன் மரணத்தை அரவணைக்கின்றான். இதில் விசித்திரம் என்னவென்றால் அவனது புகழின் எழுச்சிக் காலத்தில் அவனது இதயத்தைத் தனது காதல் மொழிகளால் குளிப்பாட்டிய அந்தக் காதலி, புதிய வீரனுக்கும் காற்றில் முத்தத்தைத் தூது அனுப்புகிறாள்.

களம் மாறவில்லை. காட்சி மாறுகின்றது.

இந்தச் சினிமாப் படம் என்னை ரொம்பவும் பாதித்து விட்டது. புகழ், செல்வாக்கு, மக்கள் அபிமானம் என்பவை பற்றியே எனக்குப் புதிய பாடம் கற்பித்துத் தந்தது. புகழைத்தேடி நாம் ஓடக்கூடாது. புகழ் தன்னாலே வந்தால் வரட்டுமே. வராது விட்டால் போகட்டும்!

அந்தக் காலம் தொட்டு இன்று வரை புகழை நான் தேடிப் போவதில்லை. புகழின் நிலையாமை பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். புகழப்படுவதை விடச் சாதனை செய்வதிலேயே நான் பெரிதும் நாட்டம் கொண்டு உழைத்து

வந்துள்ளேன். புகழ் நிலைத்து நிற்காது. சாதனை நிலைத்து நிற்கும்.

அந்த உள்ளுணர்வுதான் என்னை இதுவரை வழி நடத்தி வந்துள்ளது என்பதை இப்போதும் உணர்ந்து கொள்ளுகின்றேன். அந்தக் காலகட்டச் சந்தர்ப்பத்தில் இன்னொரு சம்பவமும் நடந்தது. இன்றுவரை என் நெஞ்சில் நிறைந்துள்ளது. மனப் பதிவிலிருந்து அகலாத காட்சி.

ஒரு நாள் மதியம் ஒரு வாலிபன் என்னைத் தேடி வந்தான். இப்படி வருபவர்கள் தங்களது மனப் பாரத்தை என் தலையில் ஏற்றித் தமது சுமையைக் குறைப்பவர்கள் - இப்படி அநேகருண்டு.

பிற்காலத்தில் மல்லிகை மலர் வேலை செய்து கொண்டிருந்தேன். ஒரு இள வயசுக்காரர் என்னைத் தேடி வந்தார். வந்தவரை அமரச் சொல்லி, எனது வேலைகளையெல்லாம் ஒரு பக்கம் ஒதுக்கிவிட்டு, அவரை விசாரித்தேன். வருகிறவர் யாராக இருந்தாலும் அவர் என்னைத் தேடி - மல்லிகையைத் தேடி வருகின்றார் என்றால், அவரைத் தக்க மரியாதையுடன் கௌரவமாக வரவேற்று உபசரிக்க வேண்டுமென்பது, எனது நீண்ட காலப் பழக்கம், அது எனது இலக்கியக் கடமையும் கூட. அதுதான் மனிதப் பண்பு. வருபவரைத் தகுந்த முறையில் வரவேற்பதுதானே, தனி மனித நாகரிகம்!

எனவே, வந்தவரை வரவேற்றுப் பேச்சுக் கொடுத்தேன். வந்தவர் இலக்கியத்தைத் தவிர, ஏதேதோ எல்லாம் பேசினார். வெகு விஸ்தாரமாகக் கதைத்தார். முகத்தை முறிக்கக்கூடாது என்பதற்காக நானும் சேர்ந்து நன்றாக நடித்தேன். ஒரு மணித்தியாலத்திற்கு மேலாகி விட்டது. பொறுமையை விழுங்கிக் கொண்ட நிலையில் கடைசியாக அவரிடம் வாய்விட்டுக் கேட்டேன்: ``என்னைத் தேடி வந்திருக்கிறீங்க.... வந்த சங்கதி என்ன?'' முடிவாக, அவர் சொன்னார்: ``பக்கத்திலேயுள்ள ராஜா தியேட்டரில் படம் பார்க்க வந்தனான். துவங்க இன்னும் நேரம் கிடக்கு. அது தான் உங்களைப் பார்த்துப் பேசி விட்டுப் போகலாம் எண்டு வந்தனான். நேரம் போகவேண்டுமெல்லோ, எனக்கு!''

எப்படி இருக்கும் எனக்கு? இப்போது வந்த வாலிபன் அப்படிப் பொழுதுபோக்கும் நோக்கத்துடன் வந்ததாக எனக்குத் தெரியவில்லை.

மகா மகா சோகத்தை முகத்தில் அப்பிக் கொண்டு, அழுவாரைப் போல, அவன் என் முன்னால் காட்சி தந்தான். முகம் வாடிப்போயிருந்தது.

அவனைப் பார்க்க எனக்குப் பாவமாக இருந்தது. பரிதாபமாகவும் இருந்தது. யாழ்ப்பாணப் பட்டினத்திற்கு மிகப் பக்கமாக உள்ள ஒரு சிற்றூரில் இருந்து வந்தவன், அந்த வாலிபன். மிக மென்மையாகப் பேசி என்னைக் கவர்ந்தான். உண்மை பேசினான். பண்பாக உரையாடினான். ``உங்களைக் கஷ்டப்படுத்த நான் விரும்பவில்லை. இது என்னுடைய சொந்தச் சங்கதி. நீங்க கேட்க விருப்பப் படவில்லை எண்டால், நான்

திரும்பிப் போகச் சம்மதம்!'' என்றான், எடுத்த எடுப்பிலேயே. எனக்குத் தர்மசங்கடமாக இருந்தது.

அவனது இந்த வினயமான பேச்சு என் மனசைத் தொட்டது. ''அப்படியில்லைத் தம்பி, பேசுவம். கொஞ்சம் வேலை கிடக்கு. அதுதான் யோசிக்கிறன். கொஞ்ச நேரம் காத்திருக்கலாம், தானே?''

''உங்கட வேலையை நான் குழப்பேல்லை. நீங்க ஆறுதலாக எல்லா வேலைகளையும் முடிச்சுப் போட்டு வந்தாக் காணும். நான் காவலிருக்கிறன்.'' என்றான்.

இப்படிக் குழைந்து, நெளிந்து பேசுபவனை நான் எப்படித் தட்டிக் கழிக்க முடியும்? அவனிடத்தில் எப்படி அலட்சியம் காட்ட முடியும்?

வேலைகளை ஒருவாறாக ஒப்பேற்றி விட்டு, வந்து அமர்ந்தேன். ''தேத்தண்ணி குடிச்சுக் கொண்டே பேசுவோமே?'' என நான் அழைத்ததிற்கு அவன் திட்டமாக மறுத்து விட்டான். ''கொஞ்சம் தண்ணி இருந்தால், குடுங்கோ..... தாகமாயிருக்கு.''

தண்ணீர் பருகிய பின்னர் அவன் என்னை நோக்கிச் சொன்ன முதல் வார்த்தை: ''நான் தற்கொலை செய்யலாமெண்டு யோசிக்கிறன்!''

எனது மண்டைக்குள் அணுகுண்டு வெடித்தது போலிந்தது. நான் இதை எதிர்பார்க்கவில்லை. நான் திகைப்பை என் முகத்தில் படர விட்டுக் கொள்ளாமல் அந்த முன் பின் தெரியாத வாலிபனையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

''அதுக்காகத்தான் உங்களிட்டை ஆலோசனை கேட்டுப் போகலாம் எண்டு வந்திருக்கிறன்! உங்களுடைய யோசினை எனக்கு இப்போ தேவை''

அதிர்ச்சியாக இருந்தாலும் அந்த நிலையிலும் மனசு தர்க்கத்திலிடுபட்டு உள்ளுக்குள்ளேயே சிரித்துக் கொண்டது. 'தற்கொலை செய்யிறதுக்கு ஆலோசனை கேட்டு நல்ல ஆளைத்தான் தேடிக் கண்டு பிடித்திருக்கிறான்! அடிடா சக்கை!' இந்த நகைச்சுவை உணர்வுக் கலப்புக்காக உடனடியாக வெட்கப்பட்டேன். இந்த நினைவுக்காக நான் மனம் குமைந்தேன்.

மனசிலே ஆழ்ந்த துயரத்தைச் சுமந்து கொண்டு என்னிடம் தனது மனப் பாரத்தைச் சொல்லலாம் என வந்தவனின் முன்னால் இப்படி நினைப்பதே அநாகரிகம் என அந்தக் கணமே வருத்தப்பட்டேன்.

அந்த மனவேதனைச் சொற்களில் தொனிக்க, ''தம்பி தற்கொலை செய்யுமளவிற்று இந்தச் சின்ன வயசிலே அப்படியென்ன கஷ்டம் வந்து விட்டது, உமக்கு? மனந்திறந்து சொல்ல விருப்பமெண்டால் சொல்லும்!'' என நான் அவனது துன்பத்தைப் புரிந்து கொண்டவன் பாணியில், என் குரலில் துயரத்தைத் தேக்கி வைத்த வண்ணம் கேட்டேன். ஆதரவாக விசாரித்தேன்.

`அதை விளக்கமாகச் சொன்னால் தான், வடிவாக விளங்கும். நான் நேத்து ராவே வீட்டை விட்டு வெளிக்கிட்டுப் போட்டன். ராவெல்லாம் கடைப் படிக்கட்டுகளில் படுத்திருந்தன். நித்திரை வரேல்லை.ஒரே யோசனை. சாகிறதைத் தவிர எனக்கு வேறை மார்க்கமொண்டும் பிடிபடேல்லை. அந்த முடிவோடை தான் உங்களைப் பார்த்து யோசனை கேட்டுப் போக வந்தன்! இப்ப என்னுடைய மனப் பாரத்தைக் கொட்டிப் போட்டன்."

``இப்ப என்னட்டைச் சொல்லும். எதென்டாலும் இப்ப என்னட்டைச் சொல்லும்? இப்படி அவலமாகச் சாகிற முடிவுக்கு ஏன் வந்தனீர்? என்ன காரணம்?"

``விவரமாகச் சொல்ல இப்ப எனக்கு மனசில்லை. கேட்டாச் சிரிப்பீங்க. இல்லையெண்டாத் தடுப்பீங்க. அல்லாட்டி என்னைப் பேசிப் போட்டுத் திரத்தி வீடுவீங்க. அப்படித்தான் நீங்க திரத்திட்டாக் கூட, நான் போவன்!"

மேற்கொண்டு என்னால் தொடர்ந்து பேச இயலவில்லை. சிறிது நேர இடைவெளிக்குப் பின்னர் தொடர்ந்து கேட்டேன். ``சரி இப்படியான முடிவுக்கு வந்துவிட்ட பின்னர், என்னைத் தேடி ஏன் வந்தீர்? அதைப் பற்றியாவது சொல்லுமன்?" என அவனது மன அவசத்தை வெளிக் கொண்டு வர நினைத்துத் தொடர்ந்து கேட்டேன்: ``என்னத்திற்காக என்னைத் தேடிவந்தனீர்?"

``நான் படிக்கிற காலத்திலை உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தன். எங்கடை வகுப்பாசிரியர் படிச்சவர். அதோடை கவிதை கூட எழுதக் கூடியவர். அவர் ஒரு தடவை உங்களைப் பற்றிச் சொல்லியிருந்தார். அது என் மனசில நல்லாப் பதிஞ்சு போயிருந்தது. இப்ப இந்தக் கஷ்டம் வந்திருக்கிற வேளையிலை, உங்கட ஞாபகம் தான் என் மனசிலை தட்டுப்பட்டது. அதுதான் உங்களைத் தேடி வந்தனான். அதோடை நானும் உங்கடை சமூகத்தைச் சேர்ந்தவன் தான்! இதுதான் எல்லாத்தையும் விட முக்கியமான காரணம்."

``சரி..... கண்டிப்பாகத் தற்கொலை செய்வதுதான் உம்மட முடிவா? இதிலை மாற்றமேதும் இல்லையா? வடிவா யோசித்துப் போட்டுச் சொல்ல வேணும்! இதுதான் கடைசியாக, உம்மட முடிவா?"

``சத்தியமா நான் சாகிற முடிவை எடுத்துப் போட்டன். இனிமேலை இந்த உலகத்திலை நானிருந்து வேலையில்லை. அதனாலைதான் இந்த முடிவுக்கு" வந்தனான்.

``சரி, நல்லது. என்னட்டை என்ன யோசினை கேட்க என்னைத் தேடி வந்தனீர்?"

``எப்படி நோவில்லாமல் சாகலாம் எண்டு யோசினை கேட்கத்தான். நான் கேட்கிறது உங்களுக்குப் பகிடியாகத் தெரியுதா? தெரிஞ்சால் வாய் விட்டுச் சொல்லுங்கோ. அதைப் பற்றிப் பறவாயில்லை! சொல்லிவிடுங்கோ!"

அவன் தன் முடிவை வெகு சீரியஸாகத்தான் சொன்னான். அவன் தனது இறுதி முடிவைத் திட்டவட்டமாகத் தீர்மானித்து விட்டவன் போலத் தோன்றினான். நான் இதற்கு எதிராகச் சொன்னாலோ அல்லது புத்திமதி கூறினாலோ உடனடியாகப் புறப்பட்டு விடுபவன் போல, அந்தரப்பட்டான். பார்வை அங்கும் இங்கும் சுற்றிச் சுழன்றது. நிலையாக இருக்கப் பயப்படுபவன் போலத் தென்பட்ட அவன், அடுத்த கணம் அழுது விடுபவன் போலத் தோற்றமளித்தான்..

பரிதாபமாக இருந்தது. நான் நிலைமையின் அபாயக் கட்டத்தை ஓரளவு ஊகித்துக் கொண்டேன்.

முடிவில் அவனுடைய அந்தக் கோரிக்கைக்கு இணங்கினேன். இருவரும் இறுதி முடிவெடுத்துக் கொண்டோம். அவனது கோரிக்கையை நானும் ஏற்றுக் கொண்டேன்.

''சாப்பிட்டீரா?'' எனக் கேட்டேன்.

எனக்குத் தெரியும் இந்த மனநிலையிலுள்ள ஒருவன் உணவைப் பற்றி அக்கறையே பட்டிருக்க மாட்டான் என எனக்கு நன்கு தெரியும். இருந்தும் அநுதாபம் தொனிக்க வைத்தேன். ''சாப்பிட்டீரா''

'இல்லை'..... என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டிக் காட்டினான். எனக்கு மனசுக்குள் வேதனை கலந்த சங்கடம். வயிற்றைக் கலக்கியது.

''வாரும் கடைக்குப் போய் ஏதாவது ஒரு வாய் சாப்பிடுவம். எனக்குப் பசிக்கிது. உம்மை இருத்திவிட்டுத் தனியப் போய்ச் சாப்பிட ஒரு மாதிரியாக இருக்குது!'' என்றேன். நேரத்தைக் கடத்துவதுதான் எனது உள் நோக்கம்.

அவன் முகபாவத்தால் மறுப்புத் தெரிவித்தான். ''வேண்டாம்!'' என்றான்.

நான் தொடர்ந்து சொன்னேன்: ''இத்தனைக்கும் நான் உம்முடன் ஒத்துழைத்தேன். உம்மட முடிவுக்குக் கூட ஒத்துக் கொண்டேன். இப்ப என்னோட விருப்பத்துக்கு நீர் சம்மதிக்க வேணும். என்னை மதிக்கிறதெண்டால் என்னோட வாரும்'' என்று சொல்லிக் கொண்டே நான் வெளியேறக் காலெடுத்து வைத்தேன். வெளியே புறப்படுவதைப் போலப் போக்குக் காட்டினேன்.

என்ன நினைத்தானோ அவனும் எழுந்து என்னுடன் புறப்பட ஆய்தமானான். பின் தொடர முயற்சித்தான்.

நான் விடவில்லை. கூஜாவிலுள்ள தண்ணீர் எடுத்துக் கொடுத்து முகத்தை அலம்பச் சொன்னேன். சீப்புக் கொடுத்து ஒழுங்காகத் தலை வார வைத்தேன்.

நேரே தாமோதர விலாசுக்கு அழைத்துச் சென்று சிற்றுண்டி வாங்கி இருவரும் சாப்பிட்டோம். சாப்பிட்டேன் என நான் சொல்லுவது பொருந்தும்.

அவனோ `அவக்..... அவக்.....' என விழுங்கினான். சாட்டுக்கு நான் கொடுத்த கோப்பியை அருந்தியவன். பையிலுள்ள லேஞ்சியை எடுத்து முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டு. தலை நிமிர்ந்து என்னைப் பார்த்தான்.

அவனுடைய முகத்தில் தெளிவு பிறந்திருந்தது. எனக்குச் சற்று மகிழ்ச்சி.

பின்னர் இருவரும் தற்கொலை எப்படிச் செய்வது என ஆராய்ச்சி பண்ணினோம். தூக்கில் தொங்குவது அசிங்கம். நாக்கு நீட்டிக் கொண்டு கோரமாகக் காட்சி தரும். ரெயில் முன் விழுந்தால், உடலே. சின்னா பின்னப்பட்டுப் போய்விடும். ஒரே இரத்த மாமிசக் குவியலாக முடியும். நஞ்சு அருந்தினால்? தேகம் நீலம் பாரித்துப் பார்க்கவே அடையாளம் தெரியாமல் உப்பிப் போய்விடும். வேண்டாம். இவைகள். இவைகள் எல்லாம் ஒத்துவராதவை.

முடிவில் தூக்க மாத்திரை சாப்பிட்டு விட்டுப் படுக்கப் போய் விடுவது. இதிலும் ஒரு சங்கடம். டாக்டரின் பிரிஸ்கிரிப்ஷன் இல்லாமல் கடைக்காரன் மாத்திரை தர ஒப்பமாட்டான். களவாக வாங்குவது என்றால். மாத்திரைகள் வீரியமிழந்தவைகளாக இருக்கலாம். சாவுமில்லாமல் வாழ்வுமில்லாத திரிசங்கு சொர்க்க. நிலைக்குத் தள்ளப்படலாம். எடுத்த நோக்கமே நிறைவேறாமல் போய்விடலாம்.

இப்படி இருவரும் தேநீர்க் கடையிலிருந்து தற்கொலையின் சாதக பாதக அம்சங்களைப் பற்றி விரிவாக எமக்குள் விவாதித்தோம். இதில் எனக்குள்ள ஓர் அடிப்படைச் சங்கடத்தையும் எடுத்து விட்டேன். ``ஒருவரின் தற்கொலைக்கு உடந்தையாக இருப்பது கூடச் சட்டப்படி குற்றம். சாக நினைத்தவன் சுலபமாகச் செத்துப் போய்விடலாம். இதன் பின்னணி பின்னர் வெளிப்பட்டால். நானல்லவா கம்பி எண்ண வேண்டும்? அத்துடன் தற்கொலை செய்வதே கோழைத்தனம். என நான் கடந்த காலங்களில் கருதியதால் மிக நெருங்கியவர்களின் தற்கொலை இறுதிக் கிரியைகளில் கூட நான் பங்கு பற்றுவதில்லை. இது எனது அடிப்படைக் கொள்கைக்கே இழுக்கு!''

நான் சொல்வதை அவன் கவனமாகக் கேட்டான். கொஞ்சம் யோசித்தான்.

``இதில் முக்கியமான சங்கடம் என்ன வெண்டால். உமது இறுதிச் சடங்கில் கூட. நான் கலந்து கொள்ள மாட்டன். இதைப் பற்றிக் கூட நீர் பரவாய் பண்ணக்கூடாது. சத்தியமாக அதில் நான் கலந்து கொள்ளவே மாட்டன்!''

இந்த வகையில் மெல்ல மெல்ல விளக்கமளித்தேன். இவ்வளவு சுலபமாக இப்போது சொல்கிறேனே தவிர, எனக்கு இதற்குள் மரண வியர்வையே வியர்த்து விட்டது. மெல்ல மெல்ல ஆளைத் தேற்றினேன். எனக்குத் தெரிந்த பல உபாயங்களைக் கையாண்டேன். என்னுடைய வளர்ச்சிக் கட்டங்களில் நான் போராடி வென்ற பல அநுபவங்களைக்

கதையோடு கதையாகச் சொல்லி வைத்தேன்..

''என்னுடைய இந்த வாழ்க்கையில் ஏற்படாத கஷ்டங்களா, உமக்கு?''

ஒரு வாரம் சென்று விட்டது. எனது தொழிலகத்தில் சில சின்னச் சின்ன வேலைகளுக்கெல்லாம் ஏவினேன். இருந்தும் மனசுக்குள் இனந் தெரியாத பயமிருந்தது. எனது திட்டம் அந்த இளைஞனுக்குத் தெரிந்து, என்னுடன் முறுகிக் கொள்வானோ என்ற பீதி என்னை அடிக்கடி அலைக்கழித்தது. விழிப்போடிருந்தேன். எச்சரிக்கையாக இருந்தேன். மிக மிகக் கவனமாகச் செயல்பட்டேன்.

முடிவாகச் சொல்லப்போனால் தற்கொலை என்ற மனநோயால் பீடிக்கப்பட்டு என்னிடம் வந்த அந்தப் படித்த இளம் வாலிபன், இரண்டு வருடங்கள் என்னுடன் என் தொழில் நிலையத்தில் தொழில் நிபுணத்துவம் பெற்று, ஒரு சிறந்த தொழில் கலைஞனாக என்னை விட்டுப் பிரிந்து சென்றான். ஒரு முழு மனிதனாக விடைபெற்றுச் சென்றான்.

பல ஆண்டுகள் கடந்தோடிவிட்டன, இது நடந்து.

இன்று மத்திய வயதை அடைந்துள்ள அவர் சிறப்பாகச் சகல சௌபாக்கியங்களுடனும் தனது சொந்தக் கிராமத்தில் வாழ்ந்து வருகின்றார். மக்கள் அனைவரும் ஐரோப்பிய நாடொன்றில், நல்ல நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். பொருளாதார ரீதியில் கூட, அவர்கள் ஏற்றம் பெற்றவர்களாக இன்று ஜொலிக்கின்றனர். மதிக்கப்படுகின்றனர்.

இடையிடையே சந்திப்பது வழக்கம். மெல்லச் சிரித்து வைப்பார்.

இதில் குறிப்பிடக் கூடிய ஒரு முக்கியமான அம்சம் என்னவென்றால் அந்தப் படித்த, அந்தக் கால இளைஞன் அன்று தற்கொலை செய்ய முயன்றதற்கான அடிப்படைக் காரணம் இன்று கூட, எனக்குத் தெரியாது என்பதுதான். அதைப் பற்றித் தெரிந்து கொள்ளவும் நான் எத்தனிக் கவேயில்லை. விரும்பவுமில்லை. முயற்சிக்கவுமில்லை. எனக்கு அது தேவையுமில்லை.

அவர் இன்று ஊரில் பெரிய ஜோதிடர். பிரபலமான சாத்திரியார். எண் சாத்திரத்தில் ஊரைக் கலக்குபவர். என்னை ஒரு தடவை நேரில் சந்தித்தபோது ''அண்ணை, எண் சாத்திரப்படி உங்களுக்கு எதிர்காலம் அமோகமான காலம். சுபீட்சமான எதிர்காலம். உங்களுக்குக் காத்திருக்கிறது.நல்ல புகழ், அமோகமான செல்வாக்குப் பெற்றுத் திகழ்வீர்கள்'' என்றார். தொடர்ந்து அவர் சொன்னார்: ''உங்களுடைய பிறந்த எண் ஒன்பது. சுட்டெண் ஏழு. இந்த எண், நியூமரலஜிப்படி இந்த எண் பொருத்தம் மிகப் பிரமாதமாக அமையும், காலம்!'' எனத் தனது எண் ஜோதிடத் திறமையை எனக்கு விளங்கப் படுத்தினார்.

அவரது நல்லெண்ணத்தை நான் புண்படுத்த விரும்பவில்லை. சும்மா

சிரித்து மழுப்பி வைத்தேன். இதே எண்களில் எத்தனை கோடிக் கணக்கான மக்கள் ஜென்மமெடுத்திருப்பார்கள்? அப்போது அவர்களுக்கு இந்த எண்கள் என்ன சாதனையை ஏற்படுத்தி விடுகின்றன?" எனச் சொல்ல நினைத்தேன். ஆனால், சொல்ல வில்லை. எண்களை விட, உழைப்பை மதிப்பவன் நான்.

உழைப்பு, அயராத உழைப்பு, இடைவிடாத சலியாத உழைப்புக்கு என்ன எண்கள் உண்டோ, அந்த எண் சாத்திரத்தில் தான் எனக்கு எப்போதுமே நம்பிக்கையுண்டு, என மனசிற்குள் எண்ணிக் கொண்டேன்.

யாழ்ப்பாணத்தில் ஆண்டு மலர் வெளியீடொன்றுக்கு அவர் வந்திருந்தார். வெகு கோலாகலமாக நடந்தேறிய இலக்கிய விழா, அது. அவர் கலந்து கொண்டதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. பெருத்த சந்தோஷம்!

அந்த விழா மேடையில் நின்று பேசும் போது, அவரைக் காட்டி வந்திருந்த அனைவருக்கும் அறிமுகப்படுத்தினேன். அவரது இன்றைய வளர்ச்சியின் பெறு பேறுகளைக் கோடி காட்டி, அன்றைய சம்பவத்தை மெல்லிசாக நினைவூட்டிப் பேசி முடித்தேன். சகலருக்கும் அவரை அறிமுகப் படுத்தினேன்.

எனக்கோ மனங்கொள்ளாத மகிழ்ச்சி. இன்று நான் எழுத்தாளனாக இருக்கலாம். மேடைப் பேச்சாளனாகத் திகழலாம், மல்லிகை ஆசிரியராக மக்களால் போற்றப் படலாம். நம்பகத் தன்மை மிக்க நண்பனாக மிளிரலாம். மல்லிகைப் பந்தல் வெளியீட்டாளனாக மக்கள் மத்தியில் வலம் வரலாம்.

.....புடலங்காய்.....!

ஒரு வாலிபன் எனது வழிகாட்டலுக்கேற்ப எனது சொல்லுக்குக் கட்டுப்பட்டு, அமைய நடந்தது, ஒரு நல்ல உதாரண மனிதனாக இன்று திகழுகின்றானே அது..... அது..... ..... ஜென்ம ஜென்மாந்திரத்திற்குப் போதும்..... போதும்....!

நான் பிறந்ததன் பிறவிப் பயனை அடைந்து விட்டேன்!



18

சிறு வயசில் ஏற்பட்ட மனத்தழும்பு என் வயசு ஏற ஏற, என் நெஞ்சில் முத்திரையாகப் பதிந்து போயிருந்தது. அப்பியாசக் கொப்பி அந்தக் காலத்தில் பத்துச் சதம். அம்மாவிடம் காசு கேட்டால் ''பொறு, அப்பர் வரட்டும் வேண்டித் தாறன்!'' என்று பதில் உடனடியாக வரும்.

தகப்பனார் வந்ததும் சும்மா அப்படியே நெளிந்து வளைந்து அம்மாவின் சேலைத் தலைப்புக்குள் முகத்தைப் புதைத்த வண்ணம் அம்மாவையே நச்சரித்துக் கேட்டால், ''என்ன கொப்பிக்குக் காசு வேணுமோ? தம்பிக்குக் கொப்பி இல்லாமல் படிக்கேலாதோ? நாங்கள் எல்லாம் கொப்பி கொண்டு போய்த்தான் பள்ளியில் படிச்சோமா?'' என வெறிப் புலம்பல், அப்பரின் வாயிலிருந்து புறப்படும்.

'கள்ளுக் குடிக்க மாத்திரம் காசு இருக்காக்கும்?' என மனசுக்குள் வெகு ஆத்திரமாக நினைத்துக் கொள்வேன். ஆனால், வாய் விட்டுச் சொல்ல மாட்டேன். அடி விழும் என்ற பயம்.

அந்த அலட்சிய உணர்வு வெகுவாக என்னைப் பாதித்து வந்தது. அடி நெஞ்சில் கனன்று கொண்டிருந்தது.

எனது மகன் திலீபன் ஆரம்ப வகுப்புக்களை முடித்துக்கொண்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சேர்ந்தார். நான் என் மகனை ஒரு நாள் கூட, 'அவன், இவன்' எனக் கூப்பிட்டிருக்க மாட்டேன். மிக மிக மரியாதையாகவே அழைப்பேன். எங்கள் வீட்டுக்கு முன்னால் ஒரு வெளி இருந்தது. குழந்தைகள், ஏன் பெரியவர்கள் கூட, அந்த வெளியில் பட்டமேற்றுவது வழக்கம் ஒரு நாள் நான் சைக்கிளில் வந்து

இறங்கியபொழுது, என் மகன் தனது சிநேகிதனிடம் அவன் ஏற்றும் பட்டத்தின் நூல் கயிற்றைத் தரும்படி கேட்ட வண்ணம் அவன் பின்னால் ஓடிக் கொண்டிருப்பதை அவதானித்தேன். அவன் இசையவில்லை. இதை மனசால் அவதானித்துக் கொண்ட நான், அடுத்த தடவை கொழும்பு சென்ற சமயம் காலி முகத்திடலுக்குச் சென்று வெளவால் பட்டமொன்று வாங்கி வந்து கொடுத்தேன். அது நமது பிரதேசத்துக்குப் புதுசு. பட்டத்தை நானும் சேர்ந்து ஏற்றினேன். பறக்க விட்டேன். அப்பொழுது திலீபனுக்குச் சொன்னேன்! ''மகன், இங்குள்ளவர்களையும், ஏற்றும் போது சேர்த்துக் கொள்ள வேணும். சும்மா நடப்புக் காட்டக் கூடாது! சேர்ந்து பழக வேணும்.''

இது தவிர, நான் ஆங்கிலப் பட ரஸிகன். விரும்பிப் பார்ப்பவன். அந்தனி க்வீன், மார்லன் பிராண்டோ, கிரகரி பெக், ஸிட்னி பொய்ட்டர், சோபியா லாரன், கிர்க் டக்ளஸ், எலிசபெத் டெய்லர், விக்டர் மேஜர், காரி கிராண்ட், கிளீன் ஈஸ்வுட், மான்ட்கோமரி கிளிப்ற், ஜேம்ஸ் மேஷின், ரோனி கேட்டீஸ், டோரதி லாமூர் போன்ற உலகப் பிரசித்தி பெற்ற நடிகர், நடிகைகள் நடித்த படங்களையெல்லாம் தொடர்ந்து யாழ்ப்பாணம் றீகல் தியேட்டரில் பார்த்து வந்தவன், நான். அப்படி ஒரு ரஸிகச் சுவை எனக்கு.

இந்தப் படங்களில் கணிசமான படங்களுக்கெல்லாம் திலீபனையும் அழைத்துச் செல்வது எனது வழக்கம். அவருக்கு அப்படங்களில் பெரும்பாலானவை புரியாது. நான் விளக்கிச் சொல்வேன். 'என் அப்பனுடைய மகனாக நான் வளர்க்கப்பட்டது போல, எனது மகன் வளர்க்கப்படக் கூடாது.'

அந்தச் சிறுவயசு ரஸனைதான் இன்று அவரை ஒரு திறன் படைத்த புகைப்படக் கலைஞராக உருவாக்கியுள்ளதோ என மனசுக்குள் அடிக்கடி நான் யோசித்துப் பார்ப்பதுண்டு. ஒரு பயிர்ச்சிப்படுத்தும் நோக்கத்துடன் தான் வளர்த்து வந்தேன்.

எனக்குப் படம் பார்த்து ரஸித்துச் சுவைக்க ஒரு கூட்டாளி தேவைப்பட்டார். எனது மகனையே என்னுடைய நல்ல தோழர்களில் ஒருவராக இணைத்துப் பிணைத்துக் கொண்டேன். இருவருக்கும் வயசு வித்தியாசமானாலும் தோழர்களாகவே பழகினோம்.

வகுப்பில் தமிழ்ப் பாடம் நடந்து கொண்டிருந்ததாம். வகுப்பெடுத்தவர் தமிழ்ப் புலமை மிக்கவர் எனப் பலராலும் போற்றப் பட்ட ஆசிரியர் சிவராமலிங்கம் மாஸ்டர். இவர் தடி ஊன்றிக் கொண்டு நடப்பது வழக்கம். உடல் வாகு அப்படி.

வில்லுக்கு ஒருவன் விஜயன் -
மல்லுக்கு ஒருவன் பீமன் -
சொல்லுக்கு ஒருவன் அநுமன் -

எனச் சொல்லி வந்த ஆசிரியர் சிறிது இடைவெளி விட்டு மாணவர்களை ஒரு கணம் கூர்ந்து பார்த்தாராம். ''ம்... ம்..... அடுத்தது,'' என இழுத்தாராம்.

உடனே எழுந்து நின்ற திலீபன், ``பொல்லுக்குச் சிவராமலிங்கம் மாஸ்டர்!'' என்றாராம். மகிழ்ச்சியால் ஒரு கணம் ஸ்தம்பித்த ஆசிரியர் `அடிடா, சக்கை!' எனச் சொல்லிக் கொண்டு மகனை அழைத்து ``ஆருடைய பிள்ளையப்பா, நீ?'' என விசாரிக்க, கூடியிருந்த மாணவர்கள் என் பெயரைச் சொன்னார்களாம். ``அதுதானே பார்த்தன்! எழுத்தாளன் மகன் வேறு எப்படி இருப்பான்?'' எனத் தனது மகிழ்ச்சியைச் சொன்னாராம், சிவராமலிங்கம் மாஸ்டர்.

பிற்காலத்தில் கம்பன் விழாவில் என்னையும் மகனையும் ஒருங்கு சேரக் கண்டபோது, இந்தச் சம்பவத்தைக் கூறி என்னைப் பாராட்டினார், சிவராமலிங்கம் மாஸ்டர்.

அதே வகுப்பறையில் இன்னொரு சம்பவமும் நடந்தது. வகுப்பு நடந்து கொண்டிருந்த சமயம் வாங்கின் மறுபக்கத்திலிருந்த மாணவன் ஒருவன் சுட்டு விரலைக் கன்னத்தில் வைத்து இழுத்துக் காண்பித்தானாம். முதல் நாள் கொழுவலிலே இருவருக்கும் கோபம். எனவே அசட்டையாக இருந்தாராம் திலீபன். மீண்டும் திரும்பிப் பார்த்தபோது, விரலால் முகத்தை மழித்துக் காட்டினானாம், அதே மாணவன், அதே வீம்புத் தனத்துடன்.

பொறி தட்டியதாம் திலீபன் மனதில் அவன் ஒரு டாக்டருடைய மகன். `இவன் எங்கட குலத் தொழிலையெல்லோ பழிச்சுக் காட்டுகிறான்! வக்கணை செய்கிறான்?'

ரோசம் வந்தாலும், மௌனமாக அந்த வகுப்பு முடியுமட்டும் அமைதி காத்த திலீபன், பாடம் முடிந்து மாணவர்கள் இடைவேளையின் போது கலைந்து சென்ற சமயம், அந்த மாணவனை நெருங்கினாராம், திலீபன். ``என்ன சேட்டை விட்டனீர்? இப்ப வாரும் அதிபரிட்டை! என்னை இப்பிடிச் செய்து காட்டி வெட்கப்பட வைக்கேலாது. என்ரை அப்பன் மேடைகளிலை மாத்திரமில்லை, எழுத்திலை கூட, தன்ரை தொழிலை - தன்னை மனிசனாக்கின தொழிலைப் பகிரங்கமாகச் சொல்லித் திரியிறவர். நடவும், ஒருக்கா அதிபரிட்டை! எங்கட தொழில் கேவலமாண்டு ஒருக்காக் கேட்டுப் பார்ப்பம். நடவும்!..... வாரும்!''

பயந்துவிட்டான் மாணவன். மிரண்டுபோய் விட்டான்.

``இல்லை மச்சான்! நான் சும்மா முசுப்பாத்திக்குச் செய்தனான். கோவியாதை.... என்னை மன்னிச்சிடு'' அழுதுவிடுவதைப்போல் அந்தப் பையன் மன்னிப்புக் கேட்டானாம். அவனைப் பார்க்கப் பாவமாக இருந்ததாம்.

அன்று இரவு சாப்பாட்டுக்குப் பின்னர் இருவரும் சாவகாசமாக வழமை போலக் கதைத்துக் கொண்டிருக்கும் சமயம் திலீபன் அன்று நடந்த அந்தச் சம்பவத்தைச் சொன்னார். ``என்ன நினைக்கிறீங்கள் இதைப்பற்றி? நான் இப்படி நடந்து கொண்டது சரி தானே?'' எனது நோக்கம் பிழைக்கவில்லை. எனக்கு நெஞ்சில் பெருமிதமாக இருந்தது.

மல்லிகையின் அட்டையை அலங்கரித்த 65 பேர்களின் தொகுப்பை 'மல்லிகை' முகங்கள் என்ற பெயரில் வெளியிட்டபோது, அதைத் திலீபனுக்கே சமர்ப்பித்திருந்தேன். தன்னளவில் மகன் திலீபன் என் மனசில் ஆழமாகப் பதிவு பெற்றிருந்தார்.

இந்த இடத்தில் ஒரு கேள்வி. ''இப்ப எல்லாம் இப்பிடி நடக்கிறதில்லை. காலம் மாறிப் போச்சு. பழைய கிழடுகள் தான் இப்பிடி விண்ணாணம் பேசிப் பார்ப்பினம். இப்ப அப்பிடியெல்லாம் இல்லை'' எங்களது வாலிபப் பருவத்தில் வாய் திறந்து சொன்னவர்கள், அநேகர். எனது சிறு வயதில் சாதி சொல்லித் திட்டியபோது இப்படிச் சொல்லித் திரிந்தவர்கள் பலர்.

மறைந்துதான் போச்சா? உண்மையாகவே மறைந்து தான் போச்சா? நாற்பது வருடங்களுக்கு முன்னர் ஓர் ஆசிரியர் எனது பரம்பரைத் தொழிலை நையாண்டி பண்ணி என் ஆத்மாவையே சாகடித்த சம்பவம் இந்த மண்ணில் தான் நடந்தது.

அதன் பின்னர் - நாற்பது ஆண்டுகளுக்குப் பின்னர், எனது மகன் திலீபனுக்கு அதே அநுபவம் ஒரு மாணவனால் ஏற்படுத்தப்பட்டுள்ளது 'சாதிவெறி அழிஞ்சு போச்சுதாம்!' சில தமிழ் தேசியவாத எழுத்தாளர்கள் சொல்லித்திரிய முயற்சிக்கின்றனர். உண்மையாகவே மறைந்து போய் விட்டதா? அல்லது நீறு பூத்த நெருப்பாக உள்ளே கனன்று கொண்டு இருக்கிறதா? சாதி அபிமானம் இருக்கக் கூடும். உயர் சாதி அகம்பாவத்தைத் தான் நான் மூர்க்கமாக எதிர்க்கிறேன்.

அப்படியானால், தமிழ் மக்கள் மத்தியில் நமது பஞ்சப்பட்ட மக்கள் நேர்மையாகத் தமது பரம்பரைத் தொழிலை, பாரம்பரியக் குலத் தொழிலைச் செய்வது கேவலமா? அல்லது அவமானமா? அல்லது அசிங்கமா? வருங்காலம் நிச்சயம் இதற்குப் பதில் சொல்லியே ஆகவேண்டும்!

இந்தச் சந்தர்ப்பத்தில் நடந்த பழைய சம்பவமொன்று ஞாபகத்திற்குத் தட்டுப்படுகிறது. 1960ம் ஆண்டுக்கான படைப்பிலக்கியச் சாஹித்திய மண்டலப் பரிசை நான் முதன் முதலில் பெற்றுக் கொண்டு யாழ்ப்பாணம் திரும்பியிருந்த சமயமது.

கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையில் இலக்கிய வகுப்புகளுக்குப் பொறுப்பாயிருந்த பண்டிதர் ஒருவர் ஒரு நாள் வகுப்புக்கு வந்தாராம். ''இண்டைக்கு உங்களுக்கு அதிசயமான செய்தியொண்டு சொல்லப் போறன்!'' என்றாராம். கேட்டுக் கொண்டிருந்தவர்களில் ஆசிரிய மாணவனாக இருந்து இந்தத் தகவலைச் சொன்னவர் தெணியான் மாஸ்டர்.

மாணவர்கள் வியப்புடன் பண்டிதரையா அவர்களைப் பார்த்தார்களாம்.

''இந்த வருஷம் ஒரு நாவிதனுக்கல்லவோ தமிழ் சாஹித்திய மண்டலப் பரிசெல்லாம் கிடைச்சிருக்கு.....'' என ஏளனம் கலந்த தொனியில் கூறிவைத்தாராம், அந்தப் பண்டிதச் சட்டம்பியார்.

இந்த மகானுபவரிடம் கல்வி பயின்ற மாணவர்கள் பிற்காலத்தில் எத்தனை தகுதியுடன் விளங்கியிருப்பார்கள், என எனக்குள் நானே ஆச்சரியப்பட்டேன். அவர்களுக்காக அநுதாபப் பட்டேன்.

இவர் ஆசிரிய மாணவர்களுக்குப் பாடம் நடத்தினாரே. கம்பராமாயணம், அந்தக் காவியத்தின் மூலம் எது? வால்மீகி ராமாயணம். வால்மீகி ஒரு வேட்டுவன். ஒரு காட்டு வேடனின் மூலகாவியத்தைத் தமிழில் மாணவர்களுக்குப் பாடமெடுத்துக் கொண்டு வயிறு பிழைக்கும் பண்டிதத் திருமகனார், நவீன இலக்கியத்திற்குப் பரிசு பெற்றுத் திரும்பிய என்னைப் பற்றி, எனது குலத்தைப் பற்றி ஏளனம் பேசிச் சிரிக்கிறார். உயர் சாதித் திமிரின் வெட்டு முகத்தை இதன் மூலம் நாம் தெரிந்துகொள்ளலாம். கம்ப காவியத்திலே அயோத்தி ராமனால் சகோதரன் என வாஞ்சையுடன் அழைத்து அங்கீகாரம் பெற்றவன், குகன். அதில் தலையாய நட்புக் கதாபாத்திரங்களில் ஒன்று குகன் பாத்திரம். குகன் ஒரு பரிசலோட்டி. கம்ப ராமாயணத்திலே இந்தப் பாத்திரத்தின் அருமை பெருமைகளை எல்லாம் வியந்து வியந்து உருகிப் பாடமெடுக்கும் பண்டிதர் யதார்த்த வாழ்வின் எத்துணை சின்னத் தனமுள்ள சிறு மனிதராகத் திகழ்கிறார் என்பதை நினைத்து நான் நெஞ்சு கொதிக்கவில்லை.

இந்த அறிவுலகம் திருத்தவே முடியாத வகையில் நச்சுப் படுத்தப்பட்டு விட்டதோ என உண்மையாகவே பச்சாதாபப்பட்டேன்.

முடிவாக ஒன்றைச் சொல்லுகிறேன். செய்யும் தொழிலைக் கேவலமானதென்று நினைக்கும், காலம் காலமாக எண்ணி வரும் ஒரு சமூகத்திற்கு, இந்த உலகில் நாகரிகமாக வாழ்வதற்கு எந்த விதமான ஜனநாயக உரிமையுமில்லை! மானுட உரிமையும் அறவே கிடையாது! அது அங்கீகரிக்கப்படவும் மாட்டாது, அது வர்ணாச்சிரம தர்மமாக இருந்தாலும் கூட!

இந்தப் பின்னணியில் தான் என்னுடைய மகன் திலீபனுடைய ஆளுமைத் தராதரத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். விளங்கிக் கொள்ளவேண்டும்.

நானும் என் மகன் திலீபனும் இப்படிப் பழகுவதைக் கண்டு எங்கள் இன சனத்தவர்கள் பலர் வியந்ததுண்டு.

இப்படியாக அப்பன், மகன் என்ற இடைவெளியில்லாமல் சம தோழர்களாக நாங்கள் இருவரும் பழகி வந்த சமயத்தில் தான் ஒரு நாளிரவு திடீரெனத் திலீபன் ஒரு கேள்வியைக் கேட்டார்: ``இளந்தாரி வயசுக் காலத்திலை, நீங்க ஆரையாவது அந்தக் காலத்திலை காதலிச்சீங்களா? காதலிச்சிருக்கிறீங்களா?''

அன்று என்னுடைய மகனுக்கு வெகு விரிவாகச் சொன்னதைத்தான் இங்கு எழுத்தில் பதிய வைக்கப் போகிறேன். எனது வாழ்வின் இரகசியப் பகுதிகளை இங்கு எடுத்தியம்ப விரும்புகின்றேன்.

நான் ஒருத்தியைக் காதலித்தேன். நான் காதலித்தேன் என்பது கூடத் தவறு. ஒரு பெண் என்னைக் காதலித்தாள். ஒரு பெண் என்னைக் காதலித்தாள், என்பது ஒரு எழுத்துத் தொடரல்ல. ஒரு ஆண் ஒரு பெண்ணைக் காதலிப்பது அத்துணை ஆச்சரியமான தொன்றல்ல. ஆண் ஆதிக்க சமுதாயத்தில், ஒன்றல்ல, பலரையும் ஓர் ஆண் காதலிக்கக் கூடும். இதை இந்தச் சமூகம் ஏற்றுக்கொள்ளும்.

ஆனால், ஒரு பெண் ஓர் ஆணை மனசாரக் காதலிப்பது இருக்கிறதே, அதன் அருமையை அப்படிக் காதலிக்கப்பட்டவர்களே உணருவார்கள். அதில் ஒருவன் நான். இன்னும் கூட என் தேகமெல்லாம் புல்லரிக்கின்றது.

அந்தச் சுமையில்லாத சிநேகிதம் எப்படி, எங்கு கிடைத்தது என்பதை இன்று யோசித்துப் பார்த்தாலும் சுகமாக இருக்கிறது. கல்லூரி ஒன்றில் நடந்த களியாட்ட விழாவில் தான் நானவளைச் சந்தித்தேன் என்பது கூடத் தவறு. கண்டு கொண்டேன் என்று கூடச் சொல்லலாம். அந்த விழாவில் கலைக் காட்சியும் நடந்தது. ஒரு பக்கம் வரிசையாக ஓலைக் கொட்டிலமைத்து பொருட் காட்சியும் நடந்தது. இன்னொரு பக்கம் வரிசையாக ஓலைக் கொட்டிலமைத்து `கம்பிலிங்' என்ற சிறு சூதாட்டமும் நடைபெற்றது. `லக்கி செவண், அண்டர் செவண், ஓவர் செவண்' பந்தெறியும் போட்டி நடந்த பகுதியில், ஒரு ஸ்டாலின் வாசலில் நின்று கவனிக்கிறேன். சிறிது நேரம் நின்றேன். உற்று நோக்கினேன்.

``லக்கி செவண்..... லக்கி செவண். இருபத்தைந்து சதம் ஒரு எதிலை வைத்தாலும் இருபத்தைந்து சதம்''. என உற்சாக மூட்டும் கணக்காக மாணவன் திருவிழாவில் பலூன் விற்பவனைப் போல, குரல் கொடுத்துக் கொண்டேயிருந்தான். பந்தெறியும் போட்டி. சதுர வாய்க்குள் பந்து விழவேண்டும்.விழுந்தால் வெற்றி. இரட்டிப்புப் பணம்.

எனக்கோ நப்பாசை. விளையாட விருப்பம். விருப்பமில்லை... சிறியதேயானாலும் இது சூது, என்ற தர்ம-அதர்ம வாக்கு வாதம், நெஞ்சில்.

அந்தக் காலத்தில் இருபத்தைந்து சதம் பெரிய காசு. கால் ரூபாய். பத்துச் சதத்துக்கு மதிய போசனம் சாப்பிட்ட காலமது.

மனத் தர்க்கத்தை ஓரம் கட்டிவிட்டு இருபத்தைந்து சதக் குத்தியை ஓவர் செவணுக்கு வைக்கிறேன். போய்விட்டது. அப்புறம் அண்டர் செவணுக்கு. அதுவும் சுவாஹா. இப்படியே போக்குக்காட்டி இரண்டு ரூபாய்க்கள் தோற்றுப்போய் விட்டேன். எனக்கோ தோல்வி வெறி. வெறி என்பது அதீத உணர்வுதானே? இதுதான் கடைசிப் பந்து என எண்ணிக் கொண்டு, வேகமாகப் பந்தை அதிவேகமாக வீசி எறிந்தேன். தொடர் தோல்வியின் எரிச்சல்.

மரப் பெட்டிக்குள் மோதி வேகமாக வெளியேறிய அப்பந்து, பக்கத்தேயுள்ள அந்தப் பெண்ணின் மார்பில் `பட்' டென்று மோதித் தெறித்துப்

பாய்ந்தோடி எனக்கருகே வந்து விழுந்து உருண்டது. நானப்படியே திகைத்துப்போய் நின்று விட்டேன்.

ஒரு கணம், ஒரு கணம் தான். அந்த யுவதி என்னை ஏறிட்டுப் பார்த்தாள். அதில் தென்பட்டது. கோபமா, வெறுப்பா, துவேஷமா என்பதை என்னால் அந்தச் சூழ்நிலையில் விளங்கிக் கொள்ள முடியவில்லை. நிசப்தம்!

நிச்சயம் அவள் முகத்தில் பிரதிபலித்தது. நல்ல உணர்வல்ல. எனக்கருகே வந்து பந்தை குனிந்தெடுத்த அந்த அழகிய யுவதி, எனக்குக் கேட்கும் குரலில் மட்டும் 'நோ, மனர்ஸ்!' என்றாள். சர்வாங்கமுமே கூசிக் குறுகியது. தேகம் ஆடி அடங்கியது. மனசு ஓலமிட்டுக் கதறியது.

சர்வ நிச்சயமாகச் சொல்லுகின்றேன். நான் வேண்டுமென்று இதைச் செய்யவில்லை. தற்செயல் நிகழ்ச்சி இது. பெண்களை நான் என்றுமே உயர்வாக மதிப்பவன். மிக மிகக் கண்ணியமாக நினைப்பவன்.

'இந்தத் தவறு நடந்து விட்டதே.. நடந்து விட்டதே..' மனசு புலம்பிப் புலம்பித் தவித்தது. என் கோபத்தின் மீதே எனக்குக் கோபம் வந்தது.

'போய் விடுவோமா?' என ஒரு தடவை நினைத்துப் பார்த்தேன். மனசு ஒப்பவில்லை. 'என்ன மடத்தனம் இது! சே! பெரிய மடத்தனம்!'

அங்கும் இங்கும் என ஒரு குறிக்கோளுமில்லாமல் களியாட்டு விழாப் பிரதேசமெங்கும் சுற்றித் திரிந்தேன். மனசு நினைத்து நினைத்துத் தவித்தது.

விழா நடுச்சாமமென்றாலும் முடிந்துதானே ஆக வேண்டும்? அங்கு வேலை பார்ப்பவர்கள் இந்தப் பாதையால்தானே போகவேண்டும் என்ற ஆராய்வு மனசுடன் வாசலில் போய் சீமெந்துக் கட்டின் மேல் உட்கார்ந்து கொண்டேன்.

இரவு பன்னிரெண்டைத் தாண்டிவிட்ட சமயம், சனப் பரபரப்பெல்லாம் ஓய்ந்ததன் பின்னர், ஆட்களெல்லாம் வெளியேறத் தொடங்கினர்.

நான் வெளியேறுகிறவர்களையே நோட்டமிட்டபடி இருந்தேன். கடைசியில் அந்த யுவதி என் பார்வையில் பட்டாள். எனக்கு மகிழ்ச்சியாகவுமிருந்தது. பயமாகவும் இருந்தது. வெளியேற வந்து கொண்டிருந்த அந்தப் பெண்ணை மெல்ல அணுகினேன். பேச்சு வரவில்லை. "மிஸ்..... மிஸ்" என அழைத்தபடி பின் சென்றேன்.

அவள் என்னை மிரட்சியுடன் நோக்கினாள். யாரோ புதியவனைப் பார்ப்பது போலப் பார்த்தாள். மருண்டாள்.

"அந்தப் பந்து எறிந்த சங்கதி. நான் வேணுமென்று உங்களிலை படவேண்டுமெண்டு எறியேல்லை. தவறுதலாகப் பட்டிட்டுது. அதுக்காகத்தான் மன்னிப்புக் கேக்க இங்கை நிக்கிறன் தயவு செய்து மன்னிச்சிடுங்கோ!"

அப்பொழுதுதான் எல்லை அவளுக்குப் புரிந்திருக்க வேண்டும்.

''ஓ!.. நீங்களா? அதை அப்பவே நான் மறந்திட்டேனே!..... அதுக்காகவா இப்ப கவலைப்படுறீங்க?''

மனசுக்குள் ஐஸ் கட்டி கரைந்தது.

உயிரை உலுப்பிய சிறு தருணம். நெஞ்சு விம்மியது.

'அட! பெண்களிடம் இவ்வளவு தூரம் மன்னிக்கும் தன்மையா?'..... என் நெஞ்சிலிருந்த, பெரும் பாரம் இறங்கியது போல, அத்தனையொரு நிம்மதி.

பெருமூச்சு விட்டேன். அழுதுவிட வேண்டும் போல, இருந்தது.

அந்தக் கணம் அரும்பிய நல்லெண்ணம், நட்பு, இனிப்பு நினைவுகளாகப் பின்னர் பரிணமித்தன. வளர்ச்சி கண்டன.

மூன்றாம் குறுக்குத் தெருவில் வீடு. பக்கத்தே நூற்றாண்டு கண்டுவிட்ட அரசமரம். அதற்கு அண்மையில்தான் அந்த வீடு இருந்தது.

வீட்டுக்குப் போக இரு வழிகள். ஒன்று பிரதான கேற், மற்றது சிறு படலை. அந்தப் படலைக்கு மேலாக சிறிய கூடாரமமைத்து மல்லிகைப் பந்தல் பற்றிப் படர்ந்த கொடிகள் பூத்துக் குலுங்கின. சுகந்த மணம் பரப்பின.

நாங்கள் இருவரும் சந்திக்குமிடம் இந்தச் சிறிய படலையடிதான். முன்னிருட்டு வேளையில் கவிந்த மல்லிகைப் பந்தலிலிருந்து வரும் சுகந்த பூ மணத்தைச் சுவாசித்துக் கொண்டே, படலைக்கு அப்பால் அவளும், படலைக்கு இப்பால் நானும் நின்ற வண்ணம் மனித நேயத்தை சுவாசித்தோம். உரையாடி மகிழ்ந்தோம்.

குறுக்கிட்டு இந்த இடத்தில் சினிமாப் பாணியில் ஒன்றைக் கோடி காட்டி விட வேண்டும். பிற்காலத்தில் நான் ஆரம்பித்த இதழுக்கு 'மல்லிகை' என்ற பெயரும், பதிப்பகத்திற்கு 'மல்லிகைப் பந்தல்' என்ற நாமமும் அமைந்ததற்கு ரிஷி மூலம் தேடுபவர்கள் இந்தக் குறிப்பைக் கவனத்தில் எடுப்பது ஆய்வுக்கு ஆரோக்கியம் தரக் கூடியது. பிற்காலத் தலைமுறை இதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அந்தப் படலைத் தகரம் இணைப்பு விடுபட்டுப் போக, வாய் பிளந்தது போன்ற ஒரு சந்து. அந்தச் சந்துதான் நமது தபால் பரிவர்த்தனைப் பெட்டி. சந்திக்க இயலாத காலங்களில் கடிதங்களால் பேசிக் கொள்வோம்.

எனக்கு எந்தக் காலத்திலுமே தாழ்வுச் சிக்கல் இருந்ததில்லை. ஆனால் எதார்த்தத்தைப் புரிந்து கொள்ளும் மதி நுட்பம் இருந்தது. நான் இதைச் சாடைமாடையாகச் சொன்னாலே போதும், அவள் சினந்து முகம் சிவப்பாள். அந்தளவுக்கு பிரியம் என் மேலே. சிணுங்கிக் கொண்டே அழுவாள்.

இதுவரைக்கும் நான் அவளின் பெய ரர ஒரு தடவை கூடக்

குறிப்பிடவில்லை. பெயரைக் குறிப்பிட்டு அவளது மேன்மையை மலினப்படுத்த எனக்கு விருப்பமில்லை. அது எனது நோக்கமுமல்ல.

இன்று அவள் யாரோ ஒருவனுக்கு மனைவியாகி, குழந்தைகள் பெற்று, அந்தக் குழந்தைகளுக்குத் திருமணம் செய்து கொடுத்துப் பாட்டியாகி எங்கேயோ வாழ்ந்து கொண்டிருக்கலாம். அல்லது இறந்து போய்க் கூட - இருக்கலாம். யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த சூழ்நிலையால் எத்தனையோ இடர்கள் பட்டு வட பிரதேசத்தை விட்டுப் புலம் பெயர்ந்து, ஏதோ ஒரு ஐரோப்பிய நாடொன்றில் வாழ்ந்து கொண்டிருக்கவும் கூடும்.

ஆனால், ஒன்றைத் தெளிவாக இந்தச் சூழ்நிலையிலும் நான் புரிந்து கொண்டிருக்கிறேன்.

என்னை - எனது நாமத்தை - தனது நெஞ்சிலிருந்து துடைத்தெறிந்திருக்கமாட்டாள் என்பது மாத்திரம் திண்ணம்!

தெற்றுப் பல் பளீரிடும் அந்தச் சிரிப்பு இருக்கிறதே அந்தச் சிரிப்புக்குரியவளை இப்போதும் நான் பார்க்கிறேன். மனசில் தியானிக்கிறேன்.

அவள் நிச்சயம் பேரழகிதான் - அப்படி ஒரு கொள்ளை அழகு!

''லைலா..... லைலா.... எனப் பைத்தியம் பிடித்து அலைகிறாயே, அப்படியென்ன அவள் அப்படிப்பட்ட தேவதையா?'' எனப் கயஸிடம் அவனைத் தெரிந்தவர்கள் வியப்புத் தெரிவித்த வேளையில் ''லைலாவின் அழகை, இந்தக் கயஸின் கண்களால் தரிசித்தால் தான், அவள் அழகின் மகிமை உங்களுக்கு விளங்கும்.'' எனக் கயஸ் சொன்னானாம்.

நான் அழகைக்கூட ஆராதிக்கவில்லை. அந்த அன்பு, அந்த நேசிப்பு அந்த அர்ப்பணிப்பு! - அரை நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் கூட அவள் இருக்கும் திசை நோக்கித் திசை தெரிந்திருக்காத நிலையிலும் கூட, தலை தாழ்த்துகின்றேன். அவள் ஓர் அபூர்வப் பெண்.

ஒரு புது வருஷம் பிறக்கப்போகும் தினம். விடிந்தால் புத்தாண்டு.

முன் அறிவித்தலின்படி ஆண்டு பிறக்கும் நடுச் சாமத்தில் தன்னுடன் என்னைக் கொண்டாடக் கட்டளையிட்டிருந்தாள், அவள். அன்புக் கட்டளை.

அந்த அன்பழைப்பை என்னால் தட்டிக் கழிக்க முடியவில்லை.

நட்ட நடுச்சாமம், வருஷம் பிறக்கிறது. வீதியில் படலையருகே நான். பக்கத்தே சடைத்துப் பருத்த மகோகனி மரம். செப்புக் கம்பி உள்ளீடாகக் கொண்ட, நட்சத்திரப் பொறி பறக்கும் கம்பி மத்தாப்பைக் கொழுத்திக் கையில் பிடித்து நாலா திசையும் சுற்றிச் சுழன்று ஆனந்தமாடி வந்த அவள், தான் என்ன செய்கிறோம் என்பதைக் கூடப் புரிந்து கொள்ளாமல் நெருப்பினால் தகதகத்துப் போய்ச் சிவந்திருந்த செம்புக் கம்பியை எனது இடது மணிக்கட்டுக்கு மேலிருந்த தசைப் பகுதியில் அழுத்தி வைத்தாள். என் உயிரே ஒரு கணம் ஸ்தம்பித்துப் போய்விட்டது. உச்ச வேதனையால்

பதறிப்போய் விட்டேன். ''இந்தத் தழும்பு எப்பவுமே மறையாது. இது மறையாத காலம் மட்டும் என்னை நீங்கள் மறக்க மாட்டீங்கள்!'' கண்ணீர் அரும்ப, அவள் இதைச் சொன்னபோது, எனக்கு வந்த கோபம் ஆறிப் போய் விட்டது. 'என்ன பெண், இவள்? இப்படியும் ஒரு பெண்ணுக்கு அன்புப் பைத்தியம் பிடிக்குமா?'

இதை எழுதிக்கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் கூட, அந்த மறையாத தழும்பைத் தடவிப் பார்க்கிறேன். நெஞ்சு நெகிழ்கின்றது. கண்கள் கசிகின்றன.

'நீர் இல்லை! இருக்கிறீரோ இல்லையோ இந்த நிமிஷம் வரை எனக்கு ஒரு தகவலும் தெரியாது. அந்தத் தழும்பு என் இடது கையில் இருக்கிறது. அப்படியே இருக்கிறது. உம்மை அது ஞாபகமூட்டுகின்றது.'

கொப்பளித்த நெருப்புப் புண்ணுக்கு அம்மா நல்லெண்ணையும் மஞ்சள் மாவும் வைத்து அடுத்த நாள் கட்டினார். நான் சொன்ன கற்பனைப் பொய்யை நம்பி, ''பட்டாசு சுடுகிறது தான். அதுக்காக இப்படியா மனுஷர் மாஞ்சாதிமேலை பட்டாசு விடுகிறது?'' என்றார். ''கண்டறியாத பட்டாசு சுடுகினம்!''

அந்த அம்மாவும் இன்று உயிரோடு இல்லை என்னத்தைச் சொல்லுகிறது? என்னத்தை விடுகிறது?

'அண்டைக்கு மடத்தடியாலே சைக்கிளில் போனீங்க.... சைக்கிள்ளை போகேக்கை என்ன அப்படியொரு யோசினை? போகேக்கை பார்த்தெல்லோ போக வேணும்?' இது ஒரு கடித வாசகம்.

''ஆஸ்பத்திரி றோட்டாலை நடந்து போனீங்க, இல்லை..... சட்டையெல்லாம் வேர்வையால ஒரே ஊத்தை..... தோச்சுப் போடக் கூடத் தெரியாதே? என்ன குழந்தைப் பிள்ளையா நீங்க? தந்தால் நான் தோய்ச்சுத் தருவன் தானே?'' இது நேரடியான தாக்குதல். சந்திக்கும்போது கேட்கும் ஆவேசக் குரல் இது. என் பொறுப்பற்ற தன்மையைச் சுட்டிக்காட்டும் குற்றச் சாட்டு.

''அடி ஆத்தே.... நான் உம்மைப் போலப் பணக்காரச் சாதி இல்லை. உடுப்பைப் பற்றிக் கூட, நான் கவலைப் படுவதில்லை!'' என்பேன்.

''பாத்தீங்களா..... பாத்தீங்களா....! பிரிச்சுப் பேசப் பழகிக் கொள்ளுறீங்களே, நான் அதுக்காகவா சொன்னேன்? கொஞ்சம் அழகா, வடிவா இருந்தா நமக்கெல்லாம் நல்லது தானே?'' எனச் சொல்லிய வண்ணம் கண் கலங்குவாள். சிணுங்குவாள்.

நான் பயந்து விட்டேன். எந்த நேரமும் என்னைப் பற்றியேதான் சிந்தனை. இந்தப் பெண்ணை எங்கே கொண்டு விடப் போகிறதோ என உண்மையாகவே அச்சப்பட்டேன். மனசுக்குள் சங்கடப்பட்டேன்.

'இப்படியும் ஒரு நேசிப்பா?'

கடைசியில் பைத்தியம் பிடித்து விடுமோ என இரக்கம் கொண்டேன். வீதிகளில், தெருக்களில் போகும்போது யாரோ என்னை என்னையறியாமலே, பின் தொடர்கின்றனரோ, என்னை கவனிக்கின்றனரோ எனத் தினசரி கலவரமடைந்தேன். அடிக்கடி திரும்பிப் பார்த்தேன். மனப் பயம், அதிகரித்தது.

அந்த அன்பு என்னை அத்தனை உலுப்பு உலுப்பிவிட்டது. ஒரு குறிப்பிட்ட காலம் சந்திக்க முயற்சிக்கவில்லை. திடீரென ஒரு நாள் எனது முகவரிக்குக் கடிதமொன்று வந்தது. எக் காரணம் கொண்டும் எனது சொந்த முகவரியுடன் எந்தவிதமான தொடர்புகளும் வைத்துக் கொள்ளக் கூடாது எனச் சொல்லிக் கட்டளை! முடியுமானவரை நமது படலைத் தபால் பெட்டியை இதற்குப் பாவிப்பது என்பது எழுதாச் சட்டம். இதைக் கறாராகக் கடைப்பிடித்து வந்தோம்.

இப்படி ஒழுங்கை மீறி வந்த கடிதத்தை நான் பரபரப்புடன் பார்த்தேன். 'இன்று அவசியம் சந்திக்க வேணும். மறக்க வேண்டாம். இன்று சந்திக்கத் தவறினால், இதுவே எனது உயிருள்ள இறுதிக் கடிதமாக இருக்கும்' என்று கடித வரிகள் என்னை எச்சரித்தன. பயமுறுத்தின.

எனக்குப் பயம் பிடித்துக் கொண்டது. அன்று இரவு சந்திக்க முடிவு செய்தேன். முன் இருட்டுக் காலம். போகும் போது இலேசாக மழை தூறிக் கொண்டிருந்தது. சூழ்நிலை ரம்மியமாக இருந்தது. கண்களை இடுக்கி நோட்டமிட்டேன். ஆள் அடையாளம் தெரிந்தது. சமீபமாக நெருங்கிப் படலைச் சட்டத்தில் கைவைத்த வண்ணம். அவளது பெயரைச் சொல்லி. ''என்னப்பா இண்டைக்கு இந்த அவசரம்? ஏன் என்ரை விலாசத்துக்குக் கடிதம் போட்டனீர்?'' எனக் கேட்டபடி பதிலுக்காகக் காத்திருந்தேன். மௌனம் நிழலாடியது. 'கோபம் தணியவில்லை' என நினைத்துக் கொண்டேன்.

அன்றைக்கென்று மல்லிகைப்பூ வாசம் கமகமவென்றிருந்தது. சுகந்த வாசனை மனசைக் கிறங்க அடித்தது. வெகு ரம்மியமாகவிருந்தது.

உருவம் சற்றுப் பின்வாங்கிய மாதிரித் தெரிந்தது. தெரிந்த கணமே ''தம்பி!'' என்றது. குரலில் ஒருவகை அழுகை நடுக்கம்.

தாய்!

என் சர்வாங்கமும் உதறல் எடுத்தது. நடுங்கி விட்டேன். ஓடுகிறேன் ஓடுகிறேன் - மனசுக்குள் தான் ஓடுகிறேன். திக்குத் திசை தெரியவில்லை.

''தம்பி நான் சொல்லுறதை ஆறுதலாகக் கேளும். நீரும் என்னைப் போலை ஒரு தாய் பெத்த பிள்ளை தான். எனக்கு இதெல்லாம் அசுகை மசுகையாக நல்லாத் தெரியும். நானொண்டும் உம்மைத் திட்டிப் பேசேல்லை. அவளின்ரை குணமும், பெத்த தாயெண்ட முறையிலை எனக்கு நல்லாத் தெரியும்" சொல்லிக் கொண்டு வந்த அந்தத் தாய் வார்த்தைகள் தொடர்ந்து கிடைக்காமல் கேவிக் கேவி அழுதார். ''உம்மட தாயைப் போல என்னை

நினைச்சுப் பாரும். உம்முடைய காலிலை விழுந்து கையெடுத்துக் கும்பிடுறன். அவளை இனி மறந்திடும். அப்பிடி ஏதும் இசகு பிசகாக நடந்திட்டுது எண்டால், நான் வீட்டு வளையிலை கயிறு போட்டுத்தான் தூங்கிச் சாவன்! இது மடுமாதாவாணைச் சத்தியம்!''

நான் நின்றது நின்றபடியே நின்றேன். ''போறன். ஒண்டை மாத்திரம் உம்மட்டை கெஞ்சிக் கேக்கிறன். அவளிட்டை நான் சொன்னதை மாத்திரம் சொல்லிப் போடாதையும்! கடைசியா இதைத்தான் நான் உம்மட்டை, கேக்கிறன்.''

இந்தச் சம்பவம் நடந்ததா? இல்லையா? என்று நிதானிப்பதற்குள் இருட்டுக்குள் அந்த உருவம் மறைந்து விட்டது.

இரவு முழுவதும் தூக்கமில்லை. கிணற்றங் கட்டில் படுத்தபடி வானத்தை அண்ணாந்து பார்த்த வண்ணம் ஒரே சிந்தனை. மண்டைக்குள் யாழ்தேவி ஓடியது.

'செத்துப் போய்விட்டால், என்ன?'

'சீ என்ன மோட்டுத்தனமான யோசனை?'

கடைசி - கடைசியாக ஒரு முடிவெடுத்தேன். 'அவளை இனிமேல் மறந்து விடுவதுதான் நல்லது. அந்தத் தாய் கையேந்தி என்னிடம் மடிப் பிச்சை கேட்பதைப் போல், இறைஞ்சி நின்றதை நான் நிராகரிக்கவே கூடாது.'

அத்தனை 'வில் பவர்' உள்ளவன் நான் என்பதை இந்த உலகிற்கு நிருபித்துக் காட்ட, அந்த முடிவுக்கு அந்தக் கடும் நடு இரவில் வந்தேன்.

யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து இருந்தால் என்னையே நான் ஏமாற்றி விடுவேனோ எனப் பயந்தேன். இரண்டாம் நாள் மெயில் வண்டியில் கொழும்பு புறப்பட்டு விட்டேன். ஜா - எலையில் எனக்கொரு நண்பர் இருந்தார். அவருடன் அவரது அறையில் தங்கியிருக்கச் சித்தமானேன். பகல் சாப்பாட்டுக்கு முன்னர் ஜா-எலை ஆற்றுக்கு குளிக்கச் சென்றிருந்தேன். தண்ணீருக்குள் இறங்கி இரண்டொரு தடவைகள் மூழ்கி எழுந்த சமயம், ஆற்று நீர் என்னை அப்படியே இழுத்துச் சென்றது. நீந்தத் தெரியாது. கையையும், காலையும் இப்படியும் அப்படியும் அடித்தது தான் மிச்சம். கால் ஆழமான புதை சேற்றுக்குள் புதையுண்டு போனது. கத்த நினைக்கின்றேன். வாய்க்குள் தண்ணீர். இரண்டொரு மிடறு அழுக்கு நீரைக் குடித்தது தான் மிச்சம் 'செத்துப்போய் விடுவேனோ?'

ஒரு கிழமைக்கு முன்னர் ஊரில் கிணற்றங் கட்டில் படுத்தபடி தற்கொலை பற்றிச் சிந்தித்தவன், இங்கு உயிருக்காகப் போராடுகின்றான்!

கரையில் தலை துவட்டிக் கொண்டிருந்த சிங்கள வாலிபன் ஒருவன், திடீரென ஆற்றுக்குள் பாய்ந்து எனது தலை முடியைப் பற்றிப் பிடித்து

இழுத்து வந்து கரையில் போட்டான். முதல் உதவி கரையில் நடந்தது.

சின்னஞ் சிறு வயசில் மாத்தறையைச் சேர்ந்த அந்த அம்மா - பூவம்மா- எங்களைத் தமது சொந்தப் பிள்ளைகள் போல அன்பு காட்டிச் சீராட்டிப் பாராட்டினார். இங்கே ஜா-எலையில் தண்ணீருடன் வரலாறு முடியவிருந்த எனக்கு, ஒரு சிங்களச் சகோதரன் உயிர்ப் பிச்சை தந்து காப்பாற்றினான்.

அரசியல்வாதிகள் எத்தனைதான் சொல்லட்டுமே - இனவெறியர்கள் எத்தனை எத்தனை கதைகளைத் தான் கூறட்டுமே - அடிப்படையில் கிராமியச் சிங்கள மக்கள் ரொம்ப ரொம்ப நல்லவர்கள். இயல்பாகவே கல்மிஷ மில்லாதவர்கள்.

அப்படித்தான் தமிழ் பாமர மக்களும் - முஸ்லிம் மக்களும்!

என்னுடைய காதல் வரலாற்றின் பின்னணியை வெகு ஆறுதலாகச் செவியுற்ற எனது மகன் திலீபன், கடைசியாகச் சொன்னார்: ``உங்களைப் போன்ற கோழைகள் காதலித்திருக்கக் கூடாது என்று நான் சொல்ல வரவில்லை. அப்படிப்பட்ட அன்பும் அர்ப்பணிப்பும் உணர்வும் நிரம்பிய பெண் உங்களைப் போன்ற கோழைகளைக் காதலித்திருக்கக் கூடாது என்று நான் இப்பொழுது சொன்னால், அது சரியா?''

திலீபன் காதலித்தவர். காதலித்தவளையே திருமணம் செய்து கொண்டவர். மருமகள் ஓர் இந்துப் பெண். பெயர் வாசுகி. அவர்களுடைய குழந்தையைத்தான் - எனது பேரப்பிள்ளையைத்தான் - அன்புச் சுமை சுமந்து கொண்டு காட்சி தருகிறேன் - இப்புத்தகத்தின் பின் அட்டைப் புகைப்படத்தில். பேத்தியின் பெயர்: தர்ஸனா.

வெற்றி பெறுவது மட்டும் தான் காதலின் சிறப்பு எனப் பலர் கருதுகிறார்கள். தோல்விகளினால் எத்தனை எத்தனை காவியங்கள் இந்த உலகில் சிருஷ்டிக்கப்பட்டுள்ளன.? என்னையே எடுத்துக் கொள்ளலாம். அந்தப் பெண்ணிடமிருந்துதான் நான் மானுட நேசத்தைக் கற்றுத் தெரிந்து கொண்டேன். பிரதிப் பிரயோசனம் கருதாத அந்த அன்பை, என்னால் விளங்கிக் கொள்ள முடிந்தது. இன்று நானோர் எழுத்தாளனாக திகழ்வதற்கும் இந்தக் காதல் தோல்விதான் முதற் காரணம். எனவே காதல் தோல்விகள் தோல்விகளேயல்ல! வெளியாரின் கண்களுக்கு அது தோல்வியாகத் தெரியக் கூடும். அதற்கு நானென்ன செய்வது?

என்னை முழுமையாப் படுத்தி, சிந்திக்க வைத்தவள் அவள்! தான் என்பதை இந்தக் கட்டத்தில் ஒப்புக் கொள்ளுகின்றேன். அதே சமயம் அவள் எனக்கு மனைவியாகக் கிடைத்திருந்தால், நான் கூட, ஒரு சராசரியாகத்தான் கணக்கெடுக்கப் பட்டிருப்பேன். திறந்த மனசுடன் இதை, இந்தச் சந்தர்ப்பத்தில் ஒப்புக் கொள்ளுகின்றேன்.

நிறைவேறாத காதல்கள் தான் அமரத்துவம் பெற்றுத் திகழ்கின்றன.

19

1950 என நினைக்கின்றேன். அதுவரை காலமும் யாழ்ப்பாண நகர சபையாக இயங்கிவந்த சபை, யாழ்ப்பாண மாநகரசபையாக உயர்ச்சி அடைந்தது. அதற்கான பிரதிநிதித்துவத் தேர்தலும் நடை பெற்றது.

கம்யூனிஸ்ட் கட்சி இரண்டு வட்டாரத்திற்கு வேட்பாளர்களை நிறுத்தியது. 10ம் வட்டாரத்திற்குத் தோழர் கார்த்திகேசன், 14ம் வட்டாரத்திற்குத் தோழர் எம். சி. சுப்பரமணியம். கார்த்தி கேட்ட வட்டாரம் வண்ணார் பண்ணை என அழைக்கப் பெற்றது. எம். சி. யின் வட்டாரம் ரெயில்வே ஸ்டேசன் வட்டாரம் எனக் குறிப்பிடப்பட்டது.

கார்த்தியுடன் தேர்தல் களத்தில் எதிர்த்து நின்றவர், அன்று மக்கள் மத்தியில் மதிப்பு பெற்றிருந்த தமிழ் காங்கிரஸ் அபேட்சகர் துரைராஜா என்பவர். செல்வாக்குப் பெற்ற அந்தப் பகுதிப் பிரமுகர், அவர்.

யாழ்ப்பாணத் தேர்தல் வரலாற்றிலேயே ஓர் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை முதல் தடவையாக வேட்பாளராக நிறுத்திய பெருமை கம்யூனிஸ்ட் கட்சிக்கே உரிய ஒன்றாகும். அந்த வேட்பாளர் எம். சி. சுப்பிரமணியம். அவர் போட்டியிட்ட 14ம் வட்டாரத்திற்குட்பட்டுத்தான் எனது வீடும் தொழிலகமும் இருந்தன.

அந்த வட்டாரத் தொகுதி பரபரப்பாகப் பேசப்பட்டது. 'ஒரு தாழ்த்தப்பட்டவன் துணிந்து தேர்தலில் போட்டியிடுகிறானே?' என்பதே அந்தப் பரபரப்புக்குக் காரணம்.

அதுவும் கம்யூனிஸ்ட் கட்சியில் நிக்கிறான்!

இவரை எதிர்த்துத் தமிழ் காங்கிரஸ் சார்பாக எஸ். ஆர். தளையசிங்கம் நின்றார் - புறக்டர் சின்னத்துரை என்பவர் சுயேச்சையாகக் கட்டுப் பணம் செலுத்தினார்.

கம்யூனிஸ்ட் கட்சிக்கும் தமிழ்க் காங்கிரஸுக்கும் தான் போட்டி. போட்டி கடுமையாக இருந்தது. பிரசாரம் சூடு பிடித்தது.

நான் கம்யூனிஸ்ட் அபேட்சகருக்காகத் தேர்தல் வேலைகளில் முழு மும்முரமாக இறங்கி வேலை செய்தேன். கடுமையாக உழைத்தேன்.

எனது தொழிலகக் கதவில் நட்சத்திரத்துக்குப் புள்ளடியிடுமாறு மக்களைக் கேட்டுக் கொள்ளும் பெரிய போஸ்டரை ஒட்டி வைத்தேன். பெரிய சுவரொட்டி.

எனது சலூனுக்கு எதிராகச் சற்று அப்பால், தெய்வேந்திரம் என்பவருடைய சைக்கிள் கடை. கொட்டடித் தெய்வேந்திரம் எனச் சொல்லுவார்கள். ஆள், பெரிய சண்டியன்.

பிற்காலத்தில் இவர் இரண்டு தடவைகள் மாநகர சபைப் பிரதிநிதியாக 13ம் வட்டாரம் கொட்டடி மக்களால் தெரிவு செய்யப்பட்டவர். ஒரு தடவை உதவி மேயராகவும் கடமை புரிந்தவர்.

பண்டாரநாயக்க, கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட தென்னிலங்கையைச் சேர்ந்த ஓசி கொரியா என்பவரைப் பல தடவைகள் இவரது கடையில் பார்த்திருக்கின்றேன். அத்தனை பிரக்தியாதி பெற்றவர் தெய்வேந்திரம்.

இந்தத் தெய்வேந்திரம் என்பவர் தமிழ் காங்கிரஸ் அபேட்சகரை ஆதரித்து, அவர்களது சின்னமான சைக்கிளைச் சோடித்து, மின்சார வெளிச்சம் பூட்டி, கடை முகப்பில் தொங்க வைத்திருந்தார். சைக்கிள் உயரத்தில் தொங்கியது. ஆடியது.

அவரது சைக்கிள் கடையில் வேலை செய்த பொடியன் ஒருவன், ஒரு நாள் நானில்லாத சமயம், என் கடைக் கதவில் ஒட்டப்பட்டிருந்த நோட்டீஸைக் கிழித்தெறிந்து விட்டுப் போய்விட்டான்.

வந்து பார்த்தால் பயங்கரக் கோபம், எனக்கு.

முன்னாலுள்ள பீடாக்கடை முகம்மது காக்கா எனக்கு உண்மையைச் சொல்லி விட்டார். அவன்தான் - கிழித்ததை தான் நேரில் பார்த்ததாக அவர் சாட்சியமளித்தார்.

நான் பின் விளைவுகளைக் கவனத்தில் எடுக்கவில்லை. கவலைப் படவுமில்லை.

வயசுக் கோளாறு. கட்சியின் மீதிருந்த விசுவாசம், பற்று.

நேரே போய் தெய்வேந்திரம் கடையில் ஒட்டப்பட்டிருந்த சைக்கிளுக்குப் புள்ளடி போடும் சின்னத்தைத் தாங்கிய நோட்டீசைக் கிழித்துப் போட்டு வந்து விட்டேன். ஒருவரும் பார்க்கவில்லை. பார்த்திருந்தாலும், நான் கவலைப் பட்டிருக்க மாட்டேன்.

அன்று சாயங்காலம் நாலு மணியிருக்கும். தெய்வேந்திரம் நடு றோட்டில் நின்று மிரட்டும் தொனியில் ''ஆரடா அவன்? என்ரை கடை நோட்டீஸைக் கிழித்தெறிஞ்சவன், எவனடா?" என ஆவேசமாகக் குரல் கொடுத்துக் கத்திக் கொண்டு நின்றார். உரக்கக் குரல் கொடுத்தார். ''ஆரடா அவன், நோட்டீஸைக் கிழித்தவன்?"

நான் வெளிப் படிக்கட்டில் நின்று, இவை அத்தனையையும் அவதானித்துக் கொண்டிருந்தேன்.

நெஞ்சு பொறுக்கவில்லை.

அசட்டுத் துணிச்சல் வேறு.

நேரே அவரை நோக்கி நடந்து சென்றேன். அவரைச் சமீபித்ததும் அவருக்குக் கேட்கக் கூடிய தூரத்தில் நின்றபடி ''நான்தான் நோட்டீஸைக் கிழிச்சனான்!" என்றேன்.

அவர் அதை நம்பவில்லை. எதிர்பார்க்கவுமில்லை.

''என்ன சொன்னனீ? கிட்ட வந்து சொல்லு!"

''நோட்டீஸைக் கிழிச்சது நான்தான்" கத்திச் சொன்னேன்.

அவரது முகம் கோபத்தால் முறுக்கேறியது.

'இவனா? - இந்தப் பொடிப் பயலா?' நம்பமுடியவில்லை, அவரால். சனங்கள் சூழ்ந்து கொண்டு விட்டனர். தெருக் கூத்தை ரஸிக்கும் கூட்டம்.

''நடந்த உண்மை என்னண்டு கேட்டிட்டுச் சொல்லுங்கோ. உங்கட கடைப் பெடியன் என்ரை கதவு நோட்டீஸைக் கிழிச்செறிஞ்சவன். அதுக்குப் பதிலுக்குப் பதிலா அவன்ரை கடை நோட்டீஸை நான் கிழிச்சுப் போட்டன். முதலிலை நான் வேணுமென்டு தப்புச் செய்யேல்லை! சரிக்குச் சரி செய்தனான்!"

இறுகிய முகம் தளர்ந்தது. ''இஞ்சை வாடா!" உள்ளே பம்மிப் பதுங்கிப் போயிருந்த பையனைக் கூப்பிட்டார், தெய்வேந்திரம். ''இவன் பொடியன் சொல்லுறது, உண்மையோ, இல்லையோ?" என அதட்டிக் கேட்டார்.

''அது வந்து... அது வந்து..." என அவன் வார்த்தை குழறினான். சொற்கள் வராமல் திக்கு முக்காடினான். ''அது வந்து....."

''அவன் விரும்புற ஆளை ஆதரிப்பது அவன் கடமை. நான் விரும்புற ஆளை நான் ஆதரிப்பது என்ர கடமை! இதுக்குள்ளை ஏன்ரா இந்தப்

பொறுக்கித்தனம்? நாய் கூடச் செய்யாத வேலையை நீ செய்து போட்டியேடா?" என உரக்கக் கத்திப் பேசியபடி விட்டார், இரண்டு கன்னங்களிலும் அறை....! அவன் கூக் குரலிட்டான். குரலெடுத்து அழுதான்.

"சரி தம்பி. நீ சின்னப் பொடியனெண்டாலும் நீ செய்தது மெத்தச் சரி. நானெண்டால் கூட, இப்படித்தான் செய்வன். நீ உன்ரை பார்ட்டிக்கு இன்னும் வடிவா வேலை செய்! அதுதான் நேர்மை!"

ஜனநாயக நெறி முறைகளுக்குப் புதிய பாடம் கற்றுத் தெரிந்து கொண்டேன். இன்றைய அரசியல்வாதிகள் தெரிந்து கொள்ள வேண்டிய நாகரிகம் இது.

நாங்கள் எதிர் பாக்காதவர்களிடம் கூட, மனிதத் தன்மை எப்படியெல்லாம் வெளிப்படுகின்றது என்ற மெய்யுணர்வைச் சண்டியன் எனப் பெயர் பெற்றிருந்த கொட்டடித் தெய்வேந்திரம் என்பவரிடமிருந்து கற்றுக் கொண்டேன்.

இவரைப் பாத்திரமாக வைத்து ஒரு சிறு கதை எழுதியிருந்தேன். 'இரகசிய கீதம்' என்பது அந்தக் கதைக்குப் பெயர். அதில் வரும் பாத்திரத்துக்குப் பெயர்: படினம் கனகசபை. அந்தப் பாத்திரத்தின் குணாம்சமும் இப்படித்தான்.

தெய்வேந்திரம் இறப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர், அவரைத் தாவடியில் - யாழ்ப்பாணத் திறம் புகையிலைக்குப் பெயர் பெற்ற இடம் தாவடி - சந்தித்தேன்.

நான் சைக்கிளில் போய்க் கொண்டிருந்தேன். வழியில் அவரைச் சந்தித்தேன். இவரைக் கண்டதும் நான் வாகனத்திலிருந்து இறங்கினேன்.

"என்னை ஞாபகமிருக்கா?" எனக் கேட்டார்.

"ஓமோம் ஓமோம்! நல்லா நினைவிருக்கு!" இது நான்.

"நீ நல்லாய் எழுதுறாய் எண்டு கேள்வி. பேப்பரிலையும் அடிக்கடி பார்க்கிறன். எழுத்திலையும் என்னை மறந்து போயிடாதை. ஞாபகத்திலை வைச்சுக் கொள்!"

இதன் பின்னர் நான் அவரைச் சந்திக்கவில்லை.

அவரது நாமத்தை எழுத்தில்கூட, நான் மறக்கவில்லை.

அந்த மாநகரசபைத் தேர்தலில் நமது கட்சி வேட்பாளர்கள் இருவரும் தோல்வி கண்டனர். கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராக வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளில் ஒன்று. 'கண்ட நிண்ட பல பட்டறைச் சாதிகளின்ரை கட்சிதான் இந்தக் கட்சி, எழிய சாதியளின்ரை கட்சி, அது!'

தேர்தலில் வெற்றி தோல்வி கட்சிக்கு முக்கியமல்ல. கட்சியின் கருத்தை மக்கள் மத்தியில் பரவல் படுத்துவதே கட்சியின் நோக்கமாகும். அந்தத் திட்டம் நிறைவேறியது. மக்களிடம் வேர் பாய்ச்சி வளர்ந்தது கட்சி.

தேர்தலில் கிடைத்த பிரசார பலமும் முதல் தடவையாக ஒரு பஞ்சமர் தலைவன் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் போட்டியிட்டதும் ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் கட்சிக்கு ஒரு தளத்தை ஏற்படுத்தித் தந்தது.

சிறுபான்மைத் தமிழர் மகாசபை என்றொரு கட்டுக்கோப்பான ஸ்தாபன அமைப்பொன்று தோற்றுவிக்கப்பட்டது. அதன் செயலூக்கம் மிக்க தலைவராக தோழர் எம். சி. சுப்பிரமணியம் இயங்கத் தொடங்கினார். மக்களும் அவரை எம். சி. என்றே அழைக்க முற்பட்டனர். 'தோழர் எம். சி.'

ஒடுக்கப்பட்ட மக்கள் கூட்டத்திலிருந்து ஓர் அரசியல் தலைவர் உருவாகினார். அதை நடைமுறையில் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து சாதித்து வெற்றி கண்டது கம்யூனிஸ்ட் கட்சி மாத்திரம் தான்! இது கட்சி செய்த பெரிய சாதனைகளில் ஒன்று.

ஆலயத்துக்குள் நுழைய இயலாது. தேநீர்க் கடைகளில் பாரபட்சம். வெளிப்பேணி, உள் பேணி என்ற பாகுபாடு. ஏன் வாசிகசாலைகளில்கூட பிறத்திக்கிடம் . பாடசாலை, கல்லூரிகளில் சாதியின்பேரால் தடுப்புச் சுவர். அங்கீகாரம் இல்லாமை.

இத்தனை அவலங்களையும் உள்வாங்கி, சுதாகரித்துக் கொண்டு, சிறுபான்மைத் தமிழர் மகாசபை தோழர் எம். சி. தலைமையில் வேலைத் திட்டமமைத்துப் போராட்டக் களத்தில் குதித்தது.

'மாவிட்டபுரம் முருகன் ஆலயத்துக்குள் உட்சென்று சாமி கும்பிட அனுமதிக்க வேண்டும்!' என ஒடுக்கப்பட்ட மக்கள் உரிமைக் குரல் எழுப்பினர்.

ஆசார சீலச் சாதிமான்கள் அதை நிராகரித்தனர். வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டு, 'மனித உரிமைக்காகப் போராடியவர்களையே, வன்முறைக் கும்பல்!' எனக் குரலெழுப்பி நியாயமான மனித உரிமைப் போராட்டத்தைத் திசை திருப்பப் பார்த்தனர்.

போர்த்துக்கீசன், டச்சுக்காரன், வெள்ளைக்காரன்களிடம் கற்ற நவீன ராஜதந்திரத்தை, ஒடுக்கப்பட்ட மக்கள் கூட்டத்தினர் மீது பிரயோகித்தனர்.

'கடவுளில்லாக் கட்சிக்காரன்களுக்கு என்ன கடவுள்?' என்றனர்.

'வேற்று மதக்காரன்களெல்லாம் ஏன் எங்கட கோயில் பிரச்சினையிலை தலை நீட்ட வேணும்?' இது என்னையும் டானியலையும் குறி வைத்துத் தாக்குதல். மக்களிடமிருந்து எம்மைப் பிரித்து வைக்கும் தந்திரம். இது. ஏற்கெனவே தமிழகத்தில் கைக் கொள்ளப்பட்டுத் தோல்வி கண்டுவிட்டது.

'அடங்காத் தமிழர் தலைவர்' எனக் கூறிக் கொண்ட ஒருவர், தனது அடியாட்களுடன் இந்தப் பிரச்சினையில் தலையிட்டார். இந்தத் தலைவர்கள் தான் தமிழர்களுடைய ஜனநாயக உரிமைகளுக்காகப் போர் தொடுத்தவர்கள்! சத்தியாக்கிரகம் செய்தவர்கள்.

பிரச்சினை சூடு பிடித்தது. ஒடுக்கப்பட்ட மக்கள் ஒன்று திரண்டார்கள். ''பக்தர்கள் தங்களுடைய மனித உரிமையை வேண்டிப் போராடுகிறார்கள். அதில் நியாயம் உண்டு. எனவே நாம் அவர்கள் பக்கம் நிற்கிறோம். மக்களெல்லோரும் நமது கட்சிக்காரர்கள் அல்ல!'' எதிர்ப் பிரசாரம் செய்தோம்.

சிறுபான்மைத் தமிழர் மகாசபைக்கு கவிஞர் பசுபதியும் சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் இ. வே. செல்வரத்தினம் என்பவரும் செயலாளர்கள்.

இந்த இயக்கத்தில் டானியல் அவர்கள் முழுமூச்சாக உழைத்தார். தன்னை அப்படியே அர்ப்பணித்துத் தொண்டு செய்தார். வியூகம் அமைத்தார்.

மகாசபையின் போராட்டங்களில் நானும் கணிசமான பங்களிப்புச் செய்தேன். பாடுபட்டேன். பிரசாரகனாகச் செயல்பட்டு வந்தேன்.

கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் கிளைத் தலைவர்கள் பரிபூரண ஒத்துழைப்பு நல்கினர். 1956ல் தேசிய அரசியலில் மாற்றங்கள் ஏற்பட்டன. பள்ளிக்கூடங்கள் கல்லூரிகள் நாட்டுடமையாக்கப்பட்டன. சாதி ஆதிக்கக் கட்டுக் கோப்புகள் தளரத் தொடங்கின. முற்றாக நீங்கவில்லை. இருந்தாலும் தளர்ந்தன. நெகிழ்ந்தன.

பின்னர், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி தத்துவார்த்த நிலை காரணமாக இரண்டு பட்டது. தோழர் சண்முகதாஸன் தலைமையில் தனிக் கூறாகப் பிளவுபட அவர்களுடன் மணியம், டானியல் மற்றும் ஊக்கச் செறிவுள்ள தோழர்கள் தனியாக 'சாதி ஒழிப்பு வெகுசன இயக்கம், 'என்றொரு அமைப்பை நிறுவி, இப்போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றனர்.

இன்றும் சங்கானை என்ற சிறு நகரையடுத்துள்ள நிச்சாமம், வியட்நாமில் ஒரு போராட்டக் கிரமம் போலப் பேசப்பட்டு வருகிறது. இவை வரலாற்றுச் செழுமை மிக்க சம்பவங்களாகும். நிச்சாமம் இன்றும் பேசப்படுகின்றது. ஒடுக்கப்பட்டவர்களுடன், முற்போக்காளரும் அணி திரண்டு போராடினர்.

என் தேர்தல் வாழ்வை முதன்முதலில் யாழ்ப்பாண மாநகரசபையின் ஆரம்பத் தேர்தலுடன் ஆரம்பித்தேன். அதேபோல, அதே யாழ்ப்பாண மாநகரசபைக்கு 1979ல் புதிய யாப்புக்கமைய நடந்த தேர்தலிலும் நானொரு வேட்பாளனாகக் கட்சியினால் நிறுத்தப்பட்டேன்.

புதிய தேர்தல் சட்ட யாப்பிற்கு அமைய தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி யாழ் கிளை போட்டிக்குத் தயாரானது. நமது குழுவுக்கு முதல் வேட்பாளராகத் தோழர் வைத்திலிங்கம் நியமிக்கப்பட்டார். நானும் ஒருவனாகக் போட்டியிடக் கட்சி தெரிவு செய்தது.

அந்தப் போட்டியில் நான் பெற்ற அநுபவங்கள் சில புதுமையானவை. சில எனது எழுத்து வளர்ச்சிக்கு உரமானவை. சில எனது மக்கள் தொடர்புகளுக்குச் சாதகமானவை. சில மக்கள் அறிமுகத்திற்கு உதவுகரமானவை.

தேர்தல் வேலைகளைத் திட்டமிட்டே செய்து வந்தேன். நானோ தேர்தல் களத்துக்குப் புதுசு. அதன் நெளிவு சுழிவுகள் தெரியாது. பரபரப்பை உருவாக்குவதல்ல, என்னுடைய நோக்கம். இந்தத் தேர்தல் களத்தை மக்களுக்காகப் பாவிப்பது - பயன்படுத்துவது என்பதே குறிக்கோளாகும். சரியானவர்களைச் சரியான சமயத்தில் சென்றணுகி எமது இயக்கத்தின் திட்டங்களையும், கொள்கைகளையும் மனம் விட்டுப் பேசி, விவாதிப்பதே எனது உள்ளக் கிடக்கையாகும்.

எனவே மக்களைச் சென்றடையும் முறையிலேயே எனது வேலைகளை நடத்தி வந்தேன். இடதுசாரி முற்போக்கு இயக்கங்களின் ஆத்மக் குரலைச் சரியாகப், பிழையற்ற முறையில் தெளிவாகப் புரிந்து கொண்டவர்கள் எவரோ, அவர்களை இனங்கண்டு வீடு தேடிச் சென்று சந்தித்து அவர்களது ஆதரவைத் திரட்டுவதே என்னுடைய திட்டத்தின் முதற் கட்டமாக அமைந்திருந்தது.

''கந்தர் மடத்தடியிலை பென்ஷன் எடுத்த மாஸ்டர் ஒருவர் இருக்கிறார். அவரைப் போய்ச் சந்தியுங்கள். அவர் உங்களுக்கு நிச்சயமாக ஆதரவு தருவார். ஏனென்டால் அவரும் ஒரு இடதுசாரி மனப்பான்மை கொண்டவர்!" என ஒரு தோழர் எனக்குச் சொல்லிச் சென்றார்.

அவர் வாழும் இடத்தையும் முகவரியையும் பெற்றுக் கொண்ட நான், ஒரு நாள் பொழுது பட்ட நேரம் அவரைத் தேடிச் சைக்கிளில் சென்றேன்.

அவர் நேசபூர்வமாக என்னை வரவேற்றார். இருக்கை தந்து அந்நியோன்மான தொனியில் பேசி, இன்முகம் காட்டி உபசரித்தார். நான் வந்துள்ள நோக்கத்தைப் பற்றிச் சொல்லி, எனது சம்பாஷணையைத் தொடங்கினேன்.

''தம்பி ஜீவா! உமக்கு ஆதரவாக நான் வாக்குப் பண்ணமாட்டன்" என்றார், அவர் திடுதிப்பென்று.

நான் அதிர்ச்சியடையவில்லை. இதையும் விட எத்தனையோ அதிர்வேட்டுத் தகவல்களைக் கேட்டுக் கேட்டு பழக்கமாகிப் போன எனக்கு, இதொன்றும் வியப்பைத் தரவில்லை.

எனவே மௌனமாக இருந்தேன்.

''ஏனென்று கேளாமல் சும்மா இப்படியே இருந்தால் எப்படி?' என உரிமையுடன் கோவித்துக் கொண்டார். அவரே தொடர்ந்து சொன்னார்: ''உம்மை எனக்குக் கன காலமாகத் தெரியும். 64ம் ஆண்டு யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலை நடந்த மேதினக் கூட்டத்திலை, உம்முடைய மண்டையை உடைச்சான்களே, அதுக்கு முன்னம் கூட இருந்து உம்மைத் தெரியும், எனக்கு. உம்மைப் போன்றவை இப்படிக் கூட்டத்தோடு கூட்டமாக கோவிந்தா போடப் பிறந்தவர்களல்ல. உம்மைப் போன்றவர்கள் இந்த முனிசிபல் கவுன்சிலிலை, இருபத்திரண்டு பேரோடு ஒருவராகக் கதிரையிலை

குந்தியிருக்கக் கூடாது. உங்கட எழுத்து வேலைகளை இன்னும் திறமாகச் செய்ய வேணும். அதுதான் எனக்குச் சரியாகப் படுகுது. இப்படி. உம்மட திறமையை மழுங்கடிக்கக் கூடாது! நான் உங்களுக்கெண்டால் வோட்டுப் போட விருப்பமில்லை!" என்று நீண்ட வியாக்கினம் செய்தார். விபரமாகக் கதைத்துக் கொண்டே போனார்.

நான் என்னுடைய நிலைமையை விளங்கப்படுத்தினேன். "கட்சி எடுத்த முடிவிது. அம் முடிவுக்கு நான் கட்டுப்பட வேணும். அல்லாட்டி கட்சியை விட்டுவிடவேணும். அது நடக்காத காரியம். இது நம்மைப் போன்றவர்களுக்கு மக்களிடம் போக ஒரு களம். வெற்றியும் தோல்வியும் அப்புறம் தான். தத்துவம் பேசித் தப்பித்து விடலாம். பிரச்சினைகளுக்கு நாம் முகம் கொடுக்கப் பழகிக் கொள்ள வேணும். மக்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொள்ளுவதற்கு இதுவும் ஒரு வழி. அதனால்தான் நான் காலை வைச்சனான். அரசியலே அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம் எண்டு சொல்லிச் சொல்லியே, லஞ்சப் பொறுக்கிகளை வளர்த்து விட்டிட்டோம். உங்களுடைய வேலைகளை எங்களைச் சுமக்க வைச்சிட்டீங்க. இந்த உபதேசம் எழுத்தாளனுக்குச் செய்யும் உபத்திரவ உபதேசம்" என்றேன். சற்றுக் கடுமையாகவே உரையாடினேன்.

"இந்தத் தேர்தல்கள் மூலம் சமுதாயத்தை மாற்றி அமைச்சு விட முடியாது. அதற்கு புரட்சி தான் ஒரே வழி. நமக்கெல்லாம் புரட்சிகரத் திட்டம் தேவை. அது தான் என் எண்ணம்!" என்றார், அந்த அதி தீவிர புரட்சிக் கொழுந்து.

விவாதத்தில் புதிய திருப்பம். நான் சொன்னேன். "தேர்தலில் நம்பிக்கை இருப்பதும் இல்லாதிருப்பதும் இங்கு முக்கியமல்ல. மக்களை வென்றெடுக்க என்ன வழி? வாய்ப் புரட்சி சுலபம். அப்படிப் பேசிக் கொண்டே ஒதுங்கி இருப்பது கூட, அதை விடச் சுலபம். அதைத்தான் பலர் சிமிக்கிடாமல் செய்கிறார்கள். உழைக்கும் மக்களை நேசிப்பவன் கருத்தை நான் மதிப்பவன். அதை விட்டிட்டு சும்மா வாய்ப் புரட்சி, சும்மா வாய்ச் சவடால் அடித்துக் கொண்டிருப்பவன் எல்லாருமே கையாலாகாதவன், கபடன்!" எனக் காரசாரமாகவே சொல்லி வைத்தேன். எனவே வாழ்க்கையில் இப்படிப் பலரைக் கண்டிருக்கிறேன்.

முடிவில் விடைபெறும் போது அவர் சொன்னார் "நான் சும்மா சாட்டுக்குத்தான் உம்முடன் இப்படியெல்லாம் வாதிச்சனான். என்னுடைய ஓட்டெல்லாம் உம்மட அணிக்குத்தான். நீர் பயப்படாமல் போய் வாரும்!" வாசல் வரை வந்து வழியனுப்பி வைத்தார்.

எனக்குச் சர்வ நிச்சயமாகத் தெரியும். அவருடையதும் அவரது குடும்பத்தினரது வாக்குகளிலெதுவும் எமது அணிக்கு நேரெதிரானவர்களின் சின்னத்திற்கு நேரேயே புள்ளடியிடப்பட்டிருக்கும்.

அது போகட்டும்.

பென்சனியர் ஐயா தனது சம்பாஷணையில் ஒரு கட்டத்தில் சொன்ன தகவலின் பின்னணியை இங்கு விரித்துச் சொல்ல வேண்டும். அது உங்களுக்கும் தெரிந்திருப்பதும் நல்லது தான்.

தமிழ் மக்களிடம் எந்த யு. என். பி. ஆட்சிக்கெதிராகக் கோஷமெழுப்பிப் பாரளுமன்றக் கதிரையை வெற்றி கண்டாரோ - அதே தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள், அரசியலில் பல்டியடித்து அதே யு. என். பி. ஆட்சியில் ஒரு மீன்பிடி மந்திரிப் பதவிக்காகப் பிரதமர் சேனநாயக்காவிடம் சரணாகதியடைந்து விட்டார். இதை மேடை மேடையாகச் சொல்லித் தான் பெரியவர் செல்வநாயகம், தமிழ்க் காங்கிஸிலிருந்து பிரிந்து வந்து தமிழரசுக் கட்சியை ஸ்தாபித்தார். அக்கட்சியும் தமிழ் மக்களிடம் அரசியல் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தது. இது அரசியல் வரலாறு.

அதே தமிழரசுக் கட்சி 1964ல் அதே யு. என். பி. அரசாங்கத்தில் ஓர் உள்ளூராட்சி அமைச்சுக்காக மகன் டட்லி சேனநாயக்காவிடம் பகிரங்கமாக ஒப்புக் கொடுத்து விட்டது. அமைச்சராக நியமிக்கப்பட்டவர் திருச்செல்வம் அவர்கள். பிரதி அமைச்சர் தான். பிற்காலத்தில் இலங்கை ஜனாதிபதியாகத் தோன்றிய பிரேமதாஸ அவர்கள். வாய் வீரம் பேசிய தமிழரசுக் கட்சியும் ஒரு மந்திரிப் பதவிக்காக விலை போய் விட்டது.

இந்தக் கள்ளக் காதல் அரசியல் இணைப்பைச் சட்டபூர்வமாக அங்கீகரிக்கும் முகமாகத் தான் அவர்களால் யாழ்ப்பாணத்தில மேதினம் நடத்த முடிவெடுக்கப்பட்டது. அதற்குரிய ஊர்வலமும் ஒழுங்கு செய்யப்பட்டது. கம்யூனிஸ்ட் - சமசமாஜக் கட்சிகளின் கூட்டு மே தினம் யாழ் பஸ் நிலையத் திடலில் ஏற்பாடாகியிருந்தது. ஊர்வலம் முடிந்து கூட்டம் ஆரம்பிக்கும் வேளையில் இந்தக் கள்ளக் காதலின் உடந்தைக் கும்பல், உட்புகுந்து கல்லெறிந்து கலாட்டா செய்து, கூட்டத்தைக் குழப்பியடிக்க எத்தனிக்க முயன்றது. இந்தக் கூட்டுக் குழப்பவாதிகள் எறிந்த கல்லொன்று என் மண்டையைப் பிழந்து விட்டது. சட்டையெங்கும் ஒரே இரத்தம். எனக்கு மயக்கம் வருமாப்போல. இருந்தது. கூடி நின்ற தோழர்கள் உடனடியாக என்னைப் பக்கத்தேயுள்ள பெரியாஸ்பத்திரிக்கு வாகனத்தில் அழைத்துச் சென்றனர். தலையில் ஒன்பது தையல் போடப்பட்டு மருந்தும் கட்டப்பட்டது.

வீட்டிற்குப் போய் ஓய்வு எடுக்கும்படி தோழர்கள் வற்புறுத்திச் சொன்னார்கள். நானதை ஏற்றுக் கொள்ளவில்லை. போன வாகனத்திலேயே கூட்ட மேடைக்குத் திரும்பி வந்து விட்டேன். மேடையில் அமர்த்தப்பட்டேன்.

அத்தனை சோர்விலும், இரத்த இழப்பிலும், அதிர்ச்சியிலும் நானிருந்த போதிலும் கூட, வந்திருந்த தோழர்களின் வேண்டுகோளைப் புறக்கணிக்காமல்

அவர்களது வற்புறுத்தலுக்கு இணங்கி அந்த மேதின மேடையிலேயே உரையாற்றினேன். எந்த விதமான பதற்றமுமின்றிப் பேசினேன்.

1964ல் ஏற்பட்ட இந்த வெறித் தனக் கூத்தாட்டம்தான் 1981ல் யாழ்ப்பாண நூல் நிலையத்தை நெருப்பு வைத்துப் பொசுக்க அடித்தளமிட்டுத் தந்தது என - யோசிக்கும் வேளையில் நான் மனசுக்குள் எண்ணிப் பார்ப்பதுண்டு.

தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை ஏற்கெனவே எனக்கு ஓர் அபிப்பிராயம் உண்டு. தெளிவான கொள்கை அதற்கு இல்லை. அதுதான் அக்கட்சி பிற்காலத்தில் இத்தனை சீரழிந்து போனதற்கு முக்கிய காரணம். அடிபடைக் காரணமும் அதுவேதான்.

ஒடுக்கப்பட்ட, உரிமை மறுக்கப்பட்ட தமிழ் மக்கள் பகுதியினரின் ஜனநாயகக் குரலை அவர்கள் துச்சமாக மதித்தார்கள். அதே சமயம் பேரினவாதிகளின் ஒடுக்கு முறைகள் பற்றி மேடை மேடையாகப் பேசிக் கட்சி வளர்த்தார்கள். மாவிட்டபுரம் ஆலயப் பிரச்சனைபற்றி அக்கட்சி கண்டு கொள்ளவேயில்லை. இக்கட்சித் தலைவரின் தொகுதிக்கு உட்பட்ட கிராமம் அது. பிரச்சினை உக்கிரமடைந்த காலங்களில் எல்லாம் தந்தை கொழும்புக்குச் சென்று விடுவார். ஓட்டுக்கு மாத்திரம் ஒடுக்கப்பட்ட மக்களின் உதவி தேவை.

அவர்களுக்கு இந்தப் பஞ்சமர்களின் பிரச்சனை பற்றிக் கருத்துச் சொல்லப் பயம். பெரும்பான்மை உயர்சாதியினர் தேர்தலில் தங்களை நிராகரித்து விடுவார்களோ என்ற அரசியல் பீதி. அதே சமயம் நல்லையா என்பவருக்குச் சென்ட்டர் பதவியும், ராஜலிங்கம் அவர்களுக்குப் பாராளுமன்ற அங்கத்தவர் பதவியும், செல்லத்துரை என்பவருக்கு மாநகரசபை அங்கத்தவர் பதவியும், சும்மா இடைக்கிடையே கொடுத்து, தங்களினது ஒடுக்கப்பட்ட மக்கள் ஆதரவைக் கோடி காட்டி வந்தனர். இது ஒரு அரசியல் பம்மாத்து வேலை. தந்திரம். ஏமாற்று மோசடி.

தமிழரசுத் தலைவர்கள் பலர் நல்லவர்கள் தான். அதே சமயம் இந்தச் சமூக அமைப்பை மாற்ற விரும்பாதவர்கள். வாக்காளர்களுக்குப் பயந்தவர்கள். அதனால்தான் வீச்சுள்ள படைப்பாளிகள் அக்கட்சியிலிருந்து தோன்றவேயில்லை.

அதன் பின்னடைவுக்கு இதுவுமொரு காரணம்.



20

இலங்கையில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் மிகவும் பலமுள்ள ஆற்றல் மிக்க, வலிமை வாய்ந்த சங்கமாகக் கணிக்கப்பட்டது. அதன் தலைமை கொழும்பைக் கொண்டிருந்தாலும் அடிவேர், ஆணிவேர் யாழ்ப்பாண மண்ணில்தான் கிளைவிட்டுப் பரவி இருந்தது. எனவே இ. மு. எ. ச. வின் கிளைகளில் பிரதான கிளையாக அது அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அந்தக் கிளைக்குக் கணிசமான காலம் நான் செயலாளனாக இருந்து செயலாற்றி வந்துள்ளேன்.

முற்போக்குச் சிந்தனை கொண்ட, மனிதாபிமானம் மிக்க, தலைசிறந்த சிருஷ்டி கர்த்தாக்கள், புத்திசீவிகள், அறிவாளிகள் இச் சங்கத்தில் இருந்து செயலாற்றி வந்துள்ளனர். இவர்களில் முக்கியமானவர்களில் பலர் யாழ்ப்பாணத்திலிருந்து இயங்கி வந்தவர்கள்தான், அதிகம். மக்களிடம் வேர் பாய்ச்சியவர்கள் தான் அநேகர். இவர்களை மக்கள் அங்கீகரித்தனர் மதித்தனர்.

இந்தப் படைப்பாளிகளில் பலர் ஒடுக்கப்பட்ட, உரிமை மறுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட, வறுமைப்பட்ட வெகுசனப் பகுதியிலிருந்து வந்த காரணத்தால் இலக்கிய உணர்வும் கருத்து ஒருமைப்பாடும் கொண்டு இயங்கி வந்தனர். இ. மு. எ. ச. வின் கோட்பாடும் கொள்கைகளும் இவர்களை அரவணைத்து ஈர்த்துக் கொண்டதில் வியப்பேதுமில்லை. இவர்களும் இணைந்து செயல்பட்டனர்.

இந்த இயக்கத்தில் என்னை அர்ப்பணித்து இயங்கி வரத் தொடங்கினேன். வழுவாது, சோராது, துவளாது, சலியாது, தடம் புரளாது நான் செயலாற்றி

வந்திருக்கிறேன். அந்தக் கால கட்டம் இலக்கியச் செழுமை மிக்க கால கட்டம்.

இலங்கையில் பேர் சொல்லத்தக்க எழுத்தாளர்களாகிய வரதர், இளங்கீரன், டானியல், நீர்வை பொன்னையன், கைலாசபதி, சிவத்தம்பி, முருகையன், கனக செந்திநாதன், சில்லையூர், சொக்கன், அகஸ்தியர், கணேசலிங்கன், காவலூர், பிரேம்ஜி, செ. யோகநாதன், பெனடிக்ற் பாலன், நந்தி, நாகராஜன், சோமு, பத்மா, ரகுநாதன், பசுபதி, மு. தளையசிங்கம், பொன்னம்பலம், சிற்பி, குறமகள், தெணியான், தில்லைச் சிவன், நடராஜன், ஏ. ரி.. பொன்னுத்துரை, புதுமைலோலன், நாவேந்தன், சு. வே., முத்தையா மாஸ்டர், வில்வரத்தினம், சாந்தன், செங்கை ஆழியான், காரை சுந்தரம்பிள்ளை, கனகரட்னா போன்றோரும் இன்னும் உடன் ஞாபகத்தில் தட்டுப்படாத பல எழுத்தாளர்களும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பல்வேறு விழாக்களிலும் இலக்கியக் கருத்தரங்குகளிலும் கலந்து கொண்டு சிறப்பித்த சிலராவர்.

யாழ்ப்பாணமல்லாது தென்னிலங்கைப் பிரதேசங்களில் நடை பெற்ற இலக்கிய விழாக்கள், கருத்தரங்குகளில் இன்னும் விரிவாகப் பல எழுத்தாளர்களைச் சந்தித்திருக்கிறேன். அவர்களுடன் நட்புப் பூண்டிருக்கிறேன்.

என்னுடைய குறிக்கோள் இதுதான். நமது எழுத்தாளர்கள் தத்தமது படைப்புத் திறமையால் சர்வதேசங்களிலும் பேசப்பட வேண்டும். நமது தமிழ் சர்வதேசிய அந்தஸ்துப் பெற்றுத் திகழ வேண்டும் என்பதுதான். என்னை அதி சிறந்த எழுத்தாளன் என ஸ்தாபிப்பது எனது நோக்கமல்ல. என்னுடைய சகோதர எழுத்தாளன் படைப்பு நமது மண்ணையும் கடந்து விதந்து போற்றப்பட வேண்டும். இதுவே எனது ஆசை. நமது படைப்பாளிகள் சர்வதேச அங்கீகாரம் பெற வேண்டும். இதைச் சாதிக்க வேண்டுமென்ற உணர்வுடனேயே நான் செயல்பட்டேன்.

'நமது நாடு தமிழ் நாட்டின் தரமற்ற இறக்குமதிச் சாக்கடை இலக்கியத்தின் கொட்டுமிடமுமில்லை. குப்பைக் கூடையுமில்லை!' என்பதே எனது நோக்கமாகும். 'இலக்கியப் பரிவர்த்தனை என்பது ஒரு வழிப் பாதையல்ல!' - என்பதே எனது கோஷத்தின் உட்கிடக்கையாகும். வரவும் வேண்டும். போகவும் வேண்டும். அதே சமயம் தமிழ் அது எந்த மண்ணின் தமிழாக இருந்த போதிலும் கூட, அந்தத் தமிழை வெளிநாட்டார் வரவேற்றுத் தலை சாய்த்து நுகரவேண்டும். பாரதி கண்ட கனவு நனவாகி விடவேண்டும்.

இந்த நோக்கங்களுக்காகவே நான் இடைவிடாது உழைத்தேன். என்னையும் இ. மு. எ. ச. வையும் கொச்சைப்படுத்தி விமரிசிப்பவர்கள் எவரோ அவர்கள் என்னுடைய அல்லது நான் சார்ந்த இயக்கத்தின் உழைப்பின் இலக்கியப் பயனை அநுபவித்துக் கொண்டுதான் இந்தக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகின்றனர் என்பதையும் நான் அறிந்து வைத்துள்ளேன். யாழ்ப்பாணம் மாநகரசபை கேட்போர் கூடம், மத்திய

கல்லூரி மண்டபம், பாரதி பாஷா வித்தியாலயம், நல்லூர் கலியாண மண்டபம் போன்ற இடங்களிலெல்லாம் பல கூட்டங்களை என் அழைப்பின்பேரில் கூட்டியிருக்கின்றேன். இப்படிப் பல கூட்டங்கள்.

அங்கெல்லாம் காரசாரமான இலக்கிய விவாதங்கள் நடைபெறும். கூட்டம் முடிந்த பின்னர் வெகு சுமுகமாகத்தான் நாங்கள் கலைந்து செல்வோம்.

ஏன் 1963ல் சாஹித்திய விழாவில் நடந்தேறி முடிந்த கூழ் முட்டையடி இலக்கியக் காடைத்தனத்திற்குப் பின்னரும், நான் அழைத்த இலக்கியக் கூட்டங்களுக்கு வந்து கலந்து கொண்டவர்தான் அநேகர்.

இது என்னத்தைச் சுட்டுகின்றதென்றால், பல எழுத்தாளர்கள் என்னை வெறுக்கவில்லை. ஏற்று வந்து, கலந்து கொண்டுள்ளனர். என்னைக் கௌரவித்துள்ளனர். அதனால் எனது இலக்கிய உழைப்பை மதித்தனர். அவர்கள் நம்புவதையும் விட, அவர்களை அதிகம் நேசித்தவன். இதைப் பலர் நேரடியாகப் புரிந்து கொண்டார்கள். நேர்ச் சம்பாஷணையில் கூடச் சொல்லியுள்ளார்கள். எழுத்திலும் கூடப் பதிந்து வைத்துள்ளனர்.

இது எனது இலக்கிய நேர்மைக்குக் கிடைத்த அங்கீகாரம்!

எனக்கொரு அரசியல் கொள்கையுண்டு. அதேபோல இ. மு. எ. ச. வுக்கு ஒரு பார்வையுண்டு. ஒரு கோட்பாடுண்டு. ஒரு தத்துவார்த்தப் பார்வை உண்டு.

எந்தக் காலத்திலுமே என்னுடைய கொள்கையை எனது சகோதரப் படைப்பாளர்கள் மீது திணிக்க முற்பட்டவனல்ல, நான். அதேபோலத் தத்தமது கொள்கை, கோட்பாடுகளை விட்டு இ. மு. எ. ச. வில் இணையுங்கள். என அந்த இயக்கம் யாரையுமே வற்புறுத்தியதுமில்லை. கேட்டுக் கொண்டதுமில்லை.

அந்த ஜனநாயக அணுகுமுறை காரணமாகத்தான் இன்றுவரை இ. மு. எ. ச. விதந்து பேசப்பட்டு வருகின்றது. வரலாறு சொல்லப்படுகிறது.

1961 ஜனவரியில் யாழ் நகர மண்டபத்தில் சோமசுந்தரப் புலவருக்குப் பெருவிழா எடுத்தது. இ. மு. எ. ச. ஈழத்திலக்கியத்திற்குப் பெரும் பங்காற்றிய இலக்கியப் பெரியார்களைக் கௌரவிக்கும் முகமாக இந்த விழா அமைந்தது.

அடுத்து 1963 மேயில் பருத்தித்துறை வியாபாரிமூலையில் யாழ்ப்பாணத்துச்சாமி எனப் பாரதியாரால் ஞானகுருவென ஏற்றுக்கொள்ளப்பட்ட, மோனம் அருளம்பல சுவாமிகளின் ஞாபகார்த்தமாக நினைவுக் கல் நிறுவும் விழாவை முன்னின்று நடத்தியது. இவ்விழாவில் எழுத்தாளர் பலர் கலந்து கொண்டனர். பெருவிழாவாக இவ்விழா அமைந்தது.

1962ல் கொழும்பு ஸாஹிராக் கல்லூரி மண்டபத்தில் இரண்டு நாள் மகாநாடு நடந்தது. இது இ. மு. எ. ச வின் முதல் மகாநாடு. யாழ் மண்ணிலிருந்து ஏராளமான எழுத்தாளர்கள் பங்கு கொண்டனர். அதற்கான

தயாரிப்பு வேலைகளுக்காக இரண்டு மாதங்கள் உழைக்க வேண்டியிருந்தது. இரவு பகலாக அதற்காக உழைத்து ஒப்பேற்றினேன்.

1963ல் கண்டி புஸ்பதான மகளிர் வித்தியாலயத்தில் மகாநுவர தருண கவி சமாஜ சிங்களக் கவிஞர் சம்மேளனத்தின் அழைப்பை ஏற்றுப் பல தமிழ் எழுத்தாளர்கள் கலந்து கொண்டோம். பேரினவாதிகளின் அச்சுறுத்தல், பயமுறுத்தல்கள் மத்தியில் எமது கருத்துக்களைத் தெளிவாகச் சிங்கள எழுத்தாளர் மத்தியில் பிரகடனப்படுத்தினோம். சகோதரத்துவத்தைப் புதுப்பித்துக் கொண்டோம்.

''இனங்களுக்கிடையே சமாதானமும் புரிந்துணர்வும் சௌஜன்ய சுமுக உறவும் ஏற்பட வேண்டுமானால், சிறுபான்மையோர் இனப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமானால், தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமை கொண்ட தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்!' என அக் கவியரங்க மகாநாட்டு மேடையில் பகிரங்கமாக அறிக்கை விட்டோம்.

அதுவும் எப்படிப்பட்ட நேரத்தில்? எப்படிப்பட்ட சூழ்நிலையில்?

''தமிழர்களின் முதுகுத் தோலை எடுத்துச் செருப்புத் தைத்துப் போடவேண்டும்!" என, பேரினவாதக் கூக்குரல் பேரதிர்ச்சியாக ஒலித்துக் கொண்டிருந்த சமயத்தில் கண்டியில் இப்படிச் சொன்னோம். நிமிர்ந்து நின்று நியாயம் கேட்டோம். போராடினோம். உரிமைக்குக் குரல் கொடுத்தோம்.

1975 மேயில் தமிழ் - சிங்கள - முஸ்லிம் எழுத்தாளர்களினது பொது மகாநாட்டை பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் பல சிரமங்களுக்கு மத்தியில் நடத்தினோம். அங்கு நாடு தழுவிய ரீதியில் தமிழ். முஸ்லிம். சிங்கள எழுத்தாளர்கள் வந்து சிறப்பித்தார்கள். வரலாற்றில் இம்மகாநாடு இன்றுவரை பேசப்பட்டு வருகிறது.

பல அரசியல் தீர்மானங்கள் எடுத்தோம். 20 அம்சத் திட்டத்தை அந்த மகாநாட்டு மேடையில் பகிரங்கமாக வைத்தோம். முன்மொழிந்தோம். அதற்கும் எராளமான நமது பிரதேசத்து எழுத்தாளர்கள் வந்து பங்கு கொண்டு சிறப்பித்தனர். அவர்களை அழைத்து வந்து பங்கு கொள்ள வைத்ததில் யாழ் கிளை பெரும் பங்கு வகித்தது. பெரும் பங்கு என்ன, முக்கிய பங்குவகித்தது.

1976ல் கம்பஹா மாவட்டத்திலுள்ள 'கொரஸ்ஸ' என்ற சிங்களக் கிராமத்தில் ஸ்ரீ சுதர்மானந்த பௌத்த விகாரையில் வண. ரத்நவன்ஸ தேரர் தலைமையில் சிங்கள - தமிழ் எழுத்தாளர் சந்திப்பொன்று நடை பெற்றது. 'தமிழ்ப் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் சிங்கள எழுத்தாளர்களையும் அவர்தம் படைப்புக்களையும் அறிமுகப்படுத்திய அளவுக்குச் சிங்கள எழுத்தாளர்கள் பங்குப் பணி ஆற்றவில்லை' என்ற குற்றச்சாட்டை அவர்கள் முன் வைத்தேன். அதற்காகவே கொழும்பு வந்தேன். தேசிய ஒருமைப்பாடு இந்த வகையில் மலராது என

உரையாற்றினேன்.

அவர்கள் தவறைத் திருத்துவதாக ஒப்புக் கொண்டனர். 'சிங்களத்திலிருந்து தமிழுக்கு மொழியாக்கம் செய்யும் மொழி பெயர்ப்பாளர் இருப்பதுபோல, தமிழிலிருந்து சிங்களத்துக்கு மொழி பெயர்ப்புச் செய்யக்கூடிய இரு மொழியும் தெரிந்த வல்லுநர் சிங்களத்தில் இல்லை.!' என்ற சமாதானமும் சொல்லப்பட்டது.

அப்படியான மொழிபெயர்ப்பாளர்களைக் கண்டு பிடிக்க வேண்டும். அல்லது உருவாக்க வேண்டும், என ஒப்புக் கொள்ளப்பட்டது.

1986ல் பாரிய யுத்த சூழ்நிலையிலும், அரச பயங்கரவாதத்திற்கு மத்தியிலும் நல்லூர் நாவலர் மண்டபத்தில் ஒரு நாள் மகாநாடு நடத்தித் தமிழ் மக்களினது கோரிக்கைகளிலுள்ள நியாயத்தை அறிக்கை மூலம் எடுத்துச் சொன்னோம். அக்கோரிக்கைகளின் ஜனநாயகத் தன்மையை விரிவுபடுத்திச் சொன்னோம். தமிழ் மக்களது நியாயமான கோரிக்கைகள் நிறைவேறுவதன் மூலம்தான் நாட்டில் நிரந்தர சமாதானம் நிலவும் என அரசுக்கு இடித்துரைத்தோம்.

இதற்கு அமைப்பாளராக இருந்து முழுமூச்சாக உழைத்தவன் என்ற காரணத்தால், அவ்வெற்றியில் பெருமிதம் அடைந்தேன். நியாயமான புளங்காங்கிதம், அது. நியாயமான பெருமிதம் அது.

அப்புறம் நான் கொழும்பு வந்து சேர்ந்தேன். பின் எழுத்தாளர் சந்திப்பொன்றையும், மாநாடொன்றையும் இ. மு. எ. ச. பெரியளவில் முடித்தது.

என்னளவில் இற்றை வரைக்கும் இ. மு. எ. வின் சகல வெகுசன இயக்கப்போராட்டங்களிலும் மகாநாடுகளிலும் நான் நின்று உழைத்திருக்கிறேன் என ஆத்ம சுத்தியுடன் திருப்தியடைகின்றேன். பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அதன் வெற்றி தோல்விகளில் நானும் பங்கேற்று வந்துள்ளேன். கைகோர்த்து நடந்துள்ளேன் என்பதை இந்த எழுத்துப் பதிவுகளே பிற்காலத்தில் ஆவணமாகச் சாட்சி சொல்லும் என்பதை நிச்சயமாக நம்புகிறேன்.

இ. மு. எ. ச. என்பது கம்யூனிஸ்டுகளின் கைப்பாவை என்றொரு குற்றச் சாட்டுமுண்டு. வேண்டுமென்றே சிலர் திரித்துக் கூறும் கட்டுக் கதை தான் இது.

இப்படியான குற்றச்சாட்டைக் கூறுபவர்களே இதை நம்பவில்லை. நமது ஆத்ம சுத்தியை நம்பும் எழுத்தாளர்களும் இந்தக் குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்வதுமில்லை. இந்தப் பிரசாரத்திற்கு ஆட்பட்டுப் போவதுமில்லை.

குறுங் குழுவாதக் குட்டிக் கும்பல் எனச் சொல்லி எம்மை ஒரு செப்புக்குள் அடைக்கச் சிலர் முயன்றதுண்டு. குறுங் குழுவாதம் மிக மிகப் பொல்லாதது. அதைக் கைக்கொண்டு ஒழுகுபவர்கள் குறுகிக் குறுகிக் கடைசியில் இல்லாமலே போய் விடுவார்கள். மிஞ்சி இருப்பவர்களையும் அந்த நோய் முடிவில் தீர்த்துக் கட்டி விடும். எமக்கெல்லாம் இது நன்றாகவே தெரியும். தெளிவாகவே புரியும்.

தத்துவார்த்த அறிவு சார்ந்த கூட்டுப் பிணைப்பு என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியது. குறுங் குழுவாதம் முதுகு சொறிந்து விடுவது. நச்சுத்தன்மை கொண்டது.

நான் யாழ்ப்பாண நகரத்தில் தொழில் செய்து வந்த பிரதேசம் நகரத்தின் முக்கிய பகுதியாகும். பலரும் வந்து போவதற்கும் சந்திப்பதற்கும் வசதியான இடத்தில் அமைந்திருந்தது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும் நண்பர்கள் தமது யாழ் பிரதேசத்திலிருக்கும் நண்பர்களுக்குக் கடிதம் எழுதும் போது, `சனிக்கிழமை பின்னேரம் நாலு மணிக்கு ஜீவா கடையில் சந்திக்கவும்!` தந்தி பாஷையில் எழுதிப் போட்டுவிட்டே வருவார்கள். அத்தனை நம்பிக்கை.

அவர்களும் வந்து காத்திருப்பார்கள். சந்திப்பார்கள். உரையாடுவார்கள். நேரம் சுணங்கினால் என்னுடன் பேசிக் கொண்டிருப்பார்கள்.

இவர்களில் அநேகர் என்னுடைய நெருங்கிய நண்பர்களல்ல. நண்பர்களின் நண்பர்கள். அல்லது இலக்கிய உலகில் புதுசாக நுழைந்தவர்கள்.

இதனால், இப்படியான நேர்ப் பேச்சு நெருக்கத்தினால் பலரை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. சிலரை நேசிக்கவும், அன்பு செலுத்தவும் முடிந்தது.

எனவே நாடு தழுவிய ரீதியில் எனக்கு நிறைய நண்பர்கள் பரந்து பட்டு இருந்தனர். எனக்கிருந்த இலக்கிய வட்டாரம் பெருகியது. விரிந்தது. பரந்தது.

வலு உற்சாகமாகவும், மகிழ்ச்சியாகவும் இயங்கி வந்தேன். இந்தக் காலகட்டத்தில் தான் ஒரு நாள் சிறுபான்மைத் தமிழர் மகாசபைக் கூட்டமொன்றில் அதன் செயலாளர்களில் ஒருவரான ஆசிரியர் செல்வரத்தினம் சந்தித்தார். ``உன்னையடாப்பா ஒரு ஆள் சந்திக்கப் பிரியப்படுகிறார். எப்ப அவரை வரச் சொல்ல?'' என்றார். செல்வரத்தினம் ஆசிரியர் ஒரு அற்புதமான மனிதர். இன்று கனடாவில் வசிக்கிறார். படித்த பெருமகன்.

`எவர்?` என்று சொல்லாமல் மொட்டையாகவே இப்படிச் சொல்லி வைத்தார். நான் மேலும் விசாரித்தேன். ``எங்களோடை படிப்பிக்கிறவர் தான் அவர். கனகரட்னா எண்டு அவருக்குப் பேர்'' எனத் தொடர்ந்து

சொன்னார். ''அவர்தான் உன்னைப் பார்த்துப் பேச ரொம்பவும் பிரியப்படுகிறார்.''

அப்பொழுது விஜயபாஸ்கரன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு இலக்கியச் சிறப்பு மிக்க சிற்றேடு ஒன்று சென்னையிலிருந்து வந்து கொண்டிருந்தது. ஜெயகாந்தன், சுந்தர ராமசாமி, வல்லிக்கண்ணன், வானமாமலை போன்ற புதிய இளந்தலைமுறை ரஸிகர்களால் போற்றப்படும் எழுத்தாளர்கள் அதில் எழுதி வந்தனர். நானும் இடையிடையே சிறுகதைகள் எழுதி வந்தேன். 'சிலுவை' என்றொரு சிறுகதையை அதில் சமீபத்தில் எழுதியிருந்தேன். எனக்குப் பிரியமான கதைகளிலொன்று அது.

''அந்தக் கதையைப் படித்துப் பார்த்த பின்னர், தான் உம்மைச் சந்திக்க விரும்புகிறார்!'' என அவர் சந்திக்க விரும்புவதன் நோக்கத்தை எனக்கு விளங்கப்படுத்தினார். ''வாற சனிக்கிழமை வரச்சொல்லட்டா?''

ஒரு சனிக்கிழமை என மெல்லிசாக ஞாபகமிருக்கிறது. விளக்கு வைக்கும் நேரம். சாயங்காலம் ஆறு மணி இருக்கும்.

நான் எங்கேயோ போய் விட்டுத் திரும்பியிருந்தேன். கடைப் பையன் ''ஆரோ உங்களைப் பார்க்க வந்திருக்கினம்'' எனச் சொல்லி கடையின் உட் பக்கத்தைக் காட்டினான்.

போய்ப் பார்த்தால் கட்டையர். குறுமுனி போன்றவர். அழகானவர். நல்ல சிவலை. அடிக்கடி காற்சட்டையின் இடுப்புப் பட்டியை மேலிழுத்தப்படி கதிரையில் இருந்து எழுந்தார். ''நான் தான் கனகரட்னா!'' எனச் சொல்லிக் கொண்டே நட்பு நிறைந்த பார்வையுடன், வலது கையை நீட்டினார்.

இருவரும் கைகுலுக்கிக் கொண்டோம். மிக நெருக்கமானவர்களைப் போலச் சம்பாஷணையில் ஈடுபட்டோம்.

அன்று தொடங்கிய அந்த நட்பு, எனது இலக்கிய வாழ்வில் பல திருப்பங்களை ஏற்படுத்தியது. பல மாற்றங்களைக் கொண்டு வந்தது.

அவருடைய சொந்தப் பெயர்: ஜெயராஜ். இவர்களது முதாதையர் கனகரத்ன முதலி குடும்பம். பரம்பரையாகக் கனகரத்னா என அழைக்கப் பெற்று வந்ததால் முதலி என்ற பெயர் விடுபட்டு விட்டது. ஜெயராஜ் கனகரட்னா என்ற இவரது இயற்பெயர் ஏ. ஜே. கனகரட்னா என்றெமக்குப் பரிச்சயப்பட்டு விட்டது.

''உங்களது பெயர் சிங்களப் பெயராகத் தமிழ்க் காதுக்குத் தொனிக்கிறதே?'' என நானொரு தடவை கேட்டபோது, யாழ்ப்பாணம் மூன்றாம் குறுக்குத் தெருவிலுள்ள அவரது வாசஸ்தலத்தில் சாய்வு நாற்காலியில் ஓய்வுக்காகப் படுத்திருந்தபோது தனது குடும்பப் பெயரிலுள்ள 'ம்' விடுபட்டுப் போனதன் சூட்சுமத்தை எனக்கு விளக்கிச் சொன்னார், ஏ. ஜே. கனகரட்னா.

நான் மதிக்கும் மிகப் பெரிய கல்விமான். ஆங்கிலப் புலமைமிக்கவர். பல எழுத்தாளர்களினது கதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, இங்கிலீஸ் பத்திரிகையில் வெளியிட்டுள்ளார். அதில் எனது கதைகளும் அடங்கும். மற்றும் பலருடைய கதைகளும் அடங்கும்.

சரஸ்வதியில் வெளிவந்த ஜெயகாந்தனுடைய கதையான `போர்வை' என்ற கதையை மொழி பெயர்த்தார், ஏ. ஜே. அதை நான் ஜெயகாந்தனுக்கே அனுப்பி வைத்தேன்.

அம் மொழி பெயர்ப்பின் சிறப்பைப் பலர் பாராட்டியதாகப் பின்னர் ஜெயகாந்தன் எனக்கெழுதிய கடிதமொன்றில் குறிப்பிட்டிருந்தார்.

ஆங்கில இலக்கிய அறிவு அதிகம் பெற்றிருக்காத என்னைப் போன்ற தமிழ் எழுத்தாளர்களுக்கு, அவரது நட்புக் கிடைத்ததே ஓர் இலக்கியக் கனதி என்றே இன்று வரை கருதி வருகின்றேன்.

அவர் அப்பொழுது புனித பத்திரிசியார் கல்லூரியில் படிப்பித்துக் கொண்டிருந்தார். சாயங்கால வேளைகளில் நான் பறங்கித் தெருப் பக்கம் சைக்கிளில் போய் விடுவேன். பறங்கித் தெரு என்பது யாழ் பிரதான வீதியை ஊடறுத்துக் கொண்டிருந்தது. இரண்டாம் குறுக்குத் தெருவும் பிரதான வீதியும் சந்திக்கும் முனையில் பிரிமியர் கபே என்றொரு ஹோட்டல் உண்டு. நீதிமன்றங்களுக்குச் சமீபமாக அது இருந்ததால், பகலில் சட்டத்தரணிகளும், வழக்கறிஞர்களும் மற்றும் நீதிமன்றங்களுக்கு வருவோரும் நிறைந்திருப்பார்கள். சாயங்காலம் ஓய்ந்திருக்கும். எங்களைப் போன்றவர்களுக்கு இடமளிக்கும்.

சாயங்காலமென்றால் சனம் இருக்காது. இருவரும் ஒரு மூலையைப் பிடித்து உட்கார்ந்து விடுவோம். தேநீருக்கு ஓடர் செய்து விட்டு பலமணி நேரமாக ஒரே இலக்கியம் கதைப்பதுதான் எம்முடைய வேலை. பொழுதுபோக்கு.

இரவு எட்டரை மணிக்குத்தான் ஹோட்டலை மூடுவார்கள். அது மட்டும் கதை.... கதை..... கதை..... ஒரே பேச்சுச் சமா இடம் பெறும்.

இந்த ஹோட்டல் ஏ. ஜே. யினுடைய மாமாவினுடையது. எனவே ஊழியர்கள் எங்களை மரியாதையாகவே நடத்துவார்கள். கடைக் கதவு சாத்தும் போது தான் சற்றுப் பரபரப்புக் காட்டுவார்கள். இத்தனைக்கும் ஆளுக்கு மூன்று நான்கு தேநீர் அருந்தி விடுவோம். பொழுது போவதே தெரியாது.

ஹோட்டல் கதவு சாத்தப்பட்டு வெளியே விடப்பட்டதும் அப்படியே நடந்து கடற்கரை ஓரமாக அமைதியாக இருக்கும் கிறாண்ட் ஓட்டலுக்குப் போயமர்வோம். இது குடிவகைச் சாய்ப்பு. வெளிநாட்டுக் குடிவகை `பார்'. வெகு அமைதியான இடம்.

இங்கும் இலக்கியம்தான் பேச்சு.

தான் குடித்து வைத்த கிளாசொன்றை என் முன்னே அரக்கி வைப்பார், கனகரட்னா. சும்மா தமாஸ்க்காகத்தான் இதைச் செய்வார்.

நானதைப் பொருட்படுத்துவதில்லை. பொருட்படுத்துவதாகக் காட்டிக கொள்வதுமில்லை.

ஒரு நாள் நாங்களிருந்த அடைப்பு அறைக் கதவைத் திறந்து பார்த்த ஓர் உருவம், சட்டென்று மறைந்து விட்டது. வந்தது போல மறைந்துவிட்டது.

நானதைக் கவனித்தேன். உருவம் கண்களில் தட்டுப் படவேயில்லை. அப்படியொரு வேகம், திரும்புவதில். அப்படியொரு சடுதித் திரும்புதல்.

இரண்டொரு நாட்கள் இருக்கும். அம்மா தனியாக அழைத்து என்னைக் கூர்ந்து பார்த்து விட்டுக் கேட்டார். ``நீயும் உன்ரை கொப்பரைப் போல, கடைசியிலை இந்தப் பழக்கமா பழகிப் போட்டாய்?''

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஏதோ என் ஒழுக்கக் கேட்டின் அசுகையை அறிந்துதான், இப்படிக் கேட்கிறார் என அவரது குரல் புலப்படுத்தியது.

``சொல்லு.. சொல்லு..... கடக்கரைச் சாராயத் தவறணையிலை நீ குடிச்சுக் கொண்டிருந்ததைக் கையும் களவுமாக ஒரு ஆள் கண்டுட்டுதாம். இது உண்மையே? சொல்லு தம்பி, இது உண்மையாடா?''

எனக்கு உடனே புரிந்து விட்டது. அன்று மறைந்த அந்த உருவத்துக்கு குரியவர் கூடப் பிறந்த எனது அண்ணன். அவர் இப்படியான இடங்களுக்குச் சிமிக்கிடாமல் போய் வருகிறவர் என்பது எனக்கு ஏற்கெனவே தெரியும். எனக்கு விளங்கி விட்டது. இப்படி வத்தி வைத்தது யாரெனப் புரிந்து விட்டது.

நான் பேசாமல் நின்றேன். மௌனமாகவே அம்மாவின் முகத்தை ஆழமாக நோக்கினேன்.

``சொல்லு பொடியா, இதெல்லாம் உண்மையோ?''

நான் அம்மாவைப் பார்த்தேன். ``இஞ்சை பாரம்மா! என்ரை முகத்தைப் பார்! மனசார இதை நம்பிறியோ, நீ?''

``சத்தியமா, ஆண்டவராணை நான் நம்பேல்லை!''

போதும். இது போதும் எனக்கு!

அடுத்த நாள் சந்திப்பின் போது நண்பர் ஏ. ஜே யிடம் இந்தச் சம்பவத்தைச் சொல்லி ரஸித்துச் சிரித்தேன். அவரும் சேர்ந்து சிரித்தார்.

பிரிமியர் கபேயில் எமது தொடர் சந்திப்பு நடந்து வந்தது. இடையிடையே கிறாண்ட ஓட்டலுக்குப் போய் வருவதும் நடந்து கொண்டு தான் இருந்தது.

இப்படி நாட்கள் சென்று கொண்டிருக்கும் ஒரு தினத்தில் தான் அந்தக் கபேயில் ஒருவர் என்னை அணுகினார். ஏ. ஜே. யிடமும் சிநேகம் பூண்டார்.

என்னுடைய சிறுகதைகளைத் தொகுத்துத் தரும்படியும், அதைத் தான் நூலுருவில் வெளியிட்டுத் தருவதாகவும் என்னிடம் ஏ. ஜே யிடமும் கேட்டுக் கொண்டார், அந்தத் திடீர் நண்பர்.

நான் கதைகளைத் தொகுக்கும் வேலைகளை ஆரம்பித்தேன். நண்பர் ஏ. ஜே யும் இடையிடையே சில ஆலோசனைகளைச் சொல்லித் தந்தார்.

சொன்ன தவணைக்கு எனது தொகுதி அச்சுக்குத் தயார் பண்ணியிருந்தும் கூட, புத்தகமாகப் பிரசுரிக்க ஒப்புக் கொண்டவர் வந்து சேரவில்லை. அப்படியே ஆள் மறைந்து விட்டார். காணாமலே போய்விட்டார்.

அப்படித் தொகுக்கப்பட்ட தொகுதி தான் 1960ம் ஆண்டுக்கான சாஹித்திய மண்டலப் பரிசைப் பெற்றுக் கொண்ட 'தண்ணீரும் கண்ணீரும்' சிறுகதைத் தொகுதி.

இந்தத் தொகுதியில் இடம்பெற்றுள்ள கதைகளில் ஒன்றான 'ஞானம்' என்ற சிறுகதைகளில் வரும் சோக்கெல்லோ கந்தையாண்ணன் பாத்திரத்தைத் தனது வீட்டுக்கு முன்னால் அறிமுகப் படுத்தி வைத்தவரும் இதே ஏ. ஜே. அவர்கள் தான். கதைக் கரு எனக்குக் கிடைத்து விட்டது. பின்னர் கதையும் உருவாகி விட்டது.

இந்த நூல் சரஸ்வதிப் பிரசுரமாகப் பதிப்பிக்கப் பெற்றுத் தபாலில் எனக்கு யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த சமயம், இந்தத் தொகுதியை என்னைத் தவிர, முதல் முதல் பார்த்த எனது இலக்கிய நண்பரும் ஏ. ஜே. தான். அது மாத்திரமல்ல, இந்த நூலுக்குப் பரிசு அளிக்கப்பட்ட இடம் பேராதனைப் பல்கலைக் கழகம். பரிசை நான் பெற்றுக் கொள்ள, என்னுடன் கண்டிக்கு வந்து உதவியவரும் இதே ஏ. ஜே. தான்.

நட்புக்கு ஓர் இலக்கணம் என அவரை அடிக்கடி நினைத்துப் பெருமைப்படுவதுண்டு. தன் அறிவுத் தளத்தில் நின்று, மேலை நாட்டு இலக்கியச் சுவைகளை எனக்கு விளங்க வைத்து என் போன்றவர்களைச் செழுமைப்படுத்தியவரும் இவரே. படிப்பதுதான் இவரது தொழில். வாழ்வு.

இதே பிரிமியர் கபேயில் எங்களது இலக்கியக் குழாத்தினருடன் தன்னையும் ஐக்கியப்படுத்திக் கொண்டவர் தான் உலகப் பிரசித்தி பெற்ற ஆங்கில எழுத்தாளரான அழகு சுப்பிரமணியம் அவர்கள். கபேயில் தேநீர் அருந்திய வண்ணம், பல ஐரோப்பிய இலக்கிய வாதிகளின் கதைகளையெல்லாம் நகைச் சுவையுடன் சொல்லிக் கொண்டே போவார். தனக்குள் தானே ரஸித்தபடி சிரிப்பார்.

இங்கிலாந்திலிருந்த வாழ்க்கை முறை பற்றியும் முல்க்ராஜ் ஆனந்த், சஜ்ஜத் ஸாகிர் போன்ற இந்திய எழுத்தாளர்களைச் சந்தித்து, உரையாடியது

பற்றியும் இலங்கையின் இடதுசாரி அரசியல் தலைவர் பீட்டர் கெனமனை அங்கு சந்தித்துப் பழகியது பற்றியும் சொல்வார். கதைபோலச் சொல்வார்.

அந்தக் கால கட்டத்தில் கரும்பலகை என்றொரு சிறுகதையை எழுதி முடித்திருந்தேன். எழுதிய கதை பற்றியும் கனகரட்னா சொல்லக்கேட்டு அதைத் தனக்கும் வாசித்துக் காட்டும்படி கேட்டுக் கொண்டார். இக்கதை எனது பள்ளி வாழ்க்கையில் நடந்த உண்மைக்கதை. 'கரும்பலகை' அன்ரனுடைய கதை. கரும்பலகை கேலிச் சித்திரக் கதை.

எனக்கோ பயம். கனகரட்னாவின் வேண்டுகோளுக்கு அமைய, ஒரு நாள் கதையை வாசித்துக் காட்டினேன். சில திருத்தங்கள் சொன்னார். ''ஆங்கிலக் கதைகளின் ஸ்டைல் வேறு, தமிழ்க் கதைகளின் ஸ்டைல் வேறு''. என விவரித்து அபிப்பிராயம் சொன்னார். ''நீங்கள் உங்களது ஸ்டைலையே பின்பற்றி எழுத வேண்டும்'' என்றார்.

அந்தக் கதையைத்தான் 'பிளாக் போர்ட்' என்ற பெயரில் மொழி பெயர்த்துப், பின்னர் சன்டே ஒப்ஸவரில் வெளியிட்டு வைத்தார், ஏ. ஜே.

உலகப் பிரசித்தி பெற்ற அழகு சுப்பிரமணியம் அவர்கள் எந்தவிதமான பந்தாவுமற்று என்னுடன் கதைத்தார். என்னைப் போன்றவர்களுடன் அவர் பழகிய அந்த நாட்கள் இன்றும் இனிமையானவை. என் வாழ்க்கையில் என்றுமே மறக்க முடியாதவை. பசுமையானவை

'இவையெல்லாம் நடந்தவைதானா? உண்மைதானா?' என்ற திகைப்பு என் நெஞ்சில் அடிக்கடி ஏற்பட்டு என்னை மலைக்க வைப்பதுண்டு. பிரமிக்க வைப்பதுமுண்டு.

எத்தனை எத்தனை அன்புள்ளம் கொண்டவர்கள் அற்புதமானவர்கள், கல்வித் தகைமையுள்ளவர்கள், பண்பு நிறைந்தவர்களிடமெல்லாம் நான் கடந்த காலங்களில் பழகியிருக்கிறேன். பேசியிருக்கிறேன். அநுபவம் பெற்றிருக்கிறேன்!

இளம் சின்னஞ்சிறு வயசுக் காலத்தில் தங்களது அடாத செயலால் என்னை மனம் நோகச் செய்தவர்களுமுண்டு. என் ஆத்மாவையே காயப்படுத்தியவர்கள் இவர்களில் சிலர். குலங் கோத்திரம் பேசி, என்னைச் சிறுமைப்படுத்தியவர்களுமுண்டு. எனது நெஞ்சில் தாழ்வுக் சிக்கலை விதைப்பதன் மூலம், என்னையே காணாமல் போகச் செய்து விடக் கூடச் சிலர் முனைந்ததுண்டு. முயற்சித்ததுண்டு.

இவை அனைத்தையும் சீரணித்துக் கொண்டு, நான் கட்டம் கட்டமாக என்னைப் புதுப்பித்துக் கொண்டேன். புதுப்பித்து, வளர்ந்து வந்தேன். கொண்ட குறிக்கோளிலிருந்து நான் வழுகவேயில்லை. இப்பொழுதுதான் ஒன்று எனக்குத் தெளிவாகப் புரிகின்றது. இவர்கள் அனைவரும் தமது செய்கைகளால் என் வளர்ச்சிக்குப் பசளையிட்டவர்கள். அடிமரத்துக்கு உரமிட்டவர்கள். நான் செழித்து வளரப் பாத்திகட்டியவர்கள். நீர்

வார்த்தவர்கள்.

ஒரு பாமர மனிதனின் பரிணாம வளர்ச்சிக்குத் துணை நின்றவர்கள். ஒரு ஜீவ காவியம் தோன்றுவதற்கு அடியெடுத்துத் தந்தவர்கள். அத்திவாரமிட்டவர்கள்.

இவர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

நான் முன்னர் ஓரிடத்தில் குறிப்பிட்டதுபோல, என் பிறப்பு மண்ணில் பிறந்த யாழ்ப்பாணத்தான்கள் அது தான் 'யாழ்ப்பாணிகள்' இருக்கிறார்களே, இவர்கள் சிவனைப் போன்றவர்கள். தகைமையானவர்களை, எதிர் காலச் சரித்திரத்திற்கு வேண்டப்பட்டவர்களைக் கடைசிவரை சோதிப்பார்கள். பல கஷ்ட நஷ்டங்களை உண்டாக்கிப் பக்குவப் படுத்துவார்கள். பண்படுத்தவார்கள். அதன் மூலம் எதிர்காலத்தில் நின்று நிலைக்க மனத் திண்மை தருவார்கள்.

இந்தச் சகல கஷ்ட நஷ்டங்களிலிருந்து மீண்டு எழும்புபவனைக் கடைசியில் ஆட்கொண்டு அங்கீகரித்துக் கௌரவிப்பார்கள். என் மண்ணின் தனிச் சொத்து என பகிரங்கமாக ஒப்புக் கொள்வார்கள். இது அவர்களது தனித்தன்மை, தனித்திறமை!

யாழ்ப்பாணத்தான்கள் பல சந்தர்ப்பங்களில் என்னை மதித்துப் பாராட்டியுள்ளனர். எனது மணி விழாவை மங்களகரமாக நடத்தி என்னை மகிழ்வித்திருக்கிறார்கள். என்னை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தவர்களும் இவர்களே.

எல்லாவற்றிற்கும் மேலாக மல்லிகை என்ற மலர்க்கொடியை வாடிப் போக விடாமல் நீரூற்றி இன்றுவரை வளர்த்து வந்துள்ளவர்களும் இவர்களே. மல்லிகைப் பந்தலைப் படரவிட்டனர். பூப் பூக்க வைத்துள்ளனர்.

இது எனக்குக் கிடைத்த சர்வதேசக் கௌரவம். என்னை நேசித்தவர்கள், என்னால் நேசிக்கப்பட்டவர்கள், கருத்து ரீதியாக என்னை எதிர்த்தவர்கள் கூட, எனது செயல்களுக்குப் பாரிய ஒத்துழைப்பு நல்கினர். என்னைப் புதுசாகச் சிந்திக்க வைத்தனர். மெது மெதுவாகச் செதுக்கிச் செதுக்கி என்னை இலக்கியச் சிலையாக வடிவமைத்தனர். சிருஷ்டித்தனர்.

அதிகம் படிக்காதவன், நான். அடிப்படைக் கல்வியைக் கூடப் பூர்த்தி செய்யாத ஒருவன். வரலாற்றுச் சாதனை ஒன்றைச் செய்ய முனைந்தேன். செயல் பட்டேன். தொடர்ந்து உழைத்து வருகின்றேன்.

சலூன் தொழிலாளியாகிய நான், அந்தச் சவரச் சாலையைச் சர்வகலாசாலையாக நினைத்தேன். மதித்தேன். படித்தேன். இயங்கினேன். அந்தச் சலூனுக்குள்ளேயே இலக்கியத் தரமான மல்லிகை என்ற மாசிகையை வெளியிட்டு வைத்தேன். அதன் ஆசிரியராகப் பகிரங்கமாக எழுத்தில் பிரகடனப் படுத்திக் கொண்டேன்.

ஆலய உள் நுழைவுப் போராட்டம், தேநீர்க் கடைப் பிரவேசம், பொது இடங்களில் சமத்துவம், அடிப்படை மனித உரிமைகளை வென்றெடுக்கும் நேரடி நடவடிக்கைகள் நடைபெற்று முடிந்திருக்கும் ஒரு காலகட்டப் பின்னணிச் சூழ் நிலையில், இந்தப் போராட்டங்களில் கலந்து கொண்டு கணிசமான பங்களிப்புச் செய்த நான், மல்லிகை என்றொரு மாசிகையை ஒரு சவரக் கடைக்குள் அதை ஆரம்பித்து வைத்திருந்தேன் என்றால் அதற்கு எத்தனை ஆத்ம பலமுள்ள துணிச்சல் தேவைப்பட்டிருக்கும் என இந்தச் சந்தர்ப்பத்தில் தனித்திருந்து சிந்திக்கும் வேளைகளில் ஆச்சரியப்பட்டிருக்கின்றேன்.

ஒரு முடி திருத்தும் சாதாரண தொழிலாளியாக பகிரங்கமாகப் பலராலும் அறியப்பட்டிருந்த நான், அந்தச் சஞ்சிகையின் வெளியீட்டாளனாகவும், அதன் ஆசிரியர் என்ற முறையில் முன் பக்க முகப்பில் எனது பெயரைப் பொறித்துப் பகிரங்கப் படுத்தியிருந்தேன்.

அதுவும் பல பல ஆண்டுகளுக்கு, முன்னர், மல்லிகை இதழுக்கென்றே சொந்த முகவரி. சொந்தக் கட்டிடம், சொந்த மெஷின். அதற்கான உபகரண வசதிகளுடன் அச்சகத்தை நிறுவிக் கொண்டேன்.

இச் சஞ்சிகை முகவரியிட்டு வெளிவந்திருந்த போதிலும் கூட, சகல பிரதேசங்களையும் உள்ளடக்கிய எழுத்தாளர்களின் ஆத்மக் குரலை வெளிப்படுத்தும் சிற்றேடாகவே இன்று வரை மலர்ந்து கொண்டிருக்கின்றது.

யுத்தக் கெடுபிடி, மின்சாரம், கடதாசி பெற்றுக் கொள்ள முடியாத அவலச் சூழ்நிலை, வசதிக் குறைவு, திடீர்ப் பொருளாதார நெருக்கடி, தபால் போக்குவரத்தற்ற ஸ்தம்பித நிலையிலும் கூட, பள்ளி மாணவர்கள் பயன் படுத்தும் சதுரறூல் கொப்பித் தாளில் மல்லிகையை வெளிக் கொணர்ந்து வரலாறு படைத்தேன்.

யாழ்ப்பாணக் குடா நாட்டு மண்ணில்தான் இந்த ஆச்சரிய, அதிசயம் சம்பவங்கள் எல்லாம் நடந்தேறி வந்துள்ளன.

மேலை நாட்டில் நடந்தேறியுள்ள சம்பவமல்ல, இது. இந்த மண்ணில்தான் கண் முன்னால் நடைபெற்றது. இந்தச் சாதனை சர்வ லோகத்துக்குமே ஒரு முன் மாதிரியான செயல் என மெய்யாகவே நம்புகின்றேன்.

இதனையிட்டு உண்மையாகவே நான் கர்வ சந்தோஷம் அடைகின்றேன்.

(முதல் பாகம் நிறைவு பெறுகிறது)

அடுத்து:

"அச்சுத்தாளின் ஊடாக
எனது அநுபவப் பயணம்"

ஆசிரியரின் நூல்கள்

1. தண்ணீரும் கண்ணீரும் (சிறுகதைத் தொகுதி)
   (ஸ்ரீ லங்கா சாஹித்திய மண்டலப் பரிசு பெற்ற நூல்)
2. பாதுகை
   (சிறுகதைத் தொகுதி)
3. சாலையின் திருப்பம்
   (சிறுகதைத் தொகுதி)
4. வாழ்வின் தரிசனங்கள்
   (சிறுகதைத் தொகுதி)
5. ஈழத்திலிருந்து ஓர் இலக்கியக் குரல்
   (பேட்டிகள், செய்திகள்)
6. அநுபவ முத்திரைகள்
   (சுவையான அநுபவக் கட்டுரைத் தொகுப்பு)
7. துண்டில்
   (கேள்வி - பதில்)
8. டொமினிக் ஜீவா-சிறுகதைகள்
   (50 சிறுகதைகளின் தொகுப்பு)
9. தலைப்பூக்கள்
   (மல்லிகைத் தலையங்கங்கள்)
10. முன்னுரைகள் - சில பதிப்புரைகள்
11. அட்டைப்பட ஓவியங்கள்
    (கட்டுரைத் தொகுப்பு நூல்)
12. எங்களது நினைவுகளில் கைலாசபதி
    (கட்டுரைத் தொகுப்பு)
13. மல்லிகை முகங்கள்
    (கட்டுரைத் தொகுப்பு)
14. பத்தரே பிரசூத்திய
    (சிறுகதைகள் சிங்கள மொழிபெயர்ப்பு)
15. எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்
    (சுய வரலாறு)
16. முப்பெரும் தலைநகரங்களில் 30 நாட்கள்
    (பிரயாணக் கட்டுரை நூல்)





Happy Photo

ஓர் இலக்கியக் கூட்டத்திற்கு வந்திருந்தவரிடம் அவசர கதியில் எனது சுயவரலாற்று நூலைக் கொடுத்தேன். அது ஒரு சனிக்கிழமை மாலை. இரவே அந்தப் புத்தகத்தைப் படித்துவிட்டார், கவிஞர் அஷ்ரஃப். அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை. பல தடவைகள் தொலைபேசியில் என்னுடன் தொடர்பு கொள்ள முனைந்தார். "அமைச்சர்களைத்தான் இலேசிலே தொடர்பு கொள்ள முடியாது என்று நினைத்திருந்தேன். எழுத்தாளனைக் கூடத் தொடர்பு கொள்ள இயலவில்லையே!" என ஒரு நேர்ச்சந்திப்பில் நகைச்சுவையாகக் குறிப்பிட்டார் அவர்.

"உங்களை நேரில் சந்தித்து இதை எழுதின உங்களது கரங்களை முத்தமிட வேண்டும் போல அந்தநேரம் எனக்குள் ஓர் உணர்வு தோன்றியது. அதற்காகத்தான் அத்தனை முயற்சிகளையும் எடுத்துக் கொண்டேன்!" எனச் சொன்னார் கவிஞர்

அந்தப் புத்தகத்தின் கொழும்பு வெளியீட்டு விழாவுக்கு அழைப்புத் தராமலே நேரில் வந்து வாழ்த்தும்போது இந்தக் கருத்தைச் சொன்னவர் மறைந்த அமைச்சர் அஷ்ரஃப்.

"அமைச்சராக அல்ல, ஒரு கவிஞனாகவே அழைப்பில்லாமல் ஜீவாவின் எழுத்தைக் கௌரவிப்பதற்காக இங்கு வந்துள்ளேன்!" என்றார் அவர்.

மற்றவர்களின் பொன்மொழிகளைப் பிதற்றுவதைவிட, உங்களின் சொந்த மொழிகளை இயற்றுவதே மேல்!

ISBN 955-8250-00-7

ISBN 955825000-7